பிரம்மமுனி

கருக்கடை சூத்திரம்-380

(வைத்தியம்)

தாமரை நூலகம், சென்னை - 600 026.

பிரம்மமுனி

கருக்கிடை சூத்திரம்

(உரையுடன்)

பதிப்பாசிரியர்

ஆர்.சி.மோகன்

தாமரை நூலகம்

7. என்.ஜி.ஓ. காலனி, 3ம் தெரு

வடபழனி சென்னை-600 026

தொலைபேசி எண்:044 23620249

தாமரை வெளியீடு எண்: 205

முதல் பதிப்பு : பிப்ரவரி 1998

இரண்டாம் பதிப்பு : நவம்பர் 2014

மூன்றாம் பதிப்பு :டிசம்பர் 2020

நூல் பற்றி:

நூலின் பெயர் : பிரம்மமுனி கருக்கிடை சூத்திரம் 360

பதிப்பாசிரியர் : ஆர்.சி மோகன்

வெளியிட்டோர் : தாமரை நூலகம்
சென்னை-26

பதிப்பு ஆண்டு :டிசம்பர் 2020

உரிமை : பதிப்பகத்துக்கு

நூல் வடிவம் : 21 க்கு 14 செ.மீ

அச்சுத்தாள் : 16கி மேப் லித்தோ

மொத்த பக்கங்கள் : 148

விலை : ரூ- 70/-

அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
சென்னை-34

பதிப்புரை

மருந்துவ நூல்களிலே மிகவும் சிறப்பான நூல் இது. இதில் கூறப்பட்டிருக்கும் மேக ராசாங்க எண்ணெய், சண்ட மாருதக் குழம்பு, விஷமுஷ்டித் தைலம், சூதசெந்தூரம், துரிசிகுரு போன்ற மருந்துகள் சித்த மருத்துவத்திற்கு ஆணிவேர்களைப் போன்றவை.

இந்த நூலில் கூறப்பட்டுள்ள மருந்துகள் சிலவற்றை மட்டும் முறையாகச் செய்து வைத்துக் கொண்டவர்கள் கூட இவரைப் போன்ற சிறந்த வைத்தியர் இல்லை என்ற பெயர் பெற்றுவிடலாம். மருந்தின் பெயரைச் சொன்னாலே நோய்கள் பறந்தோடிப் போய்விடும் என்று சொல்லத் தக்கதான பெயர் பெற்ற மருந்துகள் இவை.

வேறு நூல்களிலும் இம்மருந்துகளில் சில கூறப்பட்டிருந்த போதிலும் பிரம்ம முனியின் முறைகள் அற்புதமானவை. சித்த மருத்துவத்திற்கு ஒரு சிறந்த அணிகலனாக விளங்கும் இந்நூல் சுமார் எண்பத்தைந்து ஆண்டுகளுக்கு பிறகு மீண்டும் வெளிவருகிறது. இதன் பழைய பிரதி ஒன்றைக் கொடுத்து உதவிய திரு. வி. குணவழகன் அவர்களுக்கும் இந்நூலுக்கு உரை எழுதிக் கொடுத்த டாக்டர். துர்க்காதாஸ். எஸ்.கே. சாமி அவர்களுக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

வணக்கம்

எஸ். பி. ராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்.

பொருளடக்கம்

உ

கடவுள் துணை

பி ர ம மு னி

திருவாய் மலர்ந்தருளிய

கருக்கடைச் சூத்திரம் 380.

காப்பு

அறுசீரடியாசிரிய விருத்தம்.

சீரரு ளான சோதி சின்மய மான சோதி
ஆரணி கொன்றை சூடி யாறணிந் தவனைப் போற்றி
வாரண ரிஷிகள் பாதம் வணங்கியே வயித்ய நூலைக்
காரண மாகப் பாடக் கணபதி காப்புத் தானே.

சிறப்புக்குரிய திருவருள் வடிவான சோதியும், சின்மயமான சோதியும், ஒளிவீசுகின்ற தேஜோமயவடிவானவனும், கங்கா நதியையும் கொன்றை மாலையினையும் அணிந்துள்ள வனுமாகிய சிவபெருமானைப் போற்றி இடை விடாமல் ரவுரிக் கவசந்தரித்த ரிஷிகளாகிய தவமுனிவர்களின் திருவடிகளை வணங்கியே, வைத்திய நூலாகிய இந்த நூலை சித்த வைத்தியம் தழைப்பதற்குக் காரணமாகும் வண்ணம் பாடுதற்கு கணபதியாகிய விநாயகப் பெருமானே காப்பாக இருக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து எழுதுகிறேன்.

தானான வயித்தியத்தி விருபத்து நூறு
சாற்றினே னதைக்குறுக்கிப் பத்துநூறு
தேனான வதைக்குறுக்கி முந்நூற்றறுபதாய்த்
திரட்டியே கருவெல்லாந் திறந்துசொன்னேன்
வாளான கருவையெல்லாம் வெளியாச் சொன்னேன்
வாதமொடு செயநீரும் வகையாய்ச் சொன்னேன்
பானான மானிடர்கள் பிழைக்க வேண்டிப்
பரிபாஷை யில்லாமல் பாடி னேனே. (1)

வைத்தியத் துறையில் இரண்டாயிரம் செய்யுட்களாக இருந்த இந்த நூலை, ஆயிரமாகச் சுருக்கிப் பிறகு, தேன்போல் இனிக்கதக்கதாகத் தேர்ந்தெடுத்து அவையத்தனையும் சுருக்கிக் குறுக்கி முன்னூற்றி அறுபதாகத்திரட்டியே ஒளிவு மறைவு ஏதுவுமில்லாமல் திறந்த நூல் போல விளக்கமாகச் சொன்னேன். உலகத்திலுள்ள மக்கள் சமுதாயம் பிழைக்க வேண்டிப் பரிபாஷை என்ற மறைவு மொழி ஏதுவுமின்றி இதனை நான் பாடியுள்ளேன்.

பாடியதோ ரென்னூலைப் பதினெண் பேரும்
பார்த்திட்டு மனமகிழ்ந்தார் சித்த ரெல்லாம்
பாடியதோர் வாதமொடு வயித்யம் நன்றாய்ப்
பாடினார் கருக்குருவும் வெளியாச் சொல்வி
தேடியே சித்தரெல்லா மெச்சிக் கொண்டு
செப்பினார் பிரமரிஷி ஆகை யாலே
யூடியதோர் கருவெல்லாம் வெளியதாக
உரைத்திட்டா ரென்றுசித்த ரொளித்திட்டாரே. (2)

நான் பாடிய இந்த நூலைப் பதினெட்டுச் சித்தர்களும் பார்த்துப்படித்திட்டு, மனமகிழ்ச்சியடைந்தார்கள். இந்நூலில் இரசவாதத்தோடு, வைத்தியத்தையும் கருவும் குருவும் தெளிவாக வெளிப்படுமாறு பிரம்மரிஷி மிகவும் நன்றாக இயற்றியுள்ளாரே யென்று கருதிய சித்தர்கள் அனைவரும் மெச்சினார்கள். ஆயினும் இந்நூலில் ஊடுருவியுள்ள கருமுறையெல்லாம் நான் வெளிப்படையாக உரைத்திருப்பது ஊக்கத்தைக் கெடுக்கும் என்று கருதிய அவர்கள் எல்லாவற்றையும் ஒளித்திட்டார்கள்.

ஒளித்திட்ட சாத்திரத்தை வாங்கியானும்
உலகிலுள்ளோர் மயங்காமல் வெளியிற்பொட்டேன்
அளித்திட்ட அழும்பருக்கு இந்நூலீயார்
ஆகாத சீடருக்கு மிந்நூலீயார்
களித்திட்டு மனதிலே கசடில்லாமல்
கபடற்ற சீடருக்குக் கைமுறையாக்காட்டு
பளித்திட்டுப் பேசாமல் சாத்திரத்தைப்பார்த்துப்
பதறாதே கைமுறைசெய் முறையும் பாரே. (3)

இவ்வாறு பதினெட்டு சித்தர்களால் ஒளிக்கப்பெற்ற இந்த சாஸ்திரத்தை, வாங்கிய யான், உலகிலுள்ளோர்கள் மயங்காமல் இருப்பதற்காக அதனை வெளிக் கொணர்ந்தேன். ஆகவே இந்த நூலை, பிடிவாதகாரர்களான அழும்பர்களுக்குக் கொடுக்காதீர்கள் ஆகாத மாணவருக்கும் வழங்காதீர்கள், மனதிலே எள்ளத்தனைக் கபடமும் கசடும் இல்லாதவர்களுக்கு இந்த நூலைவழங்கி, கைமுறையாகக் காட்டுவீராக. இதனைப் பழித்திட்டுப் பேசாமலும் பதறாமலும் கைமுறைகளாகவும், செய் முறையாகவும் செய்து பயனறிந்து பார்க்க வேண்டும்.

முறையோடே பார்த்தாக்கா லெல்லாஞ்சித்தி
முறைதப்பிச் செய்திடிலோ மோசம்மோசம்
முறையோடே செய்வதற்கு என் நூல்பாரு
மொழிந்திட்டேன் மருந்தொன்றில் பலநோய்தீர
முறையோடே லேகியங்கள் தயிலங்கற்கம்
மெழுகோடு களங்குமாத் திரைசெந்தூரம்
நிறையான நவலோக பாஷாணங்கள்
நீற்றினமும் உருக்கினமும் நிறைத்திட்டேனே. (4)

இந்த முறையை படித்துப் பார்த்து செய்தாலோ, எல்லாமே சித்தியாகும். செய்முறைகள் தப்பிதமாய் செய்தாலோ மோசம் படுமோசமாகும். முறைப்படியாகச்

செய்ய வேண்டுமானால் எனது இந்த நூலில் நான், ஒரே மருந்தில் பல நோய்களையும் குணப்படுத்தவல்ல இலேகியங்கள் தைலங்கள், கற்பங்கள், மெழுகுகள், களங்குகள், மாத்திரைகள், செந்தூரம், நிறைவான நவலோக பாஷாண மருந்துகளையும் பற்பங்களையும் நிறைவாகவும் முழுமையாகவும் இந்நூலில் கூறியுள்ளேன்.

நிறைத்திட்டார் தெட்சணா மூர்த்திபாடல்
நிகரில்லா வயித்தியத்தி லிரண்டுலட்சம்
உரைத்திட்டார் செந்தூர முந்நூறுசொன்னார்
உத்தமனே வாதமுதல் வயித்தியந்தோறும்
அறைந்திட்டார் வயித்தியத்தி லாறுநூறு
அப்பனே வெளிதிறந்து சொல்லிவிட்டார்
கறைந்திட்ட வயித்தியத்துக் கெந்நூலாகி
கண்ணாடி முகம்பார்த்தாற் போலேகாணே. (5)

தட்சிணாமூர்த்தி என்பவர் நிகரில்லாத வைத்தியமுறையாக இரண்டு இலட்சம் செய்முறைகளைக் கூறி முன்னூறு வாத செந்தூரங்களையும், இரசவாதம், வைத்திய முறைகளுக்குரிய அறுநூறு முறைகளையும் மிகவும் வெளிப்படையாகவே கூறிவிட்டார். வைத்தியத்திற்கு மட்டுமே உரிய எனது நூலைப்படித்துப் பயன்படுத்தி விழைந்தால் நிலைக்கண்ணாடியில் உங்கள் முகத்தைப்பார்த்தால் எவ்வளவு தெளிவாகத், தெரியுமோ அதுபோல் நீங்கள் செய்த முறைக் கேற்ற பயனை அடைவீர்கள்.

*நிலைக்கண்ணாடி என்பது பார்ப்பவரின் பிம்பத்தைத்தானே பிரதிபலிக்குமே யென்றபடி மனதில் கொள்ள வேண்டும்.

காணப்பா நோயாளி தாதுமார்க்கம்
கண்பார்த்து முகம்பார்த்துக் கையைப்பாரு
தோணப்பா தத்துவநூ லாய்ந்துபாரு
சொல்லுடம்பி லெழுபத்தீ ராயிரநரம்பு
ஓணப்பா நரம்பெல்லாம் நாடியோடும்
உத்தமனே யுயிர்நிலையை யூன்றிப்பாரு
தேனென்ற வால்மீகர் நாடிசூத்ரம்
தெளிவாக வெழுபத்தி ரண்டும்பாரே. (6)

முதலாவதாக, நோயாளியின் சப்த தாதுக்களும் எப்படியுள்ளன என்பதை அறிந்து கொள்ள, முதலில் கண்களைப் பார்த்து, பின்னர் முகத்தைப் பார்த்து, அதன் பின்னரே கையைப்பிடித்து, நாடியைப் பார்க்க வேண்டும். பின்னர் சித்தர்களின் தத்துவ முறைப்படி ஆய்ந்து கூறியுள்ள உடம்பிலுள்ள எழுபத்திராயிரம் நாடிகளும் நரம்புகளும் இயங்குகின்ற உயிரியக்கத்தை நீ நன்றாக ஊன்றிக் கவனித்து அதன் நிலையினை நன்றாக நாடிபிடித்துப் பார்ப்பதன் மூலம் தெரிந்து கொள்ளவேண்டும்.

பாரேநீ முந்நூல்தா னாயிரத்தில்
பாடினேன் பசலைக்கும் நாடிதோண
பாரேநீ கொங்கணர்தத் துவநூல்பாரு
பாங்கான சட்டைமுனி நூலும்பாரு

பாரேநீ திருமூலர் நூலும்பாரு
பார்த்திட்டால் பலநூலு மதிலேநோயும்
ஆரேநீ நானென்ற ஆணவத்தைநீக்கி
ஆங்காரக் கோபத்தை அடித்துத்தள்ளே. (7)

இதற்கு முன்பு ஆயிரம் செய்யுள்கள் நாடிகளைப்பற்றி நான் எழுதியுள்ள முந்திய நூலைப்பார்ப்பாயாக கொங்கணவர் தத்துவ நூல், சட்டை முனிவர் இயற்றிய நூல், திருமூலர் இயற்றிய நாடி நூல் இப்படிப் பல நூல்களைத் தேடிப் படித்துப் பார்த்தால் நாடிகள் மூலம் மனிதர்க்கு ஏற்பட்டுள்ள நோய்களை அறிந்து கொள்ளலாம். அதற்கு முன்பு 'நான்' என்ற ஆணவத்தை நீக்கிக் கொள்ள வேண்டும். ஆங்காரமான கோபத்தையும் நாம் விட்டிருக்க வேண்டும்.

தள்ளுவது பொய்கொலைகட் களவுகாமம்
சண்டாளங் குருத்ரோகம் சேர்த்துத்தள்ளு
விள்ளாதே வெகுளிவிட்டு யோகம்பாரு
வேதாந்த சற்குருவை நித்தம்பூசி
தள்ளாதே வயித்தியந்தான் தர்மவித்தை
சார்வாக உவர்க்கருவை ஒளித்தார்சித்தர்
துள்ளாதே வாதமென்ன வயித்யமென்ன
சொல்லாத முப்பூவின் குருவிதாமே. (8)

பொய் சொல்லுதல், கொள்ளையடித்தல், காமவெறி பிடித்து அலைதல், சண்டாளத்தனமான காரியங்களைச் செய்தல் குருத்துரோகம் செய்தல் ஆகிய தீயகுணங்களையும் செயல்களையும் சேர்த்து ஒட்டு மொத்தமாகத் தள்ளிவிடு. கோபத்தையும் மீறிப் பேசுகின்ற சுபாவத்தையும் விட்டு யோக மார்க்கத்திற்குரிய வழியைத்தேடி வேதாந்த சற்குருவை தினமும் பூசித்துவருவாயாக. வைத்தியமானது தர்மத்திற்கு உரியதாகும். வாதம்சார்ந்த உவர்கருவைச் சித்தர்கள் ஒளித்தார்கள். வாதம் என்ன? வைத்தியம் என்ன? இவையெல்லாம் பெரிய வித்தை என்று துள்ளாதே. சித்தர்கள் எவருமே தெளிவாகச் சொல்லாத முப்பூவின் கருவைத் தெரிந்துகொள்.

குருவென்ன உவர்ச்சாரம் உவர்ப்பூவென்று
கூறினார் பூநீறு முப்பூவென்றுந்
தருவென்ன ஆகாசப் பரிதியென்றும்
சந்திரனோ டிந்துவென்றுஞ் சாற்றினார்கள்
பருவமென்ன மார்கழியுந் தையுமாசி
பனிபெய்யுங் காலமப்பா பருவமாகிப்
பொருளென்ன பூமியிட நாதமாகிப்
பூப்போலே வளர்ந்ததும் பூநீறாச்சே. (9)

உவர்ச்சாரம், உவர்ப்பூ என்றும் குருவென்றும் கூறினார்கள். பூநீறு, முப்பூ வென்றும் வான்குதிரை, கற்பகத்தரு, சந்திரனோடு, இந்து என்று கூறினார்கள். இதனை எடுப்பதற்குரிய பருவகாலம், பனிபெய்யும் மார்கழி, தை, மாசி மாதங்களாகும். இந்த மாதங்களில் பருவமாகிய பொருளைப் போன்று பூமியின் நாதமாகிய இப்பொருள், பூப்போல வளர்ந்திருப்பதாலேயே பூநீரென்று பெயர் பெறுகின்றது.

பூவான பூநீறின் மகிமைதன்னைப்
புகழுடனே கண்டவர்க்கு எல்லாஞ்சித்தி
பூவான வாதத்துக் காதியாச்சு
புகலுகிறேன் வெள்ளைக்கல் பிரமகற்பம்
ஆவென்ன பாறையுப்பு மூன்றுஞ்சேரில்
அரகரா முப்பூவா மறிந்துபாரு
தேவென்ன சவுக்கார வழலையென்று
செப்பினார் கருமறைவாச் சித்தர்தானே. *(10)*

இத்தகைய பூவான பூநீறைக் கண்டவர்களுக்கு புகழுடனே எல்லாமும் சித்தியாகும். இந்த பூநீறே. இரச வாதத்திற்கு ஆதியாகும். மேலும் சொல்கிறேன். வெள்ளைக்கல் பிரமகற்பம், ஆவென்று வாயைப் பிளக்காமல் பாறையுப்பு அறிந்துப்பார்ப்பாயாக. இதனைத்தான் சித்தர்கள், சவுக்கார வழலை என்று கருமுறையாகக் கூறினார்கள்.

தானென்ற முப்பூவின் முறையைக்கேளு
சாற்றினார் கும்பமுனி பூரணத்தில்
வேனென்ற பூநீறு வெள்ளைக்கல்லுப்பும்
விளைவிடமுஞ் சுத்திமுறை விளம்பினார்பார்
கானென்ற பங்குனி மாதம்பார்த்தால்
காற்றில்லாக் கதிர்போலே வ்ளர்ந்திருக்கும்
பானென்ற மண்படா தெடுத்துவந்து
படிநாலு அளந்துஒரு பாண்டத்திட்டே. *(11)*

முப்பூவின் செய்முறையைக் கேட்பாயாக இதனைப்பற்றி, அகஸ்திய முனிவர் பூரணம் என்ற நூலை எழுதியுள்ளார். பூநீறும் வெள்ளைக்கல்லுப்பு முறைகளையும் அகஸ்தியரே விளக்கியுள்ளனர். பங்குனி மாதத்தில் காடு போன்ற பூநீறு விளையும் பூமியிலே போய்ப்பார்த்தால், காற்று இல்லாத இடத்தில் கதிர்களைப் போல வளர்ந்திருப்பதைக் காணலாம். மண்படாதவாறு பூநீரைமட்டுமே எடுத்துவந்து ஒரு மட்பாண்டத்தில் நான்குபடிகள் அளந்து போடுவாயாக.

இட்டுமே கல்லுப்புப் படிதான்ரெண்டு
இதமான கற்சுண்ணம் படிதான்ரெண்டு
இட்டுமே அமுரிபடி யெட்டுவாரு
இயல்பான நல்லெண்ணெய் படியரையேவாரு
அட்டுமே கலக்கியதைத் தெளிவிறுத்து
அடுப்பேற்றி யெரித்துநீ யுப்பாக்காய்ச்சிப்
பட்டுமே யிப்படியே பத்துமுறைகாய்ச்சு
பாங்கான சவுக்காரக் குருவிதாமே. *(12)*

இவ்வாறு பாண்டத்தில் இட்டபிறகு, இரண்டுபடிகள் கல்லுப்பையும் அதற்கு அதிகமாக கற்சுண்ணம் இரண்டுபடிகளையும் போட்டு, அமுரியை எட்டுப்படி வார்ப்பாயாக. அத்துடன் இயல்பான அரைப்படியளவு நல்லெண்ணெயையும் வார்ப்பாயாக. பிறகு இவையனைத்தையும் ஒன்றாகக் கலந்து உறவாடும்படி

கல்வத்திலிட்டு, தெளிவாகும் வரை காத்திருந்து, தெளிவை இறுத்து அடுப்பில் ஏற்றி யெரித்து உப்பாகும் பக்குவத்திற்குக் காய்ச்சி, இறக்குவாயாக இப்படியே பத்து முறைகள் காய்ச்சுவாயானால், சவுக்கார குருவாகும்.

குருவான சவுக்கார வுருண்டைசெய்யக்
கூறுகிறேன் எருமுட்டைச் சாம்பல்மேலே
மெருவான மெல்லிய சீலைபோட்டு
விட்டதின்மேல் சவுக்காரக் குழம்புதன்னைக்
கருவாக வுருண்டைசெய்து எண்ணெய்கக்கக்
கைமுறையைச் சொல்லுகிறேன் ஒருபாண்டத்தில்
அருவாக நெல்லதனைப் பிசறிவைத்து
அதின்மேலே மல்லியிலை பரப்பிவையே. (13)

இனி குருவான சவுக்கார உருண்டை செய்யும் வகையினைக் கூறுகிறேன். எருமுட்டைச் சாம்பலின் மீது மெல்லிய தூய்மையான சீலையொன்றை விரித்துப்போட்டு, அதன்மீது சவுக்காரக் குழம்பதனை ஊற்றி, பின்னர் அதனையே கருவாகவுருண்டை செய்து கொள்வாயாக எண்ணைகக்க வேண்டுமே அதற்கு என்ன செய்ய வேண்டுமென்று, எனது செய்முறையை நான் கூறுகிறேன். ஒருபாண்டத்தில் நெல்லை நிரப்பி, பிசறி வைத்து, அதன்மீது மல்லியிலைகளைப் பரப்பிவைப்பாயாக.

வைத்துத்தான் மேலுமந்த விலைபரப்பி
மறுபடிமேல் நெல்விட்டுச் சட்டிமூடி
அத்துமே அடுப்பேற்றி யெரித்துநன்றா
யாவிகண்ட பதத்திலே எடுத்துக்கொள்ளு
வைத்தொரு சவுக்கார மெண்ணெய்வாங்க
மாட்டாமல் வாதிகெட்டார் வண்ணார்க்காச்சு
தைத்துமே யிப்படிக்கை முறையாய்ச்செய்யில்
சவுக்கார வழலையென்ற குருவிதாச்சே. (14)

மல்லியிலைகளைப் பரப்பி, மறுபடியும் நெல்லிலிட்டு, சட்டியைமூடி, அதனை அடுப்பில் ஏற்றி எரித்து நன்றாக ஆவி வரும் பக்குவத்தில் எடுத்துக்கொள்வாயானால் அதுவே சவுக்கார வழலை வாங்கும் விதமாகும். இதனை இவ்வாறு தான் செய்யவேண்டும். இவ்வாறு செய்யத் தெரியாமல் தான். இரசவாதிகள் கெட்டதனால் இந்த சவுக்காரம் வண்ணார்களுக்குப் பயன்படுவதாயிற்று. நான் சொல்லிய முறையான வழிப்படி இப்படிச் செய்தால்தான் சவுக்கார வழலை என்ற குருவாகும்.

குருவென்ன முப்பூவின் வழலையாச்சு
கூறிடுமேற் போக்கறிந்தால் வாதமாச்சு
திருவென்ன வீரமொடு பூரம்ரெண்டு
சேருநீ யோமென்ற கும்பிடுசிப்பி
பருவென்ன பச்சையா யெடுத்துநூறு
பணம்போலே தமரிட்டுச் சிப்பிக்கெல்லாம்
அருவென்ன சிப்பியெல்லாம் போட்டுப்போட்டு
அகண்டதொரு சட்டியிலே பரப்பிவையே. (15)

குருவென்ன முப்பூவின் வழியே இதுதான் ஆகும். இதற்கு மேல் நான் கூறுவதைப் போன்ற செய்முறைப் போக்கின் படிச் செய்தால் இதுவே இரசவாதமாகும். வீரமும் பூரமும் ஆகிய இரண்டையும் நீ சேர்ப்பாயாக. ஓம் என்று கும்பிடும் சிப்பிகள் ஓலமிடும் பருவத்தில் பச்சையாகவே நூறு பலம் போல எடுத்துவந்து அவற்றில் ஒவ்வொன்றிலும் துளை செய்து அகலமான தொரு சட்டியிலே பரப்பிவைப்பாயாக.

வைக்கவே பலபலெனத் தண்ணீராகும்
வளமான தண்ணீரி னாதவிந்தை
வைக்கவே சமனாகச் சேர்த்துக்கொண்டு
அதிற்போடு குருவண்டு உரமுஞ்சூதம்
ஐக்கவே கருநாவி புனுகுபூரம்
அறுபுள்ளி வண்டின்முட்டை காரசாரம்
செய்க்கவே வகைவகைக்குப் பணவெடைதான்போட்டுத்
தெளிவிறுத்துச் சவுக்காரந் தன்னிலூட்டே. (16)

இவ்வாறு நீ செய்வாயானால் கும்பிடு கிளிஞ்சல் சிப்பிகளிலிருந்து, பலபல வென்று தண்ணீர் கொட்டும். இந்தவளமான தண்ணீரில் நாதவிந்தைச் சமமாகச் சேர்த்துக் கொண்டு, அதிலே குருவண்டு, உரமும், சூதமும் சேரும் வகையில் கருநாவி, புனுகு, பூரம், அறுபுள்ளிவண்டின் முட்டை, காரசாரம், வகைவகைக்கு பண எடை அளவுபோட்டு, தெளிவை இறுத்து அதனைச் சவுக்காரத்திற்கு ஊட்டுவாயாக.

ஊட்டியே சவுக்காரங் கல்வத்திட்டு
உத்தமனே ஒருசாம மாட்டிமைபோல்
வாட்டியே வில்லைதட்டி ரவியிற்காய்ந்து
வளமாக அண்டோடு பொடித்துக்கீழ்மேல்
நாட்டியே ஓட்டிலிட்டுச் சவுக்காரம்வைத்து
நலமாக மேலோடு கொண்டுமூடி
தீட்டியே சீலைசெய்து புடத்தைப்போடு
சிறப்பாக வெடுத்ததனைக் கல்வத்திட்டே. (17)

இவ்வாறு ஊட்டிய சவுக்காரத்தைக்கல்வத்தில் இட்டு, அதனை ஒரு ஜாமம் வரை மைபோல அரைத்து, அதனை வில்லை தட்டி சூரிய ஒளியில் காயவைத்து எடுத்துக் கொள்ளுவாயாக. பின்னர் முட்டை ஓடுகளை உடைத்துப் பொடித்து ஒரு ஓட்டில் பரப்பி அதன்மேல் சவுக்காரம் வைத்து மேலே மீண்டும் முட்டை ஓடு போட்டு, பிறகு மேலோட்டு கொண்டு மூடி, சீலை மண்செய்து புடத்தைப்போடுவாயாக, பிறகு அதனைச் சிறப்பாக எடுத்து மீண்டும் கல்வத்தில் இடுவாயாக.

தீட்டியே முந்நீரா லாட்டிவில்லை
செய்துலர்த்தி ஓட்டிலிட்டுப் புடத்தைப்போடு
மாட்டியே எழுசீலை மண்ணுஞ்செய்து
வளமான ரவியில்வைத்துக் காய்ந்தபின்பு
பூட்டியே யிப்படித்தான் ஐந்துதரமப்பா
புடமென்ன பத்தெருவில் போடுபோடு
ஆட்டியே கடுங்கார மெத்தக்கொள்ளு
அழகான முந்நீரா லரைத்திடாயே. (18)

இந்தவில்லைகளை மறுபடியும் முன்னீர் விட்டரைத்து உலர்த்தி, ஓட்டிவிட்டு புடத்தைப் போடவேண்டும். இதுபோலவே ஐந்துமுறைகள் புடம் போடு. இந்தப்புடத்திற்கு பத்து எருமுட்டைகள் போதும் ஐந்து முறைகள் புடமிட்ட பிறகு, புடத்தினுள்ள பொருளை கல்வத்தில் ஆட்டி அரைத்து கடுங்காரமாகச் செய்து கொள்ள, முன்நீரால் அரைத்துக் கொள்வாயாக.

அரைத்துமே வில்லைதட்டி ரவியிற்காய்ந்து
அஞ்சுசுன்னக் குகையிலிட்டு மேலேமூடி
நிரைத்துமே சுண்ணாம்புச் சீலைசெய்து
நிச்சயமாய்ப் பத்தெருவில் புடத்தைப்போட்டு
கரைத்துமே அஞ்சுசுன்னக் குகையிற்குள்ளே
கடுங்காரச் சுன்னமதில் பூசிப்போடு
அரைத்துமே யிப்படியே வழலைகூட்டி
ஐந்துமுறை புடம்போடச் சுன்னமாச்சே. *(19)*

இவ்வாறு அரைத்த கலவையை வில்லைத் தட்டி சூரிய ஒளியில் காயவைத்து, அஞ்சு சுன்னக்குகையிலிட்டு மேலே மூடி, சீலைமண் செய்து, பத்தெருவில் புடம்போட்டு, எடுத்து மீண்டும் ஐந்து சுன்னக்குகையில் கடுங்காரச் சுன்னமதின் பூவில் போட்டு, அரைத்து இப்படியே வழலைக் கூட்டி ஐந்து முறைகள் புடம்போடச் சுன்னமாகிவிடும்.

சுன்னத்தால் பாஷாணம் அறுபத்துநாலும்
சொல்ஙரிய லவணவகை யிருபத்தைந்தும்
சுன்னத்தால் நவலோகம் நவரத்தினங்கள்
சொல்லரிய உபரசங்கள் நூற்றிரண்டுபத்தும்
சுன்னத்தால் சொன்னதொரு சரக்குவகையெல்லாம்
தொடுமுன்னே கட்டினமும் உருக்கினமுமாகும்
மென்னொத்த சரக்கெல்லாம் சுன்னமாகும்
மெழுகோடு செந்தூரம் களங்குமாமே. *(20)*

இத்தகைய சுன்னத்தைக் கொண்டு அறுபத்து நான்கு பாஷாணங்களையும் சொல்வதற்குரிய உப்புவகை இருபத்தைந்தையும், இந்தச் சுன்னத்தாலேயே நவலோகங்களையும், நவரத்தினங்களையும், உபரசங்கள் அனைத்தையுமே கட்டினமாகவும் உருக்கினமாகவும் செய்யலாம். மேற்சொன்ன சரக்குகள் அனைத்துமே இந்தச் சுன்னத்தால் தொட்டவுடனேயே கட்டினமும் உருக்கினமுமாகும். மென்மையான சரக்கெல்லாம் சுன்னமாகும். மெழுகுகள், களங்குகள், செந்தூர ரங்களுமாகும்.

களங்கம்நவ லோகந்த னித்தனியேநீறும்
கண்ணிமைக்கு முன்துருசு சுன்னமாகும்
களங்கமென்ன சூதமது மணிபோலாகுங்
கைக்குள்ளே வாதமது சிக்கிப்போகும்

பளிங்கிசையாய் முப்பூவின் சூட்சந்தன்னைப்
பாடினேன் சித்தரென்மேல் பகைத்திட்டார்கள்
பழங்கதைபோல் பேசினால் வருவதென்ன
பார்த்திட்டு மனம்வைத்தால் சித்தியாமே. (21)

இதனால் நவலோகங்கள், ஒவ்வொன்றும் தனித்தனியாக பற்பமாகும், கண்ணிமைக்கும் முன்பே துரிசும் சுன்னமாகும். பாதரசமும் மணி ஆகும். இதற்குச் சந்தேகமே வேண்டாம். இரசவாதம் கைக்குள்ளே சிக்கிப் போகும். இந்தவிதமாக பளிங்கைப்போன்று தூய்மையான எண்ணத்துடன் முப்பூவின் சூட்சந் தன்னை நான் பாடிவிட்டேன் என்று சித்தர்கள் என்னைப் பகைத்துக் கொண்டார்கள். இந்த விபரத்தை யெல்லாம் பழைய கதையைப் போலப் பேசினால் நமக்கு வருவதென்ன? இவைகளையெல்லாம் சிந்தித்துப் பார்த்து மனது வைத்தால் எல்லாமே சித்தியாகும்.

ஆமப்பா மானிடர்க்கு அடுத்தரோகம்
அறைகிறேன் வாதபித்த சிலேற்பனம்மூன்று
நேமப்பா விதிலெடுத்த மேகங்கேளு
நிலையாத வாதத்தில் நாலதாச்சு
தாமப்பா பித்தத்தா லாறதாச்சு
சண்டாளச் சயத்திலே பதினொன்றாச்சு
காமப்பால் வித்தையினா லெடுத்தரோகங்
கலந்துபா ரிருபத்து ஒன்றுமாச்சே. (22)

மனிதர்களுக்குத் தோன்றும் நோய்களைப்பற்றிக் கூறுகிறேன். இந்த நோய்கள் அனைத்தும் வாதம், பித்தம், சிலேத்துமம் மூன்று தனிமங்களால் தோன்றுவதாகும். இவற்றால் தோன்றும் மேக நோயைப்பற்றியும் அறிவாயாக வாதத்தில் நான்காகியது, பித்தத்தால் ஆறாகியது, சண்டாளமான கபத்தினிலே பதினொன்றாகியது. இவ்வாறாகக் காமத்தால் உண்டாகும் ரோகங்கள் இருபத்தொன்றாகும்.

மேகராசாங்க லேகியம்

ஆச்சென்ற மேகமிரு பதுந்தான்போக
அறைகிறேன் மேகரா சாங்கந்தன்னை
நீச்சென்ற விதுவல்லோ உலகுள்ளோர்க்கு
நிலையானது மற்றதெல்லாம் நிசமாகாது
காச்சென்ற மேகரா சாங்கந்தன்னைக்
கடிதான நோயெல்லா மோடிப்போகச்
சூட்சமென்ன சூட்சத்தில் சூட்சமாகச்
சொல்லுகிறேன் மருந்துவகை சொல்கிறேனே. (23)

மேக நோய்களை எல்லாம் உடலைவிட்டுப் போகச்செய்து, நோயாளியைக் குணப்படுத்துவதற்காக மேகராஜாங்க எண்ணைய் தன்னைக் கூறுகிறேன். இந்த எண்ணெய்தான் நிலையானது. மற்றதெல்லாம் உண்மையானவைகளல்ல. இந்த மேக

ராஜாங்க எண்ணெய்யைப் பயன்படுத்தினால் கடுமையான நோய்கள் எல்லாம் ஓடிப்போகும். ஆகையால் மிகவும் சூட்சுமத்திலும் சூட்சுமமாகவுள்ள இந்தத்தைலத்தில் சேரும் மருந்து வகைகளைக் கூறுகிறேன்.

சொல்லுகிறே னிலப்பனையு முத்தக்காசுஞ்
சுகமான சிவன்வேம்புந் தண்ணீர்மிட்டான்
நல்லதொரு விலாமிச்சம் வில்வவேரு
நன்னாரி குமரிவேர் அமுக்கராவேர்
ஒல்லிநிலை யாவாரை உள்ளுலர்த்தி
ஓரிலைத்தா மரைகரந்தை வெட்டிவேரும்
அல்லியொடு தாமரையின் வளையங்கோட்டி
ஆல்விழுது நீர்ப்பூலா அறுகம்வேரே. (24)

நிலப்பனங்கிழங்கு, முத்தக்காசு, காரமான சிவனார் வேம்பு தண்ணீர் விட்டான் கிழங்கு, நன்மைதரும் விலாமிச்சம் வேர், வில்வவேர், நன்னாரி வேர், குமரிவேர், அமுக்கராவேர், நில ஆவாரை (உள்ளே உலர்த்தியது) ஓரிலைத்தாமரை, காந்தை, வெட்டிவேர், அல்லியோடு தாமரையின் வளையம் கொட்டி வேர், ஆலம் விழுது நீர்ப்பூலாவின் வேர், அறுகம்வேர் இவற்றுடன்.

வேரான வல்லாரை சிவதை சங்கு
வெண்காக்கை வெரிவிகழி கீழ்க்காய்நெல்லி
பேரான நாவலத்தி கரிசாலைகாணி
பிரமிவெண்சா ரணையும்பூ வரசுதோடை
சீராக மூலிவகை கொண்டுவந்து
சிறப்பாக வெயில்வதக்க மில்லாமல்தான்
வாராக நிழலுலர்த்திச் சூரணஞ்செய்
வடிகட்டி வகைக்கிரண்டு பலந்தான் கூட்டே. (25)

வல்லாரை, சிவதை, சங்கு, வெண்கரக்கை, வெரிவிகழி, கீழ்க்காய்நெல்லி, நாவல், அத்தி, கரிசாலை பொன்னாங்கண்ணி, பிர்ம்மி, வெண்சாரனை, பூவரசு, ஆடாதோடை மூலிகைவகைகளைக் கொண்டுவந்து, வெயிலில் போட்டு காயவைத்து சருகாக்கி விடாமல் நிழலில் உலர்த்தி இடித்து, வஸ்திர காயம் செய்து வகைக்கு இரண்டு பலமாகச் சேர்த்துக் கூட்டிவைப்பாயாக.

கூட்டியே பறங்கிப்பட்டை பலந்தானெட்டு
கூர்பிரப்பங் கிழங்கதுவும் பலந்தான்ரெண்டு
ஆட்டியே ஆவின்பால் சுத்திசெய்து
அதட்டியே யிடித்துநன்றாய் முன்மருந்திற்சேரு
ஊட்டியே அமிர்தசர்க் கரையைக்கேளு
உத்தமனே பலம்ரெண்டு ஒக்கச்சேரு
தாட்டிகமாய் வித்துவகை சொல்லக்கேளு
ககரைவித்து முன்னைவித்து முருங்கைவித்தே.

பரங்கிப்பட்டை எட்டுப்பலம், பிரப்பங்கிழங்கு இரண்டு பலம், ஆகிய இரண்டையும் பசுவின் பாலில் வேகவைத்துச் சுத்திசெய்து இவற்றை மிக நன்றாக இடித்து முன் மருந்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அமிர்தசர்க்கரை இரண்டுபலம்வரை இதனுடன் சேர்த்துக் கொள்ளவேண்டும் பிறகு இதில் சேர்க்க வேண்டும் விதைகளின் விவரத்தை கூறுகிறேன். தகரைவித்து, முன்னைவித்து, முருங்கை வித்து.

வித்தான அகத்திவித்து அத்திவித்து
வெண்கடம்பு நீர்முள்ளி ஆவாரைவித்து
மத்தான மாவித்து பூனைக்காலி
மருளுமத்தை சடைக்கஞ்சா தேற்றான்வித்து
நத்தான மைக்கொன்றை சரக்கொன்றை அவுரி
நாயுருவி சிறுநெருஞ்சில் கருவேல்வித்து
முத்தான மாதுளையும் மகிழம்வித்து
முன்னையொடு கோதும்பை யெள்ளுழுந்தே. (27)

அகத்திவித்து, வெண்கடம்பு வித்து, நீர்முள்ளி வித்து, ஆவாரை வித்து, மாவித்து, (மாங்கொட்டைப்பருப்பு) பூனைக்காலி விதை, மருளுமத்தை விதை, சடைக்கஞ்சா விதை, தேற்றான் கொட்டை இவற்றுடன் மைக்கொன்றை, சரக்கொன்றை, அவுரி, நாயுருவி, சிறுநெருஞ்சில் கருவேலம் வித்து, மாதுளைவித்து, மகிழம் விதை, கோதுமை, எள்ளு, உளுந்து ஆகியவற்றுடன்.

உழுந்தான நெல்லிசெம்பை மூங்கில்வித்து
உத்தமனே கூவிளத்தின் பழமும்பூவும்
குழுந்தான சூரிவித்து எரிகாலன்வித்து
கொமட்டிமா துளைநாரத் தெலுமிச்சம்வித்து
நெளிதான தென்னம்பூப் பாற்குறண்டிப்பூவும்
நெய்கோட்டான் பூவாத்தி அல்லிவித்து
தழுதாழை முருங்கைப்பூ விலுப்பைப்பூவுந்
தாமரைவித் துவரையில வம்பிஞ்சுஞ்சேரே. (28)

நெல்லி செம்பை, மூங்கில் வித்துக்களும், கூவிளத்தின் பழமும் பூவும், சூரிவித்து, ஆமணக்கு வித்து, கொம்மட்டி, மாதுளை, நாரத்தை, எலுமிச்சம், வாழை, தென்னம்பூ, பாற்குறண்டிப்பூ, நெய்க்கோட்டான்பூ, ஆத்திப்பூ, அல்லிவித்து, தழுதாழை, முருங்கைப்பூ, இலுப்பைப்பூவும், தாமரைவித்து, துவரை, இலவம்பிஞ்சும் சேர்த்துக் கொள்.

சேர்க்கவே பிசின்வகையைச் சொல்லக்கேளு
திறமான முள்ளிலவு முருங்கைவேம்பு
கார்க்கவே விளாவோடு கருவேலத்தி
கருவாகை கொன்றைமரம் பிசினோடொக்க
ஏர்க்கவே புங்கம்பூ சீயக்காயின்கொழுந்து
இதமான வகைக்குக்காற் பலமேதூக்கிச்
சேர்க்கவே யிடித்தெல்லா மொன்றாய்ச்சேரு
திறமான கடைச்சரக்கைச் செப்பக்கேளே. (29)

இவ்வாறு சேர்த்தபிறகு, இதில் சேர்க்க வேண்டிய பிசின் வகையினையும் கூறுகிறேன். கேட்பாயாக. முள்ளிலவம் பிசின், முருங்கைப்பிசின், வேம்பின் பிசின் விளாவோடு கருவேல், அத்தி கருவாகை, கொன்றை மரங்களின் பிசின், இவற்றுடன் ஏற்கக் கூடியதான புங்கம்பூ, சீயக்காய் கொழுந்து ஆகியவற்றையும் வகைக்கு காற்பலம் எடை நிறுத்தி எடுத்துக் கொண்டு இவற்றை யெல்லாம் இடித்து சூரணித்து நன்றாகச் சேர்த்துக் கொள்வாயாக. இத்துடன் சேர்க்கவேண்டிய கடைச்சரக்குகளையும் சொல்லுகிறேன், கேட்பாயாக.

கேளப்பா சாதிக்காய் சாதிப்பத்ரி
கிராம்பேல மிலவங்கப் பட்டைப்பத்ரி
ஆளப்பா குங்குமப்பூ கோரோசனைகஸ்தூரி
அதிவிடையந் திப்பிலியுங் கோஷ்டமூலம்
வாளப்பா அரத்தைசுக்கு அக்கிராகாரம்
வால்மிளகு குரோசானி சீரகநல்லோமம்
தேளப்பா சடாமாஞ்சில் கூகைநீறும்
சிறுதேக்கு நாகப்பூ தாளிசபத்திரியே. (30)

ஜாதிக்காய், ஜாதிப் பத்திரி, கிராம்பு, ஏலம், இலவங்கப்பட்டை, இலவங்கப்பத்ரி, குங்குமப்பூ, கோரோசனை, கஸ்தூரி, அதிவிடையம், திப்பிலி, கோஷ்டத்தின்வேர், அரத்தை, சுக்கு, அக்கிரகாரம். வால் மிளகு, குரோசானி ஓமம், சீரகம், நல் ஓமம், சடாமாஞ்சில் சிறுதேக்கு, கூகைநீரு, நாகப்பூ தாளிசபத்திரி.

திரியான காமப்பூ மகரப்பூவும்
செங்கழுநீர் வாலுழுவை கருவாப்பட்டை
கிரியான சுண்டதிப்லி கஸ்தூரிப்பட்டை
கிளியூற ') செவ்வியம் கொத்துமல்லி
பரிவாசி தக்கோலந் தகரம் இந்து
பாங்கான ரேணுகமும் சாம்பிராணி
கரிதான கடுகுரோ கணிகடுக்காய்தாணி
கசகசா மஞ்சிட்டி சாரைப்பருப்பே. (31)

மதனகாமப்பூ, மகரப்பூ, செங்கழுநீர், வாலுழுவை, கருவாப்பட்டை கண்டந்திப்பிலி, கஸ்தூரிப்பட்டை, கிளியூறல்பட்டை, செவ்வியம், கொத்துமல்லி, தக்கோலம், தகரம், இந்து, ரேணுகம், சாம்பிராணி, கடுகுரோகிணி, கடுக்காய், தான்றிக்காய், கசகசா, மஞ்சிட்டி, சாரைப்பருப்பும்.

பருப்பான திரிபலைச முத்திராப்பழமும்
பகரரிய வலம்புரிக்காய் கற்கடகசிங்கி
கருப்பான சீரகமு நற்சீரகமும்
கார்போகி சண்பகப்பூ நெல்லிமுள்ளி
விருப்பாஞ்செஞ் சந்தனம்அகில் தேவதாரம்
வெட்பாலை வெளிப்பிசினு முந்திரிகைக்கொட்டை
மருப்பான குளவிந்தங் கஸ்தூரிமஞ்சள்
வகைவகைக்கு ஒருபலந்தான் வரிசைகேளே. (32)

திரிபலை, சமுத்திராப்பழம், சொல்வதற்கரிய வலம்புரிக்காய், கற்கடக சிங்கி, கருஞ்சீரகம், நற்சீரகமும், கார்போகி, சண்பகப்பூ, நெல்லிமுள்ளி, செஞ்சந்தனம், அகில், தேவதாரம், வெட்பாலை வெளிப்பிசின், முந்திரிகைக்கொட்டை குலவிந்தம், கஸ்தூரி மஞ்சள், வகைவகைக்கு ஒருபலம் வீதம் எடுத்துக் கொண்டு.

வரிசையாஞ் சரக்கையிள வறுப்புச்செய்து
வளமாக விடித்துநன்றாய்ச் சூரணஞ்செய்
கரிசையாய்ச் சீனிநெய் படிதானெட்டுக்
கமண்டலத்தி லாவின்பால் படிதான்ரண்டு
பரிசையாய் அடுப்பேற்றிக் கொதிக்கும்போது
பால்வார்த்துப் பதமாய்க்சூ ரணத்தைக்கொட்டு
அரிசைஅடி பற்றாமல் கிண்டிவாநீ
அதில்போட்டு முந்திரிகை பேரீச்சம்பழமே. (33)

வரிசையாக மேற்படிச் சரக்குகளை வறுப்பு செய்து நன்றாக இடித்து நன்றாகச் சூரணம் செய்து அதிலே சீனியும் நெய்யும் எட்டுப்படி சேர்த்து, பசுவின்பால் கமண்டலத்தின் அளவாக இரண்டுபடி ஊற்றி, அடுப்பிலேற்றிக் கொதிக்கக் கொட்டுவாயாக. அவ்வாறு கொதிக்கும் போது, அடிபிடித்துச் சூரணம் கருகிவிடாமல் நன்றாகக் கிண்டிக் கிளறுவாயாக நல்ல பதமாகி வரும்போது முந்திரிகையும் பேரிச்சம்பழத்தையும் சேர்க்க வேண்டும்.

பழமான வகைக்கிரண்டு பலந்தான்போடு
பாங்கான கொம்புத்தேன் ரண்டுபடிவாரு
வளமாகக் கிண்டியே யிறக்கிவைத்து
வாகான கணபதிமுன் வைத்துப்பூசி
அளவான லக்ஷமுரு ஓதித்தீரு
அப்பிரக செந்தூர மிரண்டுபலம்போடு
நழுவாதே வயித்தியர்க்கு மனநோகாதே
நாலிலொன்று வயித்தியர்க்குப் பாகமீயே. (34)

இவற்றை வகைக்கு இரண்டு பலம் போட்டு, கொம்புத்தேன் இரண்டு படிவார்த்து நன்றாகக் கிளறிக் கிண்டியே இறக்கி வைத்து, வாகான கணபதியை முன்னே வைத்து பூசித்து, ஒருலக்ஷம் உருவாக மந்திரத்தை ஓதி, அப்பிரகச் செந்தூரம் இரண்டுபலம் அதில் போட்டு, இத்தகைய இலேகியத்தைப் பக்குவமாகச் செய்து கொடுத்த வைத்தியருக்கும் ஒருபங்கு வழங்க வேண்டுமே என்று நினைத்து நழுவிடாதே! வைத்தியர் மனம் நோகாதவாறு அவருக்கும் இந்த லேகியத்தை நான்கில் ஒரு பங்கினை வழங்கிடுவாயாக.

ஈந்தவர்க்கு மனங்குளிர வெகுமானம்செய்
திரமான லேகியத்தைக் கொள்ளுகொள்ளு
தைந்துமே அந்திசந்தி மண்டலங்கொள்
சார்வான மேகமிரு பதுதானெங்கே

பாய்ந்துவரும் வாதபித்த சிலேற்பனம்போம்
பறந்தோடும் சயமீளை மந்தாரகாசம்
ஓர்ந்துமே பதினெட்டுக் குட்டரோகம்
ஓடுமே கிரந்தியரை யாப்புச்சூலை. (35)

இத்தகைய இலேகியத்தைச் செய்து கொடுத்தவரின் மனம் குளிரும் வகையில் பரிசுகளும் வெகுமானங்களும் வழங்கி இதமான இலேகியத்தை உண்பாயாக. காலையிலும் மாயிலும் ஒரு மண்டலம் இதனை உண்பாயாகில் மேகநோய்கள் இருபதும் போகும். பாய்ந்துவரும் வாத, பித்த, சிலேத்தும நோய்கள் பலவும் நீங்கும், சயம், ஈளை, மந்தார காசம் முதலிய நோய்கள் பறந்தோடும் பதினெட்டு வகை குஷ்டநோயும் கிரந்தி, அரையாப்பு, சூலைநோய், ஆகிய கொடிய நோய்களும் நீங்கும்.

சூலையென்ற குன்மவகை யெட்டுந்தீரும்
தொலையாத வாய்வெல்லாந் தூரவோடும்
ஓலையென்ற தேகத்திற் படரும்வெள்ளை
ஓடுமே உதிரவெட்டை பிரமேகப்புண்
பாலையென்ற ஸ்ரீகளுக்குக் கெற்பநோயேழும்
பறந்தோடும் மலடிகட்கும் பிள்ளையுண்டாம்
பாலையென்ற வுள்ரணங்கள் காந்தல்தீரும்
கண்களுமோ செவ்வலரிப் பூப்போலாமே. (36)

சூலை என்ற குன்மவகை எட்டும், தொலையாத வாய்வுகள் எல்லாம் நீங்கும், தேகத்தின் மீது படரும் வெள்ளை மேகம், இரத்த வெட்டை, பிரமேகப்புண், பெண்களுக்கு ஏற்படும் கர்ப்ப நோய்கள் ஏழும் பறந்தோடும். மலடிகளுக்கும் பிள்ளையுண்டாகும். பெண்களின் உள் இரணங்கள், காந்தல்களும் தீர்வதோடு, கண்களும் செவ்வலரிப் பூக்களைப் போலாகும்.

ஆமென்ற லேகியத்துக் கிச்சாபத்யம்
அந்திசந்தி மாறாதே கொள்ளுபாரு
பாமென்ற தேகமென்ன பசும்பொன்னாகும்
பரிவான மன்மதன்போல் வடிவுகொள்ளும்
தேமென்ற சுக்கிலமும் நித்தமூறும்
தேனனைய மொழியாருஞ் சேர்வர்சொன்னேன்
வாமென்ற வயித்தியனே யிந்தமுறைவிட்டு
மதிகெட்டு அலையாதே மகிழ்ந்துபாரே. (37)

இந்த இலேகியத்தை உண்ணும் போது இச்சாபத்தியமாக இருந்து, அதிகாலையிலும், மாலையிலும், இடையிலும் உண்டு வந்தால், தேகமானது பசும்பொன்னைப் போலாகும். மன்மதனைப் போன்ற அழகிய வடிவம் உண்டாகும். சுக்கிலமும் தினமும் ஊறும். இதனால் தேனைப்போன்ற மொழிபேசுகின்ற பெண்களும் சோர்ந்து போக மாட்டார்கள். எனவே, வைத்தியனே இந்த மருந்தைச் செய்யும் முறையைவிட்டு புத்தி கெட்டு அலையவேண்டாம். இதனைப் பயன்படுத்தி மகிழ்ந்து வாழ்வாயாக.

முக்கூட்டுத் தயிலம்

பார்க்கவே மேகரா சாங்கம்சொன்னேன்
பாடுகிறேன் முக்கூட்டுத் தயிலந்தன்னை
யேற்கவே நல்லெண்ணெய் படிதானெட்டு
இயல்பான ஆவினெய் படிதானாலு
கார்க்கவே விளக்கெண்ணெய் படிதானாலு
கலந்தொன்றாய்ப் பாண்டத்தி லளந்துவிட்டு
ஆர்க்கவே ஆவின்பால் பாடிதானாலு
அப்பனே செவ்விளநீர் படிதானாலே. (38)

மேக ராஜாங்க இலேகியத்தின் செய்முறையைப் பற்றிக் கூறிய நான், இப்பொழுது முக்கூட்டுத் தைலத்தின் செய்முறை தன்னைப்பாடுகிறேன். இதனைச் செய்ய ஏற்றுக் கொண்டால், நல்லெண்ணெய் எட்டுப்படி, பசுவின் நெய் நான்கு படி; இத்துடன் விளக்கெண்ணெய் நான்கு படியும் வார்த்து, இவையனைத்தையும் ஒரு பாத்திரத்தில் அளந்து ஊற்றி, அனைத்தையுமே நன்றாகக் கலந்துகொண்டு பசுவின் பால் நான்கு படியும் செவ்விளநீர் நான்கு படியும் ஊற்றி நன்றாகக் கலந்து கொள்ளவேண்டும்.

படியான கரிசாலை பொன்னாங்காணி
பசலையொடு கற்றாழை பிரமிகஞ்சா
செடியான தழுதாழை சிறுகீரைநொச்சி
சிறுபூளை வல்லாரை முசுமுசுக்கை
நடியான ஆதண்டை கற்பூரவல்லி
நற்றாழை விழுதுமுடக் கொத்தான்சின்னி
கொடியான கொழுஞ்சிகடார் நாரத்தம்பழமும்
கொமட்டிமா துளையோடே எலுமிச்சம்பழமே. (39)

பின்னர், கரிசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, பசலை, கற்றாழை, சிறுகீரை, நொச்சி, பிரமி, கஞ்சா, தழுதாழை, சிறுபூளை, வல்லாரை முசுமுசுக்கை, ஆதண்டை, கற்பூரவல்லி, நற்றாழைவிழுது முடக்கொத்தான், சின்னி, கொழுஞ்சி, கடார நார்த்தைப்பழம், கொமட்டி, மாதுளை, எலுமிச்சம் பழம் ஆகியவற்றுடன்.

பழமான மல்லிகைசெவ் வந்திபிச்சி
பழம்பாசி வகைக்கிரண்டு படிதான்சாறு
தழும்பாதே தென்னம்பூ முருங்கையுடனிலுப்பைத்
தனிப்பூவும் புங்கம்பூ செங்கழுநீரவுரி
கிழங்கல்லி கருடக்கிழங் காம்பல்நெய்தல்
கிழங்கோடு கொட்டிமரு ளன்கிழங்கு
விளங்கவே கோவையிட கிழங்குஞ்சேர்த்து
வெருகோடு நெல்லிக்காய்ப் பட்டையாமே. (40)

மல்லிகை, செவ்வந்தி, பிச்சி, பழம் பாசி, வகைக்கு இரண்டு படி. சாறுவார்த்து, தென்னம்பூ, முருங்கைப்பூ, இலுப்பைப்பூ, புங்கம் பூ, செங்கழுநீர், அவுரி, அல்லிக்கிழங்கு

கொட்டிக்கிழங்கு, மருளன் கிழங்கு, கோவைக்கிழங்கும் சேர்த்து, நெல்லிக்காய் பட்டையுடன்.

பட்டையொடு அருநெல்லி பூவந்திப்பழமும்
பரிவாக வகைக்கிரண்டு படிதான்சாறு
கொட்டமிடுங் குருந்தொட்டி பாதிரிநன்னாரி
குருந்தைவேர் பொன்முசுட்டை குமிழ்நீர்ப்பூலா
துட்டச்சிற் றாமுட்டி பேராமுட்டி
தூதுவளை குமரிசிறு காஞ்சோரிதோடை
சட்டமுடன் நிலப்பனையும் தண்ணீர்மிட்டான்
சங்கோடு சாரணைவேர் சிவனார்வேம்பே. (41)

அருநெல்லி, பூவந்திப்பழமும், இடித்து வகைக்கு இரண்டு படிச்சாறு எடுத்து, அதனுடன், குருந்தொட்டி, பாதிரி, நன்னாரி குருந்தை வேர், பொன் முசுட்டை குமிழ், நீர்ப்பூலா, சிற்றாமுட்டி, பேராமுட்டி, தூதுவளை சோற்றுக்கற்றாழை, சிறுகாஞ் சோரி, ஆடாதோடை, நிலப்புனைக் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு, சங்கன்வேர், சிவனார் வேம்பு இவற்றுடன்.

வேரான தழுதாழை நொச்சிவீழி
வெள்ளெருக்கு காக்கிரட்டான் கீழ்க்காய்நெல்லி
கூறான மருதோன்றி நாகவல்லி
குமிழோடு புரசுமுன்னை கோவைத்தண்டு
பேரான புனல்முருங்கை முக்காவேளை
புங்கோடு நாவலத்திபுனலிசித்தி
கூறான கடலிறாஞ்சி வெட்டிவிலாமிச்சு
குருவிஞ்சு அழிஞ்சிபூ வரசம்புட்டை. (42)

தழுதாழைவேர், நொச்சு, வீழி, வெள்ளெருக்கு வேர், காக்கரட்டான், கீழ்க்காய் நெல்லி, மருதோன்றி, நாகவல்லி, குமிழ், புரசு, முன்னை, கோவைத்தண்டு, புனல்முருங்கை, முக்காவேளை, புங்கு, நாவல், அத்தி, புனலி, சித்தி, கடலிராஞ்சி, வெட்டிவேர், விலாமிச்சம் வேர், குருவிஞ்சு வேர், அழிஞ்சி வேர், பூவரசன் பட்டையுடன்.

பட்டையாங் கிலுகிலுப்பை உள்ளுலர்த்திப்
பந்நீரி னிம்பூறல் கிளுவைச்சுண்டி
வெட்டியே வகைக்குநாற் பலமேதூக்கு
விதமாக இடித்ததனைப் பாண்டத்திட்டு
விட்டுமே பதினாறு மரக்கால்நீர்தான்
விட்டதனை யெட்டொன்றா யெரித்துக்காய்ச்சி
இட்டதொரு கிஷாயத்தை யெண்ணெயிலேவாரு
இயம்புகிறேன் கற்கவகை யினிதாய்க்கேளே. (43)

கிலுகிலுப்பை, இம்பூறல், கிளுவை, சுண்டி ஆகியவற்றை வெட்டி, அவற்றில் வகைக்கு நான்கு பலம் நிறுத்து எடைபோட்டு எடுத்துக் கொண்டு, இவற்றையெல்லாம்

இடித்து, அதனை ஒரு பாண்டத்திலிட்டு அதனுள்ளே பதினாறு மரக்கால் தண்ணீர் விட்டு அதனை அடுப்பில் ஏற்றி எட்டுக்கு ஒன்றாக எரித்துக் காய்ச்சிய இந்தக் கஷாயத்தை முன்பு சேர்த்து வைத்துள்ள எண்ணெயில் வார்த்துக் கொள்வாயாக, இனி கற்க வகைகளைக் கூறுகிறேன், கேட்பாயாக.

இனிதான சாதிக்காய் கிராம்புபத்ரி
யேலமொடு இலவங்கம் அதிமதுரங்கோஷ்டம்
குனிதான பெருங்காயம் அரத்தைசுக்கு
சூரோசானி வால்மிளகு கொத்துமல்லி
வனிதகருஞ் சீரகம்கஸ் தூரிமஞ்சள்
வாலுழுவை சிறுநாகப் பூவோடிந்து
வனிதமாஞ் சதகுப்பை சிவாசிப்பட்டை
வற்றங்கி அகிலோடு தேவதாரம். *(44)*

ஜாதிக்காய், கிராம்பு, ஜாதிப்பத்திரி, ஏலம், இலவங்கம், அதிமதுரம், கோஷ்டம், பெருங்காயம், அரத்தை, சுக்கு, குரோசானி ஓமம், வால்மிளகு, கொத்துமல்லி, கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், வாலுளுவை, சிறுநாகப்பூ, சதகுப்பை, சீவாசிப்பட்டை, வற்றங்கி, அகில், தேவதாரம் இவற்றுடன்.

தாரமாங் கர்ர்போகி கடுக்காய்தான்றி
தாளிசபத் திரிஓமம் குளவிந்தம்மஞ்சள்
ஆரமாம் கண்டதிப்லி அக்கிராகாரம்
அதிமதுரம் கிளியூறல் கருவாய்ப்பட்டை
சோரநற் சீரகம் கூகைநீரும்
குங்குமப்பூ வலம்புரிக்காய் விளங்கம்மாஞ்சி
சாரமாந் திப்பிலியும் திப்லிமூலம்
சந்தனமும் நெல்லிமுள்ளி சிறுதேக்காமே. *(45)*

கார்போகி, கடுக்கரய், தான்றிக்காய், தாளிசபத்திரி, ஓமம், குருவிந்தம், மஞ்சள், கண்டந்திப்பிலி, அக்கிரகாரம், அதிமதுரம், கிளியூறல், கருவாய்ப்பட்டை, நற்சீரகம், கூகைநீர், குங்குமப்பூ, வலம்புரிக்காய், வாய்விளக்கம், மாஞ்சிட்டி, திப்பிலி, திப்பலிமூலம், சந்தனம்.

தேக்கான சண்பகப்பூ கடுக்ரோகணியும்
திரிபலையும் சமுத்திராப் பழமுங்கல்நார்
தேக்கான கச்சோல மா துளங்காய்ப்பிஞ்சு
சென்னகரைப் பட்டையொடு நெரிஞ்சிக்காயும்
வாக்கான பெருங்குரும்பை சித்ரமூலம்
வகைவகைக்கு ஒருபலந்தான் வரிசையாகத்
தாக்கான புங்கம்வேர் பாலாலாட்டித்
தவறாம லெண்ணெயிலே கரைத்திடாயே. *(46)*

நெல்லிமுள்ளி, சிறுதேக்கு சண்பகப்பூ, கடுகுரோகணி, திரிபலை, சமுத்திராப் பழம், கல்நார், தேக்கு, கச்சோலம், மாதுளங்காய்ப்பிஞ்சு, சென்னகரைப்பட்டை, நெருஞ்சிக்காய், பெருங்குரும்பை, சித்ரமூலம், ஆகியவைகளில் வகைக்கு ஒருபலம்

எடுத்துக்கொண்டு, புங்கம் வேர் பாலால் இவற்றையெல்லாம் அரைத்து பின்பு, எண்ணையிலே கலந்திடுவாயாக.

கரைத்துமே அடுப்பேற்றிக் கனேசன்பூசை
கைமுறையாய்ச் செய்திட்டு எடுத்துவாநீ
நிரைத்துமே ஒருவிறகால் நெருப்பைமூட்டி
நிலையான பதமாகக் கிண்டிக்கிண்டி
முரைத்துமே யெண்ணெயுடன் பதத்தைப்பார்த்து
முருங்கைப்பூ ஒருபிடிதான் போட்டுக்கிண்டி
கரைத்துமே மயிர்க்கொழுந்து பிடிதான்போடு
கருகாமல் பச்சைநிறங் கண்டுகொள்ளே. (47)

முன்னர், கரைத்தவற்றைக் கொண்ட பாத்திரத்தை அடுப்பில் ஏற்றி, கனேச பூஜையினை கைமுறைாய்ச்செய்து ஒரு விறகால் நெருப்பை மூட்டித், தீயேற்றி; எரிப்பாயாக. இவற்றையெல்லாம் பதமாகக் கிண்டிக்கிண்டி கிளறும் போது, எண்ணையுடைய பதத்தைப்பார்த்து முருங்கைப்பூ ஒரு பிடிபோட்டு கிண்டி மயிர்க்கொழுந்து போட்டு, கருகாமல் பச்சை நிறமாக இருக்கும் போதே ஒருபிடி எடுத்துக் கொண்டு நிறம் பார்ப்பாயாக.

கொள்ளவே இளகுபத மிதுதானென்று
குறிப்பான வடிகலசந் தன்னிற்கேளு
வெள்ளவே புனுகுகோ ரோசனைகஸ்தூரி
விதமாக ஒருவகைக்கு நாற்களஞ்சுதூக்கு
'வள்ளலே வடிகலசந் தன்னிற்போட்டு
வளமாக என்ணெய்தனை வடித்துவாங்கு
கள்ளமா யடியிலே கசடில்லாமல்
கம்பிளியி லிட்டுநீ பிழிந்திடாயே. (48)

இளகுபதமாயிருக்கும்போதே, வடிகலசத்தில் பக்குவ நிலையைப் பார்ப்பாயாக, நல்ல பக்குவ நிலையில் புனுகு, கோரோசனை, கஸ்தூரி இவைகளை வகைக்கு நான்கு கழஞ்சு எடை எடுத்துச் சேர்த்து, எண்ணையை வடிகட்டுவதற்கு முன்பாக, அந்த எண்ணையின் அடியில் கசடு தங்காமல் இருக்கும் வகையில் எண்ணெயைக் கம்பளியில் ஊற்றிப்பிழிந்து எடுத்து, ஒரு பாத்திரத்தைச் சுத்தம் செய்து அதிலே ஊற்றி நிரப்பிக் கொள்வாயாக.

பிழிந்துநீ வேடுகட்டிப் பூசைபண்ணிப்
புதைத்துமே நிலக்குழியி லிட்டெடுத்து
நளினமாய் நாலுநாள் வட்டமுழ்கு
நாலாயி ரத்துநா னூற்றுநாற்பத்தெட்டு
அழுந்துநோய் நாள்வட்ட முழுகும்போது
ஆகாத நோயெல்லா மகன்றுபோகும்
குளிர்தண்ணீர் தள்ளியிள வெந்நீர்மூழ்கு
குணமான பசும்பயறு சீக்காய்தேயே. (49)

பிழிந்த எண்ணெயை வேடுகட்டிப் பூஜை பண்ணிப்பின் அந்த பாத்திரத்தை சிலநாட்கள், பூமியில் புதைத்து நிலப்புடம் வைத்து, எடுத்துக்கொண்டு நான்கு நாட்களுக்கு ஒருமுறை இந்த எண்ணெய் தேய்த்து முழுகி வந்தால், நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு நோய்கள் எல்லாம் அகன்று போகும். எண்ணெய் தேய்த்து, குளிர்ந்த தண்ணீரில் குளிக்காமல், இளஞ்சூடான வென்னீரில் பாசிப்பயிறுமாவுடன் சீயக்காய்த்தூள் சேர்த்துத் தேய்த்துக் குளிப்பாயாக.

தேயாத புளியோடு புகையிலைதள்ளித்
திறமாக மண்டலந்தான் முழுகும்போது
பாயாத திரேகமது கஸ்தூரிவீசும்
பார்ப்பதற்குப் பசுந்தங்கம் போலேயாகும்
சேயேநீ வாயுவகை பதார்த்தந்தள்ளு
சிறப்பான மோர்தயிரும் புளியுந்தள்ளு
வாயேநீ வெயில்தனிலே நடையுமாகா
வழுத்துகிறேன் மற்றாநாள் எல்லாமாமே. (50)

இவ்வாறு இந்த எண்ணெய் தேய்த்துக் குளித்து வரும்போது புளியும் புகையிலையும் பயன்படுத்தாமல் பத்தியமாக இருந்து, ஒரு மண்டலக்கால அளவு தலைமுழுகிக் குளிக்க வேண்டும். இவ்வாறு குளித்து, வரும் போது, உடம்பு கஸ்தூரி மணம் வீசும், பார்ப்பதற்குப்பசுந்தங்கம் போல் பளபளக்கும். எண்ணெய் மூழ்கி வரும் போது வாயுபதார்த்தங்களையும். மோர், தயிர், புளி போன்றவைகளையும் ஒதுக்கித்தள்ள வேண்டும், வெய்யிலில் நடந்து செல்வதும் கூடாது, நோய்கள் பூரணமாய்க் குணமடைந்தபிறகு, பத்தியத்திற்காகத் தள்ளிய எல்லாவற்றையுமே சேர்த்துக் கொள்ளலாகும்.

மேகராஜாங்க எண்ணெய்

ஆமென்ற மேகரா சாங்கஎண்ணெய்
அரையுகிறேன் சர்வாங்க நோயுந்தீர
ஏமென்ற சிற்றாமணக் கெண்ணெய்படிநாலு
இதமான ஈருள்ளிச் சாறுபடிரெண்டு
பேமென்ற கழுதைலத்திச் சாறுபடிரெண்டு
பேய்க்குமட்டி கரிசாலைச் சாறுபடிரெண்டு
போமென்ற பொறியாரை வல்லாரைகுருக்கு
பிரமியொடு பொடுதலையும் அவுரிச்சாறு. (51)

மேகராஜாங்க எண்ணையை உபயோகித்து வந்தால் சர்வாங்க நோய்களும் தீரும் என்பதால் அதன் செய்முறையை, விளக்குகிறேன். சிற்றாமணக்கெண்ணை நான்கு படி; ஈருள்ளிச்சாறு இரண்டுபடி, கழுதை லத்திச்சாறு இரண்டுபடி, பேய்க்கு மட்டிச்சாறும் கரிசாலைச்சாறும் வகைக்கு இரண்டு படி; பொறியாரை, வல்லாரை, குருக்குப்பிரம்மி, பொடுதலை அவுரிச்சாறு இவையும் வகைக்கு இரண்டுபடி.

சாறான செருப்படியின் ரெண்டுவகைகூட்டு
சடைச்சியோடு இன்பூரல் காட்டுச்சேம்பு
கூறான கனக்கொடிக்கோ ழியாவாரைகூடக்
குளிமிட்டான் கட்டுள்ளி தேள்கொடுக்கு
ஆறான கவுதும்பை ஆதளைநீர்முள்ளி
ஐவேலி முருக்கிலைச்சா றொடுகோவைகுன்றி
வாறான வழுதலையும் வெள்ளறுகு கரந்தை
வகைக்கிரண்டு படிசாறு எண்ணெயிலேவாரே. (52)

இரண்டு வகைச் செருப்படைகளின் சாறும் சடைச்சி, இம்பூரல், காட்டுச்சேம்பு, கனக்கொடி, கோழி யாவாரை குளிமிட்டான், கட்டுள்ளி, தேள்கொடுக்கு, கனதும்பை, அதளை, நீர்முள்ளி, ஐவேலி, முருக்கிலைச்சாறு இவற்றுடன் கோவை, குன்றியிலை, வழுதலை, வெள்ளறுகு, கரந்தை இவற்றின் சாறுகளும் வகைக்கு இரண்டு படி சேர்த்து அத்தனையும் எண்ணெயில் வார்ப்பாயாக.

வார்த்துமே வெட்டுவகை மருந்துகேளு
வாகையொடு மருதுகருங் குருந்துவன்னி
கார்த்துமே கருஞ்சூரை செங்கத்தாரி
கற்றாழை பூவரசு கருவேலின்று
கூற்றுமே குவளைபிறா யெரிகாலன்கொன்னை
குருந்தொட்டி நன்னாரி குமிழிநீர்ப்பூலா
சாற்றுமே வாட்பூலா புரசுசங்கு
தழுதாளை கண்டங்கத்திரி தூதுவேளைநொச்சி. (53)

வார்த்தபிறகு, இதில் சேர்க்கும் எட்டுவகை மருந்துகளையும் கூறுகிறேன், கேட்பாயாக வாகை, மருது, கருங்குருந்து, வன்னி, கருஞ்சூரை, செங்கத்தாரி, கற்றாழை, பூவரசு, கருவேலி, குவளை, பிறாய், ஆமணக்கு, கொன்றை, குருந்தொட்டி, நன்னாரி, குமிழி, நீர்ப்பூலா, வாட்பூலா, பரசு, சங்கு, தழுதாழை, கண்டங்கத்திரி, தூதுவேளை, நொச்சியுடன்.

நொச்சிசிற் றாமுட்டி பேராமுட்டி
நோக்கரிய ஏரழிஞ்சு கரந்தைபுங்கு
மச்சிபூ தக்கரப்பான் வேம்பாடம்பட்டை
மருதோணி நாகவல்லி மகிழம்பட்டை
இச்சியொடு முள்ளிலவு சங்கங்குப்பி
யெருக்கோடு மருக்காரை சின்னிபுன்னை
கச்சியே கருமுள்ளி செம்முள்ளிதுத்தி
காஞ்சோரி காட்டுமுள்ளி சிறுகுறிஞ்சான்வேரே. (54)

சிற்றாமுட்டி, பேராமுட்டி, ஏரழிஞ்சில், கரந்தை புங்கு, பூதக்கரப்பான், வேம்பாடம்பட்டை, மருதோன்றி, நாகவல்லி, மகிழம்பட்டை, இச்சி, முள்ளிலவு, சங்கங்குப்பி, எருக்கு, மருக்காரை, சின்னி, புன்னை, கருமுள்ளி, செம்முள்ளி, துத்தி, காஞ்சோரி, காட்டுமுள்ளி, சிறுகுறிஞ்சான்வேர்.

வேரான சிறுகுறட்டை மலைகலக்கிசிவதை
வெண்காக்கை வேர்வீழி கீழ்க்காய்நெல்லி
பேரான சிவன்வேம்பு அமுக்கராவேர்
புனல்முருங்கை தைவேளை குப்பைமேனி
நேரான சனியுடைய சத்திச்சாரணையும்
நிலக்குமிழும் நிலவிளா நரிப்புடையின்பூரல்
வாரான பால்குறண்டி முக்காவேளை
வட்டக்கி லுகிலுப்பை வட்டத்துத்தியென்னே. (55)

சிறுகுறட்டை, மலைகலக்கி, சிவதை, வெண்காக்கரட்டான் வேர், கீழ்க்காய் நெல்லிவேர், சிவன்வேம்பு, அமுக்கராவேர், புனல்முருங்கை, தைவேளை, குப்பைமேனி, சத்திசாரணை, நிலக்குமிழி, நிலவிளா நரிப்புடை, இம்பூரல், பால்குறண்டி, முக்காவேளை வட்டக்கிலுகிலுப்பை, வட்டத்துத்தி இவற்றுடன்.

துத்திவட்டத் திருப்பியொடு நிலக்கடம்புதுடரி
சுடுதுரத்தி உள்ளுலத்தி பாதரிநற்கடம்பு
வெற்றியே மாத்தானை மருட்கிழங்கு
வெருகோடு வெள்ளினறு முக்காவேளை
சித்திமா விலிங்கோடு கிரந்திநாயகமும்
சிறுகிளா பொன்முசுட்டை சிறுகாஞ்சோரி
முற்றியே நிலப்பனையும் வில்வவேரும்
மிளகரணை விடத்தைவேர் உசிலம்பட்டை. (56)

வட்டத்திருப்பி, நிலக்கடம்பு, துடரி, சுடுதுரத்தி, உள்ளுலத்தி, பாதிரி, நற்கடம்பு, மாத்தானை, மருட்கிழங்கு, வெருகு, நறுவெள்ளி, முக்காவேளை, மாவிலங்கு, கிரந்திநாயகம், சிறுகிளா, பொன் முசுட்டை, சிறுகாஞ்சோரி, நிலப்பனை, வில்வவேர், மிளகரணை விடத்தலைவேர், உசிலம்பட்டையுடன்.

உசிலோடு கொடுவல்லி சீந்திற்றண்டு
உகாயோடு நிலவாகை கோவைத்தண்டு
கிசையான பாவட்டை நாரத்தையிலுப்பை
கிளுவையா மாஞ்செவியும் முத்தெருக்கஞ்செவியும்
அசையாத மந்தாரை மைக்கொன்றைகாசா
ஆற்றுநுணா ஆற்றரசு ஆயிலியப்பட்டை
நசியவே நாவலத்தி முதலைப்பூண்டு
நாய்க்கோட்டான் புனலிகரு மத்தைவேம்பே. (57)

கொடுவல்லி, சீந்தில்தண்டு, உகா, நிலவாகை கோவைத்தண்டு, பாவட்டை, நாரத்தை, இலுப்பை, கிளுவை, மான் செவி, முத்தெருக்கஞ்செவி, மந்தாரை, மைக்கொன்றை, காசா, ஆற்றுநுணா, ஆற்று அரசு, ஆயில்யப்பட்டை, நாவல், அத்தி, முதலைப்பூண்டு, நாய்க் கோட்டான், புனலி, கருவூமத்தை, வேம்பு.

வேம்பான பெருமருது ஆற்றலரிஅரசு
வெல்குவளை சன்னாசி முருங்கைமாதுளையும்
சோம்பாதே வகைவகைக்குப் பலந்தான்பத்துச்
சொல்லுவேன் புல்லுருவி வகையைக்கேளு
வேம்போடு அரகிலந்தை மாவிலுப்பை
வில்லையொடு விடத்தலைமா துளையாமெட்டுஞ்
சோம்பாதே புல்லுருவி வகைதானெட்டுச்
சொல்லியதோர் முன்மருந்திற் சொல்லக்கேளே. (58)

பெருமருது, ஆற்றலரி, அரசு, வெல்குவளை, சன்னாசி, முருங்கை, மாதுளை ஆகியவைகள் வகைக்கு பத்துப்பலம் எடுத்துக் கொண்டு அத்துடனே சேர்க்கும் புல்லுருவிகளைப்பற்றியும் கூறுகிறேன் வேம்புடன் அரசு, இலந்தை, மா, இலுப்பை, வில்வம் விடத்தலை, மாதுளை ஆகிய இவை. புல்லுருவி வகை எட்டு ஆகும்.

கேளப்பா இடித்ததனைப் பாண்டத்திட்டுக்
கெடியாக வெண்தூணி சலந்தான்விட்டு
யேளப்பா எட்டொன்றா யெரித்துக்காய்ச்சி
யிறுத்துமே கியாழத்தை யெண்ணெயிலேவாரு
ஆளுமே வெள்ளாட்டு நீர்படிதான்ரெண்டு
ஆவினீர் படிரெண்டு அதிலேவாரு
ஆளுநீ கலக்கியதை ரவியில்வைத்து
அதிற்போட மருந்துவகை அறைகிறேனே. (59)

இவற்றையெல்லாம் இடித்துப் பாண்டத்திலிட்டு, எட்டுமரக்கால் தண்ணீர்விட்டு அதனையும் சேர்த்து எட்டுக்கு ஒன்றாகும்படி எரித்துச் சுண்டக்காய்ச்சி கியாழத்தை எண்ணெயிலே வார்ப்பாயாக. பிறகு வெள்ளாட்டு நீர் இரண்டு படி ஆவின் நீர்படி இரண்டு, ஆகியவற்றை அதிலே வார்ப்பாயாக, ஆக அனைத்தையும் நன்றாக கலக்கி, அதை சூரிய வெளிச்சத்தில் வைக்கவும். அதில் போட வேண்டிய மருந்து வகைகளைக் கூறுகிறேன். கேட்பாயாக.

அறைகிறேன் சாதிக்காய் கிராம்புஏலம்
அழகான இலவங்கம் அதிமதுரம்கோஷ்டம்
விரைகிறேன் கண்டந்திப் பிலியின்மூலம்
வெண்காரம் வால்மிளகு குரோசானியோமம்
கரையாத பெருங்காயம் கடுக்காய்தான்றி
கருஞ்சீரம் கார்போகி கஸ்தூரிமஞ்சள்
அறைகிறேன் அரத்தைசுக்கு அக்ராகாரம்
அதிவிடயம் கடுகுரோ கணிகடுகிந்துப்பே. (60)

ஜாதிக்காய், கிராம்பு, ஏலம், இலவங்கம், அதிமதுரம், கோஷ்டம் கண்டந்திப் பிலியின் வேர், வெண்காரம், வால்மிளகு, குரோசானி ஓமம், பெருங்காயம், கடுக்காய், தான்றிக்காய், கருஞ்சீரகம், கார்போகி, கஸ்தூரி மஞ்சள், அரத்தை, சுக்கு, அக்ராகாரம் அதிவிடயம், கடுகுரோகிணி, கடுகு, இந்துப்போடு.

உப்போடு சடாமாஞ்சி தாளிசபத்திரியும்
உத்தமனே கசகசா ஓமங்கஞ்சா
செப்பாதே வலம்புரிக்காய் பறங்கிப்பட்டை
சென்னகறைப் பட்டையொடு கஸ்தூரிப்பட்டை
தப்பாதே வாலுழுவை சிறுநாகப்பூ
தக்கோலஞ் சிறுதேக்குத் தகரங்கல்நார்
அப்பாலே ஆவினொடு வசம்புநீர்வெட்டி
அற்றத்த நேர்வாளம் சேங்கொட்டைகூட்டே. (61)

சடாமாஞ்சில், தாளிசபத்திரி, கசகசா, ஓமம், கஞ்சா, வலம்புரிக்காய், பறங்கிப்பட்டை, சென்னகறைப்பட்டை, கஸ்தூரிப்பட்டை, வாலுளுவை, சிறுநாகப்பூ, தக்கோலம், சிறு தேக்கு, தகரை, கல்நார், வசம்பு, நீர்வெட்டி, நேர்வாளம், சேங்கொட்டையும் சேர்த்துக் கூட்டுவாயாக.

கூட்டியதோர் வசுவரசு ஆனைத்திப்பிலி
கொத்துமல்லி குங்குமப்பூச் சீரங்கச்சோல்
ஆட்டியே யெவாச்சாரம் சத்திச்சாரம்
அரேனுகமும் நவாச்சாரம் சாத்ரபேதி
கேட்டிநீ வகைவகைக்கு ஒருபலந்தான் தூக்கு
கெருடனிட கிழங்கோடு செங்கழுநீர்க்கிழங்கு
காட்டுமே கார்த்திகையின் அப்பைக்கிழங்கு
காட்டுக்கருணையொடுநற் கருணைக்கிழங்கே. (62)

வசுவரசு, ஆனைத்திப்பிலி, கொத்துமல்லி, குங்குமப்பூ, சீரகம் கச்சோலம், எவாச்சாரம், சத்திச்சாரம், அரேனுகம், நவாச்சாரம், சாத்திரபேதி, ஆகியவை வகைக்கு ஒரு பலம் எடை எடுத்துச் சேர்த்து கெருடன் கிழங்கு, செங்கழுநீர்க்கிழங்கு, கார்த்திகைக்கிழங்கு அப்பைக்கிழங்கு, காட்டுக்கருணை, நற்கருணைக்கிழங்குடன்.

கிழங்கான நறளையொடு தேவிக்கிழங்கு
கெடியான முருக்கம்பூ வெருக்கம்பூவும்
தளங்காதே புங்கம்பூ வரசம்பூவும்
தாளியொடு முருங்கைப்பூ செம்முருக்கம்பூவும்
அளங்காதே செண்பகப்பூ சிற்றகத்திப்பூவும்
ஆவரையின் பஞ்சாங்கந் தேத்தான்கொட்டை
புழங்குமே கடைமருந்தோ டெல்லாமொக்கப்
புங்கம்பால் விட்டாட்டி யெண்ணெயிலேபோடே. (63)

நறளை, தேவிக்கிழங்கு, முருக்கம்பூ, எருக்கம்பூ, புங்கம்பூ, அரசம்பூ, தாளி, முருங்கைப் பூ, செம்முருக்கன் பூ, செண்பகப்பூ, சிற்றகத்திப்பூ, ஆவாரையின் பஞ்சாங்கம், (வேர், பட்டை, இலை, பூ, காய்) தேத்தான் கொட்டை இத்தகைய கடைமருந்துகளுடன் எல்லாவற்றையும் ஒன்றாக, புங்கம்பால்விட்டு ஆட்டி, எண்ணெயிலே போடுவாயாக.

போட்டுமே அடுப்பேற்றி யெரிநேரப்பா
புகழான கணபதிக்குப் பூசைபண்ணு
நாட்டமே மெழுகுபதம் தன்னைப்பாரு
நலமான பதமறிந்து வடிக்கக்கேளு
ஆட்டுமே கஸ்தூரி வராகன்ரெண்டு
அழகுபச்சைக் கற்பூரம் வராகன்ரெண்டு
நாட்டுமே சுத்தித்த லிங்கம்நாலு
நல்லரச கற்பூரம் வராகனாலே. (64)

பிறகு அதனை அடுப்பிலேற்றி, எரித்து எண்ணெயைப் பக்குவமாகப் காய்ச்சி வரும்போது, மெழுகுப்பதம் வந்தவுடனேயே, நல்ல பதமாகி விட்டது என்பதை அறிந்தவுடன் எண்ணெயை வடிக்கட்டுவதற்காக வடிகலத்தில் ஊற்றும் முன்பு கஸ்தூரி இரண்டு வராகன், பச்சைக் கற்பூரம், இரண்டு வராகன், சுத்தஞ் செய்த லிங்கம் நாலு வராகன் ரசகற்பூரம் நாலு வராகன் ஆகிய இவையெல்லாவற்றையும்.

நாலான இவையெல்லாம் வடிகலத்திலிட்டு
நலமாக எண்ணெய்தனை வடித்திடாய்நீ
சேலோடு தயிலத்தைப் பதனம்பண்ணு
திறமான கடுகுதனை யெறிந்திடாதே
பாலான பச்சையெண்ணெ யதிலேவிட்டுப்
பரிவாக உலரவைத்து மேலேபூசச்
சேலோடு சுரங்குஷ்ட மேல்ரோகமெல்லாம்
தீருமடா அரப்பிட்டுக் குளித்துப்போடே. (65)

வடிகலசத்திலிட்டு, எண்ணெய் தன்னை வடிகட்ட வடித்திடுவாய் வடித்த பிறகு அந்தத் தைலத்தை பதனம் பண்ணிவிட்டு, நிறமான எண்ணெய்க் கடுகதனை எறிந்துவிடாமல் பச்சை எண்ணெயை அதிலே விட்டு, நன்றாக உலரவைத்து, மேலே பூசும் மருந்தாகப் பயன்படுத்தினால் கருங்குஷ்டம் முதலிய மேக நோய்கள் எல்லாம் தீரும். ஆகையால் அதனை உடலில் தேய்த்துப்பின் அரப்புத்தேய்த்துக் குளிக்கவும்.

குளிக்கவே வடித்தெடுத்த எண்ணெய்தன்னைக்
குடிக்கவே நாளொன்றுக் கோர்கரண்டிவீதம்
களிக்கவே மூன்றுநா ளந்திகொள்ளு
கடிதான பத்தியந்தான் காக்கவேணும்
உளிக்கவே ஏழாநாள் தலைநீர்வார்த்து
உப்பதனை யெட்டாநாள் வறுத்துக்கூட்டு
அளிக்கவே யிப்படிநீ கொள்ளும்போது
ஆகாத நோயெல்லா மகன்றுபோமே. (66)

வடித்திட்ட எண்ணெய் தன்னை நாள் ஒன்றுக்கு ஒரு கரண்டி வீதம் மூன்று நாள் அந்திவேளையில் உட்கொள்வாயானால் அதற்குரிய கடுமையான பத்தியத்தைத் தவறாமல் காக்கவேண்டும். பத்தியம் தவறாமல் இருந்து, ஏழாம் நாள், தலைக்கு நீர்

வார்த்து தலைகுளித்து எட்டாம் நாளிலிருந்து உணவில் வறுத்த உப்பைச் சேர்த்துக்கொண்டு, இப்படியே உணவருந்திவருவாயானால் உனது உடலுக்கு ஆகாத நோய்கள் எல்லாம் அகன்று போய்விடும்!

போமென்ற மேகமொடு கிரந்தி அரையாப்புப்
பொல்லாத பதினெட்டுக் குட்டரோகம்
வாமென்ற குன்மமெட்டும் வாராதோடும்
வாயுவொடு சூலைமகோ தரமுந்தீரும்
தாமென்ற வாதபித்தஞ் சோர்ந்துபோகும்
சயரோக மேகமெங்கே தானேஓடும்
தேமென்ற வண்டுகடி செய்யான்பூரான்
தீராத விஷகடியும் போகும்பாரே. *(67)*

இதனை உபயோகிப்பதால், மேக நோய்களுடன் கிரந்தி, அரையாப்பு, பதினெட்டு வகையான பொல்லாத குஷ்டரோகங்கள், குன்மவகையான அஷ்ட குன்மங்களும், தீரும். வாத பித்தம் சோர்ந்து போகும். எல்லா நோய்களும் தரமாகவே ஓடிப் போய்விடும். வண்டு கடி, செய்யான், பூரான் தீராத விஷக்கடிகளின் நஞ்சும் போகும்.

போகுமே விஷகடிகள் பட்டதெல்லாம்
பிளவையொடு காமாலை பாண்டுசோகை
போகுமே மேகத்தின் அழலையப்பா
பொல்லாத பித்தத்தின் தணலும்போகும்
ஏகுமே கெற்பத்தி லேழுவகைநோயும்
என்மக்கா ளுதிரத்தின் திரட்சிபோகும்
போகுமே வயிற்றிலுள்ள மலக்கட்டெல்லாம்
புழுவான கிருமியொடு வாய்வுபோமே. *(68)*

பிளவை, காமாலை, பாண்டு, சோகை, மேகத்தின் அழலை நோய்கள், பித்தத்தில் தணலான காய்ச்சல்களும் கர்ப்பத்தில் தோன்றும் ஏழுவகை நோய்களும் உதிரத்தின் திரட்சியும் போகும். வயிற்றிலுள்ள மலக்கட்டுகளும் புழுக்களும், கிருமிகளும் வாயுக்களும் நீங்கும்.

வாயுவொடு மூலவகை பவுத்திரமுந்தீரும்
மகத்தான விப்புருதி கண்டமாலை
வாயுவொடு துடைவாழை பிளவைப்புற்று
மகத்தான கடிகரப்பான் மண்டைச்சூலை
வாயுவொடு விரைவாதம் அண்டவாதம்
வலிவாதம் மற்றுமுள்ள வாதமெல்லாம்
தேயுமே எண்ணெயுட பெயரைச்சொன்னால்
தேசத்தி லில்லாம லோடிப்போமே. *(69)*

மூலவகைகளைச் சேர்ந்த ஒன்பது வகை மூலநோய்களும் பவுத்திர நோயும், துடைவாழை பிளவைப் புற்று, கடிகரப்பான், மண்டைச் சூலை, விரைவாதம்,

அண்டவாதம், வலிவாதம், மற்றும் உள்ள வாதநோய்கள் அனைத்தும் போகும். இந்த எண்ணெயின் பெயரைச் சொன்னாலே மேற்கூறிய நோய்கள் அனைத்துமே ஊரைவிட்டே போய்விடும்.

பத்தியம்

போமென்ற எண்ணெய்க்குப் பத்தியந்தான்கேளு
புகழான வெந்நீரும் சோறுமுண்ணு
வேமென்றே யேழாநாள் தலைநீர்வார்த்து
விதமான உப்பதனை வறுத்துக்கூட்டு
தேமென்ற இம்முறைதா னாருஞ்சொல்லார்
செப்பார்கள் வயித்தியரே திறந்துபாரும்
வாமென்ற பிணியாளி நோய்தீரவேண்டி
வயித்தியனை வணங்கியுப சாரம்பண்ணே. *(70)*

இந்த எண்ணையைப் பயன்படுத்தும் போது மேற்கொள்ள வேண்டிய பத்தியம் பின்வருமாறு. இதை உபயோகிக்கத் தொடங்கியது முதல் வெந்நீரும் சோறும் தான் உண்ண வேண்டும் ஏழாம் நாளன்று, தலைக்குத் தண்ணீர்விட்டுக் குளிக்கவும். அந்நாளிருந்து உப்பை வறுத்துக் கூட்டவும். இந்த முறையை வேறு எவரும் சொல்ல மாட்டார்கள். இதனைப் பயன்படுத்தும் நோயாளிகள், தமது நோய் தீர வைத்தியரை வணங்கி உபசாரங்களைச் செய்ய வேண்டும்.

பண்ணினால் செய்மருந்து பலிக்கும்பாரு
பரிவான நோயெல்லாம் பறந்துபோகும்
வெண்ணியே யிவனென்ன வயித்தியந்தானென்று
வேசாரி ஊழியம்போற் செய்யச்சொன்னால்
மண்ணிலே வயித்தியர்க்கு மனமேநொந்தால்
மானிடர்க்கு நோய்தீரா மருந்தாகாது
தன்னிலே தானறிந்து வணங்கிச்செய்தால்
சண்டாள னானாலும் தீரும்நோயே. *(71)*

இவ்வாறு வைத்தியரை நன்குமதித்து, உபசாரம் செய்தால் தான் செய்மருந்து பலிக்கும் நோய்கள் எல்லாம் பறந்துபோகும். இவன் என்ன சித்த வைத்தியன் தானே என்று ஏளனமாக மற்ற ஊழியர்களிடம் வேலை வாங்குவதைப்போல், வைத்தியனைச் செய்யச் சொன்னால் மருந்துகள் எதுவும் பயன்படாது தன்னிலே தானறிந்து வணங்கிச் செய்தால், நோயாளி பரமசண்டாளனே யாயினும் நோய்கள் தீரும்.

சேங்கொட்டை வல்லாதி லேகியம்

நோய்தீரச் சேங்கொட்டை வல்லாதிசொல்வேன்
நுணுக்கமாய்ச் சேங்கொட்டை பலந்தான்பத்து
மோயவே சாணிப்பால் சுத்திசெய்து
மூக்குவெட்டி யின்னுமதில் முறையைக்கேளு

சாயவே கொடுவேலி பறங்கிப்பட்டை
சங்கோடு அமுக்கரா சிவனார்வேம்பு
ஓயவே மாவிலிங்கப் பட்டையோடு
உத்தமனே வகைக்குஒரு பலந்தானென்னே. (72)

நோய்கள் தீர செங்கொட்டை வல்லாதி லேகியம் கூறுகிறேன். நுணுக்கமாகச் செய்ய வேண்டுமானால் செங்கொட்டை பத்துபலம் எடைக்கு எடுத்துக்கொண்டு அதனைச் சாணிப்பாலில் ஊற வைத்துச் சுத்தி செய்து மூக்கு வெட்டிக் காயவைத்து, கொடுவேலி, பறங்கிப்பட்டை, சங்கோடு, அமுக்கராக்கிழங்கு, சிவனார்வேம்பு, மாவிலிங்கப்பட்டை ஆகியவை வகைக்கு ஒருபலம் எடுத்துக் கொள்ளவும்.

என்னவே கருஞ்சீரம் கஸ்தூரிமஞ்சள்
இருதிப்பிலி கடுக்காய்வா லுழுவைகோஷ்டஞ்
சொன்னதொரு இவையெல்லா மிடித்துவேறே
சூரணமாய் வைத்திட்டுச் சொல்லக்கேளு
உன்னிமுன் சுத்திசெய்த சேங்கொட்டைதன்னை
உரலிலிட்டுக் கொப்பறையின் தேங்காய்ரெண்டு
என்னவே யெள்ளுமொரு படிதான்ரெண்டு
இடித்துமே அதின்பின்பு சூரணத்தைக்கொட்டே. (73)

கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள், இருவகைத்திப்பிலிகள், கடுக்காய், வாலுழுவை, கோஷ்டம் ஆகிய இவையெல்லாம் இடித்துப் பொடித்துச் சூரணமாக வேறாகத்தனியே வைத்துக் கொள்ளவும், அதன் பிறகு, முன்பு சுத்தி செய்த செங்கொட்டைகளை, இரும்பு உரலில் இட்டு, கொப்பரைத் தேங்காய் இரண்டு, எள்ளு, இரண்டு படிகள், சேர்த்து நன்றாக இடித்து, அதன் பிறகு சூரணத்தை அதன்மீது உரலினுள்ளே கொட்டுவாயாக அதனையும் சேர்த்து நன்றாக இடிக்கும்பொழுது.

கொட்டியே சேர்த்தோன்றா யிடிக்கும்போது
குமுறவே பனைவெல்லம் அஞ்சுபலம்போடு
திட்டம்ரச கற்பூரம் விராகன் அஞ்சு
சேர்த்திடித்து வல்லாதி செய்துகொண்டு
நட்டவே வல்லாதி அந்திசந்தி
நாளொன்று வெருகடிதா னயந்துகொள்ளு
குட்டமாங் கிரந்தியொடு அரையாப்புச்சூலை
குன்மமொடு வயிற்றுவலி வாய்வுசூலை. (74)

பனைவெல்லம் ஐந்து பலம் தட்டிப் போடு, அத்துடன் ரசகற்பூரம் வராகன் ஐந்து சேர்த்து இடித்து வல்லாதியாய்ச் செய்து கொண்டு, இந்த வல்லாதியை காலையிலும் மாலையிலும் நாளொன்றுக்கு வெருகடியளவு இரு வேளையும் உண்பாயாக. இப்படிச் செய்து வந்தால் குஷ்டம், கிரந்தி, அரையாப்பு, சூலை, குன்மங்கள், வயிற்றுவலி, வாய்வு, சூலை.

சூலையொடு சூதகத்தின் வாய்வுதீரும்
சொற்பெரிய மேகமெல்லாம் சொல்லாதோடும்
வாலையாந் திரேகமது சித்தியாகும்
மண்டலந்தான் பத்தியமாய்க் கொண்டுவாநீ
காலையே பத்தியந்தான் சொல்லக்கேளு
கைப்போடு புளிபுகையும் பெண்ணுந்தள்ளு
பாலோடு மற்றதெல்லா மிச்சாபத்யம்
பாங்கான உப்பதனை வறுத்துக்கொள்ளே. (75)

சூதகவாய்வு, எல்லாம் தீரும். சொல்வதற்கே பெரிதான மேகநோய்கள் நீங்கும். தேகம் இளமைபெற்றுச் சித்தியாக வேண்டுமாயின், மண்டலந்தான் பத்தியத்தைக் கடைப்பிடித்துப் பயன்படுத்திக் கொள்வாயாக. இதற்குரிய பத்தியத்தைச் சொல்லுகிறேன், கேளு. கைப்புடன் புளியையும் பெண் போகத்தையும் தள்ளுவாயாக. பாலொடு மற்றதெல்லாம் இச்சாபத்தியம். உப்பை வறுத்து இடித்து உணவுடன் சேர்த்துக்கொள்ளவும்.

சண்டமாருதக் குழம்பு

கொள்ளவே வயித்தியத்துக் காதிபீடம்
கூறுகிறேன் சண்டமா ருதக்குழம்பு
அள்ளுகிறேன் ரசமோடு சாதிலிங்கம்
அரிதாரம் மனோசிலையும் ரசகற்பூரம்
வெல்லுகிறேன் கருநாவி வெண்காரங்கவுரி
வெவ்வேறே வகைவகைக்கு விராகன்ரெண்டு
சொல்லுகிறேன் கரந்தைச்சா றும்பழச்சாறாதல்
சுருக்கிட்டுச் சுத்திசெய்து கல்வத்திட்டே. (76)

சித்த வைத்தியத்திற்கே ஆதிபீடமான சண்டமாருதக் குழம்பு செய்முறையினைச் சொல்லுகிறேன், கேட்பாயாக. பாதரசம், ஜாதிலிங்கம், அரிதாரம், மனோசிலை, கற்பூரம், கருநாவி, வெண்காரம், கௌரி, ஆகியவற்றை வெவ்வேறாக வகைவகைக்கு இரண்டு வராகன் வீதம் எடுத்து, கரந்தைச்சாறு பழச்சாறு, இவற்றால் சுருக்கிட்டு, சுத்தி செய்து கல்வத்தில் இடுவாயாக.

இட்டுமே சுத்திசெய்த வாளமப்பா
இந்திடைக்குப் பதினாறு விராகன்போடு
கட்டுமே வால்மிளகு குரோசானி ஓமம்
கண்டதிப் பிலிஅரத்தை கடுக்காய்தான்றி
கட்டமே கிராம்போடு கடுகுசுக்கு
கடுகுரோ கணிகாயம் கஸ்தூரிமஞ்சள
அட்டுமே திப்பிலியும் திப்பிலிமூலம்
ஆனைத்திப் பிலிஓமம் நாகப்பூவே. (77)

சுத்திசெய்த நேர்வாளம் பதினாறு விராகன் போடு, பிறகு வால்மிளகு, குரோசானி ஓமம், கண்டந்திப்பிலி, அரத்தை, கடுக்காய், தான்றிக்காய், கிராம்பு, சுக்கு, கடுகுரோகணி, காயம், கஸ்தூரிமஞ்சள், திப்பிலி, திப்பிலிவேர், ஆனைத்திப்பிலி, ஓமம், நாகப்பூ.

பூவோடு இந்துப்பு விளங்கங்கோஷ்டம்
புகழான சாதிக்காய் வகைவகைக்கு
தேவோடு விராகனிடை நாலுகூட்டு
செப்பரிய முன்மருந்தோ டொக்கச்சேரு
ஆவோடு மிளகரனை சிற்றரத்தை
அதிமதுர மாசக்காய் சீனக்காரம்
சேவோடு திருகுகள்ளிப் பாலும்வாரு
சிவதையொடு கொடிவேலிக் கியாழம்வாரே. (78)

இந்துப்பு, வாய்விளங்கம், கோஷ்டம், ஜாதிக்காய், வகைக்கு நாலுவிராகன் எடை கூட்டி, முன்பு செய்து வைத்த மருந்தினோடு ஒன்றாகச் சேர்த்துக் கலந்து கொள்வாயாக. பிறகு மிளகரனை, சிற்றரத்தை, அதிமதுரம் மாசிக்காய், சீனக்காரம், இவற்றுடன் திருகுகள்ளிப்பாலும் வார்த்து, சிவதையோடு, கொடிவேலிக் கியாழம் வார்த்து,

அநுபானம்

வார்த்துமே பன்னிரண்டு சாமமாட்டி
வழித்துமே யச்சிமிழி லடைத்துக்கொள்ளு
ஆர்த்துமே சுரத்துக்கு அரத்தைசுக்கு
அதிகமாய்ச் சொல்லியதோர் சுரத்துக்கெல்லாம்
கோத்துமே யினமறிந்து சரக்குக்கூட்டிக்
குடிநீரி விட்டிடவே சுரங்களேது
ஆர்த்துமே குழம்பினிட வேகம்மெத்த
அப்பனே யனுபான மறிந்துகொள்ளே. (79)

பன்னிரண்டு ஜாமங்கள் ஆட்டி., அரைத்து, வழித்து, சிமிழில் அடைத்துக் கொள்வாயாக. சுரத்துக்கு அரத்தை சுக்குக் குடிநீருடன் உட்கொள்ளவும். மற்ற கடுமையான சுரங்களுக்கும் அது அதற்குத் தக்க அனுபானத்துடன் சேர்த்துக் கொடுத்தால் சுரநோய்கள் ஓடிவிடும். அனுபான வகை கேட்பாயாக.

கொள்ளவே பதின்மூன்று சன்னிதோஷம்
குலையவே அரத்தைசுக்குக் கிராம்புதிப்பிலி
மெள்ளவே யிஞ்சிமா விலிங்கப்பட்டை
வேளைகாட் டாமணக்கு வெண்ணொச்சிவேர்
கொள்ளவே அரைத்ததனைச் சுரசம்பண்ணிக்
குழம்பிடவே சன்னியொடு தோஷந்தீரும்
வள்ளவே யிருமலென்ற வகைகட்கெல்லாம்
மாட்டுநீ கடுக்காயின் கியாழந்தானே. (80)

பதின்மூன்று வகையான ஜன்னி தோஷங்களுக்கு அரத்தை, சுக்கு, கிராம்பு, திப்பிலி, இஞ்சி, மாவிலங்கப்பட்டை வேளை, காட்டாமணக்கு, வெண் நொச்சிவேர், ஆகியவற்றை நன்றாக அரைத்து, அதனைச் சுரசம் பண்ணி, குழம்பு தேவைக்கான அளவில் சேர்த்துக் கொடுக்க, ஜன்னியோடு தோஷம் தீரும். இருமல் என்ற நோய் வகைக்கெல்லாம் கடுக்காய்க் கியாழத்துடன், இம்மருந்தைக் கொடுப்பாயாக

தானான வாதமென்ற எண்பதுக்கும்
தழுதாழை வெண்ணொச்சிச் சாற்றில்ஊட்டு
தோனான சயமேழும் இருமல்போகத்
தூதுபத்ரி கண்டங்காலி ஆடாதோடை
தேனான சிற்றரத்தை சிறுகாஞ்சோரி
திப்பிலியுங் கடுக்காய்சேர்த் திடித்துவைத்துக்
கோனான தூளதிலே ஒருசேரைப்போட்டுக்
குடிநீரால் கியாழமிட்டுக் குழம்புகூட்டே. (81)

எண்பது வகை வாத நோய்களுக்கு, தழுதாழை, வெண்நொச்சி, சாற்றில் மருந்தைச் சேர்த்துக் கொடுப்பாயாக. க்ஷயம் ரணம் இருமலும் போக தூதுவேளை கண்டங்காலி, ஆடாதோடை, சிற்றரத்தை, சிறுகாஞ்சோரி திப்பிலியும் கடுக்காயும் சேர்த்து இடித்து, வைத்துக் கொண்டு அந்தத் தூளதிலே ஒரு சேர் போட்டுக் குடிநீர், செய்து குழம்பும் சேர்த்துக் கொடுப்பாயாக.

கூட்டவே பித்தமொடு பாண்டுசோகை
கொடியதொரு காமலை யிவைகட்கெல்லாம்
காட்டியே பழச்சாறும் வெள்ளாட்டுநீருங்
கரிசாலைச் சாறோடு மிளகுங்கூட்டி
மாட்டியே குழம்பிட்டுக் கொள்ளுகொள்ளு
மகோதரநீ ராமைபெரு வயிறுசோகை
காட்டியே விசையுள்ள மாந்தவீக்கம்
கனத்ததொரு பலநோயும் பீலியென்னே. (82)

பித்தத்தினாலும் பித்தத்தினோடும் கூடிய பாண்டு, சோகை, கொடிய காமாலை, இவைகளுக்கெல்லாம், பழச்சாறும், வெள்ளாட்டு கோமியமும், கையாந்தகரைச் சாறுடன் மிளகும் கூட்டி தேவைக்குரிய அளவு குழம்பு சேர்த்துக் குடிக்க கொடுப்பாயாக. மாந்தகரம் நீராம்பல், பெருவயிறு, சோகை, மாந்தம், வீக்கம் போன்ற நோய்களுக்கும்

பீலியாம் வகைக்கெல்லாம் சொல்லக்கேளு
பிலமான நீர்முள்ளிச் சாற்றிலப்பா
கோலியே நவச்சாரங் கொஞ்சமிட்டுக்
குழம்பதனைக் கூட்டியே கொண்டுபாரு
போலியே குன்மமெட்டும் போகக்கேளு
பூவரசம் பட்டையொடு பேய்க்குமட்டிவேரும்
சேலவே சீரகமு மிளகோடேலம்
சேர்க்கநீ குடிநீரில் குழம்பையூட்டே. (83)

பீலிநோய் வகைகளுக்கெல்லாம், நீர்முள்ளிச்சாற்றில் நவாச்சாரம் கொஞ்சம் சேர்த்து, குழம்பு தனையும் சேர்த்துக்கூட்டியே குடிப்பதற்குக் கொடுப்பாயாக. எட்டுவகைக் குன்மநோய்களுக்கும் பூவரசம்பட்டை, பேய்க்குமட்டிவேர், சீரகம், மிளகு, ஏலம், சேர்த்துள்ள குடிநீரில் கொடுப்பாயாக.

குழம்பான பித்தவகை சொல்லக்கேளு
கொத்துமல்லி சீரகமு முடக்கொத்தான்குடிநீர்
குழம்பிடவே பித்தமெல்லா மோடிப்போகும்
கொடிதான கிரந்தியரை யாப்புச்சூலை
களங்கமா மேகவகை கரப்பானெல்லாம்
கரந்தைச்சா றதனிலிடக் காணாதோடும்
குழம்பான விரைவாத மண்டவாதம்
கூட்டியிரு வர்க்கம்பூச் சாறுகொடிச்சாறே. (84)

பித்த நோய்களுக்கு, கொத்துமல்லி, சீரகம், முடக்கொத்தான் இவைகளால் செய்த குடிநீரில் கொடுக்க பித்தம் எல்லாம் ஓடிப் போகும். கொடியதான கிரந்தி, அரையாப்பு நோய்களுக்கும் சூலைநோய், மேகவகை, கரப்பான் நோய்களுக்கும் நாரத்தைச் சாற்றில் குழம்பிட்டுக் கொடுக்க, அந்நோய்கள் எல்லாம் நீங்கும், விரைவாதம், அண்டவாதம் போன்ற நோய்களுக்கு எருக்கம் பூச்சாறு, கொடிச்சாறுகளுடன் கொடுக்க வேண்டும்.

சாறென்ற வாயுவுக்கு வேளைசுக்கு
சாறுத்தா மணிநொச்சி விஷத்துக்கெல்லாம்
ஆறென்ற பதினெட்டுக் கரப்பான்குஷ்டம்
அமுக்கரா சிவன்வேம்பு பறங்கிப்பட்டை
கோறென்ற தூள்பண்ணி அமுரிவிட்டுக்
குழைத்ததனிற் குழம்பிடவே குஷ்டமெங்கே
ஆறென்ற மேகவகை யிருபதுக்கும்
அப்பனே உள்ளுலர்த்திப் பட்டைச்சாறே. (85)

வாய்வு நோய்களுக்கு வேளை, சுக்கு, சேர்த்து உத்தாமணிச்சாறு, நொச்சிச்சாறு, இவற்றுடன் குழம்பு சேர்த்து கொடுக்கவும் ரோகங்கள் போம். பதினெட்டு வகைக் கரப்பான்களும் குஷ்டரோகங்களும் அமுக்கரா, சிவன்வேம்பு, பறங்கிப்பட்டை ஆகியவற்றைத் தூளாகசெய்து அமுரியிட்டு குழைத்து அதனுடன் குழம்பு சேர்த்துக் கொடுக்க விலகும். மேக நோய்கள் இருபதுக்கும் உள்ளுலர்த்திப் பட்டைச் சாற்றில் கொடுக்கவேண்டும்.

சாறான கற்பநோய் கிருமிதீரச்
சாற்றுபா கற்சாறு பாளைச்சாற்றில்
காறான கரப்பானுக்குக் குமரிச்சாறு
கரிசாலைச் சாறுகரந் தைச்சாறாகும்
வேறான வெலிகடிக்கு முருங்கைப்பட்டை
வேளையிலை வெள்ளுள்ளிச் சாற்றில்ஊட்டு
ஆறான விரியனுக்கு அழிஞ்சிவாகை
அரவத்துக் காடுதொடா மூலிவேரே. (86)

கற்ப நோய்க் கிருமிகள் தீர பாகற்சாறு, பாளைச்சாறு ஆகியவற்றில் கொடுக்கவேண்டும், கரப்பானுக்கு குமரிச்சாற்றில் குழம்பு சேர்த்துக் கொடுக்க வேண்டும், கரிசாலைச்சாறு, கரந்தைச்சாறு போன்றவைகளையும் பயன்படுத்தலாம்: எலிகடிக்கு, முருங்கைப்பட்டை, வேளையிலைச்சாறு, வெள்ளுள்ளிச்சாறு இவற்றில் ஏதுவாயினும் குழம்பு சேர்த்துக் கொடுக்கவும். விரியன் பாம்புக் கடிக்கு, அழிஞ்சில், வாகை நாகப்பாம்புக் கடிக்கு ஆடு தொடா மூலிகை வேர் ஆகியவற்றில் குழம்பு கூட்டிக் கொடுக்க விஷம் நீங்கும்.

மூலியே வாதமொடு இளம்பிள்ளை வாதம்
முனையாம்பச் சைவாதம் பாரிசத்தின்வாயு
நாலியே யிவைக்கெல்லாம் கருவாகைவேம்பு
நந்திகோ ரத்தயிலம் கோப்பிரண்டைச்சாறு
கோலியே யிலுப்பைமேற் புல்லுருவிச்சாறும்
கூட்டுகுழம் பிடவாதங் கொள்ளைபோகும்
நாலாயி ரத்துநா லூற்றுநாற்பத்தெட்டும்
நாடாது பிரமமுனி குழம்பென்றெண்ணே. (87)

இளம்பிள்ளை வாதம் போன்ற வாத நோய்களுக்கும் பக்கவாதம்: பாரிசவாயு இவைகளுக்கெல்லாம் கருவாகை வேம்பு, நந்திகோரத்தைலம், கோப்பிரண்டைச் சாறு, இலுப்பை மேல் புல்லுருவி ஆகியவற்றில் சாறுடன் குழம்பிட்டுக் கொடுக்க வாயு நோய்கள் அனைத்தும் நீங்கும், பிரமமுனி வழங்கும் இந்த சண்ட மாருதக் குழம்பு ஒன்றைக் கொண்டே நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு நோய்களையும் நீக்கிவிடலாம். இந்த நோய்கள் குழம்பு இருக்கும் இடத்தினை நாடாது.

ஐயெண்ணெய்த் தயிலம்

எண்ணியே வாதமெல்லா மோடிப்போக
இயம்புகிறேன் ஐயெண்ணெய்த் தயிலங்கேளு
எண்ணவே யெள்ளெண்ணெய் ஏரண்டத்தெண்ணெய்
இலுப்பெண்ணெய் புங்கெண்ணெய் வேம்பெண்ணெயைந்தும்
அண்ணியே வகைக்கிரண்டு படிதான்சொன்னோம்
அளந்துவிடு பாண்டத்தில் அப்பாற்கேளு
நண்ணவே தழுதாழை காட்டாமணக்கு
நாயுருவி தைவேளை குப்பைமேனி. (88)

வாதநோய்கள் எல்லாம் ஓடிப் போகும் வகையில் ஐயெண்ணைத்தைலம் என்ற தைலத்துள் செய் முறையை சொல்லுகிறேன், கேட்பாயாக.

நல்லெண்ணெய், ஆமணக்கு எண்ணெய், இலுப்பை எண்ணெய், புங்கெண்ணெய், வேப்பெண்ணெய் ஆகிய ஐந்து வகை எண்ணெய்களில் வகைக்கு இரண்டுபடி. எடுத்துக் ஒரு பாண்டத்தில் அளந்து வார்த்துக் கொள்வாயாக. பிறகு தழுதாழை, காட்டாமணக்கு, நாயுருவி தைவேளை, குப்பைமேனி, இவற்றுடன்

மேனியா மாவிலங்கு வேம்புபுங்கு
வெண்ணொச்சி தூதுவளை கண்டங்காலி
கூனியே குருந்துகரு வாகைசங்கு
கொடுவேலி நிலக்கடம்பு சடைச்சிரெண்டு
போனியே அவுரியொடு மருக்காரையெருக்கு
புனல்முருங்கை யூர்முருங்கை வேளைச்சாரனையும்
மானியே மருதோன்றி காட்டூசிமல்லி
மத்தையுத்தா மணியோடு களக்கொட்டிதானே. (89)

மாவிலங்கு, வேம்பு, புங்கு வெண்ணொச்சி, தூதுவேளை, கண்டங்காலி, குருந்து, கருவாகை, சங்கு, கொடுவேலி, நிலக்கடம்பு சடைச்சிரெண்டு, அவுரி, மருக்காரை, எருக்கு, புனல்முருங்கை, ஊர்முருங்கை, வேளை ,சாரணை, மருதோன்றி, காட்டு ஊசிமல்லி, ஊமத்தை, உத்தாமணி களக்கொட்டி இவற்றுடன்

கொட்டியே மிளகருணை திருகுகள்ளி
குமிழோடு அமுக்கரா பிரம்புகுன்றி
இட்டியே பேய்ப்பாலை அடம்புசின்னி
யிலுப்பைமேற் புல்லுருவி ஆயிலியப்பட்டை
வெட்டியே சொன்னதொரு மூலியெல்லாம்
வேரோடு தூரோடு சமூலங்கொண்டு
அட்டியே பண்ணாதே வெட்டிவந்து
அப்பனே வகைக்கிரண்டு பலந்தான்பத்தே. (90)

மிளகரணை, திருகுகள்ளி, குமிழ், அமுக்கரா, பிரம்பு, குன்றி, பேய்ப்பாலை, அடம்பு, சின்னி, இலுப்பைமேற் புல்லுருவி ஆயில்யப்பட்டை, ஆகியவற்றை தூரோடும் வேரோடும் சமூலங் கொண்டுவந்து வெட்டித் துண்டு துண்டாக்கி வகைக்கு இரண்டு பலம் எடுத்துக் கொள்வாயாக

பத்தாக இவையெல்லாம் இடித்துநன்றாய்ப்
பரும்பாண்டத் திட்டுநீ பாகங்கேளு
அத்தாகப் பதினாறு மரக்கால்தண்ணீர்
அளந்துவிட் டடுப்பேற்றி எரிக்கக்கேளு
எத்தாதே ஓர்விறகா லெரியைமூட்டு
எட்டொன்றாய் வைத்தமட்டு மெரித்துக்காய்ச்சி
அத்தான கியாழமது படிதான்பத்து
அளந்துவிட்டு எண்ணெயிலே அறையக்கேளே. (91)

இவற்றையெல்லாம் இடித்து நன்றாகப் பொடித்து ஒருபாண்டத்திலிட்டுப் பதினாறு மரக்கால் தண்ணீர்விட்டு அடுப்பில் ஏற்றி ஒரே விறகால் எரித்து பாண்டத்திலுள்ளது எட்டில் ஒன்றாகக் கண்டும் வரை காய்ச்சி, அத்தகைய கியாழத்தில் பத்துப்படி. கியாழத்தை அளந்து, எண்ணெயிலே வார்த்து.

அறையுறேன் திப்பிலியுந் திப்பிலிமூலம்
ஆனைத்திப் பிலிஓமம் அரத்தைசுக்கு
குறையாத தாளிசையுங் கண்டந்திப்பிலி
குரோசாணி கருஞ்சீரங் கிராம்புகுக்குல்
திரையாத சதகுப்பை வசம்புகல்நார்
சிறுதேக்கு பெருங்காயம் வெள்ளுள்ளியிஞ்சி
உரையான வெளிப்பிசினும் நாகப்பூவும்
உத்தமனே சடாமாஞ்சி ஒக்கக்கேளே. (92)

திப்பிலி, திப்பிலிவேர், ஆனைத்திப்பிலி, ஓமம், அரத்தை, சுக்கு, தாளிசபத்திரி, கண்டந்திப்பிலி, குரோசானி ஓமம், கருஞ்சீரகம், கிராம்பு குக்குல், சதகுப்பை, வசம்பு, கல்நார், சிறுதேக்கு, பெருங்காயம், வெள்ளைப்பூண்டு, இஞ்சி, வெளிப்பிசின், நாகப்பூ, சடாமாஞ்சில் ஆகியவற்றில்.

கேளேநீ வகைவகைக்கு அரைப்பலமேசொன்னோம்
கெடியான வெள்ளாட்டு நீராலாட்டி
ஆளேநீ யெண்ணெயிலே கரைத்துவாரு
அப்பனே பீலியரைப் பலமேபோடு
கோளேநீ வாராதே அடுப்பிலேற்றிக்
குறிப்பாக இன்னுமொரு சூக்ஷங்கேளு
நாளேநீ யார்தானே சொல்வாரப்பா
நந்திகே சரிச்சாறு நாலுபடிவாரே. (93)

வகைக்கு அரைப்பலம் நிறுத்து எடுத்துக் கொண்டு அரைத்து எண்ணெயிலே கரைத்து வார்ப்பாயாக. பிறகு பீலி (பீலி = மயில்தோகை, கேசரிச்சாறு = கழுதை மூத்திரம் வெள்ளாட்டு நீரினால். வெள்ளாட்டு நீர் = வெள்ளாட்டு மூத்திரம்) அரைப்பலம் போட்டு, அடுப்பில் ஏற்றிக்கொள், மேலும் ஒரு சூட்சுமத்தைச் சொல்லுகிறேன் இத்துடன் நான்கு படி கேசரிச்சாறு வார்ப்பாயாக

வாரேநீ யடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சி
வளமான மெழுகுபதந் தன்னைப்பார்த்துக்
காரேநீ வடிகலசந் தன்னிற்கேளு
கஸ்தூரி விராகன்ரெண்டு சாதிலிங்கம்ரெண்டு
போரேநீ ஆகாசத் தூள்களஞ்சுரெண்டு
போட்டுமே எண்ணெய்தனை வடித்துவாங்கு
வேரேநீ அண்டத்தின் தயிலத்தோடு
வெள்ளுள்ளி முசுறுமுட்டைத் தயிலந்தானே. (94)

பாண்டத்தை மீண்டும் அடுப்பில் ஏற்றி, எரித்துக் காய்ச்சி, மெழுகு பதமாக வந்த நிலையினை பக்குவமாகப் பதம் பார்த்து, வடிகலசத்தில், கஸ்தூரி இரண்டு விராகன் எடை, சாதிலிங்கம் இரண்டு விராகன், ஆகாசத்தூள் இரண்டு கழஞ்சு, போட்டு வடிகலசத்தில் எண்ணெயை வார்த்து வடித்து வாங்குவாயாக. (ஆகாசத்தூள் = ஒட்டடை)

தயிலமென்ன வகைக்குக்கால் படிதான்சொன்னோம்
சாற்றரிய முன்தயிலந் தன்னில்வாரு
தயிலத்தை வேடுகட்டிப் பதனம்பண்ணு
சண்முகர்க்குங் கணபதிக்கும் பூசைபண்ணித்
தயிலமிந்த முறைப்படியே ஆர்தான்செய்வார்
சார்வான வாதிமகன் வைத்தியனேசெய்வான்
அயிலமாந் தயிலமிதன் பேருஞ்சொல்ல
ஆராலு முடியாது அறிந்துபாரே. (95)

இதுவுந்தவிர, அண்டத்தைலம், வெள்ளுள்ளித்தைலம், முசுறுமுட்டைத்தைலம் போன்ற தைலங்களை வகைக்குக் கால்படி வீதம் எடுத்து, முந்தைய தைலத்தில் ஊற்றி வார்ப்பாயாக. பின் அந்த தைலத்தை வேடுகட்டிப் பதனம் பண்ணுவாயாக. சண்முகருக்கும் கணபதிக்கும் பூசை செய்து தைலத்தைப் பத்திரப்படுத்துவாயாக. இந்தத் தைலத்தை முறைப்படி யாராலும் செய்யமுடியாது. இதன் பெயரையுஞ் சொல்லவும் யாராலும் முடியாது. அப்படிச் செய்பவர் வாதத்திலும் வைத்தியத்திலும் வல்லவராக இருக்க வேண்டும்.

அறிந்துபார் தயிலத்திற் காசெடைதானுண்டு
அப்பனே மேலெங்கும் பூசக்கேளு
செறிந்துவரும் சன்னியெங்கே தோஷமெங்கே
தீராத உட்குத்துப் புறவீச்செங்கே
அறிந்துவரும் வாதமெங்கே வாயுவெங்கே
அடிக்கடிதா னாவுலருஞ் சன்னியெங்கே
யெறிந்துவரும் பக்கவாதம் பாரிசத்தின்வாதம்
இளம்பிள்ளை வாதமொடு அண்டவாதமென்னே. (96)

இத்தகைய தைலத்தில் காசு எடை கையில் ஊற்றி உட்கொண்டும், அதே எண்ணையை உடல் முழுதும் பூசிக் கொள்வாயானால், ஜன்னிகள், தோஷங்கள் உட்குத்து, புறவீச்சு, அறிந்து வருகின்ற வாத நோய்கள் நாவை உலரச் செய்கின்ற சன்னி தோஷம், பக்கவாதம், பாரிசவாயு, இளம்பிள்ளை வாதம், அண்டவாதம் என்ன,

வாத்மொடு காக்கைவலி முயல்வலிப்பு
வருணவலி குதிரைவலி குமரகண்டவலியும்
ஓதமென்ற வாதபித்த முகவாதசன்னி
உத்தமனே பித்தநோய் தந்தசன்னி
பேதவே கிறுகிறுப்பு மண்டைக்குத்தும்
பிடரிவலி பீனிசமும் பொல்லாநோயும்
பாதவே சொன்னதொரு நோய்களெல்லாம்
பறக்குமே தயிலத்தின் பேரைச்சொல்ல. (97)

காக்கைவலிப்பு, முயல் வலிப்பு, வருணவலிப்பு, குதிரைவலிப்பு, குமரகண்ட வலிப்பு, வாதபித்தம், முகவாத ஜன்னி, பித்த நோயினால் வந்த ஜன்னி, கிறுகிறுப்பு, மண்டைக்குத்து பிடரி வலி, பீனிசம் போன்ற நோய்கள் எல்லாம் இந்தத் தைலத்தின்

பெயரைச் சொன்னாலே பறந்து போய் விடும் இதனை பயன்படுத்தும் போது இருக்க வேண்டிய பத்தியக் கட்டுப்பாடுகளைக் கூறுகிறேன். கேட்பாயாக.

சொல்லவே கைப்போடு புகைப்புந்தள்ளு
சொல்லரிய நோயறிந்து பத்யங்கேளு
சொல்லவே வுப்பதனை வறுத்துக்கூட்டு
சுகமான வழுதலங்காய் முருங்கைப்பிஞ்ச
வெல்லவே தூதுளங்காய் வற்றலாகும்
வெள்ளாட்டு வற்றலொடு பசும்பயறுமாகும்
பல்லவே பத்தியந்தான் கண்டுதேறு
பாங்காக இன்னுமொன்று பாடினேனே. *(98)*

கைப்போடு, புளியும் தள்ளுவாயாக அதாவது கசப்புச் சுவை, புளிப்புச் சுவையுடைய உணவுப் பொருள்களைத் தள்ளுவாயாக உப்பை வறுத்து உணவுக்குப் பயன் படுத்தவேண்டும். கத்திரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு தூதுளங்காய் வற்றல், வெள்ளாட்டு வற்றல், பசும் பயிறு ஆகியவைகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இத்தகைய பத்தியக் கட்டுப்பாட்டுடன், இந்த மருந்தை பயன்படுத்தி நன்மையடைவாயாக,

வில்வாதிக்குழம்பு

பாடுகிறேன் வில்வாதிக் குழம்புதன்னைப்
பகரரிய நோயெல்லாம் பறந்துபோகும்
ஆடியதோர் வில்வவேர் பலமுமைந்து
அதினுடைய பழந்தானு மிரண்டுபத்து
பாடியே யிடித்துமொரு பாண்டத்திட்டுப்
பதக்குநீ ரளந்துவிட்டு அடுப்பிலேற்றி
வாடியே எரித்ததனை மூன்றுபடியாக்கி
வற்றியபின் னிறுத்ததிலே சருக்கரையைப்போடே. *(99)*

'வில்வாதிக்குழம்பு' என்ற இந்த மருந்தினால் சொல்வதற்குரிய நோய்கள் எல்லாம் பறந்து போகும். இதற்கு, வில்வவேர் ஐந்துபலம். வில்வப்பழங்கள் இருபது, ஆகிய இரண்டையும் நன்கு இடித்து ஒரு பாண்டத்தில் இட்டு, பதக்கு நீர் அளந்து இதனுடன் ஊற்றி, பாண்டத்தை அடுப்பில் ஏற்றி, நன்றாகக் காய்ச்சி மூன்று படியாக, வற்றிய பின் இறுத்து அதிலே சர்க்கரையைப் போடுவாயாக.

போடுவது நல்லவெல்லம் சர்க்கரைதான்மைந்தா
போட்டதனைப் பாகுவரும் பதத்திற்கேளு
தேடுவது திப்பிலியுந் திப்பிலிமூலம்
செவ்வியமு மிளகிஞ்சி சித்ரமூலம்
தேடுவது சீரகமும் ஏலமிலவங்கம்
சிறுநாகப் பூவோடு தாளிசபத்திரியும்
ஆடுவது அதிமதுரம் கூகைநீறு
மழகான வாலுழுவை மாஞ்சிதானே. *(100)*

'சர்க்கரை' என்றால் நான் சொல்வது 'நல்ல வெல்லத்தின் சர்க்கரையே' ஆகும் மீண்டும் அடுப்பேற்றி எரித்து பாகுவரும் பதத்தில் திப்பிலி, திப்பிலி மூலம், செவ்வியம், மிளகு, இஞ்சி, சித்திரமூலம், சீரகம், ஏலம், இலவங்கம், சிறுநாகப்பூ, தாளிசப்பத்திரி, அதிமதுரம், கூகைநீறு வாலுளுவை சடாமாஞ்சில் இவற்றுடன்

தானென்ற அதிவிடைய மதுரமிந்துப்பு
தான்கண்டு கொள்ளுரெண்டு பலந்தான்சொன்னோம்
தானென்ற குங்குமப்பூ கிராம்புபத்ரி
சாதிக்காய் வகைவகைக்கு விராகன்ரெண்டு
போனென்ற இவையெல்லாம் இளவறுப்பாய்ச்செய்து
பொடித்தந்தக் கியாழத்திற் போட்டுக்கிண்டி
ஏனென்ற கஸ்தூரி விராகன்போடு
இறக்கிவைத்து நாளொன்றுக் கிருநேரங்கொள்ளே. (101)

அதிவிடயம், அதிமதுரம், இந்துப்பு, இவை வகைக்கு இரண்டு பலங்கள், குங்குமப்பூ, கிராம்பு, ஜாதிபத்திரி, சாதிக்காய், வகை வகைக்கு இரண்டு விராகன் எடை, இவற்றையெல்லாம் இளவறுப்பாக வறுத்துக்கொண்டு, பொடித்து, இந்தக் கியாழத்தில் போட்டுக் கிண்டிக் கிளறி கஸ்தூரி ஒரு விராகன் எடை சேர்த்து இறக்கி, வைத்து நாள் ஒன்றுக்கு காலை மாலை இரு நேரமும் உட்கொள்வாயாக.

கொள்ளுவது நேரம்ஒரு புன்னைக்காயளவு
குன்மமொடு சத்திவிக்கல் நெஞ்சுவலிதீரும்
கொள்ளவே அரோசிகமும் மூக்குநீர்ப்பாய்ச்சல்
குலையெரிவு காமாலை கிராணிமூலம்
வள்ளலே இளைப்போடு இருமல்ஈளை
வயிற்றுவலி பழுக்குடைச்சல் கிருமிமூலம்
தெள்ளியதோர் நோயெல்லா மோடிப்யோகும்
தேகமது மண்டலத்தில் தீர்க்கமாமே. (102)

ஒரு நேரத்திற்கு புன்னைக்காயளவு உண்ணவேண்டும். இவ்வாறு உண்டுவந்தால், குன்மங்கள், சத்தி, விக்கல், நெஞ்சுவலி ஆகியவை தீரும். அரோசிகம், மூக்கு நீர்ப்பாய்ச்சல், குலை எரிச்சல், காமாலை, கிராணிமூலம், இளைப்புடன் கூடிய இருமல், ஈளை, வயிற்றுவலி, புழுக்குடைச்சல், கிருமி மூலம், ஆகிய இத்தகைய நோய்கள் எல்லாம் ஓடிப் போகும். ஒரு மண்டலம் மருந்துண்டு வந்தால் தேகமது வலிவும் வனப்பும் பெற்று தீர்க்கமாகும்.

வல்லாதி யெண்ணெய்

ஆமென்ற சுற்றவல் லாதியெண்ணெய்
அறைவேன்சிற் றாமுட்டிச் சமூலங்கொண்டு
பாமென்ற முப்பத்தி ரண்டுபலமிடித்துப்
பாண்டத்தி லிட்டுஇரு தூணிசலம்வாரு

ஏமென்ற குறுணிசல மாகக்காய்ச்சி
யிறுத்ததனில் அயமெண்ணெய் குறுணிவாரு
தாமென்ற சந்தனமும் மதுரங்கோஷ்டம்
சாதிக்காய் கிராம்பேலம் பட்டைபத்ரி. (103)

இனி நான் சுற்ற வல்லாதி எண்ணெயின் செய்முறையினை கூறுகிறேன், சிற்றாமுட்டி சமூலம் முப்பத்திரண்டு பலம் இடித்து பாண்டத்திலிட்டு இரண்டு மரக்கால் தண்ணீர் வார்த்துக் காய்ச்சிக் குறுணி நீராகக் குறுக்கி குறுணி எண்ணெய் சேர்த்துக் கொண்டு அதிலே சந்தனம், அதிமதுரம், கோஷ்டம் ஜாதிக்காய், கிராம்பு, ஏலம் இலவங்கப்பட்டை இலவங்கப்பத்திரி இவற்றுடன்

பட்டையாம் அரத்தைசுக்கு அக்ராகாரம்
பாங்கான தாளிசபத் திரியுமாஞ்சி
திட்டமாய்ப் பெருங்காயம் கடுகுரோகணியும்
திப்பிலியும் வாய்விளங்கம் கூகைநீறு
கொட்டமாம் வால்மிளகு குரோசானி ஓமம்
குங்கமப்பூ கருஞ்சீர கம்கடுக்காய்தான்றி
திட்டமாஞ் செண்பகப்பூ கொத்துமல்லி
செவ்வியம்வா லுளுவைசிறு நாகப்பூவே. (104)

அரத்தை, சுக்கு, அக்ராகாரம், தாளிசபத்திரி, சடா மாஞ்சில், பெருங்காயம், கடுகுரோகிணி, திப்பிலி, வாய்விளங்கம், கூகைநீறு கோஷ்டம், வால் மிளகு, குரோசானி ஓமம், குங்குமப்பூ, கருஞ்சீரகம், கடுக்காய், தான்றிக்காய், செண்பகப்பூ, கொத்துமல்லி, செவ்வியம், வாலுழுவை, நாகப்பூ.

பூவோடு இவையெல்லாம் வகைவகைக்குப்
பொடிசெய்து நீபோட்டு நாற்களஞ்சுவீதம்
பாவோடு பழச்சாறு படிதான்வாரு
பசுவின்பால் படிவார்த்து அடுப்பிலேற்று
சேலோடு கணபதிக்குப் பூசைபண்ணு
சிறப்பாக எரித்ததனை மெழுகுபதம்பார்த்துப்
பூவோடு வடிகலசந் தன்னிற்கேளு
புழுகுகோ ரோசனைகஸ் தூரிபோடே. (105)

வகைவகைக்குப் பொடி செய்து நான்கு கழஞ்சு வீதம் சேர்த்து, பசுவின் பாலோடு, பழச்சாறும் ஒவ்வொரு படி வீதம் வார்த்து, அடுப்பிலேற்றிக் கணபதிக்கு பூசைபண்ணு, சிறப்பாக எரித்து அதனை மெழுகு பதம் பார்த்து வடிகலசத்தில் வடிகட்டவும். கலசத்தில் புனுகு, கோரோசனை, கஸ்தூரி வகைக்கு கழஞ்சு வீதம் போட்டு, எண்ணெய்தனைப் பதனம் பண்ணி வைப்பாயாக.

போட்டிடுவாய் வகைவகைக்குக் களஞ்சுவீதம்
போட்டுநீ யெண்ணெய்தனைப் பதனம்பண்ணு
நாட்டுவா யுள்ளேகா செடைதான்கேளு
நாசியிலுந் துளிகுத்து மேலும்பூசு

தீட்டுவாய் முகவாதம் மண்டைச்சூலை
தீர்ந்துபோம் பித்தமொடு நீலகாசம்
ஓட்டுமே பீனிசமும் வாய்வுசூலை
உடம்பிலுள்ள நோயெல்லா மோடுந்தானே. (106)

இதனை காசு எடை அளவு உட்கொண்டு, நாசியிலும் ஒரு துளிவிட்டு மேனியிலும் பூசுவாயானால் முகவாதம், மண்டைச் சூலை, தீர்ந்து போகும் பித்தத்துடன் நீலகாசம், பீனிசம், வாய்வு சூலை போன்ற உடம்பிலுள்ள நோய்கள் எல்லாம், ஓடி விடும். இதைப்போலவே.

ஓடுமே சிரசிலுள்ள நோய்களெல்லாம்
உத்தமனே சீயக்காய் பசும்பயறுமிளகு
பாடுமே பத்தியந்தான் கைப்புபுளிப்பாகா
பாங்கான மறுபத்ய மெல்லாங்கூட்டு
ஓடுமே ஒருத்தலைநோய் மண்டைச்சூலை
உத்தமனே நாசிபீடம் கன்னசூலை
நாடுமோ நமன்வாத முகவாதம்சன்னி
நலமான பத்தியந்தான் நன்றாய்ப்பாரே. (107)

சீயக்காய், பசும்பயிறு, மிளகு பொடித்து தேய்த்துக் குளித்தால் சிர நோய்கள் எல்லாம் நீங்கும். இதற்குரிய பத்தியம் கசப்பையும் புளிப்பையும் தள்ள வேண்டும். மறுபத்தியத்தின் போது விலக்கி விட்டதை யெல்லாம் சேர்த்துக் கொள்ளலாகும். இந்த எண்ணையால் ஒருத்தலை நோய் மண்டைச் சூலை, நாசிபீடம், கன்னச் சூலை, முதலிய நோய்கள் நீங்கும். இதனைப் பயன் படுத்தும்போது நமன் வாதம், முகவாதம், ஜன்னி முதலிய கொடிய நோய்களும் நாடாது. இதற்கு நல்ல பயன் கிடைக்கப் பத்தியம் நன்றாகக் காக்க வேண்டும்.

மகா மேக கிருதம்

பாரப்பா சர்வாங்க நோய்கட்கெல்லாம்
பாடுகிறேன் மகாமேகக் கிருதந்தானும்
காரப்பா பேய்க்குமட்டி வேர்பலந்தான்பத்து
கடுக்காய்வேர் நெல்லிவேர் தான்றிவேரும்
வேரப்பா சிற்றாமல்லி பேராமல்லி
வில்வவேர் வெட்டிவேர் விலாமிச்சம்வேரும்
போரப்பா தூதுளையும் மாதுளைகாஞ்சோரி
பொன்முசுட்டை நன்னாரி நெய்தலென்னே. (108)

சர்வாங்க நோய்களுக்கு எல்லாம் பயன்படக் கூடிய மகா மேகக் கிருதம் என்ற மருந்தின் செய்முறைகளைச் சொல்லுகிறேன். கேட்பாயாக. பேய்க்குமட்டிவேர் பத்துப்பலம், கடுக்காய் வேர், நெல்லிவேர், தான்றிவேர், சிற்றாமல்லி, பேராமல்லி வேர்கள், வில்வவேர், வெட்டிவேர், விலாமிச்சம் வேர், தூதுவளை, மாதுளை, காஞ்சோரி பொன்முசுட்டை நன்னாரி, நெய்தல்வேர் இவற்றுடன்

நெய்தலோடு செங்கழுநீர் தாமரையுமல்லி
நிலப்பனையும் நிலவாகை கண்டங்கத்திரி
பெய்யிவைகள் வகைக்காறு பலந்தான்போடு
பேய்த்துமட்டி வேரோடு போட்டிடித்து
எய்துமே பாண்டத்தி விட்டுக்கேளு
இருதூணி சலம்விட்டு எட்டொன்றாக்கி
அய்துமே கியாழமது ப்டிதானாலு
அளந்துவிடு ஆவினெய் படிதானாலே. (109)

செங்கழுநீர், தாமரை, அல்லி, நிலப்பனை; நிலவாலை, கண்டங்கத்தரி இவைகளில் வகைக்கு ஆறுபலம் போட்டு பேப்த்து மட்டி வேருடன் போட்டு இடித்து அனைத்தையும் ஒரு பாண்டத்திலிட்டு, இருதூணி தண்ணீர் விட்டு, எட்டில் ஒன்றாகக் காய்ச்சி முடித்த கியாழத்தில் நான்குபடி கியாழம் அளந்து எடுத்து அதில் பசுவின் நெய் நான்குபடி ஊற்றிக் கொள்வாயாக.

நாலோடு சாதிக்காய் கிராம்புபத்திரி
நற்சீர கம்ஏல மிலவங்கப்பட்டை
சாலோடு மண்சிட்டி சாத்ரபேதி
சதகுப்பை வாய்விளங்கம் தாளிசபத்திரியும்
சேலான தேவதாரம் நல்லசந்தனமும்
சிறுநாகப் பூவோடு மதுரம்கோஷ்டம்
சாலோடு மிளகுழுவை சிங்கிதேக்கு
கருஞ்சீரங் கஸ்தூரி மஞ்சளாமே. (110)

இவற்றுடன் ஜாதிக்காய், கிராம்பு, ஜாதிபத்திரி, நற்சீரகம், ஏலம், இலவங்கப் பட்டை, மஞ்சிட்டி சாத்ரபேதி, சதகுப்பை, வாய்விளங்கம், தாளிசபத்திரி, தேவதாரம், நல்ல சந்தனம், சிறு நாகப்பூ, அதிமதுரம், கோஷ்டம், மிளகு, உழுவை, சிங்கி, தேக்கு, கருஞ்சீரகம், கஸ்தூரி மஞ்சள் இவற்றுடன்

மஞ்சளாந் திப்பிலியுந் திப்பிலிமூலம்
மாஞ்சியெொடு கடுகுரோ கணிநெரிஞ்சிக்காயும்
கொஞ்சியே கொத்துமல்லி கோரைக்கிழங்கு
குரோசானி வால்மிளகு கடுக்காய்நெல்லி
மிஞ்சாதே குங்குமப்பூ மாதுளையின்பிஞ்சும்
விளங்கவே வகைக்குநாற் கழஞ்சுகூட்டு
அஞ்சாதே ஆவின்பால் நாலுபடிசொன்னோம்
அரைத்துமே கரைத்துமுன் னெய்யில்வாரே. (111)

திப்பிலி, திப்பிலி வேர், சடாமாஞ்சில் கடுகு ரோகிணி, நெருஞ்சிக்காயும், கொத்துமல்லி, கோரைக்கிழங்கு, குரோசானி ஓமம்: வால் மிளகு கடுக்காய், நெல்லிக்காய், குங்குமப்பூ, மாதுளைப் பிஞ்சு, ஆகியவை வகைக்கு நாற்கழஞ்சு வீதம் சேர்த்துக் கூட்டுவாயாக. பின்னர் பசுவின் பால் நான்கு படி ஊற்றி, அரைத்து கரைத்து முன் சொன்ன நெய்யில் வார்ப்பாயாக.

வாரேநீ செவ்விளநீர் படிதான்ரெண்டு
வல்லாரைச் சாறுபடி ரெண்டுவாரு
சேரேநீ பழச்சாறு படிதான்ரெண்டு
சீனிசர்க் கரையதுவும் பலந்தானாலு
காரேநீ நல்லவெல்லம் பலந்தானாலு
கரைத்துமே அடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சி
வாரேநீ மெழுகுபதந் தன்னைப்பார்த்து
வடித்திடவே வடிகலசந் தன்னிற்கேளே. (112)

பிறகு செவ்விளநீர், இரண்டுபடி, வல்லாரைச் சாறு இரண்டு படி பழச்சாறு இரண்டு படி, அத்துடன் சீனிசர்க்கரை நான்கு பலம், நல்ல வெல்லம் நாலு பலம் கரைத்து, அடுப்பிலேற்றி, எரித்துக் காய்ச்சி மெழுகுபதத்தில், இதனை வடித்து எடுத்துக் கொண்டு வடிகலசத்தில்

தன்னிலே சீரகங்கோ ரோசனையுங்கூட்டு
சார்வாக வடித்துப்பின் சாற்றக்கேளு
நிண்ணயமாய்க் கணபதியுங் கந்தன்பூசை
நிறைவாகச் செய்திடவே நெற்புடத்தில்
முன்னுதாய் முப்பதுநாள் வைத்தெடுத்து
முறையோடே முக்கழஞ்சு நெய்தான்கொள்ளு
சொன்னதொரு நாளொன்றுக் கிருநேரங்கொள்ளு
தொலையாத வியாதியெல்லாம் தொலைந்துபோமே. (113)

சீரகம், கோரோசனையும் சேர்த்துக் கூட்டி வடித்து, பிறகு கணபதியையும் கந்தனையும் பூசித்து, பூசையை நிறைவாகச் செய்து மேற்படி மருந்தைப் பாண்டத்துடன் நெற்புடத்தில் முப்பது நாட்கள் வைத்து எடுத்து முறையோடு, முக்கழஞ்சு நெய்யை, நாள்தோறும் இருவேளைகளும் உட்கொண்டு வந்தால் தொலையாத வியாதிகள் எல்லாம் தொலைந்தே போகும்.

தொலைந்தோடும் சயமீளை காசபித்தம்
சொல்லரிய தலைநடுக்கல் சொல்மாறாட்டம்
முலைந்தோடும் உஷ்ணமொடு பிரமிமேகம்
மூத்திரக் கரிச்சியொடு கல்லடைப்பு
அலைந்தோடும் பெரும்பாடு ரத்தச்சாய்ப்பு
அனலோடு மேலெரிவு உஷ்ணங்காந்தி
மலைந்துபோம் முயல்வலிப்பு இருமலீளை
வாயுவொடு நீர்ச்சுறுக்கு வெட்டைபோமே. (114)

இம்மருந்தால், க்ஷயம், ஈளை, காசபித்தம், தலை நடுக்கம், சொல்மாறாட்டம், உஷ்ணத்தோடு கூடிய பிரமேகம், மூத்திரக் கிரிச்சிரம், கல்லடைப்பு, அனலோடு மேனிமேல் எரிவு உஷ்ணக் காந்தி, முயல் வலிப்பு, இருமல், ஈளை வாயுவுடன் நீர்சுறுக்கு, வெள்ளை, வெட்டை பெரும்பாடு முதலியவை. எல்லாம் நீங்கும்.

போமென்ற பவளபற்பம் போட்டுக்கொள்ளு
பொல்லாத நோயெல்லாம் பொடியாய்ப்போகும்
தேமென்ற கெர்ப்பத்தி லெழுந்தநோயுந்
தீர்ந்துவிடும் மலடிக்குப் பிள்ளையுண்டாம்
காமென்ற பத்தியந்தான் சாந்தமாய்க்கொள்
கைப்போடு புளிப்புரெண்டுந் தள்ளிப்பாரு
காமென்ற கண்வேக மெல்லாந்தீரும்
கைகண்ட வித்தையிது கண்டுபாரே. (115)

அதனுடன் பழையபற்பத்தைச் சேர்த்துக் கொண்டால் பொல்லாத நோய்கள் எல்லாம் பொடிப் பொடியாய் போய்விடும். கர்ப்பத்தில் எழுந்த நோய்கள் எல்லாம் நீங்கும். மலடிக்கும் பிள்ளை உண்டாகும். இதற்குரிய பத்திய முறைகளைச் சாந்தமாகக் கேட்டுக் கொண்டு, அதன்படி இருக்க வேண்டும். கசப்பு, புளிப்புப் பொருள்களைத் தள்ளி விட வேண்டும். கண்வேகம் எல்லாம் தீரும். கைகண்ட வித்தையாகும்.

ஏழுவகைப் பீனிசத்துக்கு

பாரப்பா ஏழுவகைப்பீ னிசமும்போகப்
பாடுகிறேன் வெகுசுருக்கோ ரெண்ணெய்கேளு
காரப்பா நல்லெண்ணெய் படிதான்ரெண்டு
கரிசாலை அவுரிகஞ்சா பொன்னாங்காணி
ஊரப்பா வெற்றிலைச்சாறு முசுமுசுக்கை
உள்ளுலர்த்தி முக்குறட்டை அத்திப்பட்டை
ஆரப்பா வகைவகைக்கு ஒருபடிதான்சாறு
ஆதண்டைச் சாறுப்படி ரெண்டுவாரே. (116)

ஏழுவகையான பீனிச்நோய்கள் நீங்குவதற்கு வெகுசுருக்கமான எண்ணெய் ஒன்றின் செய்முறையைக் கூறுகிறேன் கேட்பாயாக.

நல்லெண்ணெய் இரண்டு படி, கரிசாலை, அவுரி, கஞ்சா, பொன்னாங்காணி, வெற்றிலைச்சாறு முசுமுசுக்கை, உள்ளுலர்த்தி, முக்குறட்டை, அத்திப்பட்டை ஆகியவற்றிலிருந்து வகைக்கு ஒரு படி சாறு எடுத்து அத்துடன் ஆதண்டைச் சாறு இரண்டு படி வார்ப்பாயாக.

வாரேநீ பழச்சாறு ஆவின்பாலும்
வாரேநீ படியொன்று துளசிச்சாறொன்று
சாரேநீ கருஞ்சீரம் கடுகுரோகணியும்
கஸ்தூரி மஞ்சளொடு கடுக்காய்தான்றி
கூரேநீ அதிவிடையம் அரத்தைசுக்கு
கோஷ்டமுடன் சதகுப்பை குரோசானிஓமம்
சேரேநீ நாகப்பூ தாளிசபத்திரியும்
திப்பிலியின் மூலமொடு சித்ரமூலம். (117)

பிறகு பழச்சாறும் ஆவின்பாலும் ஒவ்வொரு படியும் துளசிச்சாறு படி ஒன்றும் சேர்த்து, கருஞ்சீரகம், கடுகுரோகிணி, கஸ்தூரி மஞ்சள், கடுக்காய், தான்றிக்காய், அதிவிடையம், அரத்தை, சுக்கு, கோஷ்டம், சதகுப்பை, குரோசானி ஓமம், நாகப்பூ, தாளிசபத்திரி, திப்பிலிமூலம் சித்திரமூலம்

மூலமாம் பெருங்காயம் நெல்விமுள்ளி
மிளகரணை அழிஞ்சில்நொச்சி கீழாநெல்லி
பாலமாம் வகைக்குஒரு களஞ்சுவீதம்
பழச்சாற்றா லாட்டியே எண்ணெயிலேபோடு
ஆலமாம் அடுப்பேற்றி எரித்துக்காய்ச்சி
அப்பனே மெழுகுபத மறிந்துநீயும்
ஏலவே முருங்கைப்பூ ஒருபிடிதான்போடு
இதமாக வடித்திட்டுப் பூசைபண்ணே. (118)

பெருங்காயம், நெல்லிமுள்ளி, மிளகரணை, அழிஞ்சி, நொச்சி, கீழாநெல்லி இவைகளில் வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் பழச்சாற்றால் அரைத்து எண்ணெயில் போட்டு, அடுப்பிலேற்றி எரித்துக்காய்ச்சி, மெழுகுப்பதம் பக்குவத்தில் ஏலம் முருங்கைப்பூ ஒரு படிதூள் போட்டு இதமாக வடித்திட்டு பூஜை செய்வாயாக.

பண்ணுவது கணேசனொடு கந்தன்பூசை
பண்ணியே நாலுநாள் வட்டமூழ்கு
எண்ணுவது சீயக்காய் பசும்பயறுதேய்த்து
இளவெந்நீர் முழுகும்நாள் புளியாகாது
மண்ணுவது மறுநாள்தான் கூட்டிக்கொள்ளு
மைந்தனே இப்படிநீ முழுகும்போது
ஒண்ணுவது சிரசிலுள்ள நோய்களெல்லாம்
ஓடிவிடும் எழுவகைப்பீ னிசமும்போமே. (119)

கணேசபூஜையுடன் கந்தனுக்கும் பூஜை செய்து, நான்கு நாட்களுக்கு ஒரு முறை, இந்தத் தைலத்தைத் தேய்த்துக் கொண்டு தலைமூழ்கிக் குளிப்பாயாக. சீயக்காய், பசும்பயிறு அரைத்துத் தேய்த்து இளவெந்நீரில் மூழ்குவாயாக, முழுகும் நாள் புளியாகாது. மறுநாள் கூட்டிக் கொள்ளலாம். இவ்வாறு மூழ்கி வந்தால் சிரசிலுள்ள நோய்கள் எல்லாம் ஓடிவிடும். ஏழு வகைப் பீனிச நோய்களும் நீங்கிவிடும்.

போமேதான் தைலங்கள் முழுகும்போது
புளியோடு புகையிலையும் பெண்ணுமாகா
ஆமேநீ புளியோடு கைப்புமாகா
அப்பனே மற்றாநா ளெல்லாங்கூட்டு
ஏகுமே கைமுறைசெய் முறையும்பார்த்து
இதமாகச் செய்திடிலோ வியாதிதீரும்
ஆகாதவழியிடும்பு செய்வானாகில்
அவனுக்கோர் மருந்தொன்றும் ஆகாபாரே. (120)

தைலங்கள் மூழ்கும் போது புகையிலையும் புளியும் பெண் போகமும் ஆகாது. புளிச்சுவையுடன் கசப்புச் சுவையும் கூடிய உணவுகளை உண்ணக் கூடாது. மற்ற நாளில் எல்லாம் சேர்த்துக் கொள்ளலாம். இந்த மருந்தை கைமுறையும் செய்முறையும் பார்த்து ஒழுங்காகவும் நன்றாகவும் செய்தால் வியாதி தீரும். ஆகாத வழியில் இடும்பும் பிடிவாதமும் செய்வானாகில் அவனுக்கு வேறு எந்த மருந்தும் ஒத்துவராது உடம்புக்கும் ஆகாது.

ஆக்கிராணம்

பாரேநீ சிரசிலுள்ள நோய்கள்போகப்
பாடுகிறேன் ஆக்கிராணம் முப்பத்திரண்டும்
ஆரேநீ சுண்டைவேர் சமுத்திராப்பழமும்
அரத்தைசுக்கு அக்ராகா ரம்விடையம்ஒமம்
கூரேநீ திப்பிலியும் திப்பிலிமூலம்
குரோசானி வால்மிளகு சித்ரமூலம்
காரேநீ கருஞ்சீரகங் கஸ்தூரிமஞ்சள்
கடுகுரோ கணிகாயங் கண்டந்திப்பிலியே. (121)

சிரசிலுள்ள நோய்கள் போவதற்காக ஆக்கிராணம் முப்பத்திரண்டும் பாடுகிறேன். சுண்டைவேர், சமுத்திராப்பழம், அரத்தை சுக்கு, அக்ராகாரம், அதிவிடையம், ஒமம், திப்பிலி, திப்பிலிவேர், குரோசானி ஒமம், வால்மிளகு, சித்ரமூலம், கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், கடுகுரோகிணி காயம், கண்டந்திப்பிலி,

திப்பிலியுஞ் சாம்ப்ராணி பேரரத்தை
திரமான அழிஞ்சிவேர் வேப்பரிசிகடுகு
செப்பாதே எருக்கிலைமேல் சுணையுங்கூட்டு
திரமான வகைக்குவகை களஞ்சுதூக்கு
கப்பரிய தூதுவளை கண்டங்காலி
கடிதான மிளகருணை வெள்ளைச்சாரணைவேர்
ஒப்பரிய பெருமருந்து புங்கம்பாளை
உயருத்தா மணியோடு கடலிராஞ்சியென்னே. (122)

திப்பிலி, சாம்பிராணி, பேரரத்தை, அழிஞ்சில்வேர், வேப்பரிசி, கடுகு, எருக்கிலை மேலுள்ள சுணையும், வகைக்கு கழஞ்சு வீதம் எடுத்துக்கூட்டி, தூதுவளை, கண்டங்காலி, மிளகரணை, வெள்ளைச் சாரணைவேர், பெருமருந்து, புங்கம்பாளை, வேலிப்பருத்தி, கடலிராஞ்சி இவற்றுடன்

என்னவே தைவேளை குப்பைமேனி
இவைதனிலே வகைவகைக்குக் களஞ்சிடைவேர்கூட்டு
இன்னவே அத்திப்பால் வெள்ளாட்டுநீரும்
இட்டுலர்த்தி யிடித்துத்தூள் சீலைவடிகொண்டு
என்னவே எட்டியுட சிமிழ்தானன்று
இலாவிட்டால் பேய்ச்சுரையின் குடுக்கையிலேஅடைத்து
பன்னவே பணவெடைதூள் நாசிக்கேற்றப்
பரிவான கபாலநோய் பறந்துபோமே. (123)

தைவேளை, குப்பைமேனி வேர்களும் வகைக்கு கழஞ்சி எடை கூட்டி, அத்திப்பால், வெள்ளாட்டுக் கோமியம் இட்டு உலர்த்தி, இடித்துத் தூள் செய்து, சீலை வடி (வஸ்திரகாயம்) செய்து, எட்டியுடைய சிமிழினுள் அல்லது அது இல்லாவிட்டால் பேய்ச்சுரையின் குடுவையிலே அடைத்து, பணவெடைத்தூள் நாசிக்கு ஏற்றி நசியம் செய்ய கபால நோய்கள் எல்லாம் பறந்து போகும்.

போமென்ற பொடியதனைக் கடுதாசிதன்னில்
புகட்டியே திரியாகத் திரித்துக்கொண்டு
நாமென்ற நிம்பெண்ணெய் கொளுத்தியாற்றி
நலமான புகைதன்னை நாசிக்கேற்ற
ஓமென்ற கபாலத்தில் சன்னிமண்டைக்குத்து
ஒருதலைநோய் நீர்ப்பாய்ச்சல் ஓடும்பித்தம்
காமென்ற கபாலத்தில் வாய்வுசூலை
கரப்பானொடு கன்னோசி கன்னப்புற்றே. (124)

இத்தகைய பொடிதன்னை காகிதத்தில் வைத்துத், திரியாகத் திரித்துக் கொண்டு வேப்பெண்ணையில் கொளுத்திப் பற்ற வைத்து புகையை நாசிக்கு ஏற்ற, கபால ஜன்னி, மண்டைக்குத்து, ஒற்றைத்தலைவலி, நீர்ப்பாய்ச்சல் ஓடிவிடும், பித்தம் நீங்கிவிடும், கபாலத்திலுள்ளேயுள்ள வாய்வுசூலை, கரப்பான் கன்னோசி கன்னப்புற்றுடன்

புற்றான எழுவகைப்பீ னிசமும்போகும்
பொல்லாத சலதோஷம் புகைநீர்ப்பாய்ச்சல்
கத்தான கபாலத்தில் விப்புருதிசூலை
காசமொடு புண்புரையும் காணாதோடும்
மற்றுமுள்ள தந்தநோய் செவிநோய் கண்ணோய்
மகத்தான சன்னிவகை தோஷம்போகும்
சித்தான சிரசுநோய் தொண்ணூற்றாறும்
தீருமென்று பிரமமுனி செப்பினேனே. (125)

ஏழு வகை பீனிச நோய்களும் போகும். பொல்லாத ஜலதோஷம் புகைநீர்ப்பாய்ச்சல், கபாலத்தில்விப்புருதி சூலை, காசம், புண்புரை, போன்றவை நீங்கும். பல் நோய், காது நோய், கண்நோய் ஜன்னி வகைகள் தோஷவகைகள் அனைத்தும் நீங்கும். சிரநோய்கள் தொண்ணூற்றாறும் தீரும் என்று பிரமமுனியாகிய நான் உறுதியாகக் கூறுகிறேன்.

செப்பியதோர் மானிடர்க்குச் சன்னிதோஷம்
சிறந்ததொரு பல்கிட்டி மூச்சடக்கமானால்
நப்பியே ஆக்ராணம் பணவெடையேகொண்டு
நவச்சாரம் பணவெடைதான் கற்சுன்னங்கொஞ்சம்
நப்பியே மத்தித்து நாசிக்கேற்ற
நாடாது பல்கிட்டு சன்னிதீரும்
ஒப்பியே இன்னமொரு சேதிகேளு
உற்றதொரு சடத்திலே ஆறாப்புண்ணே. (126)

மானிடர்க்கு ஜன்னி தோஷம் ஏற்பட்டு, பற்கள் எல்லாம் கிட்டி, மூச்சு அடங்குமானால், அப்போது முன்கூறிய ஆக்ராணம் பணவெடையை எடுத்துக்கொண்டு, நவாச்சாரம் பணவெடை, சுற்சுன்னம் கொஞ்சம் எடுத்து மத்தித்து நாசியில் ஏற்றி நசியம் செய்தால் ஜன்னி தோஷம் நீங்கும். இதுமட்டுமல்ல இன்னும் ஒரு செய்தியைக் கூறுகிறேன். உடம்பிலே ஆறாத புண் தோன்றி,

புண்ணென்ன மேகத்தி லெடுத்தரோகம்
புரையோடு ஆறாத புண்ணுக்கெல்லாம்
அண்ணென்ன ஆக்ராணங் கழஞ்சுகூட்டி
அரிதாரஞ் சாதிலிங்கம் ரசகற்பூரங்
கண்ணென்ன கொடிக்கள்ளிப் பட்டைத்தூளுங்
கழுதைலத்தி உலர்த்தித்தூள் கலந்துகூட்டு
விண்ணென்ன வகைவகைக்குக் களஞ்சுகூட்டு
விரசோடு திருகுகள்ளிப் பால்தான்விட்டே. *(127)*

மேகத்தின் காரணத்தால் புரைகள் ஓடி ஆறாமல் இருக்கும் புண்களுக்கு, இந்த ஆக்கிராண மருந்து கழஞ்சு, அரிதாரம், ஜாதிலிங்கம், ரசகற்பூரம், கொடிக்கள்ளிப் பட்டைத்தூள், உலர்த்திக் காயவைத்த கழுதைலத்தில் உலர்த்திய தூள், வகைக்கு ஒரு கழஞ்சு வீதம் திருகுகள்ளிப்பால் விட்டு.

புண்ணுக்குப்புகை

விட்டதனை அரைத்துலர்த்தி வைத்துக்கொண்டு
விதமான புங்குபுளி தணல்கொண்டேற்றி
விட்டதின்மேல் தணலிலே பொடியைப்போட்டு
மேலேதான் கண்சிறட்டை கொண்டுமூடி
விட்டதனை வியாதியின்மேல் புகையைக்கேளு
வெடிசூலை மேகவெடி கிரந்தி அரையாப்பு
திட்டமுடன் பவுத்திரமும் அழுகண்ணிகுஷ்டம்
தீராத களிப்புண்கள் தீருமென்னே. *(128)*

நன்றாக அரைத்து உலர்த்தி வைத்துக்கொண்டு கரி அடுப்புமூட்டி புங்குபுளியங்கரியைத் தணலாகச் செய்து, அந்தத் தணலினிலே இந்தப் பொடியைத் தூவி அதன்மீது கண் உள்ள சிறட்டை கொண்டு மூடி. புண்களின் மேல் புகையானது நன்றாகப்பரவி ஊடுருவிச் செல்லும் வகையில் புகையைப் போடு. இப்படிச் செய்தால் வெடிசூலை, மேக வெடிப்பு, கிரந்தி, அரையாப்பு, பவுத்திரம், அழுகண்ணி, குஷ்டம் தீராத மேகப்புண்கள் அனைத்தும் தீரும்.

தீருமென்ற பொடியதனை அலரிப்பாலில்
சேர்த்துநீ மத்தித்துச் சீலையிலேயூட்டி
ஆறவேன்று ஆறாத புண்மேற்போடு
அழுகிவிழுங் கிரந்திகுழி வாழைப்புண்ணும்

தீருமே குஷ்டமொடு குறைநோய்ப்புண்ணும்
தேகத்தி லெழுந்ததொரு நோய்களெல்லாம்
காருநீ கண்காணா தோடுமப்பா
கடிதான பத்தியந்தான் கண்டுகொள்ளே. (129)

மேலும் இந்த ஆக்கிராணப்பொடியை அலரிப்பாலில் சேர்த்து நன்றாக மத்தித்து, ஒரு துணியில் ஊட்டி, ஆறாத புண்களுடன், அழுகிப் போகும் நிலையிலுள்ள கிரந்திப்புண்கள், குழிவாழைப்புண்கள், மேகத்தால் உடலில் ஏற்பட்டுள்ள அழுகிப்போய் நாற்றமெடுக்கும் ஆழமான புண்கள் குஷ்ட நோய்ப்புண்களும் கூட, இந்த மருந்து ஊட்டிய சீலைத்துணியை புண்களின் மேல் போட்டுச் சுற்றிக் கட்டிவிட்டால், வேதனை தீரும். மேகப்புண்கள் அனைத்தும் கண்களுக்கு தெரியாவண்ணம் மறைந்து போய்விடும், நோயும் குணமாகும். இதற்கான கடுமையான பத்தியத்தையும் கூறுகிறேன். கண்டிப்பாகப் பத்தியத்தை மேற்கொள்ள உறுதி செய்து கொள்வாயாக.

கண்டுகொள்ளு மூன்றுநாள் புகைதான்காட்டு
கண்டிப்பாய் ஆறுநாள் பத்தியந்தான்காரு
சென்றுதான் ஏழாநாள் தலைநீர்வாரு
சிறப்பான உப்பதனை வறுத்துக்கூட்டு
முன்செய்யா மறுபடியும் விளக்கெண்ணெய்தேய்த்து
முழுகியபின் மற்றதெல்லா முண்டுதேறு
சென்றுவரும் புகைவேக மென்னசொல்வேன்
தீராத நோயெல்லாம் தீரும்பாரே. (130)

மேற்படி மருந்தின் புகையை மூன்று நாட்கள் வரைத் தொடர்ந்து ஊட்டியும் புகை மூட்டியும் வரவேண்டும். இதற்குக் கண்டிப்பாக ஆறுநாட்கள் கடுமையான பத்தியத்தைக் காக்க வேண்டும். ஏழாம் நாளன்று தலைக்குளித்து அன்றைய உணவினில் உப்பு வறுத்துக் கூட்டுவாயாக. மீண்டும் விளக்கெண்ணெய் கொண்டு, தலைமூழ்கி குளித்த பிறகு, மற்றெல்லாவற்றையும் உண்ணலாகும். இந்த ஆக்கிராண மருந்தின் புகையின் வேகத்தால் தீராத நோய்கள் தீரும்.

விஷமுஷ்டித் தைலம்

தீரவே விஷமுஷ்டித் தைலங்கேளு
தீராத கரப்பனொடு அழுகண்ணிசூலை
மாரவே செவ்வட்டை மரவெட்டைசெய்யான்
வண்டுகடி புலிச்சிலந்தி புடையான்குத்து
பேரான பில்லிவஞ் சனையேவல்சூன்யம்
பிசாசுமுதல் பூதவே தாளமோடு
மாறாத குஷ்டமொடு குறைநோய்தீர
மைந்தனே தயிலமொன்று வழங்கக்கேளே. (131)

விஷமுஷ்டித் தைலத்தின் பயன்களைக் கேட்பாயாக. தீராத கரப்பான், அழுகண்ணி, சூலை, செவ்வட்டை. மரவெட்டை, செய்யான், பூரான், வண்டுக்கடி,

புலிச்சிலந்தி, புடையான், குத்து, பில்லி, வஞ்சனை, சூனியம், பிசாசு முதல் பூதங்கள் வேதாளம் இவற்றால் வந்த வேதனை தரும் நோய்கள், மாறாது துன்பந்தரும் குஷ்ட நோய், குறை நோய் இவற்றையெல்லாம் தீர்க்கும் தைலம் இதுவென்றே வழங்குகிறேன். இதன் செய்முறையைக் கேட்பாயாக.

வழங்கவே எட்டியே ரழிஞ்சிசங்கு
வன்னிபுங்க வண்டுகொல்லி சங்கங்குப்பி
அளம்பவே அடம்புசின்னி ஆயிலியப்பட்டை
ஆளிவேர் வெள்ளெருக்கு மருக்காரையிண்டு
குளம்பவே சிவந்தநா யுருவிகொத்தான்
குன்றிமணி ஆவாரை கறுத்தகண்ணி
வளம்பவே சிவன்வேம்பு கழுதைமுள்ளி
மருதோன்றி தாளிச்சு கருங்காலிபுரசே. (132)

எட்டி, ஏறழிஞ்சில், சங்கு வன்னி, புங்கு, வண்டு கொல்லி, சங்கங்குப்பி, அடம்பு, சின்னி, ஆயில்யப்பட்டை, ஆளிவேர், வெள்ளெருக்கு, மருக்காரை, இண்டு, சிவப்பு நாயுருவி, முடக்கொத்தான், குன்றிமணி, ஆவாரை, கரிசலாங்கண்ணி, சிவனார்வேம்பு, கழுதைமுள்ளி, மருதோன்றி, தாளிச்சு, கருங்காலி, புரசு,

புரசான உள்ளுலர்த்தி கிளுவைவாகை
புலித்துடக்கி கருஞ்சூரை கரந்தைமத்தம்
விரசான கொடுவேலி அமுக்கராதேக்கு
விடத்தலையின் பலாசுபலா மிளகருணைகுமரி
அரசோடு பூவரசு மருதுகொன்றை
ஆதாளி களக்கோட்டி செங்கத்தாரி
சரிகுவ்ளை பெருமருது காட்டுள்ளியவுரி
சமனெடைதா னிவையெல்லாந் தறித்துலர்த்தே. (133)

உள்ளுலர்த்தி, கிளுவை, வாகை, புலித்துடக்கி, கருஞ்சூரை, கரந்தை, ஊமத்தம், கொடுவேலி, அமுக்கரா, தேக்கு, விடத்தலை, பலாசு, பலா, மிளகரணை, குமரி, அரசு, பூவரசு, மருது, கொன்றை, ஆதாளி, களக்கோட்டி, செங்கத்தாரி, குவளை, பெருமருந்து, காட்டுள்ளி, அவுரி இவையெல்லாம் சமன் எடையெடுத்து எல்லாவற்றையும் வெட்டித்தறித்து, உலர்த்திக் காயவைத்து, பாண்டத்தில் போட்டு, குழிப்புடத்தில், தைலம் வாங்கவும், மூஞ்சூறு, அண்டங்காக்கை, கழுகு, ஆமை, கூகை, ஆந்தை, தேவாங்கு, ஆண் கழுதை மண்டை, பச்சோந்தி, முசுறு, பசுந்தவளை, பெருவிரியன், பசும்பாம்பு, பன்றிலத்தி, கழுதைலத்தி தலைமண்டையுடன் அனைத்தையும் உலர்த்தி யானைலத்தி, நரிக்கொம்பு, எருமைக்கொம்பு, முயற்புழுக்கை, வௌவால், எலிப்புழுக்கை.

உலர்த்திப்பாண் டத்திலிடு குழிப்புடத்தில்தயிலம்
உடன்வாங்கி மூஞ்சூறண் டங்காக்கைகழுகு
அலர்த்தியா மைகூகை யாந்தைதேவாங்கு
ஆனகழு தைமண்டை பச்சோந்திமுகறு

பலர்த்திபசுந் தவளைபெரு விரியன்பசும்பாம்பு
பன்றிலத்தி கழுதைலத்தி தலைமண்டையுடனே
முலர்த்திகய லத்திபரிக் கொம்பெருமைக்கொம்பு
முசற்புழுக்கை வவ்வாலோ டெலிப்புழுக்கையென்னே. (134)

ஒட்டகலத்தி, வெள்ளாட்டுப்புழுக்கை, இவையெல்லாம் சமனாக கொண்டு இடித்து உலர்த்தி ஜீவசெந்து வகைகளையெல்லாம், சமூலமாக இடித்து, உலர்த்திக் காயவைத்து ஒருமித்துச் சேர்த்து, பெரும்பாண்டத்தில் இட்டு மூடிப் பதறாமல் பூமியில் குழிவெட்டி அடிக்கவசம் வைத்து குழிப்புடத்தில் தைலம் இறக்கி வாங்கி, இதனுடன் முன்பு செய்த தைலத்தையும் சம அளவில் சேர்ப்பாயாக.

என்னவே ஒட்டைலத்தி வெள்ளாட்டுப்புழுக்கை
யிவையெல்லாஞ் சமன்கொண்டே யிடித்துலர்த்தித்
தன்னவே சீவசெந்து வகைகளெல்லாஞ்
சமூலமு மிடித்துலர்த்தி யொக்கச் சேர்த்துப்
பன்னவே பெரும்பாண்டத் திட்டுமூடிப்
பதறாதே குழிவெட்டி அடிக்கலசம்வைத்துத்
தன்னவே குழிப்புடத்தில் தயிலம்வாங்கிச்
சமனாக முன்தயிலத் தொக்கச்சேரே. (135)

இந்த இரண்டு வகைத்தைலத்தையும் ஒன்றாகச் சேர்த்து, அதில் சேங்கொட்டைத் தைலம் அரைப்படி வார்ப்பாயாக. எட்டுக்கழஞ்சி கருங்குங்கிலியம் சேர்த்து, கருஞ்சீரகம் எட்டுக் கழஞ்சிங்கி தேவதாரு, கஸ்தூரி மஞ்சள், ரசக்கற்பூரம் வகைக்கு கழஞ்சு எட்டாக சேர்த்து, சென்னகரைப்பட்டை ஒருபலம்,

சேருமே ரெண்டுவகைத் தயிலமொன்றாய்ச்
சேங்கொட்டைத் தயிலமரைப் படியேவாரு
காருகருங் குங்கிலியங் கழஞ்சியெட்டு
கழறுகிறேன் இவையுடனே மைந்தாகேளு
ஆருநீ கரியசீ ரகந்தானெட்டு
அழகான தேவதாரங் கஸ்தூரிமஞ்சள்
சேருரச கற்பூரங் கழஞ்சியெட்டு
சென்னகரைப் பட்டையொரு பலந்தானென்னே. (136)

பரங்கிப்பட்டை இரண்டுபலம், கஸ்தூரிப் பட்டை இரண்டு பலம், பிரப்பங்கிழங்கு இரண்டு பலம், வலம்புரிக்காய், வாலுழுவை, கடுக்காய், இவை வகைக்கு ஒருபலம் போட்டு, கொடிக்கள்ளிச்சாறு ஒதியம்பட்டை விட்டரைத்து தைலத்தில் சேர்த்து தைலத்தை உபயோகித்தால் மகத்தான ரோகங்கள் எல்லாம் மாண்டுபோகும்.

பலமான பறங்கிப்பட் டைபலந்தான்ரெண்டு
பாங்கான கஸ்தூரிப் பட்டைபலம்ரெண்டு
பிலமான பிரம்போடு கிழங்குபலம்ரெண்டு
பேரான வலம்புரிக்காய் வாலுழுவைகடுக்காய்

அலையாதே வகைவகைக்குப் பலந்தானொன்று
ஆட்டுவாய் கொடிக்கள்ளிச் சாறொதியம்பட்டை
மலையாதே விட்டரைத்துத் தயிலத்தில்வாரு
மகத்தான ரோகமெல்லாம் மாண்டுபோமே. (137)

பரங்கிப்பட்டை இரண்டுபலம், கஸ்தூரிப் பட்டை இரண்டு பலம், பிரப்பங்கிழங்கு இரண்டு பலம், வலம்புரிக்காய், வாலுழுவை, கடுக்காய், இவை வகைக்கு ஒருபலம் போட்டு, கொடிக்கள்ளிச்சாறு ஒதியம்பட்டை விட்டரைத்து தைலத்தில் சேர்த்து தைலத்தை உபயோகித்தால் மகத்தான ரோகங்கள் எல்லாம் மாண்டுபோகும்.

மாண்டுபோம் பூதம்பி சாசுவேதாளம்
மருண்டோடும் வஞ்சனையும் பில்லிசூன்யம்
மாண்டுபோஞ் சொரிநோவு சிரங்குகுஷ்டம்
மாறாத அழுகண்ணி வாதஞ்சன்னி
மாண்டுபோம் இவையெல்லாந் தயிலம்பூச
மயிலெண்ணெய் வேப்பெண்ணெய் சேர்த்துக்கொள்ளு
மாண்டுபோஞ் சருவாங்கம் துவாலைபோடு
மற்றாநாள் வேதுவிட்டுக் குளித்துப்போடே. (138)

பூதம், பிசாசு, வேதாளம், போன்றவைகள் மிரண்டு ஓடும். வஞ்சனை, பில்லி, சூனியம் முதலியன மாண்டு போகும். சொரி நோய் சிரங்கு, குஷ்டம், அழுகண்ணி, வாதச்சன்னி முதலியனவெல்லாம் நீங்கும். இவையெல்லாம் தீர்வதற்கு இந்தத் தைலத்துடன் மயில் எண்ணெய், வேப்பெண்ணெய், சேர்த்துக்கொண்டு, உபயோகித்தால் மேற்கூறிய நோய்கள் எல்லாம் மறைந்து போகும். சர்வாங்கம், துவாலைபோட்டு மறுநாள் வேதுவிட்டு, குளிக்க வேண்டும்.

குளிக்கவே தழுதாழை கரந்தைநொச்சி
குன்றிமணி சங்கங்குப் பியும்வாதமடக்கி
களிக்கவே நோயறிந்து வேதுகூட்டு
கைப்போடு புளிபுகையுந் தள்ளிப்பாரு
விழிக்கவே உப்பதனை வறுத்துக்கூட்டு
வெள்ளாடு முயலுடும்பு அயிரையிராலாகும்
அழிக்கவே வழுதலங்காய் முருங்கைப்பிஞ்சு
அரைக்கீரை பசும்பயறு அறிந்துகூட்டே. (139)

இதற்கு தழுதாழை, கரந்தை, நொச்சி, குன்றிமணி, சங்கங்குப்பி, வாதமடக்கி ஆகியவற்றை, நோய் நிலையறிந்து வேது பிடிக்கவும், கசப்பு, புளிப்புள்ள உணவுகளைத் தள்ள வேண்டும். புகைபிடித்தலாகாது. வறுத்த உப்பை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். வெள்ளாடு, முயல், உடும்பு, அயிரை, இறால் ஆகியவை சேர்த்துக் கொள்ளலாம். கத்தரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, அரைக்கீரை, பசும்பயிறு நோய் அறிந்து சேர்த்துக் கொள்ளலாம்.

கொம்மட்டிக்காய்ப்பதங்கம்

கூறவே கொம்மட்டிக் காய்ப்பதங்கஞ்சொல்வேன்
    கூறியதோர் வாதமெண் பதுதான்போகக்
கூறவே தழுதாழை ஆயிலியப்பட்டை
    கொடுவேலி பாவட்டை அமுக்கராவேர்
மூறிடவே வெண்சாரணை சத்திச்சாரணை
    முடக்கொத்தான் பெருவாகை தூதுவளைசடைச்சி
தேறியே தைவேளை குப்பை மேனி
    சிவன்வேம்பு பிரம்பினிட கிழங்கொன்றாமே. (140)

எண்பது வகை வாத நோய்களையும் குணப்படுத்தும் கொம்மட்டிக்காய் பதங்கம் என்ற மருந்து செய்முறையைக் கூறுகிறேன். தழுதாழை, ஆயிலியப்பட்டை, கொடுவேலி, பாவட்டை, அமுக்கராவேர், வெண்சாரணை, சத்திச் சாரணை, முடக்கொத்தான், பெருவாகை, தூதுவளை, சடைச்சி, தைவேளை, பிரப்பங்கிழங்கு, குப்பைமேனி, சிவனார் வேம்பு

ஒன்றான இவையெல்லாஞ் சூரணமேசெய்து
    உத்தமனே கண்டந்திப் பிலிகிராம்போமம்
தின்றான வால்மிளகு தாளிசபத்திரியும்
    திப்பிலியும் வாலுழுவை திப்பிலியின்மூலம்
சென்றாமக் ராகாரம் வாலுளுவைகஞ்சா
    திரமான லவங்கப்பூ சாதிக்காயே
அன்றான சதகுப்பை பறங்கிப்பட்டை
    அரைத்தை சுக்கு அதிமதுரம் சிறுநாகப்பூவே. (141)

ஆகிய இவற்றையெல்லாம் இடித்துப் பொடித்துச் சூரணம் செய்து, கண்டந்திப்பிலி, கிராம்பு, ஓமம், வால் மிளகு, தாளிசபத்திரி, திப்பிலி வாலுழுவை, திப்பிலிவேர், அக்ராகாரம், கஞ்சா, லவங்கப்பூ, ஜாதிக்காய், சதகுப்பை, பறங்கிப்பட்டை, அரத்தை, சுக்கு, அதிமதுரம், சிறுநாகப்பூ, இவற்றுடன்

பூவான கருஞ்சீரம் வகைக்குநாற்கழஞ்சு
    பொடித்துநீ முன்மருந்தோ டொக்கச்சேரு
தேவோடு கல்வத்தி லிட்டுக்கேளு
    திருகுகள்ளிப் பாலோடு உத்தாமணிச்சாறும்
பாவோடு வார்த்ததனை அரைத்துலர்த்திப்
    பக்குவமாய்ப் பேய்க்குமட்டிக் காய்தான்கேளு
கோவோடு வேண்டியது கொண்டுவந்து
    குடைந்துள்ளே சதையோடு விதையும்போக்கே. (142)

கருஞ்சீரகம் வகைக்கு நான்கு கழஞ்சு வீதம் சேர்த்து தனித்தனியாக இடித்துப் பொடித்து, கல்வத்திலிட்டு, மேலும் கேட்பாயாக. திருகுக்கள்ளிப் பாலுடன், உத்தாமணிச் சாறும் சேர்த்து வார்த்து அரைத்து, உலர்த்திக் காயவைத்துக் கொண்டு

பக்குவமாகவுள்ள பேய்க்குமட்டிக்காய் வேண்டிய அளவு கொண்டு வந்து, அதைக் குடைந்து உள்ளே இருக்கும் சதையையும் விதைகளையும் வெளியே எடுத்துப் போட்டு விடுவாயாக.

போக்கியே மருந்தேல்லாங் காயினுள்ளே
புகட்டியந்த வோட்டாலே மேலேமூடிச்
மேக்கியே பாண்டத்தி லிட்டுநீயும்
மேல்மூடிச் சீலைசெய்து குழிதான்வெட்டி
கேட்கவே வெள்ளாட்டுப் புழுக்கைமைந்தா
கீழ்மேலு மிட்டுநடப் பாண்டம்வைத்துப்
பாக்கியே புடம்போட்டு ஆறவிட்டுப்பாரு
பருவமாங் காயெல்லாஞ் சிவந்துகாணும். *(143)*

பின்னர் அந்தக் குடைந்தெடுத்த காயினுள்ளே மருந்தையெல்லாம் உள்ளுக்குள் புகட்டி, காயின் ஒட்டாலே மேலே மூடி பாண்டத்திலிட்டு மேல் மூடிசீலை மண் செய்து, பூமியில் ஒரு குழிவெட்டி, வெள்ளாட்டுப் புழுக்கையை மேலும் கீழும் வைத்து, நடுவில்பாண்டம் வைத்து, புடம் போட்டு எரித்து, ஆறிய பிறகு எடுத்துப்பாரு பருவமாக எடுத்தால் காயெல்லாம் சிவந்து காணப்படும்.

காணுவது கருகாம லிப்பால்வாங்கிக்
காயெல்லா மாறவிட்டு மருந்தைக்கொட்டிப்
பேணியே குங்குமப்பூ சாதிக்காயும்
பெய்துநீ பொடிசெய்து வைத்துக்கொண்டு
ஆணுவது வெருகடிதூ ளந்திசந்தி
அப்பனே மூன்றுநாள் ஆறுநாட்கொள்
காணுவது வயறுளைந்தால் நிறுத்திப்போடு
கலங்காதே எருமைமோர் சோறுமுண்ணே. *(144)*

கருகிப் போகாமல் பக்குவமாக எடுத்து நன்றாக ஆறவைத்து மருந்தைக் கொட்டி எடுத்துக்கொண்டு குங்குமப்பூவும் சாதிக்காயும் சேர்த்து பொடித்து வைத்துக்கொண்டு வெருகடித்தூள் (மூன்று விரலால் எடுக்கும் அளவு) காலைமாலை மூன்று அல்லது ஆறு நாட்கள் சாப்பிடவும். வயிற்றைக் கலக்குவது போல் இருந்தால் நிறுத்தி விடலாம். எருமை மோர் சேர்த்து உணவு உட்கொண்டால் பேதி நின்றுவிடும்.

உண்ணவே வாதமெல்லா மோடிப்போகும்
உத்தமனே கைப்போடு புளிபுகையுந்தள்ளு
தண்ணியே பத்தியத்துக் காகாவெல்லாந்
தள்ளிவிடு மற்றவெல்லா மிச்சாபத்யங்
கண்ணவே உப்பதனை வறுத்துக்கூட்டு
கண்காணா தோடுமடா வாதமொடுசூலை
ஒண்ணுவது காலுகை முடக்கிழுப்புவாதம்
உத்தமனே பக்கவா தம்ஓடும்பாரே. *(145)*

இந்தக் கொம்மட்டிக்காய் பதங்கத்தை உண்டுவந்தால் உடம்பில் உள்ள வாதம் எல்லாம் ஓடிப்போகும். இதற்கு பத்தியம் உண்டு. கைப்பும் புளிப்பும் சுவையாக உள்ள உணவுகளைத் தள்ளிவிட வேண்டும். தண்ணீரே பத்தியத்துக்காகாது. மற்றவை யெல்லாம் இச்சாப்பத்தியம். உப்பை வறுத்து உபயோகித்து, மருந்தை உபயோகித்தால் வாதநோய்களும் சூலை நோய்களும் நீங்கும். கைகால்கள், முடக்கு, இழுப்பு, வாதங்கள் அனைத்தும் நீங்குவதுடன் பக்கவாதமும் நீங்கும்.

ஆடாதோடை லேகியம்

பாரேநீ க்ஷயந்தீர ஆடாதோடை
பாடுகிறேன் தூதுவளை சிறுகாஞ்சோரி
காருநீ முசுமுசுக்கை கண்டங்காலி
கரிசாலை முள்ளங்கி மணத்தக்காளி
சேரேநீ சிறுமுருங்கை வழுதலையின்சங்கு
சேர்த்துநிலை யாவரைச் சூரணமேசெய்து
காரேநீ கடுக்காயுங் கோஷ்டந்திப்பிலி
கருஞ்சீர கம்மிளகு வசம்பிந்துப்பே. (146)

க்ஷய நோய் நீங்குவதற்குரிய ஆடாதோடை லேகியம் என்ற மருந்தின் செய்முறையைக் கூறுகிறேன் கேட்பாயாக. தூதுவளை, சிறுகாஞ்சோரி, முசுமுசுக்கை, கண்டங்காலி, கரிசாலை, முள்ளங்கி, மணித்தக்காளி, சிறுமுருங்கை, வழுதலையின் சங்கு சேர்த்து நிலையாவரைச்சூரணத்தைச் செய்து கடுக்காய், கோஷ்டம், திப்பிலி, கருஞ்சீரகம், மிளகு, வசம்பு, இந்துப்பு இவற்றுடன்

உப்பான சிற்றரத்தை பேரரத்தை
உத்தமனே வாலுளுவை கூகைநீறு
செப்பாத சீரகமுங் கற்கடகசிங்கி
சிறுநாகப் பூவோடு நெல்லிமுள்ளி
உப்பாக வகைவகைக்குக் காற்பலமே தூக்கு
உத்தமனே யிடித்துநன்றாய் முன்மருந்திற்சேரு
செப்பாக ஆவின்நெய் படிதான்வாரு
சிறப்பான வெள்ளாட்டின் பால்படிதான்வாரே. (147)

சிற்றரத்தை பேரரத்தை, வாலுழுவை, கூகைநீறு, சீரகம், கற்கடகசிங்கி, சிறுநாகப்பூ, நெல்லிமுள்ளி ஒவ்வொரு வகையினையும் கால்பலம் எடை எடுத்து, இடித்துப் பொடித்து முன்மருந்துடன் இதனையும் சேர்த்துக்கொண்டு, பசுவின் நெய் ஒருபடியும் வெள்ளாட்டின் பால் ஒருபடியும் வார்ப்பாயாக.

வார்த்துமே அரக்காம்பல் சாறுபடிவாரு
வளமாக அடுப்பேற்றிக் கொதியிடும்போது
பார்த்துமே பனங்கற்கண் டும்பலந்தானாலு
பனைவெல்லம் பலம்நாலு போட்டுக்காய்ச்சு

கோத்துமே பாகுவரில் சூரணத்தைக்கொட்டிக்
கொம்புத்தே னொருசேரை கூடவாரு
ஆர்த்துமே லேகியமாய்ப் பண்ணிக்கொண்டு
அந்திசந்தி நாளொன்றுக் கிருநேரங்கொள்ளே. (148)

அத்துடன் அரக்காம்பல் சாறு ஒருபடி வார்த்து பாத்திரத்தை அடுப்பில் ஏற்றி கொதிக்கும்போது பனங்கற்கண்டு பத்துப்பலம் பொடித்துப் போட்டு, பனைவெல்லமும் நாலுபலம் இடித்து போட்டுக் காய்ச்சும்போது பாகு வரும் பதத்தில் சூரணத்தைக் கொட்டிக் கொம்புத்தேன் ஒரு சேர் வார்த்து, லேகியமாய் அதனைக் கிண்டிக்கிளறி எடுத்து பதனம் செய்வாயாக. இம்மருந்தை காலை, மாலை இரு வேளை தினந்தோறும் உண்ண வேண்டும்.

கொள்ளுவது பவளபற்பம் அரிதாரபற்பம்
கூட்டியே நேரமொரு பாக்களவுகொள்ளு
தள்ளாதே மண்டலமே கொள்ளும்போது
க்ஷயமீளை க்ஷயமிருமல் மந்தாரகாசம்
விள்ளாதே ஓடிவிடும் க்ஷயரோகமேழும்
மேகவகை கிரந்தி குஷ்டம் உஷ்ணவாய்வு
கள்ளமாம் வியாதியெல்லாங் காணாதோடுங்
கைகண்ட வித்தையிது கண்டுபாரே. (149)

மேலும் நல்ல பயனுடைய பவளபற்பம், அரிதாரபற்பம், லேகியத்துடன் சேர்த்து, வேளை ஒன்றிற்கு ஒரு கொட்டைப்பாக்களவு ஒரு மண்டலம், தினமும் இருவேளை உட்கொண்டுவந்தால் சயம், ஈளை, இருமல் மந்தாரகாசம் ஆகியவை நீங்கிவிடும். ஏழுவகை சயரோகமும் மேக வகைகளும், கிரந்தி, குஷ்டம், உஷ்ண வாய்வு போன்ற வியாதிகள் எல்லாம் காணாமற் போய்விடும் அளவுக்கு செய்துவிடக் கூடிய கைகண்ட மருந்து இதுவேயாகும்.

பாரேநீ கைப்போடு புளிப்புந்தள்ளு
பசுவின்நெய் வெள்ளாட்டு மாமிசமுங்கூட்டு
சேரேநீ ஆவின்பால் வெள்ளாட்டுப்பாலில்
தினந்தோறுஞ் சீனியிட்டுக் காய்ச்சிக்கொள்ளு
சாரேநீ பத்தியந்தான் முறையெசெய்து
சார்ந்துபார் சண்டாள ரோகம்போகும்
ஏரேநீ தலைமுழுக ஆவின்நெய்யாம்
இல்லாவிட் டால்முக்கூட் டெண்ணெய்மூழ்கே. (150)

இதற்குப் பத்தியம் உண்டு, கசப்பும்புளிப்பும் உள்ள உணவுப் பொருள்களைத் தள்ளி ஒதுக்கி விடவேண்டும். பசுவின் நெய்யும் வெள்ளாட்டு மாமிசமும் பயன்படுத்தலாம். பசும்பால், ஆட்டுப்பால் இவற்றை தினந்தோறும் சீனியிட்டுக் காய்ச்சிப் பருக வேண்டும். பத்தியத்தை ஒழுங்காக காப்பாற்றிக் கொண்டு மருந்தை உண்டுவந்தால் மேற்கூறிய சண்டாள நோய்கள் அனைத்தும் நீங்கும். பத்தியம் முறித்து

தலைமூழ்கும் போது ஆவின்நெய் அல்லது முக்கூட்டு எண்ணெய் தேய்த்து உடல் தலை மூழ்கவேண்டும்.

அரித்ார பற்பம்

மூழ்கவே அரிதார பற்பஞ்சொல்வேன்
முனையான அரிதாரம் பலந்தானொன்று
தேளான கற்சுன்னம் படிதானொன்று
தேசிநீர் படிரெண்டு செப்பக்கேளு
வாழ்கவே புதுச்சட்டி தன்னிலேதான்
வளமான கற்சுன்னங் கீழ்மேலிட்டு
நாழ்கவே அரிதாரங் கிழிபோறகட்டி
நடுவேநீ கிழிவைத்துத் தேசிநீர்வாரே. *(151)*

இப்பொழுது 'அரிதாரபற்பம்' செய்முறையினைக் கூறுகிறேன். அரிதாரம் ஒருபலம், கழுதை மூத்திரம் இரண்டுபலம், கற்சுன்னம் ஒருபடி, ஆகியவற்றையெல்லாம் சேகரித்து, புதுச்சட்டி கொண்டு வந்து, அதனுள்ளே கற்சுன்னத்தை கீழும் மேலும் இட்டு, அரிதாரத்தை கிழிபோல கட்டித் தாழ்வாக, நடுவே கிழிவைத்து தேசிநீர் வார்ப்பாயாக. (தேசிநீர் = கழுதை மூத்திரம்)

தேசிநீர் தன்னிலே உவர்ப்பூவிட்டுத்
தெளியவைத்துத் தெளிவிறுத்து வார்த்துநீற்று
ஆசியே யிப்படி நீ யேழுதரமறிந்து
அரிதார மஞ்சள்கக்கி வெள்ளையாகும்
மாசியே அதைஎடுத்து மறுசட்டியிட்டு
மைந்தனே அடுப்பேற்றி யீருள்ளிச்சாறு
காசியே படியொன்று கரந்தைச்சாறொன்று
கலந்துமே சுறுக்கிட்டுக் கருதிக்கேளே. *(152)*

தேசிநீர் தன்னில் உவர்ப்பூவிட்டுத் தெளியவைத்துத் தெளிவிறுத்து வார்த்து நீற்று இப்படியாகவே நீ ஏழுதரம் மடக்கிச் செய்தால், அரிதாரம் மஞ்சள் நிறம் மாறி வெள்ளையாகக் காணும். அதையெடுத்து மறு சட்டியிலிட்டு, அடுப்பேற்றி வெங்காயச்சாறு ஒருபடி. கரந்தைச்சாறு ஒருபடி விட்டுச்சுருக்கிட்டு அரிதாரத்தை எடுத்துக்கொள்.

கருதிப்பூ வரசம்பட் டைபுளியம்பரணி
கனமான நாயுருவி சுட்டசாம்பல்
கருதுவேன் வகைவகைக்கு ரெண்டுபடிசாம்பல்
கலந்துமே சட்டியிலே கீழ்மேலிட்டு
அரிதியே தாளகத்தில் கவசங்கேளு
அண்டோடும் உவர்ப்பூவுந் தலைமண்டையோடும்
வெருவியே சுன்னநீ ராவின்பாலும்
விட்டரைத்து மேற்கவசங் கட்டிப்போடே. *(153)*

பூவரசம்பட்டை, புளியம்பரணி, நாயுருவி, இவற்றை சுட்ட சாம்பல் ஆகியவைகளில் வகைக்கு இரண்டுபடி கலந்து சட்டியின் கீழேயும் மேலேயும் இட்டு, தாளகத்துக்குக் கவசம் செய்ய வேண்டும். அதற்கு முட்டை ஓடும், உவர்ப்பூவும், மண்டையோடும் சுன்னநீரும், பசுவின்பாலும் அரைத்துத் தாளகத்துக் கவசம் செய்து, வெய்யிலில் காயவைத்து உலர்த்திக் கொள்வாயாக.

கட்டியே ரவியிலிட்டு உலர்ந்தபின்பு
கனமான சாம்பலிலே நடுவேயிட்டு
சட்டியே மேற்சட்டி கொண்டுமூடிச்
சந்துவாய்ச் சீலைசெய்து அடுப்பிலேற்றிக்
கட்டியே தென்னமட்டை தென்னம்வேரால்
கமலம்போல் எரித்திடுவாய் நாலுசாமம்
அட்டியில்லா தாறவிட் டெடுத்துப்பாரு
அரிதாரம் நீறுமப்பா ஆர்சொல்வாரே. (154)

நன்றாக அரிதாரம் உலர்ந்த பிறகு, அதனைக் கனமான சாம்பலின் நடுவேயிட்டு மேற்சட்டி கொண்டு மூடிச் சந்துவாய் அடைத்து சீலைமண் செய்து அடுப்பிலேற்றித் தென்னம்பட்டை, தென்னம்வேரால் கமலாக்கினியாக நாலு சாமம் தீயெரித்திடுவாயாக, பின்னர் ஆறவிட்டு அரிதாரத்தை எடுத்துப்பார்த்தால் அரிதாரம் பற்பமாயிருக்கும்.

சொல்லாத பற்பமொரு பணவிடைதான்மைந்தா
சுகமான நெய்தேனிற் கூட்டிக்கொள்ளக்
கொல்லாத க்ஷயமீளை மந்தாரகாசங்
குலைதொலையாக் கிரந்தியரை யாப்புக்குஷ்டம்
சொல்லாதே வேதையிட்டால் ஏழுமாற்று
சுறுக்காகும் ரசபற்பஞ் சேர்த்துக்கொண்டால்
கல்லான வியாதியெல்லாந் தீருமப்பா
கைமுறையாச் சொல்லிவிட்டேன் பார்க்கலாமே. (155)

இத்தகைய அரிதார பற்பத்தை நெய்யில் அல்லது தேனில் கலந்து, ஒருபணவிடை அளவு உட்கொள்ள சயம், ஈளை, மந்தாரகாசம், சூலை, தொலையாத கிரந்தி, அரையாப்பு, குஷ்டம் முதலிய நோய்கள் நீங்கும். வேதையிட்டால் இதே அரிதாரம் ஏழுமாற்றாகும். ரசபற்பம் சேர்த்து உட்கொண்டால் கடுமையான நோய்களெல்லாம் நீங்கும். என்கைமுறையாவும் சொல்லிவிட்டேன். சோதித்துப் பார்த்துக்கொள்.

பவளபற்பம்

பாரேநீ பவளபற்பஞ் சொல்லக்கேளு
பாங்கான நற்பவளம் பலந்தான் தூக்கு
நேரேநீ யிலந்தையிலை தனை அரைத்து
ரெண்டடையாய்ப் பிடித்ததின்மேற் பவளம்வைத்துப்

போரேநீ மேலுமந்த அடையால்மூடிப்
பொருந்தவே சீலைசெய்து முழுப்புடத்திற்போட
ஆரேநீ ஆறவிட் டெடுத்துப்பாரு
அப்பனே பவளமெல்லாம் பீங்கானிலிட்டே. (156)

பவளபற்பம் செய்யும் முறையை என் கைமுறைப்படி சொல்கிறேன். கேட்பாயாக. நற்பவளம், ஒருபலம் எடுத்து வைத்துக் கொள்ளவும். இலந்தையிலையை நன்றாக அரைத்து இரண்டு அடைகளாகப் பிரித்து, ஓர் அடையின் மீது நற்பவளத்தை வைத்து மற்றொரு அடையால் பவளத்தை மூடிப் பொருந்தவே சீலை செய்து முழப் புடம் போட்டு ஆறியபின் பவளத்தை எடுத்து பீங்கானில் இடுவாயாக.

இட்டுமே ஆவின்பால் நிறையாய்வார்த்து
என்மகனே ரவியில்வைக்க நீறும்பாரு
திட்டமாம் பவளபற்பம் ஆருஞ்சொல்லார்
செப்பாதே வெகுசுருக்குத் தீரும்பாரு
கொட்டாதே பற்பமொரு பணவெடையேதூக்கு
கொம்புத்தேன் ஆவின்நெய் கூட்டிக்கொள்ளு
த்:டாத மேகமாங் கிரந்திசூலை
க்ஷயமீளை யிரைப்பிருமல் நீர்சொரிவுபோமே. (157)

பிறகு பீங்கானில் பசுவின் பாலை நிறைய வார்த்து அதனை சூரிய வெளிச்சத்தில் வைக்க பவளம் நீறும். பவளம் பற்பமாகியிருக்கும். இத்தகைய வழியில் பவளபற்பம் செய்யும் முறையை எவரும் சொல்லார்கள். இத்தகைய பற்பத்தை ஒரு பணவெடை அளவு கொம்புத்தேன் அல்லது பசுவின் நெய்யில் சேர்த்துக்குழைத்து உண்பாயானால் மேகம், கிரந்தி, சூலை, சயம், ஈளை, இரைப்பு, இருமல் முதலிய நோய்களுடன் நீர்சொரிவும் நீங்கும்.

சிங்கிபற்பம்

போமென்ற சிங்கிபற்பம் சொல்லக்கேளு
புகழான கலைக்கொம்பு பிளந்துநாலாய்
ஆமென்ற மேனியிலை அரைத்துஅப்பி
அப்பனே முழுப்புடத்தி லிட்டுவாங்கி
தேமென்ற நீறுமது தீர்க்கமாகத்
திறமான ஆவின்பால் விட்டரைத்துத்
தாமென்ற முழுப்புடத்திற் போட்டாயானால்
சங்குபோல் நீறியது தவளமாமே. (158)

சிங்கி பற்பம் செய்யும் முறையைக் கூறுகிறேன் கேட்பாயாக. கலைமான் கொம்பு எடுத்து நான்காக பிளந்து வைத்துக்கொண்டு குப்பை மேனியிலையை நன்றாக அரைத்து கொம்புத்துண்டுகளின் மேல் கனமாகப் பூசி முழப்புடத்தில் இட்டு ஆறியபின் எடுத்து ஆவின்பால். விட்டு அரைத்து மீண்டும் முழப்புடமிட்டு ஆறியபின்

எடுத்துப்பார்த்தால் சங்குபோல மான்கொம்பு பற்பம் ஆகியிருக்கும். இத்தகைய மான்கொம்பு பற்பமாகிய சிங்கி பற்பத்தை இரண்டு பணவெடை எடுத்து,

தவளமாம் பற்பம்ரெண்டு பணவெடையேதூர்க்கு
சார்வான ஆவின்வெண்ணெய் தன்னிற்கொள்ளு
துவளமாம் மேகமுடன் உஷ்ணகாந்தி
தொலையாத சூடெரிவு நீரடைப்புக்
கவளமாம் பவளபற்பம் சேர்த்துக்கொள்ளு
கல்லடைப்பு நீரடைப்பு கயரோகங்கள்
துவளமாம் க்ஷயமீளை துர்மாங்கிஷங்கள்
தொலையாத வியாதியெல்லாந் தொலைந்துபோமே. (159)

பசுவின் வெண்ணெய் தன்னில் குழைத்து அருந்தி வந்தால் மேகநோய்கள், உஷ்ண கிரந்தி சூடெரிவு, நீரடைப்பு நோய் தீரும். இத்துடன் பவளபற்பம் சேர்த்து உட்கொண்டால் கபரோகங்கள், சயம், ஈளை, துர்மாமிசங்கள் போன்ற நோய்கள் எல்லாம் தீரும். கல்லடைப்பு, நீரடைப்பு நோய் தீரும்.

பல்நோய் தீர

போமென்ற தந்தநோய் முப்பத்திரண்டும்
போகவே உப்புஒரு பலந்தான்வாங்கி
வேகவே வர்க்கம்பால் மேனிச்சாறும்
விட்டரைத்து வில்லைதட்டிக் காயவைத்து
ஆமென்ற ஓட்டிலிட்டு மேலோடுமூடி
அப்பனே முழப்புடத்தி விட்டுவாங்கு
ஆமென்ற பொடிசெய்து வேறேவைத்து
அயப்பொடியுந் துருசுதுத்தங் கச்சுக்கட்டே. (160)

பற்களில் தோன்றும் நோய்கள் முப்பத்திரண்டும் குணமாக வேண்டுமானால், உப்பு ஒருபலம் வாங்கி எருக்கம்பால், குப்பைமேனிச்சாறு விட்டரைத்து, வில்லைதட்டிக் காயவைத்து ஒட்டில் இட்டு, ஒடுமூடி, முழப்புடத்தில் இட்டு, ஆறிய பின் பொடி செய்து பற்பத்தை எடுத்து வேறே வைத்து அயப்பொடியும் துரிசு துத்தம், காசுக்கட்டி.

கட்டியே கண்டங்கத் திரிவிதையினோடு
கருஞ்சீரங் களிப்பாக்கு வகைவகைக்கு
ஒட்டியே கழஞ்சிடைதான் சமனாய்ச்சேர்த்து
உத்தமனே அயக்கரண்டி தன்னிலிட்டு
ஆட்டியே வறுத்துநன்றாய்க் கல்வத்திட்டு
அதினொடுகொட் டாங்கச்சிக் கரியுங்கூட்டு
இட்டுமே பொடிசெய்து முன்பொடியோடொக்க
இடைபாகங் குறையாமல் சமனாய்ச்சேரே. (161)

கண்டங்கத்திரிவிதை, கருஞ்சீரகம், களிப்பாக்கு, வகைவகைக்கு கழஞ்சிஎடை சமனாகச் சேர்த்து இரும்புக் கரண்டியில் இட்டு நெருப்பின் மேல் வறுக்கவும் கரண்டியை அசைத்து அசைத்து நன்றாய் வறுத்து கல்வத்திலிட்டு அதனுடன் கொட்டாங்கச்சி சுட்டெரித்த கரியும் சேர்த்து பொடியாகச் செய்து முன்பு செய்த பொடியுடன் எடைபாகம் குறையாமல் சமனாகச் சேர்த்துப் பயன்படுத்த வேண்டும்.

கொப்பளிக்கக்கியாழம்

சேரேநீ கொப்பளிக்கக் கியாழங்கேளு
திறமான கடுக்காயுஞ் சுக்காங்கல்லும்
ஏரேநீ முடக்கொத்தான் கருவேலம்பட்டை
யெரிகாலன் நீர்ப்பூலா இவைதானாறும்
பாரேநீ இடித்துமொரு பாண்டத்திட்டுப்
பதக்குநீர் விட்டெரித்துக் கியாழம்பண்ணிக்
காரேநீ பொடியெடுத்துத் தந்தசுத்திசெய்து
கியாழத்தை வார்த்துக்கொப் பளித்துப்போடே. *(162)*

பல்நோய்களை, குணப்படுத்த வாயிலிட்டுக் கொப்பளிக்க கியாழம் செய்முறையையும் கூறுகிறேன். கடுக்காய், சுக்கான்கல், முடக்கொத்தான், கருவேலம் பட்டை, காட்டாமணக்கு, நீர்ப்பூலா, இந்த ஆறு சரக்குகளை ஊற வைத்து இடித்து ஒரு பாண்டத்திலிட்டு, பதக்கு நீர் விட்டெரித்துக் கியாழம் செய்து, மேற்படி பொடி எடுத்து பற்களைச் சுத்தம் செய்தபின் கியாழத்தைக் கொண்டு, வாயை நன்றாகக் கழுவிக் கொப்பளித்து வெளியே துப்ப வேண்டும்.

போடவே பல்லசைவு தந்தவாய்வு
பொல்லாத பற்குத்துப் பல்லரணை
மூடவே பற்புழுவும் பல்லுக்கூச்சம்
முகவாதஞ் சன்னியொடு தந்தசன்னி
நீடியதோர் பல்வாதம் பல்லுளைச்சல்
நேத்திரநோய் வேர்வெட்டு சொத்தைப்பல்லு
பாடியதோர் தந்தநோய் முப்பத்திரண்டும்
பறந்துபோம் பொடியினுட வேகந்தானே. *(163)*

இப்படிச் செய்தால், பல்லசைவு, தந்த வாய்வு, பற்குத்து பல்லரணை, பற்புழு, பல்கூச்சம், முகவாதம், ஜன்னி, தந்த ஜன்னி, நேத்திர நோய், பல்வாதம், பல் உழைச்சல், வேர்வெட்டு சொத்தைப்பல் போன்ற பல் நோய்கள் முப்பத்திரண்டும் இந்தப் பொடியினுடைய வேகத்திலேயே பறந்து போய்விடும்.

கரப்பநோய்க்கு எண்ணெய்

பறந்துபோங் கெற்பநோய் தீரவேண்டிற்
பாடுகிறேன் விளக்கெண்ணெய் படிதான்ரெண்டு
விரைந்திடவே பேய்க்கொமட்டிச் சாறுபடிரெண்டு
வேப்பம்பட் டைச்சாற களக்கொட்டிச்சாறு

முறைந்திட்ட ஐவேலி பிரமிச்சாறும்
முடக்கொத்தா னுள்ளுலர்த்தி காட்டுள்ளிச்சாறும்
இருந்திட்ட வகைவகைக் கிரண்டுபடிசாறு
எண்ணெயிலே வார்த்திடுநீ இன்னுங்கேளே. (164)

கர்ப்ப நோய்கள் நீங்குவதற்கென்று கர்ப்ப நோய் எண்ணெய் என்ற மருந்து செய்முறையைக் கூறுகிறேன். விளக்கெண்ணெய் இரண்டுபடி, வேப்பம்பட்டைச்சாறு, களக்கொட்டிச்சாறு, ஐவேலிச்சாறு, பிரம்மிச்சாறு, முடக்கொத்தான் சாறு உள்ளுலர்த்திச்சாறு, காட்டுள்ளிச் சாறும் வகைக்கு இரண்டுபடியாக மேற்படி எண்ணெயிலே வார்த்திடுவாயாக. இன்னுங்கேள்.

கேளாய்நீ கொடிவேலி புங்கம்பாளை
கிளுவைநிலை யாவாரை குருந்துசங்கு
வேளேநீ மூங்கிலிலை கஸ்தூரிப்பட்டை
வெள்ளறுகு தலைச்சுருளி காக்கட்டான்குமரி
வாளேநீ வெள்ளைச்சா ரணையினோடு
வகைவகைக்கு ஒருபலந்தான் வரிசையாகக்
கேளேநீ கொடிக்கள்ளிச் சாற்றாலாட்டு
குழப்பியே யெண்ணெயிலே கரைத்துவாரே. (165)

கொடிவேலி, புங்கம்பாளை, கிளுவை, நிலையாவாரை, குருந்து சங்கு மூங்கில் இலை கஸ்தூரிப்பட்டை, வெள்ளருகு தலைச்சுருளி, காக்கரட்டான், குமரி, வெள்ளைச்சாரணை இவை வகைக்கு ஒரு பலம் எடுத்துக்கொள்வாயாக. பிறகு கொடிக்கள்ளிச் சாற்றில் ஆட்டி அரைத்து குழப்பி எண்ணெயிலே கலந்து வார்ப்பாயாக.

வாரேநீ கடுகோடு திப்பிலியுங்கடுக்காய்
வால்மிளகு குரோசானி கடுகுரோகணியும்
ஆரேநீ கருஞ்சீரங் கஸ்தூரிமஞ்சள்
அரத்தைசுக்கு வால்மிளகு சிறுநாகப்பூ
பேரேநீ இந்துப்பு ஆனைத்திப்பிலி
பெருங்காயஞ் சாதிக்காய் தாளிசபத்திரியும்
ஏரேநீ சேங்கொட்டை ரசகற்பூரம்
இஞ்சியொடு நவச்சார மியம்பக்கேளே. (166)

பிறகு கடுகு, திப்பிலி, கடுக்காய், வால்மிளகு, குரோசானி ஓமம், கடுகுரோகிணி கருஞ்சீரகம், கஸ்தூரிமஞ்சள், அரத்தை, சுக்கு, வால்மிளகு, சிறுநாகப்பூ, இந்துப்பு, யானைத்திப்பிலி, பெருங்காயம், ஜாதிக்காய், தாளிசபத்திரி, சேங்கொட்டை, ரசகற்பூரம், இஞ்சி, நவச்சாரம் ஆகிய பொருட்களை

இயம்புகிறேன் வகைவகைக்கு நாற்கழஞ்சுவீதம்
எரிகால சாறோடு வெள்ளாட்டுநீரும்
அயம்புகிறேன் விட்டரைத்து எண்ணெயிலேவாரு
அடுப்பேற்றி யெரித்துநீ மெழுகுபதம்பாரு

அயம்பாத வடிகலசந் தன்னிற்கேளு
ஆகாசத் தூளொடுவெண் காரம்ரெண்டு
வயமாக வகைவகைக்கு இருகழஞ்சுபோடு
வடித்தெடுத்து எண்ணெயைநீ வைத்துக்கொள்ளே. (167)

வகைக்கு நாற்கழஞ்ச வீதம் எடுத்துக்கொண்டு காட்டாமணக்குச் சாறுடன் வெள்ளாட்டுக் கோமியமும் சேர்த்து மேற்படி பொருள்களின் மீது விட்டு அரைத்து எண்ணெயிலே வார்ப்பாயாக. பிறகு அடுப்பிலேற்றி எரித்து மெழுகுபதம் வரும் பக்குவத்தில் ஆகாசத்தூளோடு (ஒட்டடை) வெங்காரமும் வகைக்கு இருகழஞ்சு வீதம் போட்டு எண்ணெயை வடித்து எடுத்து பதனம் செய்வாயாக.

எண்ணெயே மூன்றுநாள் கொள்ளும்போது
என்னசொல்வேன் கெற்பநோ யேழுமங்கே
துண்ணவே சூதகவாய் வுத்திரட்சிகுன்மம்
தொலைந்தோடுங் கெற்பக்கி ராணிவாய்வுசூலை
விண்ணவே பத்தியந்தான் மூன்றுநாளும்
வெள்ளாட்டுப் பாலொழிய வேறொன்றுமாகா
அண்ணவே பாலில்லா வெந்நீராகும்
அப்பனே நாலாநாள் தலைநீர்வாரே. (168)

இந்த எண்ணெயை மூன்று நாட்கள் உட்கொண்டு வந்தால் கர்ப்ப நோய்கள் ஏழும் நீங்கும். சூதகவாய்வு, வாய்வுதிரட்சி, குன்மம், போன்ற நோய்களும் நீங்கும். கற்பக்கிராணிவாய்வு, சூலை நீங்கும். எண்ணெய் உட்கொள்ளும் மூன்று நாட்களும் பத்தியமாக இருக்க வேண்டும் வெள்ளாட்டுப்பால் ஒன்றைத்தவிர மற்ற எதையும் உண்ணலாகாது. வெந்நீர் அருந்தலாம். நான்காம் நாள் தலைக்குளிக்கலாம்.

வார்த்தநாள் முதல்மற்ற மூன்றுநாளும்
மைந்தனே ஆரையிலை கிளுவைரெண்டும்
ஆர்த்துமே ஐவிரலி யிலையுங்கூட்டி
அரைத்தாவின் பால்வெண்ணெய் தன்னிற்கொள்ளு
ஏத்துமே ஆறாநா ளெண்ணெய்மூழ்கி
ஏழாநாள் நாயகனோ டிணங்கச்சொல்வேன்
பேர்த்தரிய மலடியுமே பெறுவாள்பிள்ளை
பெண்மலடோ உலகத்தி லில்லைக்காணே. (169)

தலைக்கு நீர்வார்த்த நாள் முதல் மற்ற மூன்று நாட்களும் ஆரையிலை, கிளுவையிலை இரண்டுடன் ஐவிரலி இலையும் கூட்டி அரைத்து பசுவின்பால் அல்லது பசுவெண்ணையில் கலந்து உண்பாயாக. ஆறாம் நாள் எண்ணெய் மூழ்கி ஏழாம் நாள் நாயகனோடு இணங்கச் சொல்வேன். இப்படிச் செய்தால் மகப்பேறே இல்லாத மலடியும் பெறுவாள் பிள்ளை. பெண் மலடே உலகத்தில் இல்லை காண்பாயாக.

இல்லையப்பா கைகண்ட வித்தைபாரு
இருசிருப தானாலும் பிள்ளையுண்டு
தொல்லையே பிசாசுபணி கிரகதோஷம்
சுருக்கமாய்ச் சாந்திசெய்து தகடுசெய்து

அல்லவே நோயோடு பேயுங்கூடில்
அவிழ்தந்தா னேதுசெய்யும் அப்பாகேளு
மல்லவே மணிமந்தா முன்னேசெய்து
மறுபடியும் மருந்துசெய்யப் பலிக்கும்பாரே. *(170)*

இதுவே கருத்தரிக்கச் செய்யும் கைகண்டவித்தை. இருசி இருபதானாலும் பிள்ளையுண்டாகும். பிசாகதோஷம், நாகதோஷம், கிரகதோஷம், முதலியவற்றிற்கு சுருக்கமாக சாந்தி செய்து, தகடு செய்து கட்ட வேண்டும். நோயோடு பேயும் சேர்ந்தால், ஔஷதத்தால் ஆவதுதான் என்ன? எந்த மருந்துதான் என்ன செய்யும்? மந்திரம் முன்னே செய்து மறுபடியும் மருந்து செய்ய பலிக்கும் பார்ப்பாயாக. (இருசி = பருவமடையவேண்டிய வயதில் பருவமடையாத பெண்)

சூளிசம்

பலித்திடவே அயத்தகடு சதுரமாகப்
பண்ணியதி விருபத்தஞ் சறைதான்கீறி
மலிக்கவே அறைதோறுஞ் சிவயநமவென்று
மநயவசி யென்றதனை மாறிப்போடு
சுழிக்கவே சுற்றெல்லாஞ் சூலம்போடு
சூலத்தி னுனிதோறு மகாரம்போடு
அலிக்கவே அறைதோறம் ஓங்காரம்போடு
ஐம்பத்தோர் லக்கமதி லடைத்திடாயே. *(171)*

இரும்புத் தகட்டை சதுரமாக வெட்டி அதில் இருபத்தைந்து அறைகள் கீறி, அறைதோறும் சிவயநம வென்றும் மநயவசி யென்றதனை மாறிப்போடு. சுற்றிலும் சூலம்போடு, சூலத்தின் நுனிதோறும் மகாரம் போடு, ஐம்பத்தோரு இலக்கம் அதில் அடைத்து எழுதிக் கொடுப்பாயாக.

அடைத்திடவே நோயாளி பேருமிட்டு
ஐங்காயத் தேசியுட கருவும்பூசு
தடுத்திட்டு லக்ஷமுரு வேறச்செய்து
சாந்தியொடு ஓமஞ்செய் சாபம்நீக்கி
நொடித்திட்டுக் கும்பத்தில் சலத்தைவாங்கி
நோயாளி சிரசிலே புரோட்சித்தேநீ
வடித்திட்டு இப்படியே தகடுசெய்து
வைத்தியனே பின்பவர்க்கு மருந்துசெய்யே. *(172)*

அத்தகட்டினைக் கொடுக்கும்முன்பு அதிலே நோயாளியின் பெயரையும் எழுதி ஐங்காயத் தேசியுடைய கருவையும் பூசி நீரை எடுத்து இலட்சம் உரு ஏற்றி சாந்தி ஓமம் செய்து, சாபம் நீக்கி, கும்பத்திலுள்ள நோயாளியின் சிரசிலே தெளித்து சாப நிவர்த்தி செய்து பின்னரே அவர்க்கு மருந்து தர வேண்டும்.

செய்திடவே தீராத நோயுமுண்டோ
தேசத்தி லுனைப்போலே வைத்யனுண்டோ
நொய்யாதே நோயாளி சொல்லக்கேளு
நோய்தீர வைத்தியனை உபசாரஞ்செய்
மெய்யனே யென்றுகுரு பாதம்போற்றி
மேதினியில் தானதர்மஞ் செய்துவாநீ
ஐயனே வினையெல்லா மகன்றுபோகும்
ஆதவன்போல் நீடுழி வாழ்வாய்தானே. (173)

இவ்வாறு செய்தால் தீராத நோயும் உண்டோ? தேசத்தில் உன்னைப்போல் வைத்தியனும் உண்டோ? என்று நோயாளியே சொல்லக்கேட்கலாம். நோய் தீரவேண்டும் என்றால் வைத்தியனை உபசாரம் செய்ய வேண்டும். மெய்யனே என்று குரு பாதம்போற்றி, தான தருமம் செய்தால் வினையெல்லாம் அகன்று போய்விடும்.

நவச்சார எண்ணெய்

வாழ்கவே என்ணெயிலே நவச்சாரம்போட்டு
மைந்தனே நீர்முள்ளிச் சாறுங்கூட்டி
வாழ்கவே உள்ளுக்குக் கொள்ளச்சொல்லு
மகோதரம்நீ ராம்பல்பெரு வயிறுதானும்
போகுமே பொல்லாத குன்மமெட்டும்
பித்தமொடு வுளமாந்தை பாண்டுசோகை
ஏகுமே கரப்பனொடு வாதகுன்மம்
இந்த்ரகண்டி மலக்கசடு இரைச்சல்வாய்வே. (174)

எண்ணெயிலே நவாச்சாரம் போட்டு நீர்முள்ளியின் சாற்றையும் அதனுடன் கூட்டிச் சேர்த்து, உட்கொள்ளச் சொல்வாயானால், மகோதரம், நீராம்பல், பெருவயிறு, இவற்றுடன் பொல்லாத நோய்களான எட்டுவகைக் குன்ம நோய்களும், பித்தம் உள்மாந்தை, பாண்டு, சோகை ஆகியவைகளும் நீங்கும். கரப்பான் நோயும் தீரும். வாதகுன்மம், இந்திரகண்டி மலக்கசடு, இரைச்சல் கூடிய வாய்வு,

வாயுவொடு புழுக்கிருமி எல்லாம்போகும்
வாகுபெறச் சொல்லிவிட்டேன் எண்ணெய்தன்னை
வாயுவொடு வியாதிகட்டும் மலடிகட்கும்
வைத்தியத்தில் தீராவிட் டாலென்னசெய்வேன்
நோயேது அவரவர்கள் செய்தகன்மம்
நோய்போலே அவரவரைத் தொடர்ந்ததப்பா
நாய்போலே அலையாதே சொல்லக்கேளு
நலமான கருமத்தைத் தீரச்செய்யே. (175)

புழுக்கிருமி எல்லாம் நீங்கும். இத்தகைய எண்ணெயைச் செய்யும் முறையைச் சொல்லிவிட்டேன். இதனால் வாயுக்களும், வியாதிகளும் நீங்கும். மலடிகட்கும் மக்கட்

பேறுண்டாகும் வைத்தியத்தில் நோய் தீராவிட்டால் வைத்தியன் என்ன செய்ய முடியும்? அவரவர்கள் செய்த கர்மந்தான் நோய் போல அவரவரைத் தொடர்ந்து செல்லும். எனவே நாய்போல அலையாதே நலமான கருமங்களையே செய்தால் நன்மையே அடைவாய்.

தீரவே தானதர்மஞ் செய்யவேண்டும்
சிவபூஜை குருபூஜை·செய்யவேண்டும்
தீரவே கோயில்குளம் கட்டவேண்டும்
சிவாலயங்கள் திருவிளக்கு வைக்கவேண்டும்
தீரவே அன்னதா னங்கன்னிதானந்
திருவரசு நந்தவனஞ் செய்யவேண்டுந்
தீரவே தர்மத்தை விரும்பவேண்டும்
தீராத தீவினைகள் தீரவென்றே. *(176)*

நோய்கள் தீரவேண்டுமென்றால் தானதர்மங்கள் செய்ய வேண்டும். சிவபூஜையும், குருபூஜையும் செய்ய வேண்டும். திருக்கோயில் குளங்கள் கட்ட வேண்டும். சிவாலயங்களில் திருவிளக்கு வைக்க வேண்டும். அன்னதானம், கன்னிதானம் செய்ய வேண்டும். அழகான நந்தவனங்களை அமைக்க வேண்டும். தர்மத்தை விரும்ப வேண்டும்.

தீரவென்றால் வைத்தியனை உபசாரஞ்செய்
திறமான வாதிமகன் வைத்யனாகில்
தீரவென்று சாஸ்திரத்தை ஆராய்ந்து பார்த்துச்
செய்முறையுங் கைமுறையுந் திறமாய்ச்செய்வான்
ஆரென்று வேதநூ லறியாமூடர்
அகப்பட்ட படிசெய்வார் ஆகாதென்றும்
காரென்று குருபதத்தைப் போற்றிசெய்து
கைமுறையாய் மருந்துசெய்யிற் பலிக்கும்பாரே. *(177)*

தீவினைகள் நீங்கி நோய்கள் குணமாக நோயாளிகள் வைத்தியனுக்கு உபசாரம் செய்ய வேண்டும். வாதிமகன் வைத்தியன் என்றால் வைத்திய சாத்திரத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்தவனாகவும் மருந்துகள் ஒவ்வொன்றின் செய்முறைகள், கைமுறைகள் ஆகியவற்றை நன்றாக கற்றறிந்தவனாகவும் இருப்பான். வைத்திய வேத நிலையறியாத மூடர்கள் அகப்பட்டதையெல்லாம் மருந்தாகச் செய்வார்கள். அவையெல்லாம் மருந்தாகுமா? நோய் தான் தீருமா? குருவின் திருவடிகளைப் போற்றி கைமுறையாய் மருந்துகளைச் செய்தால்தான், மருந்துகளும் பலிக்கும்.

நிலவாகைச் சூரணம்

பாரேநீ நிலவாகை கொண்டுவந்து
பண்பாக இடித்துத்தூள் பலமேபத்து
சேரேநீ மிளகோடு கடுக்காய்தான்றி
சீரகமும் வாலுளுவை சிறுநாகப்பூ

காரேநீ யேலமிலவங்கப்பட்டை
கடுகுரோ கணிசிவதை தாளிபத்திரியும்
சேரேநீ ஜாதிக்காய் கிராம்புதிப்பிலி
செவ்வியமிந் துப்புடன் கூகைநீரே. (178)

நிலவாகைச் சூரணம் நிலவாகையைக் கொண்டுவந்து நன்றாக இடித்துத் தூள் செய்து, அதில் பத்துப்பலம் எடுத்துக்கொண்டு, அதனுடன் மிளகு, கடுக்காய், தான்றிக்காய், சீரகம், வாலுளுவை, சிறுநாகப்பூ, ஏலம், இலவங்கப்பட்டை, கடுகுரோகிணி, சிவதை, தாளிசபத்திரி, ஜாதிக்காய், கிராம்பு, திப்பிலி, செவ்வியம், இந்துப்பு, கூகைநீர்,

நீரான சுக்கோடு வகைக்குக்கால்பலந்தா
னிறுத்திடித்து முன்மருந்தோ டொக்கச்சேரு
சீரான ரெண்டுவகைச் சூரணமுஞ்சமனாய்ச்
சீனிசர்க் கரைபாதி சேர்த்துக்கொண்டு
நேரேநீ நாளொன்றுக் கந்திசந்தி
நெய்தேனில் வெருகடிதூ ளிழைத்துக்கொள்ளு
நேரேநீ மண்டலந்தான் கொள்ளும்போது
தீராத நேயேது செப்பக்கேளே. (179)

சுக்கு, ஆகியவைகளில் வகைக்கு கால்பலம் வீதம் எடைபோட்டு எடுத்துக்கொண்டு அவற்றை நன்றாக இடித்து முன்மருந்துடன் சேர்த்துக் கொள்ளவேண்டும். இந்த இரண்டுவகைச் சூரணங்களுக்கும் சமனாகச் சீனிச் சர்கரைய்ய சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்தச் சூரணத்தை தினமும் காலை மாலை நெய் அல்லது தேனில் வெருகடி தூள் நன்றாகக் குழைத்துக் கொண்டு, ஒரு மண்டலகாலம் அருந்திவந்தால் இந்த மருந்தினால் தீராத நோய்களே இல்லை.

செப்பவே மேகமொடு பித்தம்போகும்
சிறப்பான அரோசிகமும் வாய்நீரூறல்
துப்பரவாய் மலக்கட்டு வாய்வுகாந்தி
சூடுகொள்ளல் சொரிசிரங்கு மூலவாய்வு
முப்போதும் வலஞ்சுத்தி யாகும்பாரு
மூலத்தில் நோயெல்லா முறிந்துபோகும்
செப்பாதே வெகுசுளுகு இன்னுமொன்று
சிவன்வேம்புச் சூரணத்தைச் சொல்கிறேனே. (180)

மேகநோய்கள், பித்த நோய்கள், அரோசிகம், வாயில் நீரூறல், மலக்கட்டு, வாய்வு, காந்தி, சூடு கொள்ளல், சொரி, சிரங்கு, மூலவாய்வு, முதலிய நோய்கள் நீங்கும். ஒழுங்காக மலஞ் சுத்தியாகும். மூலத்தில் ஏற்படும் நோய்கள் எல்லாம் முறிந்து போகும். இனி சிவன் வேம்புச் சூரணத்தைப் பற்றிச் சொல்லுகிறேன் கேட்பாயாக.

சிவன்வேம்புச் சூரணம்

சொல்லுகிறேன் சிவன்வேம்புச் சூரணமேசெய்து
சுகமாகப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
மல்லுகிறேன் சிவன்வேம்புத் தைலந்தானும்
வாங்கியே படியொன்று வேறேவைத்து
அல்லுகிறேன் வாலுழுவை தாளிசபத்திரியும்
அழகான கிராம்பேலம் அதிமதுரங்கோஷ்டம்
கல்லுகிறேன் ஜாதிக்காய் ஜாதிப்பத்திரியும்
கருஞ்சீர கம்மிளகு கடுக்காய்திப்பிலியே. (181)

சிவன்வேம்பைச் சூரணம் செய்து பத்துப் பலம் சூரணத்தை எடைபோட்டு எடுத்துக்கொள், சிவன்வேம்பு தைலம் ஒரு படி தனியே வாங்கி வைத்துக் கொள்ளவும், வாலுளுவை, தாளிசபத்திரி, கிராம்பு, ஏலம், அதிமதுரம், கோஷ்டம், ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கருஞ்சீரகம், மிளகு, கடுக்காய், திப்பிலி, இவற்றுடன்

திப்பிலியும் அதிவிடையம் பரங்கிப்பட்டை
சிறுநாகப் பூவோடு வால்மிளகுசிங்கி
இப்படியே வகைவகைக்குக் கால்பலமேதூக்கி
இடித்துநீ சிவன்வேம்பு சூரணத்தோடொக்கத்
தப்பாதே சமபாகம் பாதிசீனி
சாரித்து ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு
செப்பாமே தினமொன்று வெருகடிதூளப்பா
சிவன்வேம்புத் தைலத்திற் குழைத்துக்கொள்ளே. (182)

அதிவிடயம், பறங்கிப்பட்டை, சிறுநாகப்பூ, வால்மிளகு, சிங்கி இவற்றில் வகைக்குக் கால்பலம் எடுத்துக் கொண்டு அவற்றை நன்றாக இடித்து தூள் செய்து, சிவனார் வேம்புச் சூரணத்துடன் சேர்த்து, சமபாகம் சீனிச் சர்க்கரைச் சேர்த்து இடித்து ஒன்றாகச் சேர்த்துக் கொள்வாயாக. இதனைத் தினம் ஒன்றுக்கு வெறுகடியளவு எடுத்து சிவனார் வேம்புக் குழித்தைலத்தில் குழைத்து அருந்தி வந்தால். (சிங்கி = கடுக்காய்ப்பூ)

கொள்ளவே பதினெட்டுக் குஷ்டரோகங்
குலைந்தோடும் மேகமொடு சுவாலைவாய்வு
கள்ளமாங் கரப்பனொடு சொரிசிரங்கு
கடிவிஷங்கள் வெட்டையொடு விரணகிரந்தி
துள்ளியே நோயெல்லா மோடிப்போகும்
சொல்லரிது காயசித்தி சுருக்குமெத்தக்
கள்ளமில்லை சொல்லிவிட்டேன் சிவனார்வேம்பு
கற்பத்துக் காதியாங் கண்டுபாரே. (183)

பதினெட்டு வகைக் குஷ்ட நோய்கள், கலைந்து ஓடும். மேகச்சுவாலை, வாய்வு, கரப்பான், சொரி, சிரங்கு, கடிவிஷங்கள், வெட்டை, இரணம், கிரந்தி முதலிய நோய்கள்

எல்லாம் துள்ளியே ஓடும். காயசித்தியும் சாத்தியமாகும் என்ற உண்மையையும் கள்ளமில்லாமல் சொல்லி விட்டேன். சிவனார் வேம்பு கற்பங்களில் முதலாவதாகும்:-

கண்டுபார் சூதகத்தி லுதிரம்போகா
காலோடு கைமேலுங் கடுத்துக்குத்திச்
சென்றுபார் வயிற்றிலே சோறேதங்கித்
திரட்சிகுன்மம் வாய்வாகிச் சுவாலையாச்சு
அன்றுபார் சூசிக வாயுவாச்சு
அபானமாங் கருக்குழியி லுதிரங்கட்டி
உண்டுதா னுதரத்தில் வாய்வுசேர்ந்து
உள்ளங்கால் நகக்கண்கள் குத்தலாச்சே. (184)

பெண்களுக்குச் சூதகத்தில் உதிரம் போகாமல் கால் கைகளில் கடுப்பும் ஊசியெடுத்துக் குத்துவது போல குத்தல் வலியெடுக்கும். வயிற்றில் சோறு தங்கித் திரட்சி குன்மம் வாயுவாகி, அதிக உஷ்ணமும் காந்தமும் உண்டாகிறது. இதற்கு சூசிகவாய்வு என்று பெயர். அபானமாம் கருக்குழியில் உதிரம் கட்டிக் கொண்டு, உதிரத்தில் வாய்வு சேர்ந்து விடுவதால், உள்ளங்கால், நகக்கண்கள் ஆகியவற்றில் குத்தலும் வலியுமாகத் துன்பம் உண்டாகிறது.

சூசிகவாயுவுக்கு லேகியம்

ஆச்சென்ன சூசிகா வாய்வுபொல்லா
தாருந்தான் தீர்க்கறியா ரப்பாகேளு
பேச்சென்ற கொடுவேலி அமுக்கராவேர்
பெருமருந்து கோப்பிரண்டை நொச்சிசங்கு
வேச்சென்ற மாவிலிங்கு மிளகருணைகொளுஞ்சி
வெள்ளைச்சா ரணை அடம்பு கண்ணுப்பூளை
ஆச்சென்ற நிலையாவா ரையினோடு
அப்பனே வகைவகைக்குப் பலந்தான் தூக்கே. (185)

சூசிகவாய்வு என்பது ஒரு பொல்லாத நோய். யாருமே தீர்ப்பதற்கு அறியாத நோய். அத்தகைய நோயைப் போக்குவதற்கு மருந்தான லேகியம் ஒன்றின் செய்முறையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. கொடுவேலி, அமுக்கரா, பெருமருந்து, கோப்பிரண்டை, நொச்சி, சங்கு, மாவிலங்கம், மிளகரணை, கொளுஞ்சி, வெள்ளைச்சாரணை, அடம்பு, கண்ணுப்பூளை, நிலையாவாரை ஆகியவற்றில் வகைவகைக்கு ஒரு பலம் எடைபோட்டு எடுத்துக் கொள்.

தூக்கியே யிடித்ததனைச் சீலைவடிகொண்டு
சூரணமாச் செய்துநீ சொல்லக்கேளு
ஆக்கென்ற வால்மிளகு கடுக்காய்தாணி
ஆனைத்திப் பிலிஓமம் அரத்தைசுக்குத்

தாக்கிஞ்சி பெருங்காயம் கண்டத்திப்லி
சதகுப்பி குராசானி திப்லிமூலம்
தாக்கியே சாதிக்காய் கிராம்புபத்ரி
தாளிசபத் திரியோடு சிறுநாகப்பூவே. (186)

இவற்றையெல்லாம் நன்றாக இடித்து, வஸ்திரகாயம் செய்து, அந்தச் சூரணத்தைத் தனியாக வைத்தக்கொள். வால்மிளகு, கடுக்காய், தான்றிக்காய், ஆனைத்திப்பிலி, ஓமம், அரத்தை, சுக்கு, இஞ்சி, பெருங்காயம், கண்டந்திப்பிலி, சதகுப்பி, குரோசானி, ஓமம், திப்பிலிவேர், ஜாதிக்காய், கிராம்பு

பூவோடு திப்பிலியும் விடையமாஞ்சி
புகழான சேங்கொட்டை ரசகற்பூரம்
கோவோடு வகைவகைக்குக் காற்பலமேதூக்கு
கொள்ளிலைச் சாறுதேங் காய்ப்பால்விட்டாட்டு
ஆவோடு முன்மருந்தோ டொக்கச்சேரு
அடுப்பேற்றிச் சட்டிதனைக் காயவைத்தக்
கோவோடு நல்லெண்ணெய் படிதான்வாரு
கொதிக்கையிலே வெள்ளுள்ளி ரெண்டுபலம்போடே. (187)

ஜாதிபத்திரி, தாளிசப்பத்திரி, சிறுநாகப்பூவுடன் அதிவிடயம், திப்பிலி, சடா மாஞ்சி, சேங்கொட்டை, ரசகற்பூரம், ஆகியவற்றை வகைவகைக்கு கால்பலம் எடை எடுத்துக்கொண்டு, கொள்ளு இலைச்சாற்றிலும் தேங்காய்ப்பாலிலும் அரைத்து, முன்மருந்தோடு இம்மருந்தையும் ஒன்றாகச் சேர்த்து அடுப்பிலேற்றி சட்டிதனை நன்றாகக் காயவிட்டு நல்லெண்ணெய் ஒரு படி வார்த்து, எண்ணெய் கொதிக்கும்போது இரண்டு பலம் வெள்ளைப்பூண்டு உரித்துப்போடவும்.

போடவே தோல்போக்கி நிறுத்துப்போட்டுப்
புகழான பனைவெல்லம் நாலுபலம்போடு
ஆடவே ஆவின்பால் படிதான்வாரு
அப்பனே மூங்கிலிலை அரைத்துநன்றாய்த்
தேடவே கெச்சக்கா யளவுபோடு
சேகரித்துக் கிண்டிடிலோ பாகுபோலாம்
சாடியே சூரணத்தைக் கொட்டிக்கிண்டிச்
சம்பாநெல் பொரியதிலே சேரைப்போடே. (188)

நான்குபலம் பனைவெல்லம் போடவும். பிறகு பசுவின் பால் ஒருபடி வார்ப்பாயாக. பின்னர், மூங்கில் இலையை நன்றாக மைபோல அரைத்து கச்சக்காய் அளவு அதில்போட்டு, கரண்டியால் கிண்டிக்கொண்டே பாகுபோல் ஆகும் பதத்தில் சூரணத்தைக் கொட்டி சம்பா நெற்பொரி ஒரு சேர் அதில் போடுவாயாக.

சேரையே தான்போட்டுக் கிண்டிநன்றாய்ச்
சேர்த்துமே லேகியம்போற் பண்ணிக்கொண்டு
ஆரேநீ நாளொன்றுக் கந்திசந்தி
அப்பனே கொட்டைப்பாக் களவுகொள்ளு

சேரேநீ வயிற்றிலே உதிரமேது
திரட்சியொடு வாய்வேது குன்மமேது
சோரையென்ற உதிரமெங்கே கட்டியெங்கே
சூதகவாய் வுக்குத்தல் தொலைந்துபோச்சே. *(189)*

இப்படி எல்லாவற்றையும் போட்டு, நன்றாகச் சேர்த்துக் கிளறி லேகியம் போலச் செய்து கொண்டு தினந்தோறும் அந்திசந்தி கொட்டைப்பாக்கு அளவு உட்கொண்டால், வயிற்றில் உதிரம் ஏது? வாயு ஏது? குன்மம் ஏது? கட்டி எங்கே போயிற்று சூதகவாய்வு, சூதகக் குத்தல்வலி இவையெல்லாம் தொலைந்து போகும்.

போச்சென்ற பத்தியந்தான் சொல்லக்கேளு
புளியோடு புகையிலையுங் கைப்புந்தள்ளு
ஆச்சென்ற சுறாவற்றல் வெள்ளாட்டுவற்றல்
அப்பனே விரால்வற்றல் அன்பாய்க்கூட்டு
கூச்சென்ற அரைக்கீரை முருங்கைப்பிஞ்சு
கொள்கச்சக் கருவாடு கோழிச்சாறு
ஆச்சென்ற புளியில்லா தவித்துக்கூட்டு
அப்பனே வுப்பதனை வறுத்துக்கூட்டே. *(190)*

இதற்கு பத்தியமும் உண்டு. புளி, புகையிலை, கசப்பும், புளிப்பும் ஆகியவற்றை கட்டாயமாக உட்கொள்ளக்கூடாது. சுறாவற்றல், வெள்ளாட்டுவற்றல், விரால் வற்றல், புசிக்கலாம், அரைக்கீரை முருங்கைப்பிஞ்சு, கச்சக்கருவாடு, கோழிச்சாறு ஆகியவற்றை புளியில்லாமல் தனித்துக் கூட்டிக் கொள்ளலாம். உப்பை வறுத்து உபயோகித்து கொள்வாயாக.

கூட்டுவது மருந்துகொள்ளும் போதுதள்ளிக்
கொண்டுமறு பத்தியத்திற் கூட்டிக்கொள்நீ
நாட்டியே யின்னுமொன்று சொல்லக்கேளு
நலமான வாதமொடு சூலைரோகம்
தாட்டியே யிவ்வுலகிற் பறந்துபோகும்
தயவாக வென்முறைபோ லாருஞ்சொல்லார்
பாட்டியே ரோகமெல்லாம் செலப்பரங்கிப்
பட்டைரசா யனத்தையுநான் பாடுவேனே. *(191)*

இவற்றைக் கூட மருந்து உட்கொள்ளும்போது தள்ளிவைத்து மறுபத்தியத்தில் சேர்த்துக் கொள்வது நல்லதாகும். மேலும் ஒன்றைச் சொல்கிறேன் கேட்டுக் கொள். வாதம், சூலைரோகம் இம்மருந்து உண்டால் பறந்து போகும். தயவாக என்முறை போல எவரும் சொல்லார். மேலும் மற்ற ரோகமெல்லாம் நீங்கச் செய்யும் பறங்கிப்பட்டை ரசாயனத்தைப் பற்றிக் கூறுகிறேன். கேட்பாயாக.

பரங்கிப்பட்டை ரசாயனம்

பாடுவேன் பரங்கிப்பட் டைபலந்தான்பத்து
பருபருக்கை யாயிடித்துப் பாகங்கேளு
பாடுவேன் புதுக்கலசம் மூன்றுவாங்கிப்
பட்டைத்தூள் ஒருகலசம் தன்னிற்போடு
சூடுவேன் முழமுயரங் குழிதான்வெட்டித்
தூளிட்ட கலசத்தை அடியில்வைத்து
நாடியே மறுகலசந் தன்னிற்கேளு
நலமான கலசத்துள் தமர்மூன்றிட்டே. (192)

பறங்கிப்பட்டை பத்துப்பலம் எடை நிறுத்து எடுத்துக்கொண்டு, பருக்கை பருக்கையாக நன்றாக இடித்துக் கொள்வாயாக புதுக்கலசங்கள் மூன்றுவாங்கி, பறங்கிப்பட்டைத்தூளை ஒரு கலசத்தில் போட்டு பூமியிலே ஒரு முழம் குழி தோண்டிப் பள்ளத்தில் தூள் போட்டகலசத்தை வைத்து, மறுகலசத்தில் மூன்று தமர்களைப்போட்டு

இட்டுமே சுத்தித்த நெல்லிகெந்தி
யிதமாக ரெண்டரையே பலம்கலசத்திட்டுப்
பொட்டுஅடிக் கலசத்தின் மேலேவைத்துப்
பொருந்தவே சந்துசெய்து மறுகலசந்தன்னில்
கட்டுமே தூரியிலே தமர்மூன்றிட்டுக்
கார்த்திகையின் கிழங்கதிலே பலந்தானைந்து
அட்டியில்லா திடித்திந்தக் கலசத்திட்டு
அக்கலசம் வாய்மூடிச் சீலைசெய்யே. (193)

அந்தத் துளையிட்ட கலசத்திலுள்ளே சுத்தி செய்த நெல்லிக்காய் கந்தகம் இரண்டரைப்பலம் எடை நிறுத்துப் போட்டு, அடிக்கலசத்தின் மேலே வைத்து பொருந்தவே சந்து செய்து கொள். மூன்றாவது கலசத்தில் மூன்று தமர் இட்டு ஐந்துபலம் கார்த்திகைக்கிழங்கு எடுத்து நன்றாக இடித்துப் பொடித்துப் போட்டு வாய்மூடிச்சீலைமண் செய்துக் கொள்.

செய்துமே கெந்தியிட்ட கலசத்துமேலே
சிறப்பாக வைத்துநீ சீலைசெய்து
செய்யவே கலசம்ரெண்டும் அடியில்நிற்கத்
தெரியவே கிழங்கிட்ட கலசம்மேல்வைத்துப்
பொய்துமே கலசமூன் றொன்றோடொன்றாய்ப்
பொருந்தவே செய்துமே புடத்தைப்போடு
எய்துமே கிழங்கினுட தயிலந்தானும்
இறங்கியே கெந்தியிலே யிளக்கங்கொண்டே. (194)

பறங்கிப்பட்டை இட்ட கலசம் அடியிலும் கெந்தி இட்ட கலசம் நடுவிலும் கார்த்திகைக் கிழங்கு இட்ட கலசம் மேலேயும் இருக்கும் படியாக வைத்து புடம் போடுவாயாக.

இளக்கியே கெந்தியுட தயிலம்ரெண்டு
இறங்கியே பட்டையிலே ரேசித்தொன்றாய்ப்
பளக்கியே ரெண்டுவகைத் தயிலந்தானும்
பறங்கிப்பட் டைதனிலே சோரிநிற்க்கும்
இளக்கமா யாறியந்தப் பரங்கிப்பட்டை
இடித்துமே நன்றாகச் சீலைவடிகொண்டு
விளக்கமாம் புதுப்பானை வாயிலேதான்
மெலிதான சீலையைநீ வேடுகட்டே. (195)

கிழங்கிலிருந்து தைலம் இறங்கி கந்தகத்தை இளகும்படி செய்யும் தயிலத்துடன் வெந்து இரண்டும் ரேசித்து ஒன்றாகும் இரண்டுவகைத் தைலங்களும் பறங்கிப் பட்டைதனில் சேர்ந்து நிற்கும்படி, சொரிந்து இறங்கும். பின்னர் புடம் காய்ந்து ஆறிய பின்னர் அந்தப் பறங்கிப்பட்டையை இடித்து, நன்றாகத் தூள் செய்து, வஸ்திர காயம் செய்து புதுப்பானை வாயில் மெலிதான சீலையை வேடுகட்டி,

வேடுகட்டிச் சூரணத்தை யதின்மேல்வைத்து
மேல்சட்டி கொண்டுநன்றாய்ப் பொருந்தமூடி
வேடுகட்டும் பானையுட விலாவிற்போட்டு
விதமாம்புங் கந்தணலி லுள்ளேயிட்டுப்
போடுவது சாம்பிராணி பலந்தான்பத்துப்
பொடிசெய்து புகையெழும்பப் போட்டுவாநீ
யாடுவது சாம்பிராணி யெல்லாம்போட்டு
அப்பனே சூரணத்திற் பதங்கமேற்றே. (196)

சூரணத்தையதன் மேல் வைத்து, மேல்சட்டி கொண்டு நன்றாகப் பொருந்தும்படி மூடி வேடுகட்டிய பானையின் விலாவிற் புங்கந்தணலிட்டு, சாம்பிராணி பத்துப்பலம் பொடிசெய்து புகையெழும்பப் போட்டு வரவேண்டும். சாம்பிராணி எல்லாவற்றையும் போட்டு சூரணத்தில் பதங்கம் ஏற்றுவாயாக.

ஏற்றியே யெடுத்ததனைப் பதனமாக
என்மகனே நாளொன்றுக் கிருநேரங்கொள்ளு
போற்றரிய வாதசூலை மேகசூலை
பொல்லாத கரப்பானொடு கிரந்திகுஷ்டம்
எற்றரிய காலுகை முடக்குச்சூலை
யிருமலொடு மேகத்தி லெடுத்தவூறல்
பாற்றுமே சந்துவலி பிடிப்புக்குத்தல்
பரிதிகண்ட பனிபோலே பறந்துபோமே. (197)

பதங்கம் ஏற்றிய பின்பு எடுத்து அதனைப் பதனம் செய்வாயாக. பிறகு, இந்தப் பரங்கி ரசாயனத்தை தினந்தோறும் இருவேளை உட்கொள்வாயாக. இதனால் வாதசூலை, மேகசூலை, கரப்பான், கிரந்தி, குஷ்டநோய், கால்கைமுடக்குச்சூலை,

இருமல், மேகத்தினால்ஏற்படும் நமைச்சல், ஊறல், அரிப்பு, சந்துவலி, பிடிப்பு, குத்தல்வலி போன்ற நோய்களெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோலப் பறந்துப்போய்விடும்.

பத்திய குறிப்பு

பறந்துபோம் கைப்போடு புளிப்புந்தள்ளு
பசுவின்பால் நெய்மோரும் பாங்காய்க்கூட்டு
பறந்துபோம் உப்பதனை வறுத்துக்கொள்நீ
பசும்பயறு அரைக்கீரை முருங்கைப்பிஞ்சு
பறந்துபோம் பத்தியந்தான் சொன்னபடிசெய்து
பாங்காக மருந்துண்ணத் தீரும்நோய்தான்
பறந்துதான் பத்தியத்தில் பாகந்தப்பில்
பலபலவா மருந்துண்டும் பாழாய்ப்போமே. (198)

இதை உண்ணும்போது பத்தியமாக இருக்க வேண்டும். கசப்பு, புளிப்புச் சுவைகளையுடைய உணவுகளைத் தள்ள வேண்டும். பசுவின் பாலும் பசு நெய்யும், மோரும் சேர்த்துக் கொள்ளலாம். உப்பை வறுத்து உபயோகிக்க வேண்டும். பாசிப்பயிறு, அரைக்கீரை, முருங்கைப் பிஞ்சு ஆகியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பத்தியம் தவறினால் தீங்குகள் உண்டாகிப் பாழாய்ப் போகும்.

போமென்ற அவிழ்தங்கள் கொள்ளும்போது
புகழான பத்தியந்தான் முறிவுகண்டா
லாமென்ற தேகத்துக் கசடில்லாமல்
அவுரிவேர் பிரமியிலை மிளகுங்கூட்டிப்
பாமென்ற கியாழம்வைத்து முப்பொழுதுகொள்ளு
பத்தியத்தின் முறிவெல்லாம் பாகமாகும்
ஆமென்ற பத்தியத்திற் புளிப்புக்கூட்ட
அறைகிறேன் புளிப்பாகம் வெள்ளைச்சாரணையே. (199)

மருந்துகளை உண்ணும்போது பத்தியத்திற்கு முறிவு காண வேண்டுமென்றால், தேகத்துக்குக் கசடில்லாமல் அவுரிவேர், பிரம்மியிலை, மிளகு கூட்டி கஷாயம் வைத்து அந்த கஷாயத்தை முப்பொழுதும் கொள்ள பத்தியத்தின் முறிவு நீங்கி பாகம் ஆகும். பத்தியத்தில் புளி சேர்த்துக் கொள்ள வேண்டுமானால்,

சாரணையி னிலையரைத்துப் பழம்புளிமேற்பூசிச்
சார்வாகச் சுட்டதனை மேற்கவசந்தள்ளிச்
சாரணையா மருந்தினுட போக்கறிந்து
சார்வாகக் கூட்டிவர உப்பைக்கேளு
சாரணையாம் வாதியென்றாற் கட்டிக்கொள்வா
னிலாவிட்டாற் சங்கினிலை பிறாயிலையும்போட்டுச்
சீராவின் பால்தெளித்து வறுத்துக்கூட்டு
திறமான பத்தியமாந் தீருநோயே. (200)

வெள்ளைச் சாரணையிலை அரைத்து, பழம்புளிமேல் பூசி அடுப்பனலில் சுட்டு, மேற்கலசம் நீக்கி மருந்தினுடைய போக்கை அறிந்து குறைவாக கூட்டிக் கொள்ளலாம். உப்பை பத்தியம் தவறாமல் உபயோகிக்க வேண்டுமானால் வாதியென்றால் கட்டிக் கொள்வான். இல்லையென்றால் சங்கின் இலை, பிறாய் இலையும் போட்டு பசுவின் பால் தெளித்து வறுத்துக் கூட்டிக் கொள்வான். இத்தகைய திறமான பத்தியத்தால் நோய்கள் தீரும்.

இருமலுக்குச் சூரணம்

தீருமே அத்தியிலே சூடுகொண்டால்
தீராத வரட்சியொடு இரைப்பிருமல்
தீருமே புகைச்சலொடு தொண்டைக்கம்மல்
சிணுக்கிருமல் நாக்கூறல் வரட்சிகோழை
கூருமே உள்வரட்சி மூலச்சூடு
கூறரிய பித்தமொடு கனமேகங்க
ளாறுமே இவைகளெல்லா மோடிப்போக
அறைகிறேன் ஆடாதோடை கோஷ்டந்திப்பிலியே. (201)

உடலின் எலும்புகளில் சூடு கொண்டால் தீராத வறட்சியுடன் கூடிய இரைப்பும் இருமலும் தீரும். புகைச்சல், தொண்டைக் கம்மல், சிணுக்கு இருமல், நாக்கு ஊறல், வறட்சி, கோழை, உள்வறட்சி, மூலச்சூடு, பித்தம், மேகங்கள் ஆறும், ஆகிய இவைகளெல்லாம் ஓடிப்போக ஒரு மருந்து சொல்லுகிறேன்.

திப்பிலியும் வசம்போடு நெல்லிமுள்ளிகடுக்காய்
சிறுவழுத லைவேரும் அரத்தைகடுக் காய்ப்பூ
கப்பரிய மிளகோடு நாகப்பூவகைக்குக்
காற்பலமே சேர்த்திடித்துச் சூரணமாய்ச்செய்து
வெப்பியே நாளொன்றுக் கந்திசந்தி
வெருகடியாந் தூளெடுத்து விளம்பக்கேளு
செப்பரிய நெய்தேனிற் குழைத்துக்கொள்ளச்
செப்பியதோர் நோயெல்லாம் தீரும்பாரே. (202)

ஆடாதோடை, கோஷ்டம், திப்பிலி, வசம்பு, நெல்லிமுள்ளி, கடுக்காய், சிறுவழுதலை வேர், அரத்தை, கடுக்காய்ப்பூ, மிளகு, நாகப்பூ, இவை வகைக்குக் காற்பலம் சேர்த்து இடித்துச் சூரணமாகச் செய்து தினந்தோறும், காலை, மாலை வெருகடியளவு சூரணத்தை எடுத்து நெய் அல்லது தேனில் குழைத்து உட்கொள்ள முன் சொன்ன நோயெல்லாம் தீரும்.

காளகண்ட சூரணம்

பாரேநீ பதினெட்டுக் குஷ்டம்போகப்
பாடுவேன் காளகண்ட சூரணகுடோரி
ஆரப்பா பரங்கிப்பட் டைபலமீராறு
அழிஞ்சல்சங்கங் குப்பியொடு கஸ்தூரிப்பட்டை

காரப்பா சிவன்வேம்பு பூவரசம்பட்டை
கருங்காலி விடத்தலையோ டாயிலியப்பட்டை
வேரப்பா கரந்தையொடு வகைக்குரெண்டு பலந்தான்
மிஞ்சாதே ரசகர்ப்பூ ரம்பலந்தானொன்றே. (203)

பதினெட்டுவகை குஷ்ட நோய்களையும் குணப்படுத்தும் காளகண்ட சூரணகுடோரி என்ற மருந்தைச் செய்யும் கைமுறையைச் சொல்லுகிறேன். கேட்பாயாக. பரங்கிப்பட்டை பன்னிரண்டு பலம், அழிஞ்சில், சங்கங்குப்பி, கஸ்தூரிப்பட்டை, சிவனார் வேம்பு, பூவரசம்பட்டை, கருங்காலி விடத்தலை, ஆயில்யப்பட்டை, கரந்தை இவற்றில் வகைக்கு இரண்டுபலம், ரசகற்பூரம் ஒருபலம்.

ஒன்றாக விவையெல்லாஞ் சேர்த்திடித்து
உத்தமனே வடிகட்டி வைத்துக்கொண்டு
குன்றான சேங்கொட்டை எட்டிக்கொட்டை
கொடுவேலி செஞ்சுகரை கார்த்திகையின்கிழங்கு
பண்டான கொடிக்கள்ளிவா லுழுவைவகைவகைக்குப்
பலம்பத்து நறுக்கியே குழித்தயிலம்வாங்கிப்
பன்றான தயிலமுஞ்சூ ரணமுமப்பா
பரிவாக வெவ்வேறே வைத்துக்கொள்ளே. (204)

ஆகிய இவையனைத்தையும் ஒன்றாகச் சேர்த்து இடித்து, வடிக்கட்டி வைத்துக்கொள். பிறகு சேங்கொட்டை, எட்டிக்கொட்டை, கொடுவேலி, செஞ்சுகரை, கார்த்திகைக் கிழங்கு, கொடிக்கள்ளி, வாலுழுவை, வகை வகைக்கு பத்துப்பலம் எடுத்து வெட்டி நறுக்கி சிதைத்து ஒரு மண்பாண்டத்தில் சேர்த்து முறைப்படிக் குழித்தைலம் இறக்கி, இந்தத் தைலத்தையும் முன்பு செய்த சூரணத்தையும் வெவ்வேறாக வைத்துக் கொள்வாயாக. (செஞ்சுகரை = செஞ்சூரைச் செடி)

கொள்ளவே சூரணித்தில் வெருகடிதூளப்பா
குழைத்திடுவாய் காசிடையே தயிலங்குத்தி
நள்ளவே நாளொன்றுக் கந்திசந்தி
நாற்பதுநாள் மண்டலமே கொள்ளும்போது
விள்ளாதே பதினெட்டுக் குஷ்டமெங்கே
விருபதான மேகமொடு கிரந்திசூலை
கள்ளமாங் கரப்பானொடு வாதசூலை
கடிவிஷங்க ளுள்ளதெல்லாங் காணாதோடும்
கொள்ளவே குன்மமெட்டும் குடிபோஞ்சொன்னோம்
கூரறிந்த பத்தியமாய்க் கொள்ளுவாயே. (205)

சூரணத்தில் வெருகடியளவு தூளை குழித்தைலத்தில் காசுஎடை எடுத்து இந்த தைலத்தையும் சேர்த்துக்குழைத்து, நாள்தோறும் காலைமாலை ஒரு மண்டல காலம் உட்கொண்டு வந்தால், குஷ்டங்கள் பதினெட்டும் நீங்கும்? மேகநோய்கள் கிரந்தி, சூலை,

கரப்பான், வாதசூலை, கடிவிஷங்கள் எல்லாம் எங்கே போயிற்று என்று வியப்படையும் வகையில் மறைந்து போகும். எட்டுவகைக் குன்மங்களும் எங்கேயோ குடிபோய்விடும். மருந்தைப் பத்தியங்காத்து உட்கொள்ள வேண்டும்.

கொள்ளுவது பத்தியந்தான் குஷ்டநோய்க்குக்
கூறுவேன் பழம்புளியாங் கொறுக்காயாதல்
கொள்ளுவது புளியினுட கொட்டைபோக்கிக்
கூறாக இடித்ததனைப் பிசைந்துநன்றாய்த்
தள்ளாதே சாரணையின் சாறுவிட்டுச்
சார்வாக இடித்ததனைப் பிசைந்துகொண்டு
உள்ளபடி யெட்டிமரத் தடியிற்சென்று
உளிகொண்டு துளைத்ததனைக் குடலாய்பண்ணே. (206)

குஷ்டநோய்க்குரிய பத்தியத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக. பழம்புளியும், கொடுக்காப்புளியும் ஆகும். புளியில் உள்ளேயுள்ள கொட்டைகளை நீக்கி நன்றாக இடித்து பிசைந்து சாரணையின் சாறு விட்டு மேலும் இடித்துப் பிசைந்துக் கொண்டு எட்டிமரத்தில் குடைந்து துளைப்போட்டு அதன் உள்ளே.

பண்ணியே பளியையதி னுள்ளேவைத்துப்
பரிவாக மேலுமந்தச் சிராயால்மூடி
யெண்ணியே யிருபத்து அஞ்சுநாட்சென்
றெடுத்துமே வைத்ததனைப் பத்தியத்திற்கூட்டு
வன்னியதாய்ச் சொன்னபுளி குஷ்டநோய்க்காம்
வன்னிப்பட்டைச் சாற்றிலுப்பு வறுத்துக்கூட்டு
எண்ணுகறி வெள்ளாடு கொண்டுவந்து
இலைக்கள்ளி திருகுகள்ளி சதுரக்கள்ளி. (207)

புளியை வைத்து, அதன்மேல் எட்டி மரச் சிராய்த் தூளைக் கொண்டே மூடி இருபத்தைந்து நாட்கள் வரை அப்படியே இருக்கும்படி விட்டுவிடவும், பிறகு அந்தப்புளியை எடுத்து குஷ்ட நோயாளியின் உணவில் சேர்க்கலாம். வன்னிப்பட்டைச் சாற்றில் பிசறி உப்பை வறுத்து கூட்டிக் கொள்ளலாம். வெள்ளாடு ஒன்றைக் கொண்டு வந்து, அந்த ஆட்டுக்கு இலைக்கள்ளி, திருகுகள்ளி, சதுரக்கள்ளி,

கள்ளியே கற்றாழை யெருக்கோடிண்டு
கருஞ்சூரை கொடிக்கள்ளி அழிஞ்சியெட்டி
தெள்ளியே யிவையெல்லாம் கொண்டுவந்து
தினமேய்த்து எட்டுநாள் தின்றபின்பு
தெள்ளியே அதினுடைய கறிதான்கூட்டு
சிறுநீரில் புங்கம்பூ ஊறவைத்து
அள்ளியே மேற்கண்ட புண்ணுக்கெல்லாம்
அந்தநீர் தனைவார்த்துக் கழுவிப்போடே. (208)

கற்றாழை, எருக்கு, இண்டு, கருங்கூரை கொடிக்கள்ளி, அழிஞ்சில், எட்டி, ஆகியவற்றை மேயவிட்டு எட்டு நாட்கள் சென்றபிறகு அந்த ஆட்டை வெட்டி, அதன் கறியை உண்ணலாம். சிறுநீரில் புங்கம்பூவை ஊறவைத்து, அந்தப்பூவூறிய நீரைக் கொண்டு, குஷ்ட நோய்ப்புண்களை யெல்லாம் கழுவ வேண்டும்.

போடவே குஷ்டமெல்லாம் பறந்துபோகும்
பொல்லாத ரோகமெல்லாம் பொடியாய்ப்போகும்
ஆடவே விளக்கெண்ணெய் தேய்த்துமூழ்கு
அபசார பத்தியங்கள் பண்ணவேண்டாம்
ஊடவே தீராத நோய்கட்கெல்லாம்
உன்னுடைய சிறுநீரில் ஒருசேர்கொள்ளு
போடவே மண்டலந்தான் கொண்டாயானால்
பொல்லாத விஷரோகங் குஷ்டம்போமே. *(209)*

இவ்வாறு செய்துவந்தால் குஷ்டம் எல்லாம் பறந்துபோகும். பொல்லாத ரோகங்கள் எல்லாம் பொடிபொடியாய்ப்போகும். தலை மூழ்குவதற்கு விளக்கெண்ணெய் தேய்த்து மூழ்க வேண்டும். பத்தியங்களை தவறாமல் அபச்சாரம் செய்யாமல் இருக்கவேண்டும். இப்படிச் செய்தும் தீராத நோய்களுக்கெல்லாம், நோயாளி தன்னுடைய சிறுநீரை ஒருசேர் அருந்த வேண்டும். இவ்வாறு ஒருமண்டலம் செய்ய பொல்லாத விஷரோகங்கள் குஷ்டநோய்கள் போன்றவையெல்லாம் குணமாகும்.

மேக கிஷாயம்

போமென்ற தன்னுக்குள் மருந்தைவைத்துப்
பூமியிலே நீமருந்து தேடுவானேன்
ஆமென்ற தன்னுக்குள் அமுரியாலே
அற்றுப்போம் நோய்களெல்லாம் அறிந்துபாரு
போமென்ற மேகமென்ன பொல்லாரோகம்
போகவே உள்ளுலர்த்திப் பட்டைவாங்கி
ஆமென்ற இடித்ததனை யமுரிவிட்டுப் பிசைந்து
அல்லாட்டால் வெந்நீரால் பிசைந்துகொள்ளே. *(210)*

உனக்குள்ளேயே மருந்தை வைத்துக்கொண்டு பூமியிலே நீ ஏன் மருந்தை தேடுகிறாய்? உனக்கு உள்ளேயே, உன்னிடத்திலேயே இருக்கும் உன்னுடைய 'அமுரி' என்னும் சிறுநீராலேயே நோய்கள் எல்லாம் தாமாகவே தொலைந்துபோய்விடும் என்பதை நீ அறிந்து கொள்வாயாக. மேகநோய்களைப் போன்ற பொல்லாத நோய்கள் போகவேண்டும் என்றால் உள்ளுலர்த்திப்பட்டை வாங்கி அதனை நன்றாக இடித்து, அமுரி விட்டு நன்றாகப் பிசைந்து கொள்வாயாக. சிறுநீர் சேர்க்கத் தயங்கினால் வெந்நீரால் பிசைந்து கொள்வாயாக.

கொள்ளவே நாளொன்றுக் கரைப்படிதான்போதுங்
குறிப்பாக மூன்றுநாள் கொள்ளும்போது
விள்ளவே மேகமொடு கிரந்தி அரையாப்பு
வெட்டையொடு பிரமேகம் மேகவாய்வு

கொள்ளவே வாதமொடு சூலைகுன்மம்
    கொடிதான நோயெல்லாம் குடிபோம்பாரு
கொள்ளவே பத்யமென்ன இச்சாபத்யம்
    குடிகெடுத்த புகையிலையும் புளியுந்தள்ளே. (211)

நாள் ஒன்றுக்கு அரைபடிதான் போதும். குறிப்பாக மூன்று நாட்கள் உட்கொண்டால், மேகம், கிரந்தி, அரையாப்பு, வெட்டை, பிரமேகம், மேகவாய்வு, வாதம், சூலை, குன்மம் போன்ற கொடுமையான நோய்கள் எல்லாம் போகும். இதற்குப் பத்தியம் இச்சாபத்தியமேயாகும். குடியைக்கெடுக்கும் புகையிலையையும் புளியையும் தள்ளுவாயாக.

புளியோடு வாய்வென்ற பதார்த்தந்தள்ளு
    புகழான உப்பதனை வறுத்துக்கூட்டு
எளிதான பத்தியந்தா னாறுநாளாம்
    ஏழாநாள் தலைமுழுகி யெல்லாங்கூட்டு
ஒளியாதே வெள்ளாட்டுக் கறிகொழுப்பு
    உத்தமனே போதரவா யுண்டுதேறு
களிப்பான மேகமொடு வாதம்வாய்வு
    கால்முடக்கல் கைமுடக்கல் கடுப்புக்குத்தல்
மொளிப்பான திமிரோடு வாதமிஞ்சி
    முடக்கினால் சொல்லுகிறேன் புனலித்தண்டே. (212)

வாய்வு பதார்த்தங்களையும் தள்ளவேண்டும். உப்பை வறுத்துச் சேர்த்துக் கொள். ஆறுநாட்கள் எளிமையான இப்பத்தியத்துடன் இருந்து, ஏழாம்நாள் தலைமூழ்கி எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். வெள்ளாட்டுக்கறி, கொழுப்பு நன்றாக உண்டு உடலைத் தேற்றிக்கொள்வாயாக. மேகம், வாதம், வாய்வு, கால்முடக்கல், கைமுடக்கம், கடுப்புக்குத்தல், திமிர்நோய்க்ள் இவை தவிர வாதம் அதிகமாகி முடங்கிப் போனால், (புனல் = இண்டு) புனலித்தண்டு,

தண்டோடு திருகுகள்ளி சுடுதுத்தியோடு
    தழுதாழை முடக்கொத்தான் வேப்பம்பட்டை
வென்றான சங்கோடு உத்தாமணி
    வெண்ணொச்சி பரிகுழம்பு வெள்ளிண்டுபிரம்பு
பன்றான பதினொன்றாம் வகைவகைக்குப்
    பலம்பத்து நிறுத்திடித்துப் பாண்டத்திட்டு
அன்றான சலமதிலே பதினெட்டுமரக்கால்
    அளந்துவிட்டு அடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சிக்
கன்றாதே சலமாறு மரக்காலாகக்
    காய்ந்தபின்பு வேதுபோல மேலேவாரே. (213)

திருகுகள்ளி, சுடுதுத்தி, தழுதாழை, முடக்கொத்தான், வேப்பம்பட்டை, சங்கு, உத்தாமணி, வெண்நொச்சி, பரிகுழம்பு, வெள்ளிண்டு, பிரம்பு ஆக இந்த

பதினொன்றிலும் வகை வகைக்கு பத்துப்பலம் எடைபோட்டு எடுத்துக்கொண்டு, இடித்து, பாண்டத்திலிட்டு, புதிய தண்ணீர் பதினெட்டு மரக்கால் ஊற்றி, அடுப்பில் ஏற்றி எரித்து ஆறுமரக்காலாகச் சுண்டும் வரை காய்ச்சிய பின்பு அதனை வேதுபோல மேலே வார்ப்பாயாக. (பரிக்குளம்பு = குதிரைக்குளம்பு)

வார்த்துமே வுள்ளுக்கு வொருசேர்கொள்ளு
மைந்தனே மேல்விட்டுப் பிடிக்கச்சொல்லு
வார்த்துமே இப்படியே மூன்றுநாள்செய்
மைந்தனே ஆனைலத்தி ஒட்டைலத்தி
சேர்த்துவெள்ளாட் டின்புழுக்கை தேள்கொடுக்குகள்கொட்டித்
தேங்காய்ப்பூ வர்க்கம்பூ வுடனேயையர்
வார்த்துமே வறுத்துநீ மூன்றுநாளொத்த
வாதமொடு மேகமெங்கே வாய்வுமெங்கே
ஆத்துமே அண்டவாய்வு விரைவாதமோடு
ஆகாத நோயெல்லா மகன்றுபோச்சே. *(214)*

இவ்வாறு மருந்துக் குடிநீரை உடம்பின்மேல் வார்த்த பிறகு உள்ளுக்கு அதே கியாழத்தை ஒரு சேர் உட்கொள்ளவேண்டும். மேலே விடும்போது உடலை நன்றாகப் பிடித்து விடச் சொல்ல வேண்டும். இப்படியே மூன்று நாட்கள் செய்து, யானைலத்தி, ஒட்டகலத்தி, வெள்ளாட்டின் புழுக்கை, ஆகியவற்றுடன், தேள்கொடுக்கி, கள்கொட்டி, தேங்காய்ப்பூ, எருக்கம்பூ, வறுத்து அவற்றை ஒரு துணியில் கிழி போலக் கட்டி, ஒத்தடங் கொடுக்க, வாதம், மேகம், வாய்வு, அண்டவாய்வு, விரைவாதம் ஆகிய நோய்கள் எல்லாம் அகன்று போகும்.

போச்சென்ற பத்தியந்தா னொன்றுமாகா
போக்கோடே யேழாநாள் வறுத்துப்புக்கூட்டு
போச்சென்ற எட்டாநாள் தலைநீர்வார்த்துப்
புளிகூட்டு இன்னுமொன்று புகலக்கேளு
ஆச்சென்ற திருகுகள்ளி கொண்டுவந்து
அப்பனே வரகுவைக்கோல் தன்னாலாட்டி
காச்சென்ற பிழிந்துதான் கள்ளிச்சாறு
கண்டிடைக்கு நல்லெண்ணெய் கூட்டிக்கொள்ளே. *(215)*

இதற்குக் கடும்பத்தியமாகையால் எல்லாவற்றையும் தள்ளிவிட்டு ஏழாம்நாள் உப்பைவறுத்து உணவுடன் கூட்டுவாயாக. எட்டாம்நாள் தலைக்கு நீராடி, புளியை சேர்த்துக் கொள்ளலாம். திருகுகள்ளி கொண்டுவந்து, வரகு வைக்கோல் தன்னாலாட்டி அதைப்பிழிந்து, அந்தக்கீரைச்சாறு கண்ட எடைக்கு எடை நல்லெண்ணெய் சேர்த்துக் கொள்வாயாக.

கொள்ளவே வாதமொடு வாய்வுசூலை
குறுக்குவலி முடக்குவலி குதிகால்வாதம்
உள்ளேகொள் மூன்றுநா ளுப்பில்லாதே
யுண்டிடுநீ யாறுநாள் பத்தியமேபண்ணு

விள்ளாதே மேகவெட்டை வெள்ளைகாண்கில்
விதமான பழம்பாசி கொண்டுவந்து
தெள்ளியே இடித்ததனை நீத்துப்பாக
ஜெலத்தைவிட்டுப் பிசைத்துநன்றா யிறுத்துக்கொள்ளே. (216)

இதனை உபயோகிப்பதால் வாதம், குலைவாய்வு, குறுக்கு வலி, முடக்குவலி, குதிகால் வாதம் இவைகள் நீங்க மூன்று நாட்கள் மேற்படி எண்ணெயை உட்கொள். உப்பில்லாத உணவை அருந்து ஆறு நாட்கள் பத்தியமாக இருப்பாயாக. மேகவெட்டை, வெள்ளை ஏற்படுவதாய்க் கண்டால் பழம்பாசி கொண்டுவந்து அதை இடித்து தண்ணீர் விட்டுப் பிசைந்துகொள்.

வெள்ளைக்கு மருந்து

இறுத்ததில்நற் சீரகமீ ருள்ளிரெண்டும்
இதமாக வகைவகைக்குக் கால்பலமேகூட்டி
அரைத்துமே கலக்கியதில் நல்லெண்ணெய்தானும்
அப்பனே சாறுகண்ட அளவிற்பாதி
நிரைத்துமே விட்டதனில் சொல்லக்கேளு
நேரான சர்க்கரைதான் கால்பலமேபோடு
முறைத்தப்பா இப்படியே மூன்றுநாட்கொள்
முதியவெள்ளை பிரமேக வெட்டைபோகுந்தானே. (217)

இடித்து வைத்துள்ள நீரில், சீரகம், வெங்காயம் இரண்டும் வகைக்குக் கால்பலம் கூட்டி அரைத்து கலக்கியதில் சாறின் அளவுக்குப் பாதியளவு நல்லெண்ணெய் ஊற்றி நிறைத்து, அதில் சர்க்கரை கால்பலம் போடு, இப்படியே மூன்று நாட்கள் உட்கொள்ள முதிர்ந்த வெள்ளை, பிரமேக வெட்டையெல்லாம் போய்விடும்.

தானென்ற இன்னுமொரு சூட்சங்கேளு
சார்வான பழமிளகு முப்பத்திரண்டு
ஏனென்ற கொடிக்கள்ளிக் கொழுந்துதானும்
எலுமிச்சங் காயளவு கூடக்கூட்டி
வேனென்று அரைத்ததனை அந்திசந்தி
வேளைக்கு அரைக்கொட்டைப் பாக்களவுகொள்ளு
பானென்று மூன்றுநாள் கொள்ளத்தீரும்
பத்தியந்தான் பசுமோருஞ் சோறுமுண்ணே. (218)

இன்னும் ஒரு சூட்சுமத்தைச் சொல்லுகிறேன். பழைய மிளகு முப்பத்திரண்டு, கொடிக்கள்ளிக் கொழுந்தைக் கொண்டுவந்து எலுமிச்சங்காயளவு கூடக்கூட்டி அதனை நன்றாக அரைத்து அரைக் கொட்டைப்பாக்களவு மூன்று நாட்கள் காலை மாலை உட்கொள்ள வெள்ளை நீங்கும். பத்தியமாக பசுமோரும் சோறும் உண்பாயாக.

மேகத்துக்கு

உன்னவே கைகண்ட வித்தைசொன்னோம்
உத்தமனே மேகவகை இருபதுதான்போக
பண்ணவே புங்கம்பூ படிதானொன்று
பாங்கான சட்டியிட்டு அடுப்பிலேற்றி
ஒன்னாதே ஆவினெய் ரெண்டுசேரு
உன்னஉன்ன விட்டதனில் வறுத்துவாங்கு
நன்னாத நெய்யெல்லாம் பூவிற்சோர
நன்றாகப் புரட்டியே வறுத்தெடுத்துத்
தின்னமாம் உதயாதி தன்விற்கேளு
தினமொன்றுக் கந்திசந்தி வெருகடிப்பூகொள்ளே. (219)

மேக வகை இருபதும் போவதற்கு மருந்து சொல்கிறேன். புங்கம்பூ ஒருபடியை ஒரு புதிய சட்டியில் இட்டு அடுப்பிலேற்றி, பசு நெய் இரண்டு சேர் ஊற்று, பூவில் நெய்விட்டு வறுக்கும்போது நெய்யை உன்ன உன்ன நெய்விட்டு நெய்யெல்லாம் பூவிற் சேர நன்றாகப் புரட்டி வறுத்து எடுத்து, தினந்தோறும் அந்தி, சந்தி வெருகடியளவு பூவை உட்கொள்வாயாக.

வெருகான புளியோடு புகையிலையுந்தள்ளு
வெள்ளாட்டு வற்றலொடு ஆவின்பால்நெய்
வெருகாக மிகுதியுமே கூட்டிக்கொள்ள
மேகவெடி மேகப்புண் மேகசூலை
வெருகான பிரமேகம் வெட்டைதீரும்
மெய்யிதுவே கைகண்ட படிதான்சொன்னோம்
கருதான மேகங்கள் எல்லாம்போகக்
கஸ்தூரி யென்னெயொன்று கருதக்கேளே. (220)

இந்த மருந்தை உபயோகப்படுத்தும்போது புளியையும் புகையிலையும் தள்ளு, வெள்ளாட்டு வற்றலோடு ஆவின் பால், ஆவின் நெய் இவற்றை அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். இப்படி செய்துவந்தால் மேகவெடிப்பு, மேகப்புண், மேகசூலை, பிரமேகம் வெட்டை முதலியவை தீரும். உண்மை இது கைகண்ட மருந்து மேகங்கள் எல்லாம் போக கஸ்தூரி எண்ணெய் என்ற மருந்தின் செய்முறை தன்னைச் சொல்கிறேன். கேட்பாயாக.

கஸ்தூரி எண்ணெய்

கருதியெடுத் தேரண்ட வெண்ணெய்தானுங்
கலங்காதே ரெண்டரையே படிதான்காணுங்
கருதியே பழகியதோர் பாண்டத்தில்வாரு
கால்படிதா னீருள்ளிச் சாறுவாரு

கருதுவேன் பரங்கிப்பட்டை பலந்தானாலு
கஸ்தூரிப் பட்டையது விராகனேழு
வரிசையாங் கெருடனுட கிழங்குதானும்
வகையாகப் பலமெட்டு நிறுத்துக்கொள்ளே. (221)

விளக்கெண்ணெய் இரண்டரைப்படியளவு எடுத்து பழகிய ஓர் பாண்டந், தன்னில் வார்த்துக் கொள்ளவும். வெங்காயச் சாறு கால்படியளவும் அளந்து வைத்துக்கொள்ளவும். பரங்கிப்பட்டை நான்கு பலம், கஸ்தூரிப்பட்டை ஏழுவராகன், கருடன் கிழங்கு. எட்டுப்பலம் எடை நிறுத்து, எடுத்துக் கொள்ளவும்.

கொள்ளவே கஸ்தூரிப் பட்டைதன்னை
குளிர்தண்ணீர் தன்னிலே யூறப்போட்டு
அள்ளவே அரைத்ததனை யெண்ணெயிலேவார்த்து
அதின்பின்பு பரங்கிப்பட் டைஅரைத்துப்போடு
எள்ளவே கெருடனிட கிழங்குதன்னை
யீருள்ளிச் சாற்றினா லரைத்துப்போடு
கொள்ளவே யிவ்வையெல்லாம் வெவ்வேறே அரைத்துக்
குளிர்நீரில் கரைத்தந்த எண்ணெயிலேவாரே. (222)

கஸ்தூரிப்பட்டையைக் குளிர்ந்த தண்ணீரிலே ஊறப்போட்டு, ஊறியபிறகு அதனை அரைத்து எண்ணெயிலே கலந்து கொள்ளவும். அதன் பிறகு பரங்கிப்பட்டையை அரைத்து எண்ணெயில் கலக்கவும். பிறகு கருடன் கிழங்கை வெங்காயச் சாற்றில் அரைத்துக் குளிர்ந்த நீரில் கரைத்து, எண்ணெயில் வார்ப்பாயாக.

வார்த்துமே அடுப்பேற்றிப் புளிவிறகுதவிர
மற்றுநீ யொருவிறகால் எரியமூட்டு
வார்த்துமே யெரித்ததனை மெழுகுபதம்பார்த்து
வடித்துநீ சுப்பிரம ணியர்பூசைபண்ணு
வார்த்துமே யெடுத்ததனை வைத்துக்கொண்டு
மைந்தனே யெண்ணெய்கொள்ளும் வகையைக்கேளு
வீத்துமே யெண்ணெய்கொள்ளு முதல்நாளப்பா
விளக்கெண்ணெய் தேய்த்துமே முழுகிப்போடே. (223)

பின்னர் இந்த எண்ணெய்ப் பாத்திரத்தை அடுப்பில் ஏற்று, புளியம் விறகு தவிர மற்றைய விறகுகளில் ஏதாவது ஒரு விறகால் அடுப்பில் தீமூட்டி எரித்து, எண்ணெய் மெழுகுப்பதம் வரும்வரை எரிப்பாயாக, அதை வடிகட்டி எடுத்துக் கொண்டு சுப்பிரமணிய பூசை பண்ணிய பிறகு, இந்த எண்ணெயைப் பதனம் செய்து கொள்ள வேண்டும். இந்த எண்ணெயை உட்கொள்வதற்கு நிச்சயித்த நாளுக்கு முந்தைய நாளன்று விளக்கெண்ணெய் தேய்த்துத் தலைமுழுக வேண்டும்.

முழுகியே மற்றாநாள் சொல்லக்கேளு
முனையான யெண்ணெயிலே அரைச்சேர்கொள்ளு
பழகியே சரீரபலம் பார்த்துக்கொள்ளு
பத்துவிசை பேதியாம் பதறாதேநீ
கழுவியே சுடுகஞ்சி வறுத்தவுப்புப்போட்டுக்
காய்ச்சியே கொண்டிடவே பேதிநிற்கும்
நெழுகவே மறுநாளும் விளக்கெண்ணெய்தேய்த்து
நீராட்டிக் கறிபதார்த்தம் எல்லாங்கூட்டே. (224)

தலைமூழ்கிய மற்றாம் நாள் எண்ணெயிலே அரை சேர் அளவு உட்கொள்ள வேண்டும். பத்து முறைகள் பேதியாகும். ஆகையால் சரீர பலத்தைக் கவனத்தில் கொண்டு, உட்கொள்ளும் எண்ணெயின் அளவை நிச்சயித்துக் கொள்ள வேண்டும். பேதியானால் பதறிவிட வேண்டாம். நன்றாக உடலைக் கழுவிக் கொண்டு, சுடுகஞ்சியில் வறுத்த உப்பைப் போட்டுக் காய்ச்சிக் குடித்தால் பேதி நின்றுவிடும். மறுநாளும் விளக்கெண்ணெய் தேய்த்துத் தலை மூழ்கவும். முழுகிக் குளித்த அன்று கறிபதார்த்தம் எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

கூட்டியே பத்துநா ளாறப்போட்டுக்
கொள்ளிந்த முறைப்படியே எண்ணெய்தானும்
மூட்டியே மும்முறைதான் கொள்ளுகொள்ளு
முனையான மேகவகை யிருபதுமேபோகும்
ஈட்டியே யிந்தமுறை யாருஞ்சொல்லார்
என்னாணை நிசமாகக் கொண்டுபாரு
காட்டாதே இந்தஎண்ணெய் ஒருவருக்குங்
கைமுறையாய்ச் சொல்லிவிட்டேன் கண்டுபாரே. (225)

இதற்குப் பிறகு பத்து நாட்கள் வரை மருந்தே இல்லாமல் ஆறப்போட்டு முன்பு சொன்ன முறைப்படியே இந்த எண்ணெயை உட்கொள். இவ்வாறு மூன்றுமுறைகள் உட்கொண்டு வந்தால், மேகநோய்கள் இருபதும் நீங்கிப்போகும். இத்தகைய முறையினை வேறு யாரும் சொல்ல மாட்டார்கள். இந்த எண்ணெய் செய்யும் கைப்பக்குவ முறையை நான் உனக்குச் சொல்லிவிட்டேன். பயன்படுத்திப் பார்த்தால்தான் தெரியும்.

அமுக்கராச் சூரணம்

கண்டிடா யமுக்கராச் சூரணத்தைக்
கருகவே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வண்டிடாய் வடிகொண்டு சூரணமேசெய்து
வால்மிளகு குரோசானி பறங்கிப்பட்டை
கண்டிடாய் கருஞ்சீர கம்கடுக்காய்சுக்கு
கடுகுரோ கணிவாலு முவையரத்தைதிப்பிலி
இண்டிடாய் வகைவகைக்குப் பலமேதூக்கு
இடித்ததனை முன்மருந்திற் சமனாய்ச்சேரே. (226)

அமுக்கரா கிழங்கை சூரணம் செய்து, அதில் பத்துப்பலம் எடையளவு எடுத்துக் கொண்டு, வால்மிளகு, குரோசானி ஓமம், பரங்கிப்பட்டை, கருஞ்சீரகம், கடுக்காய், சுக்கு, கடுகுரோகிணி, வாலுமுளவை, அரத்தை, திப்பிலி, இண்டு ஆகியவைகளில் வகைக்கு ஒருபலம் எடுத்து இடித்து முன்மருந்துடன் சேர்த்துக் கலந்து கொள்ளவும். இரண்டையும் சம அளவில் கலந்து கொள்ள வேண்டும்.

சமனாகச் சீனியொரு நாலிலொன்று
சாரித்து வெருகடிதான் அந்திசந்தி
அமனாக ஆவின்நெய் சேர்த்துக்கொள்ளு
அரையாப்பு மேகவெடி கிரந்திகுஷ்டம்
எமனான வாயுவொடு கடிவிஷங்களெல்லாம்
எலிகடியும் சிலவிஷங்கள் பூரான்செய்யான்
கமனான மேகமொடு வாதபித்தம்
கழன்றுபோம் பத்தியந்தான் கண்டுகொள்ளே. (227)

இதனோடு சீனிசர்க்கரை நான்கில் ஒருபாகமாகச் சேர்த்து வெருகடியளவு காலை, மாலை பசுவின் நெய் சேர்த்து உட்கொண்டு வந்தால், அரையாப்பு, மேகவெடிப்பு, கிரந்தி குஷ்டம், வாய்வு, சிலவிஷங்கள், கடிவிஷங்கள், எலிக்கடி, பூரான், செய்யான் மேகம், வாயு, பித்தம், வாதபித்தம், ஆகியவை நீங்கும். இதனை உண்ணும் போது கைப்பும் புளிப்பும் தள்ளிவிட வேண்டும். மற்றபடியெல்லாம் இச்சாபத்தியம்.

ஆடாதோடை லேகியம்

கொள்ளுவது கைப்போடு புளியுந்தள்ளு
கொள்ளவே மற்றவெல்லா மிச்சாபத்யம்
தள்ளாதே தோடையது சகலநோய்க்கும்
கொள்ளவே தோடையது சமூலங்கொண்டு
குறிப்பாக நிழலுலர்த்திச் சூரணமேசெய்து
விள்ளாதே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
மிளகோடு கொத்துமல்லி அரத்தைசுக்கே. (228)

ஆடாதோடைச் செடிகளை சமூலமாகக் கொண்டுவந்து நிழலில் உலர்த்தி சூரணமே செய்து, பத்துப்பலம் எடை நிறுத்துக் கொண்டு, மிளகு, கொத்துமல்லி, அரத்தை, சுக்கு,

சுக்கான அதிமதுரம் தாளிசபத்திரியும்
சுகமான இந்துப்பு பேரரத்தைகோஷ்டம்
நைக்கவே கருஞ்சீரம் கடுகுரோகணியும்
நாகப்பூ வாலுமுளவை கிராம்புதேக்கு
எய்க்கவே விடையம்வகைக் கொருபலமேசொன்னோம்
இடித்துமே முன்மருந்திற் சமமாய்ச்சேரு
ஐக்கவே சீனியதில் நாலத்தொன்று
ஆவின்நெய் தேனதிலே யருந்தக்கேளே. (229)

அதிமதுரம், தாளிசபத்திரி, இந்துப்பு, பேரரத்தை, கோஷ்டம், கருஞ்சீரகம், கடுகுரோகிணி, நாகப்பூ, வாலுழுவை, கிராம்பு, தேக்கு, அதிவிடையம் வகைக்கு ஒருபலம் சேர்த்து, நன்றாக இடித்துத் தூள் செய்து முன்மருந்தில் சமமாகச் சேர்த்து, சீனி சர்க்கரை நாலில் ஒரு பங்கு சேர்த்துப் பொடித்து, ஆவின் நெய் அல்லது தேனில் அருந்த வேண்டும்.

அருந்தவே லேகியமாய்ப் பண்ணிக்கொண்டு
அந்திசந்தி கொட்டைப்பாக் களவுகொள்ளு
அருந்தவே சயமீளை மந்தாரகாசம்
அத்திசுரம் பித்தமொடு வாய்வுகாந்தி
அருந்தவே குத்திருமல் சிணுக்கிருமல்புகைச்சல்
ஆகாத புரட்டல்பித்தம் கிறுகிறுப்புவரட்சி
அருந்தவே குலையெரிவு குடல்புரட்டெல்லாம்போம்
அப்பாஇச் சாபத்யம் புளிப்புகைப்புந்தவிரே. *(230)*

மேற்கண்ட மருந்தை லேகியமாய்ச் செய்து கொண்டு, அந்தி சந்தி கொட்டைப்பாக்களவு உட்கொண்டு வந்தால், சயம், ஈளை, மந்தாரகாசம், எலும்பைப்பற்றிய காய்ச்சல், குத்திருமல், சிணுக்கு இருமல், புகைச்சல் இருமல், ஆகாத புரட்டல் பித்தம், கிறுகிறுப்பு, வறட்சி, குலைஎரிவு, குடற்புரட்டு, எல்லாம் போகும். இச்சாபத்தியம் புளிப்பும் கைப்பும் தள்ள வேண்டும்.

நற்கரந்தை லேகியம்

தவிரவே நற்கரந்தைச் சூரணத்தைக்கேளு
சார்வான கரந்தையது நிழலுலர்த்திப்
பவிரவே யிடித்ததனைச் சூரணமேசெய்து
பலம்பத்து நிறுத்தப்பாற் பகரக்கேளு
நவிரவே கருஞ்சீரம் கடுக்காய்தானி
நல்வசம்பு திப்பிலியு மிளகிந்துப்பு
திவிரவே வாலுழுவை கோஷ்டஞ்சுக்கு
சிறுதேக்கு கார்போகி சித்ரமூலம். *(231)*

நற்கரந்தைச் சூரணம் செய்முறையைக் கூறுகிறேன். கரந்தையைச் சமூலமாகக் கொண்டுவந்து, நிழலில் உலர்த்தி, இடித்துச் சூரணம் செய்து, அதில் பத்துப்பலம் எடை போட்டு எடுத்துக் கொண்டு கருஞ்சிரகம், கடுக்காய், தான்றிக்காய், நல்வசம்பு, திப்பிலி, மிளகு, இந்துப்பு, வாலுழுவை, கோஷ்டம், சுக்கு, சிறு;தேக்கு, கார்போகரிசி, சித்திரமூலம் ஆகியவற்றை

சித்திரமாய் வகைவகைக்குப் பலந்தானொன்று
சேருரச கற்பூரம் பலமும்கால்தான்
சித்திரமாய் யிடித்ததனைச் சூரணமேசெய்து
திகழ்கரந்தைச் சூரணத்திற் சமனாய்ச்சேரு

சித்திரமாய்ப் பனைவெல்லம் சர்க்கரையுந்தேனும்
சேர்த்துமே ஆவின்நெய் விட்டுக்கிண்டு
பத்திரமாய் நாளொன்றுக் கந்திசந்தி
பருங்கொட்டைப் பாக்களவு கொள்ளுகொள்ளே. (232)

வகைக்கு ஒருபலம் எடுத்துக்கொண்டு அதனுடன் இரசகற்பூரம், கால்பலமும் சேர்த்து இடித்து அதைச் சூரணம் செய்து கரந்தைச் சூரணத்தில் சமபங்கு சேர்த்துக் கொண்டு பனைவெல்லமும் சர்க்கரையும் தேனும் சேர்த்துப் பசுவின் நெய்விட்டு அடுப்பில் வைத்துக் கிண்டுவாயாக. ஆவின்நெய் விட்டுக் கிளறி பத்திரப்படுத்தி, நாள்தோறும் அந்திசந்தி பெரிய கொட்டைப்பாக்களவு அதை அருந்தி வரவேண்டும்.

கொள்ளவே குஷ்டமொடு கிரந்தியரையாப்பு
கொடிதான மேகவடி கரப்பானூறல்
மெள்ளவே நெஞ்சடைப்பு நுடக்கல்மேனி
வெளுப்புபடர் தாமரையும் தழுதளையும்சூலை
கொள்ளவே பவுத்திரமும் புரைபுண்ணாறாக
குளுவாளை அழுகன்னி அரிகிரந்திசொரியும்
தெள்ளியே ஆனைச்சொரி தவளைச்சொரிதேமல்
தீராத வெடிகரப்பான் தீருந்தானே. (233)

இவ்வாறு அருந்தி வந்தால் குஷ்டம், அரையாப்பு, கிரந்தி, மேகம், வடிகரப்பான், ஊறல், நெஞ்சடைப்பு, உடல் வெளுப்பு, படர்தாமரை, சூலை, பவுத்திரம், புரையோடிய புண்கள், ஆறாக்குழுவாளை, உடல்நடுக்கம், அழுகண்ணி, அரிகிரந்தி, சொரி, ஆனைச்சொரி, தவளைச் சொரி போன்றவையுடன் வெடிகரப்பானும் தீரும்.

சகல நோய்க்கும் சூரணம்

தீரவே சகலநோய் தீரக்கேளு
சீரகத்தோ டதிமதுரம் காமப்பூவும்
சாரமாம் கருஞ்சீர கம்சன்னலவங்கம்
சதகுப்பை வகைவகைக்குப் பலந்தானொன்று
கூரவே சர்க்கரையும் ஆறுபலஞ்சொன்னோம்
கொத்துமல்லி பலமாறும் சமனாய்க்கூட்டிச்
சேருமே வகையென்ன பன்னிரண்டாச்சு
சீனிகற் கண்டுபலம் பன்னிரண்டாம். (234)

மேலும் சகல நோய்களும் தீர சீரகம், அதிமதுரம், மதனகாமப்பூ, கருஞ்சீரகம், சன்னலவங்கம், சதகுப்பை வகைவகைக்கு ஒருபலம் எடுத்துக் கொள்ளவும். சர்க்கரை ஆறுபலம் கொத்துமல்லி ஆறுபலமும் சமமாய்ச் சேர்த்து இவற்றோடு சீனிக்கற்கண்டு பனிரெண்டு பலம் எடுத்துக்கொண்டு.

பன்னிரண்டும் வெவ்வேறே யிடித்துஒன்றாய்ப்
பாங்கான காசியென்ற மேருவிலேஅடைத்து
உன்னியே வெருகடிதூள் அந்திசந்தி
யுடன்கொள்ளு ஒருநேரம் வெந்நீர்கொள்ளு

குன்னாது சரீரமது திடமதாகும்
குலையெரிவு நெஞ்சுவலி நெஞ்சுதிடமாகும்
உன்னியே சிரசுநோ யெல்லாந்தீரும்
ஓடுமே பித்தமொடு புரட்டல்நீரூரல்
கண்ணில்நீர்ப் பாய்ச்சல்அறும் பிரகாசமாகும்
கலங்காது புத்தியதுன் மாதம்தீரும். (235)

இவையனைத்தையும் வெவ்வேறாக இடித்து ஒன்றாகச் சூரணித்து வெருகடியளவு தூளை தினந்தோறும் அந்தி சந்தி உட்கொண்டு வரவும். ஒருநேரம் வெந்நீர் அருந்தலாம். அவ்வாறு உட்கொண்டு வந்தால் சரீரம் குன்றாமல் திடமாகும். சிரசுநோய்கள் எல்லாம் தீரும். பித்தம் நீங்கும். புரட்டல் நீரூறல், கண்ணில் நீர்பாய்ச்சல் நீங்கி பிரகாசம் அடையும். கலங்கிய புத்தியும் தெளிவும் தீராத உன்மாதம் மாறிக் குணமடையும்.

தீருமே நித்திரையுஞ் சுகமுண்டாகும்
தீராத புழுக்கிருமி சேரப்போகும்
வாருமே யிடுப்புவலி கல்லடைப்பு
வாய்க்கோணல் வாய்க்குளறு மாந்தபித்தம்
தீருமே செவிநோயும் செவிடுஊமை
சேத்துமமும் பில்லியொடு வஞ்சனையுந்தீரும்
சாரிடுமே தொண்டைப்புண் கண்டமாலை
சரீரத்தில் நீர்க்கட்டும் சார்ந்துபோமே. (236)

சுகமான நித்திரையும் சுகமும் உண்டாகும். புழுவும் கிருமியும் நாசமாகும். இடுப்புவலி, கல்லடைப்பு, வாய்க்கோணல், வாய்க்குளறல், மாந்த பித்தம், செவிநோய், செவிடு, ஊமை, சேத்துமம் ஆகியவை நீங்கும். பில்லி வஞ்சனையுந்தீரும். தொண்டைப் புண் கண்டமாலை சரீரத்தில் நீர்க்கட்டும் ஒழியும்.

அமிர்தாதி மாத்திரை

போமென்ற அமிர்தாதி உண்டைகேளு
புகழாங்கோ ரோசனைசெண் பகப்பூக்கோஷ்டம்
வேமென்ற வெட்டிவேர் ஏலமதிமதுரம்
விதமாஞ்சாத் திரபேதி மாசிப்பச்சை
காமென்ற தாணிக்காய் வகைவகைக்குக்
களஞ்சிரெண்டு முலைப்பாலாற் கருதியாட்டு
ஆமென்ற திலாவிட்டால் வெட்டிவேர்க்கியாழம்
ஆட்டியே கடலையள வுருண்டைசெய்யே. (237)

அமிர்தாதி மாத்திரையின் செய்முறையைக் கூறுகிறேன் கேட்பாயாக. கோரோசனை, செண்பகப்பூ, கோஷ்டம், வெட்டிவேர், ஏலம், அதிமதுரம், சாத்திரபேதி, மாசிப்பச்சை, தான்றிக்காய், வகைவகைக்கு கழஞ்சி இரண்டு முலைப்பாலில் சேர்த்து

ஆட்டி அரைத்துக் கொள்ளவேண்டும். அல்லது வெட்டிவேர்க் கியாழத்தில் இவற்றை அரைத்து கடலை அளவு உருண்டையாக உருட்டி மாத்திரைகளைச் செய்து கொள்வாயாக.

செய்துமே நிழலுலர்த்தி வைத்துக்கொண்டு
திரமான முலைப்பாலில் வெந்நீரிலிடவே
தைதுமே குடற்புரட்டு உஷ்ணங்காந்தி
தாபசுரம் பித்தசுரம் சார்ந்துபோகும்
பொய்துமே கணமாந்த மாந்தசன்னி
புழுக்கழிச்சல் போர்மாந்தம் கனவெட்டைசூடு
எய்துமே சிறுபிள்ளை நோயெல்லாந்தீரும்
இதமான அமிர்தாதி உருண்டைசொன்னோம்
பொய்தவே காமலை சோகைபாண்டு
போகவே சித்தாதி புகலக்கேளே. *(238)*

அவற்றை நிழலில் உலர்த்தி, திரமான முலைப்பால், வெந்நீருடன உட்கொண்டால், குடற்புரட்டு, உஷ்ணம் காந்தி, தாபசுரம், பித்தசுரம் ஆகியவை நீங்கும். கணமாந்தம், மாந்த சன்னி, புழுக்கழிச்சல், போர்மாந்தம், கனவெட்டைச்சூடு, ஆகிய சிறுபிள்ளை நோய்கள் எல்லாம் நீங்கும். இந்த அமிர்தாதி மாத்திரை சிறப்புடையது மற்றும் காமாலை சோகை, பாண்டு போவதற்காக சித்தாதி லேகியம் செய்முறையைக் கூறுகிறேன். கேட்பாயாக.

சித்தாதிலேகியம்

புகலுகிறேன் புளியினிலை பலந்தானூறு
புகழான துருப்பிடித்த இரும்பதிலேபாதி
நிகலுகிறேன் முல்லைவேர் சாரணைவேர்
நெருஞ்சிவேர் தழுதாழை கண்டங்கத்திரி
செகலான கரிமுள்ளி கீழ்க்காய்நெல்வி
செம்முள்ளி வகைவகைக்குப் பலந்தான்பத்து
இகலுகிறேன் முன்மருந்தோ டொக்கச்சேரு
இவையெல்லா மிடித்தொரு பாண்டத்திட்டே. *(239)*

புளியின் இலை நூறு பலம் எடைக்கு எடுத்துக்கொண்டு, அதன் பாதி எடைக்கு துருப்பிடித்த இரும்பு, முல்லைவேர், சாரணைவேர், நெருஞ்சில்வேர், தழுதாழைவேர், கண்டங்கத்திரி, கரிமுள்ளி, கீழ்க்காய் நெல்லி, செம்முள்ளி, வகைவகைக்கு பத்துப்பலம் இவையனைத்தையும் முன்மருந்துடன் ஒருமிக்கச் சேர்ப்பாயாக. இவையனைத்தையும் இடித்து ஒரு பானையில் இடவும்.

இட்டுமே யிருதூணி சலந்தான்வார்த்து
எரித்ததனை யெட்டொன்றாய் வற்றக்காய்ச்சிக்
கட்டுமே கியாழத்தை யிறுத்துவாங்கிக்
கரிசாலைச் சாறதிலே படிதானொன்று

கொட்டியே பழச்சாறு படிதானொன்று
கொமட்டிமா துளைச்சாறு படிதானொன்று
நட்டுமே யீருள்ளிச் சாறுபடியொன்று
நல்லெண்ணெய் படியொன்று அதிலேவ்வாரே. (240)

அந்தப்பானையில் இருமரக்கால் நீர்தான் வார்த்து எரித்து அதனை எட்டில் ஒன்றாக வற்றும் படிக்காய்ச்சி இறுத்து வடிகட்டி கரிசாலைச்சாறு, ஒருபடி பழச்சாறு ஒருபடி, கொம்மட்டிச்சாறு ஒருபடி, மாதுளைச் சாறு ஒருபடி, வெங்காயச்சாறு ஒருபடி, நல்லெண்ணெய் ஒருபடி ஆகிய அனைத்தையும் அதில் வார்ப்பாயாக.

வார்த்துமே கொதிக்கையிலே மருந்துகேளு
வளமான விஞ்சியொடு தேவதாரம்
சேர்த்துமே செவ்வியம்திப் பிலியின்மூலம்
திரமான வகையொன்று பலம்பத்தாகச்
கார்த்துமே குரோசானி மிளகுதிப்பிலி
கருஞ்சீர கம்ஓம மிலவங்கப்பட்டை
வார்த்துமே கடுக்காயும் ஆவரைமொட்டரும்பு
வகைக்கோர்ப லம்பழங்கிட் டம்நாலுகூட்டே. (241)

அவ்வாறு வார்த்த பிறகு நன்றாக எரித்துக் கியாழம் கொதிக்கும் போது, இஞ்சி, தேவதாரம், செவ்வியம், திப்பிலியின் வேர், இவைகளில் வகைக்கு பத்துப்பலம், குரோசானி ஓமம், மிளகு திப்பிலி, கருஞ்சீரகம், ஓமம், இலவங்கப்பட்டை, கடுக்காய், ஆவாரைமொட்டு, அரும்பு வகைக்கு ஓர்பலம், பழங்கிட்டம் நான்குபலம் சேர்த்துக் கூட்டிக்கொள்வாயாக.

கூட்டுமே யிவையெல்லா மிடித்துத் தூளாய்க்
கூறவே கியாழத்தில் போட்டுக்கிண்டு
ஊட்டுமே பனைவெல்லம் பலந்தானாலு
லோகசெந் தூரமது ரெண்டுபலம்போடு
வீட்டுமே ஆவினீர் கொஞ்சமப்பா
விட்டதனை லேகியமாய்க் கிண்டிக்கொண்டு
ஆட்டுமே நாளொன்றுக் கந்திசந்தி
அப்பனே நேரமொரு பாக்களவுகொள்ளே. (242)

கூட்டியபிறகு இவற்றையெல்லாம் நன்றாக இடித்துத்தூள் செய்து, கியாழத்தில் இந்தத்தூளைப் போட்டுக் கிண்டி, பனைவெல்லம் நான்குபலம் உடைத்துப்போட்டு அதனோடு இரண்டுபலம் அயச்செந்தூரத்தையும் சேர்த்து, சிறிதளவு பசுமாட்டுக் கோமியமும் சேர்த்து அதனை லேகியமாகக் கிண்டிக் கொண்டு, நாள்தோறும் காலை மாலை கொட்டைப்பாக்கு அளவு லேகியத்தை உட்கொள்ள வேண்டும்.

கொள்ளவே பாண்டுகா மாலைசோகை
குத்தலொடு பீனிசம் சுவாசகாசம்
கொள்ளவே யின்னவகை வியாதியெல்லாம்
குலைந்தோடச் சித்தாதி லேகியந்தான்சொன்னோம்

கள்ளவே லேகியந்தான் கொள்ளும்போது
கைப்போடு புளிபுகையுந் தள்ளுதள்ளு
வெள்ளாட்டு வற்றலாம வறுத்துப்புக்கூட்டு
விளம்பினேன் சுராங்கிசமாத் திரையைச்சொல்லே. (243)

பாண்டு, காமாலை, சோகை, குத்தல்பீனிசம், சுவாசகாசம் போன்ற வியாதிகள் எல்லாம் நீங்குவதற்கு என்றே இந்த சித்தாதி லேகியத்தைப் பற்றி சொன்னேன். இந்த லேகியத்தை உட்கொள்ளும்போது பத்தியமாக இருக்கவேண்டும். கசப்பும் புளிப்பும் தள்ள வேண்டும். புகைபிடித்தல் ஆகாது. வெள்ளாட்டு வற்றல் வறுத்த உப்பு சேர்த்துக் கொள்ளலாகும். இனி சுராங்கிச மாத்திரையைப் பற்றிச் சொல்லுகிறேன்.

சுராங்கிச மாத்திரை

சொல்லியே தூதுவளை கண்டங்காலி
துளசி தும்பை செருப்படையும் விஷ்ணுகாந்தி
செல்லவே விலாமிச்சை வேர்கோரைக்கிழங்கு
சிற்றாமுட்டி பேராமுட்டி வேளைபேய்த்தும்பை
செல்லவே குமிழோடு பேராமல்லி
சிறுகுமிழும் சித்தாமல்லி புனல்முருங்கைஅவுரி
எல்லவே சொன்னதொரு வேருவகையெல்லாம்
இடித்துமே வகைவகைக்குக் கழஞ்சுரண்டு
செல்லவே சிற்றரத்தை அதிமதுரங்கோஷ்டம்
சிறுநாகப் பூவோடு கிராம்புதிப்பிலியே. (244)

தூதுவளை, கண்டங்காலி, துளசி, தும்பை, செருப்படை, விஷ்ணு காந்தி, விலாமிச்சைவேர், கோரைக்கிழங்கு,சிற்றாமுட்டி, பேராமுட்டி, வேளை, பேய்த்தும்பை, குமிழ், பேராமல்லி, சிறுகுமிழ், சிந்தாமல்லி, புனல் முருங்கை அவுரி வேர் வகைகளை யெல்லாம் இடித்து வகைக்கு இரண்டு கழஞ்ச வீதம் எடுத்துக் கொள்ளவும். பின் சிற்றரத்தை அதிமதுரம், கோஷ்டம், சிறுநாகப்பூ கிராம்பு, திப்பிலி.

திப்பிலியும் நிலவேம்பு தாணிக்காய்சுக்கு
சீரகமுங் கருஞ்சீரகம் கடுகுரோகணியோமம்
ஒப்பரிய நிலவிளா வேரிலவம்பிசினும்
உத்தமனே வகைவகைக்குக் கழஞ்சிரண்டு
கப்பெரிய அவுரிச்சா றாடாதோடை
கரிசாலை சிறுபுள்ளடி முதியார்கூந்தல்
செப்பியே சாறஞ்சு சாமமஞ்சு
சேர்த்தரைத்து உண்டைபண்ணி வைத்துக்கொள்ளே. (245)

நிலவேம்பு, தான்றிக்காய், சுக்கு, சீரகம், கருஞ்சீரகம், கடுகுரோகிணி, ஓமம், நிலவிளாவேர், இலவம்பிசின் இவை வகைவகைக்கு இரண்டு கழஞ்சும் அவுரிச்சாறு, ஆடாதோடை, கரிசாலை, சிறுபுள்ளடி, முதியோர் கூந்தல், ஆகிய ஐந்து வகைச் சாற்றால் ஐந்து சாமம், சேர்த்தரைத்து மாத்திரையாக உருண்டை செய்து வைத்துக் கொள்வாயாக.

வைத்துமே யிஞ்சிநீர் முலைப்பால் வெந்நீர்
இல்லாவிட்டால் நொச்சிசுக்கு சங்கிலைச்சாறுதேனில்
உய்த்துமேஇந்தவகை அனுபானந் தன்னில்
உத்தமனே நோயறிந்து ஒருவுருண்டைகொள்ள
நைத்துமே சுரமெல்லாம் நாடாதோடும்
நலமாகப் பத்திசுர மாந்தசன்னி
உய்த்துமே கனைவேகம் வாதசன்னி
உத்தமனே மாந்தபித்தம துறப்பிருமலோடு
உய்த்துமே குளிர்சுரங்கள் ஊதுகணமாந்தை
உப்பிசமும் போமென்று உரைத்தவாறே. (246)

இஞ்சி நீர், முலைப்பால், வெந்நீர், நொச்சிச்சாறு, சுக்குநீர், சங்கிலைச்சாறு, தேன் இந்தமாதிரி அனுபானங்களில் நோய்க்குத் தகுந்தவாறு ஏதாவது ஒன்றில் ஒரு மாத்திரை இழைத்துக் கொடுக்க, எல்லாவகைச்சுரங்களும் ஓடிவிடும். மாந்த சன்னி, வாதசன்னி, கனைவேகம், மாந்தபித்தம், வரட்டிருமல், குளிர்சுரங்கள், ஊதுகணமாந்தம், உப்பிசம் யாவும் நீங்கும்.

கடுக்காய் லேகியம்

வாறான கடுக்காயின் லேகியத்தை
வளமாகச் சொல்லுகிறேன் மக்காள்கேளும்
பாரான கடுக்காய்தான் கொட்டைபோக்கிப்
பலம்பத்துச் சிவதைவேர் பலந்தான்ரெண்டு
வாறான கரிசாலை பலந்தான்ரெண்டு
வல்லாரை புளியாரை வகைக்குரெண்டு
காரான நிலையாவரை பலந்தான்ரெண்டு
கருதியே யிடித்தொன்றாய்ச் சூரணமேசெய்து
சீரான கடுகுரோ கணிகிராம்பு
திப்பிலிசிறு நாகப்பூ வாலுமுவைசிங்கி. (247)

கொட்டை நீக்கிய கடுக்காய்த்தூள் பத்துப்பலம், சிவதைவேர் இரண்டு பலம், கரிசாலை இரண்டு பலம், வல்லாரை இரண்டு பலம், புளியாரை இரண்டு பலம், நிலையாவாரை இரண்டு பலம் எல்லாவற்றையும் நிழலில் உலர்த்தி இடித்துச் சூரணமாய்ச் செய்து கொண்டு, கடுகுரோகிணி, திப்பிலி, சிறுநாகப்பூ வாலுமுவை, கர்க்கடக சிங்கி.

சிங்கியொடு கருஞ்சீரகம் மிளகுதாணி
சிறப்பான கொத்துமல்லி தாளிசபத்திரியும்
இங்கியே வகைவகைக்குக் காற்பலமேதூக்கி
இடித்துமே வடிகொண்டு முன்மருந்திற்சேரு

மங்கியே போகாமற் கவனமாக
மருந்திலே யுன்மனது தங்கவேணும்
தங்கியே யாவின்நெய் தேனும்விட்டுச்
சர்க்கரையும் போட்டுநீ லேகியமாய்ப்பண்ணே. (248)

கருஞ்சீரகம், மிளகு, தாணிக்காய், கொத்தமல்லி, தாளிச பத்திரி இவையாவும் வகைக்கு கால்பலம் வீதம் நிறுத்து எடுத்துக் கொண்டு நன்றாக இடித்துச் சீலை வடி (வஸ்திரகாயம்) செய்து முன் சூரணத்துடன் சேர்க்கவும். பின் பசும்பாலும், தேனும், சர்க்கரையும் சேர்த்து லேகியமாய்ச் செய்து கொள்ளவும். இதைச் செய்யும் பொழுது கவனமாக முழுமனதோடு கவனம் செலுத்திச் செய்ய வேண்டும்.

பண்ணியே நாளொன்றுக் கந்திசந்தி
பருங்கொட்டைப் பாக்களவு கொள்ளுகொள்ளு
திண்ணியே தீரும்நோய் சொல்லக்கேளு
செலக்கட்டு மலக்கட்டு கோளைக்கட்டு
உன்னவே உஷ்ணவாய்வு மேககிரந்தி
உள்ளங்கால் கையெரிவு சூலையெரிவுபுரட்டல்
எண்ணவே மூலத்தில் சூடுகிரந்தி
இளைப்பிருமல் புகைச்சலொடு வறட்சிசோகைதீரும்
எண்ணவே பத்தியமாய் உண்டுதேறு
இதைவிட்டாற் கற்பம்வே றுண்டோசொல்லே. (249)

இந்த லேகியத்தைக் காலை மாலை பெரிய கொட்டைப் பாக்களவு உட்கொள்ளவும். இதனால் நீர்க்கட்டு, மலக்கட்டு, கோழைக்கட்டு, உஷ்ணவாய்வு, மேக கிரந்தி, உள்ளங்கால், உள்ளங்கை எரிச்சல், சூலை, எரிச்சல், புரட்டல் முதலிய நோய்கள் எல்லாம் தீரும். இதைவிட்டால் வேறு கற்பம் கிடையாது என்றே சொல்லிவிடலாம்.

இஞ்சிலேகியம்

சொல்லவே இஞ்சிலே கியத்தைக்கேளு
தோல்போக்கிப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
மல்லவே பழச்சாற்றா லாட்டிமைபோல்
மைந்தனே சட்டியிலே யிட்டுக்கேளு
அல்லவே சீரகமு மிளகோடேலம்
அதிமதுரந் திப்பிலியுங் கோஷ்டமூலம்
கல்லவே வாலுழுவை தாளிசப்பத்திரியும்
கடுகோடு கொத்துமல்லி சித்ரமூலம்
அல்லவே சிங்கியொடு குரோசாணி ஓமம்
அப்பனே வகைக்குஅரைப் பலமேதூக்கே. (250)

இஞ்சி லேகியத்தின் செய்முறையைச் சொல்கிறேன் கேட்பாயாக. இஞ்சியைத் தோல் நீக்கி பத்துப்பலம் எடைபோட்டு எடுத்துக் கொண்டு, பழச்சாற்றில் ஆட்டி மைபோல் அரைத்துக் கொண்டு, ஒரு சட்டியிலே இட்டு, சீரகம், மிளகு, ஏலம்,

அதிமதுரம், திப்பிலி, கோஷ்ட மூலம், வாலுழுவை, கடுகு, கொத்துமல்லி, சித்ர மூலம், கர்க்கடக சிங்கி குரோசாணி ஓமம், வகைக்கு அரைப்பலம் எடுத்துக் கொள்வாயாக.

தூக்குகரி சாலைபூ லாவும்பழச்சாற்றால்
துவளரைத்து முன்மருந்தோ டொக்கச்சேரு
ஊக்கமாம் பிரண்டையது மோரிலுப்பிட்டு
உலர்த்திடித்து ஒருபலமே போடுபோடு
ஏற்கவே யிதுபோலே யாருஞ்சொல்லார்
இதையறிந்து செய்பவனே வைத்யனாவான்
ஆக்கவே வங்காளச் சீனியப்பா
அதிற்பாதி போட்டாவி னெய்யைவாரே. (251)

கரிசாலை பூலா, இவையிரண்டையும் பழச்சாற்றால் துவள அரைத்து முன்மருந்துடன் ஒருங்கே சேர்த்துக் கொள்வாயாக. பிரண்டையை மோரில் உப்பிட்டு, உலர்த்தி இடித்து ஒருபலம் அதிலேபோடு,

நெய்வார்த்து லேகியம்போற் பண்ணிக்கொண்டு
நேரமொரு பாக்களவு அந்திசந்திகொள்ளு
பொய்யல்ல பித்தவாய்வு உஷ்ணகாந்தி
புரட்டல்சத்தி வலிகுன்மம் பித்தகுன்மம்
மெய்யான அத்திசுரம் சன்னிதோசம்
வீறான எரிகுன்மம் அசீர்ணவாய்வு
செய்யவே வுப்பிசமும் அரோசிகமுந்தீரும்
தீபனமாம் பசியறிந்து சீராய்க்கொள்ளே. (252)

நெய்வார்த்துக்கிளறி மொத்த எடையில் பாதி வங்காளச் சீனிபோட்டு அடுப்பேற்றி லேகியம் செய்து தினந்தோறும் அந்தி சந்தி இருவேளை, ஒரு கொட்டைப் பாக்கு அளவு உட்கொள்வாயாக. இதனால் பித்தவாய்வு, உஷ்ண காந்தி, புரட்டல், வாந்தி, சக்திகுன்மம், வலிகுன்மம், பித்தகுன்மம், அஸ்திசுரம், சன்னிதோஷம் எரிகுன்மம், அஜீரண வாய்வு, உப்பிசம் அரோசிகம் ஆகியவை நீங்கும். பசித்தீபனம் அறிந்து உணவையும் மருந்தையும் உட்கொள்வாயாக.

சீரான வாதமென்ன வைத்தியமென்ன
செய்முறையோ டவிழ்தங்கள் செய்யவென்ன
பாரான பலநூலும் பார்க்கவேணும்
பார்த்தறிந்து செய்கிற பாகம்வேணும்
கூறான சரக்குவகை யினமறியவேணும்
குருவாசான் கைதொட்டுக் காட்டவேணும்
சார்வாக விதைவிட்டு முறைதப்பாய்ச்செய்து
சாஸ்திரம்பொய் யென்பார்கள் சண்டாளர்தாமே. (253)

வாதம் என்ன, வைத்தியம் என்ன எதுவானாலும் செய்முறையோடு ஔடதங்களை முறைப்படி செய்ய வேண்டும் என்றால் பல்வேறு வைத்திய நூல்களையும்

பார்ப்பதோடு விட்டுவிடாமல் படித்தறிந்து கொள்ளவும் வேண்டும். அதன் பிறகு மருந்துகளின் செய்முறையும் தெரிய வேண்டும். மருந்துகளில் சேர்க்கும் சரக்குகள் ஒவ்வொன்றைப் பற்றியும் நன்றாக அனுபவபூர்வமாகத் தெரியவும் வேண்டும். எதுவாயிருந்தாலும் குருவாகிய ஆசான் கை தொட்டுக் காட்ட வேண்டும். முறைதப்பாகச் செய்துவிட்டு, சாத்திரம் பொய் என்று சொல்பவர்கள் அனைவருமே சண்டாளர்களே.

பொய்யென்று சாஸ்திரத்தைச் சொல்வானாகில்
புழுவான பாழ்நரகில் வீழ்வான்பாவி
மெய்யென்று குருபதத்தைத் தொண்டுபண்ணி
வேதாந்தம் பலநூலும் விரித்துப்பார்த்துக்
கைமுறையுங் குருமுகமாய்க் கண்டுதேறக்
கற்றவரை வணங்கியே சொல்லக்கேட்டுப்
பொய்மறந்து மெய்யுகந்து அறிவிற்கூடிப்
பூரணமே தெய்வமென்று போற்றிநித்தம்
துய்யவனே முறையோடே செய்துபாரு
தொட்டதொரு வித்தையெல்லாம் பலிக்கும்பாரே. (254)

சாத்திரத்தைப் பொய்யென்று எவனாவது சொல்வானாகில் புழுக்கள் நிறைந்த பாழ்நரகத்தில் வீழ்வான் பாவி. மருந்துகளின் செய்முறைகளை முறைப்படிக் கற்றுக்கொள்வதற்கு, மெய்யான பக்தியுடன் குருவின் திருவடியில் தொண்டு செய்து, வேதாந்த நூல்கள் பலவும் விரிவாகப்படித்துப் பார்த்து, செய்முறையும் கைமுறையும் குருமுகமாகவே கண்டு, தேர்ச்சியும் அனுபவமும் அடைய வேண்டும். பூரணமே தெய்வம் என்று போற்றி தினமும் ஏதேனும் ஒருமருந்தை செய்முறைக்கு ஏற்ப செய்துபார்த்தால் நீ தொடங்கியதொரு வித்தையெல்லாம் பலிக்கும் பார்ப்பாயாக.

பூநீற்றுகுரு

பலிக்கவே கருவென்ன பூமிநாதம்
பாங்கான வாதமொடு வைத்தியமுஞ்செய்யும்
பலிக்கவே சொல்லாமல் மறைத்தார்சித்தர்
பாடினார் சாஸ்திரத்தில் முன்பின்னாகப்
பலிக்கவே சொல்லுகிறேன் பூநீற்றைவாரி
பத்துமுறை சுத்தசலம் தெளித்துக்காய்ச்சிப்
பலிக்கவே குருவாக வைத்துக்கொண்டு
பாடியதோர் வைத்தியத்தில் பாகங்கேளே. (255)

பூமியின் கருவைப் போன்ற பூமிநாதம் தான் பாங்கான இரசவாதத்தையும் வைத்தியத்தையும் பலித்து பயன்படும்படிச் செய்யும். வைத்தியம் பலிப்பதற்காகவே நான் சொல்கிறேன். கேட்பாயாக. பூநீற்றை அதற்குரிய பருவத்தில் அது கிடைக்கும் இடத்திலிருந்து வாரிவந்து, பத்துமுறை அதன்மீது சுத்த நீரை நன்றாகத் தெளித்துக்காய்ச்சி, அதனையே குருவாக வைத்துக்கொண்டு செய்கின்ற வைத்தியத்தின் செய்முறை பாகத்தினை கேட்பாயாக.

பாகமாந் தைலங்கள் வடிக்கும்போது
பாங்கான வடிகலசங் கழஞ்சிகுருப்போடு
பாகமாம் கட்டினமு முருக்கினமும்பஸ்பம்
பாங்கான லேகியங்கள் செந்தூரங்கள்
பாகமாங் குருவதிலே சேர்த்துப்பண்ணு
பாங்கான வைத்தியந்தான் திரமோமெத்த
ஆகமா மித்தைவிட்டால் வாதம்பொய்யாம்
ஆகாசப் பரிதியுப்பு வேகந்தானே. (256)

மருந்திற்கான தைலங்களை வடிக்கும்போது வடிகலசத்தில் கழஞ்சி குருவைப்போடு, கட்டினமும் உருக்கினமும், பஸ்பங்கள், லேகியங்கள், செந்தூரங்கள் ஆகியவற்றைச் செய்யும் போதும் அவற்றை செய்யும் செய்பாகத்திலேயே குருவைச் சேர்த்துக் செய்வாயாக. ஒழுங்கான வைத்தியத்தின் ஆற்றல் மிக அதிகம். ஆகையால் இந்த வைத்தியத்தையும் விட்டுவிட்டால் வாதம் என்பதும் பொய்யாகிவிடும். ஆகாசக் குதிரை என்னும் பரிதிஉப்பு, கதிரவனின்.

தானென்ற விதினாலே வெடியுப்பாச்சு
சத்தியுட நாதமென்ற கெந்திசேரில்
ஆமென்ற அண்டரண்ட முருகிப்போச்சு
அரசர்கொடி கற்கோட்டை யிடியலாச்சு
போமென்ற காரமென்ன வெடியுப்பாச்சு
புகழான சாரமென்ன நவச்சாரமாச்சு
ஆமென்ற காரசார மிரண்டுஞ்சேரில்
அறுபத்து நால்சரக்குங் கட்டிப்போச்சே. (257)

வேகத்தால் வெடியுப்பாச்சு, அதனுடன் சத்தியுடைய நாதமாகிய கந்தகம் சேர்ந்தால் அண்டரண்ட கோளங்கள் எல்லாம் உருகிப்போகும். அரசர்கள் கட்டிய மிகவும் வலிமையான கோட்டை கொத்தளங்கள் எல்லாம் இடிந்து போகும், காரம் என்ற வெடியுப்பும் சாரம் என்ற நவாச்சாரமும் ஆகிய இரண்டும் சேர்ந்தால் எந்தச் சரக்குமே தானாக கட்டிவிடும், எனவே அறுபத்துநான்கு பாஷாணங்களாகிய சரக்குகளையும் கட்டிவிடும் ஆற்றல் காரசாரத்திற்கு உண்டு.

போச்சென்ற காரம்விட்டால் சாரமில்லை
புகழான சாரம்விட்டால் காரமில்லை
ஓச்சென்ற காரத்தின் மகிமையென்ன
ஒன்பதுநீர் சாரமொரு நவச்சாரமாச்சு
தேச்சென்ற காரத்தின் மகிமைசொல்லத்
சித்தர்முதல் ரிஷிகளால் முடியாதப்பா
ஆச்சென்ற ராமதேவர் சாரந்தொட்டு
ஆடினா ரேழுயுகம் வாதம்பார்த்தார். (258)

காரம் விட்டால் சாரம் இல்லை. சாரம் விட்டால் காரம் இல்லை. காரத்தின் மகிமை அதிகம்? ஒன்பது நீர்ச் சாரம் சேர்ந்தது ஒரு நவாச்சாரமாயிற்று. சாரத்தின்

மகிமை அதிகம். சித்தர்கள் ரிஷிகளாலும் சொல்லமுடியாது இராமதேவர் சாரத்தைதொட்டு ஏழுயுகம் இரசவாதம் செய்தார்.

பார்த்திட்ட காரமென்ன உப்புஉப்பு
பாங்கான உவருப்பு மண்ணுவாரி
வேத்திட்ட மும்முறைதான் காய்ச்சுவார்கள்
வெடியுப்பாங் கடையில்விற்குங் கடுங்காரமில்லை
ஆத்திட்டு வாதமுறை செய்யவென்றால்
அந்தவுப்பை வாங்கியதில் கரைசலத்தில்
வார்த்திட்டு அடுப்பேற்றிக் காய்ச்சியுப்பு
வளருமந்தப் பதமறிந்து மறுபாண்டம்வாரே. *(259)*

காரம் என்பது உப்பேயாகும். உவர் உப்பான மண்ணை வாரி மும்முறைகள் காய்ச்சினால். வெடியுப்பாகும் வாதமுறைகளைச் செய்ய வேண்டும் என்றால் அந்த உப்பை வாங்கி நீரில் கரைத்து அடுப்பிலேற்றிக் காய்ச்சி உப்பு வளரும் பருவம் அறிந்து பாண்டத்தை மாற்றுவாயாக.

வார்க்கவே கம்பிபோல் வளருமுப்பு
மறுத்துமந்த உப்பிலே சுத்தசலம்விட்டுப்
பார்த்துமே யடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சிப்
பதமறிந்து மறுபாண்டத் தெடுத்துவாரு
பூர்த்துமே கருவென்ன பழச்சாறுமோரு
புரைக்குற்று மாப்போலே கொஞ்சம்வாரு
ஆர்த்துமே பொங்கியது வளர்ந்துஓங்கி
அதிமதுரம் வெடியுப்புக் கடுங்காரமாச்சே. *(260)*

இவ்வாறு வார்க்கும்போது கம்பிபோல உப்பு வளரும், மறுபடியும் அந்த உப்பினிலே சுத்த நீர் விட்டு அடுப்பில் ஏற்றி எரித்துக் காய்ச்சிப் பதமறிந்து மறுபாண்டத்தில் எடுத்து வார்ப்பாயாக. அதில் மோர் புரை குத்துவதைப் போல் கொஞ்சம் பழச்சாறு வார்த்தால் அது பொங்கி வளர்ந்து கடுங்காரமுள்ள வெடியுப்பாக இருக்கும்.

வெடியுப்புசெயநீர்

காரமா மிந்தஉப்பு வேதைக்காகுங்
கடைதனில்முன் றாங்காய்ச்சல் கருமருந்துக்காகுங்
காரமாம் வெடியுப்பைச் செயநீர்செய்யில்
கருதியே சரக்கெல்லாங் கட்டிக்கொள்ளும்
பாரமாம் வாதத்துக் காதிஉப்பு
பார்த்திட்டார் சித்தரெல்லாம் வேதைகோடி
ஆரமாம் வெடியுப்புச் செயநீர்கேளு
அறைகிறேன் ஆறுநீர் விவரந்தானே. *(261)*

காரமாகிய இந்த உப்பு இரசவாதத்துக்கு ஆகும். கடைசியாக மூன்றாவது காய்ச்சலில் உப்பு கருமருந்தாகும். காரமாம் வெடியுப்பை செயநீர் செய்தால் சரக்கெல்லாம் கட்டிக் கொள்ளும். வாதத்துக்கு ஆதியுப்பாகிய இதனைப் பார்த்திட்ட சித்தர்கள் எல்லோரும் இதனால் கோடிவேதை செய்தார்கள். எனவே, வெடியுப்பு செயநீர் செய்முறையைக் கூறுகிறேன்.

விவரமாம் வெடியுப்பு அஞ்சாங்காய்ச்சல்
விளங்கவே பலம்பத்து நிறுத்துக்கொண்டு
கவரமாஞ் சீனமது பலந்தான்ரெண்டு
கண்டரது பலமிரண்டு சூடன்ரெண்டு
இவரமாங் கடல்நுரையும் பலந்தான்ரெண்டு
ஏறலென்ற சிப்பியது பலந்தான்ரெண்டு
அரவமாம் வெடியுப்போ டொக்கச்சேர்த்து
அப்பனே கல்வத்தில் அரைக்கக்கேளே. (262)

ஐந்தாவதுகாய்ச்சல் வெடியுப்பு வாங்கி, பத்துப்பலம் உப்பை எடைபோட்டு எடுத்துக் கொண்டு, சீனக்காரம் இரண்டுபலம் துரிசு இரண்டு பலம், சூடன் இரண்டுபலம், கடல்நுரை இரண்டுபலம் சிப்பி இரண்டு பலம் இவையனைத்தையும் வெடியுப்புடன் ஒருங்கே சேர்த்து கல்வத்தில் இட்டு அரைத்திடுவாயாக.

அரைக்கவே அமுரியிலே பூநீறிட்டு
அத்தெளிவு மண்டவெள்ளைக் கருவுங்கூட்டி
உரைத்துமே அரைத்துபில்லை ரவியிற்காய்ந்து
ஓட்டிலிட்டு மேலோடு கொண்டுமூடி
நிறைந்துமே சீலைசெய்து முழப்புடத்திற்போடு
நீறியது சுன்னமாய் நிலைக்கும்பாரு
குரைத்துமே சுன்னத்தில் நவச்சாரம்பாதி
கூட்டியே பொடிபண்ணிப் பீங்கானில்வையே. (263)

இவ்வாறு அரைத்து அமுரியிலே பூநீறிட்டு அந்தத் தெளிவுடன் கோழிமுட்டை வெள்ளைக் கருவுங்கூட்டி அரைத்து பில்லை செய்து சூரியவெப்பத்தில் காயவைத்து, பின்னர் ஓட்டிலிட்டு மேலோடு மூடி சீலைமண்செய்து முழப்புடத்தில் புடம் போடுவாயாக. அது நீறிச் சுன்னமாகும். அந்தச் சுன்னத்துடன் நவாச்சாரம் பாதியளவு கூட்டி பொடிசெய்து பீங்கானில் வைப்பாயாக. (அமுரி = கடல் நீர்)

வைத்துமே நாழிவாய்ச் சட்டியிலேகேளு
வளையம்போற் சாணியிட்டுத் தண்ணீர்வார்த்து
ஐத்துமே பீங்கானை யதிலேவைத்து
அசையாமல் மேற்சட்டி கவிழ்த்துமூடிக்
குய்த்துமே காற்றில்லாக் குளிர்விடத்தில்
குழிவெட்டி மணலிட்டுத் தண்ணீர்வார்த்து
மெய்த்துமே குழியிலிந்தச் சட்டிவைத்து
மேலேஒரு தாருகொண்டு மூடிப்போடே. (264)

வைத்தபிறகு அகன்றவாய்ச் சட்டியில் வளையம் போல சாணியிட்டு தண்ணீர் வார்த்து பீங்கானை அதிலே வைத்து அசையாதவாறு மேல்சட்டி கவிழ்த்து மூடுவாயாக. காற்று இல்லாத குளிர்ந்த இடத்தில் குழிவெட்டி மணலிட்டு தண்ணீர் வார்த்து, அந்தக் குழியிலே இந்தச் சட்டியை வைத்து மேலே ஒரு தாருகொண்டு மூடி வைப்பாயாக.

மூடியே பட்சத்தி லெடுத்துப்பாரு
முசியாதே புஷ்டியற்றுச் சலமாய்நிற்கும்
ஆடியே செயநீரைக் குப்பியிலேவாங்கு
ஆத்தாட்கும் வடுகனுக்கும் பூசைபண்ணு
வாடியே செயநீரில் வீரம்பூரம்
வகைக்குஒரு விராகனிடை பொடித்துப்போடு
பாடியே பாஷாண மறுபத்துநாலும்போடு
பரிவான லவணவகை யிருபத்தஞ்சும்
ஊடியே கட்டினமு முருக்கினமுமாகும்
உபரசங்கள் சத்தாகு மெழுகுமாமே. (265)

இவ்வாறு மூடிவைத்துப் பதினைந்து நாட்கள் கழித்து அதனை எடுத்துப் பார்ப்பாயாக. மயங்கிவிடாதே அது தண்ணீராய் நிற்கும். அதுவே வெடியுப்புச் செயநீர் அதை எடுத்துக் குப்பியிலே வார்த்துக்கொள். ஆத்தாளுக்கும் வடுகனுக்கும் பூசை செய். அந்த செயநீரில் வீரம் பூரம் வகைக்கு ஒரு வராகன் எடை பொடித்துப் போடு. இந்த செயநீரால் பாஷாண வகை அறுபத்தி நாலும் உப்பு வகை இருபத்தைந்தும் இந்தச் செயநீரால் கட்டினமும் உருக்கினமும் ஆகும். உபரசங்கள் சத்தாகும் மெழுகும் ஆகும்.

மெழுகாகுஞ் சரக்கெல்லாந் தனித்தனியேகட்டும்
வேதையிட வெகுதூர மெட்டியோடும்
மெழுகாகு நவலோக மெல்லாநீறும்
விட்டாட்டச் சூதமது வெண்ணெய்போலாந்
மெழுகாகுஞ் சூதவெண்ணெய் வேதைபாரு
சாரணைதான் செய்குளிகை கெவுனமாகுங்
கழுவான வாதமொடு வயித்தியந்தான்ரெண்டுங்
கருதியே சூஸ்திரத்தில் கலந்தேநன்றாய்ப்
பழுதில்லா நவமணிகள் கோத்திட்டாப்போற்
பாகமாய்க் கைமுறையாய்ப் பாடினேனே. (266)

நவலோகங்களும் நீரில் சுன்னமாகும். பாதரசத்தில் விட்டு மத்திக்க வெண்ணெய் போல் திரளும். அதை மணியாகச் செய்து சாரணை ஏற்றி. அதைக் கொண்டு கவனமணியும் செய்யலாம். இங்கு நான் வாதம், வைத்தியம் இரண்டையும் சேர்ந்தாற் போல் பாடி உள்ளேன். நவமணிகளாகிய நவரத்தினங்களைப் போல் பாகமாய் கைமுறை செய்முறையாவும் கோர்த்ததைப் பாடலாகப் பாடியுள்ளேன்.

எமசண்ட மாருதக்குடோரி

பாடுகிறேன் எமசண்ட மாருதக்குடோரி
பார்த்திட்டால் நோயெல்லாம் பறந்துபோக
நீடுவெள்ளைப் பாஷாணஞ் சிலையும்லிங்கம்
நெறிவிஷமு மரிதாரங் கெவுரிதுத்தஞ்
சூடியே வெண்காரம் வீரம்பூரஞ் சூதம்
கந்தியொடு பன்னிரண்டும் வெவ்வேறாகக்
காடியே வெடியுப்புச் செயநீராலே
காட்டியே வகைவகைக்குக் கழஞ்சுகொண்டே. (267)

எமசண்டமாருதக்குடோரி என்ற இந்த மருந்தின் செய்முறையை கூறுகிறேன். இந்த மருந்தைப் பார்த்தாலே நோய்கள் எல்லாமே பறந்து போய்விடும். வெள்ளைப்பாஷாணம், மனோசிலை, லிங்கம், நெறிவிஷம், அரிதாரம், கெளரி, துத்தம், வெண்காரம், வீரம், பூரம், சூதம், கெந்தி இந்த பன்னிரண்டும் வெவ்வேறாக எடுத்துக்கொள். வெடியுப்பு செயநீராக வகைக்கு இரண்டு கழஞ்சி தனித்தனியாக அரைத்து வைத்துக் கொள்.

கழஞ்சுரெண்டு அப்ரேக நவநீதந்தான்
கட்டியதோர் கெந்திரண்டு குருவும்ரெண்டு
வழஞ்சியே யிவையெல்லாங் கல்வத்திட்டு
வர்க்கும்பால் புள்ளடிச்சாறு முருக்கிலைச்சாறு
பழச்சாறு தழிஞ்சியே நூல்தாமரைச்சாறு
கற்றாழைச் சாறரசம் பட்டைச்சா றுநாவற்பட்டைச்சாறு
உழஞ்சியே கரந்தைச்சாறு ஊசிமல்லிகைச்சாறு
உத்தாமணி யோட்வுரி மேனிச்சாறும்
அழஞ்சியே வெடியுப்பு நீருங்கேளு
ஆட்டுநீ சாறொன்று சாமமொன்றே. (268)

அப்பிரக வெண்ணெய் இரண்டு கழஞ்சு கட்டிய கெந்தி இரண்டு கழஞ்சு, குரு இரண்டு கழஞ்சு ஆகிய இவையெல்லாவற்றையும் கல்வத்திலிட்டு எருக்கம்பால், புள்ளடிச்சாறு முருக்கிலைச்சாறு, பழச்சாறு, அழிஞ்சிச்சாறு, நூல்தாமரைச்சாறு, கற்றாழைச்சாறு, சம்பட்டைச்சாறு, நாவற்பட்டைச்சாறு, கரந்தைச்சாறு, ஊசியிலைச்சாறு, உத்தாமணிச்சாறு, அவுரிச்சாறு, குப்பைமேனிச்சாறு, வெடியுப்பு நீர் இவற்றில் முதலாவதாக ஒவ்வொரு சாறிலும் ஒவ்வொரு ஜாமம் ஆட்டியரைப்பாயாக.

சாமந்தான் பனிரண்டு ஆட்டிவில்லை
சாதகமாய்க் கட்டியே ரவியுலர்த்திச்
சேமென்ற வோட்டிவிட்டு மேலோடுமூடிச்
சீலைசெய்து முழப்புடத்தில் செந்தூரமாகுங்
காமென்றே யெடுத்ததனைக் கல்வத்திட்டுக்
காந்தசெந் தூரமொடு லோகசெந்தூரந்
தாமென்ற காரியம்வெள் ளீயச்செந்தூரந்
தாம்பிரசெந் தூரமொடு நாகசெந்தூரமாமே. (269)

பன்னிரண்டு ஜாமங்கள் ஆட்டியபிறகு வில்லைதட்டி சூரிய ஒளியில் உலர்த்தி ஓட்டிலிட்டு, மேல் ஓடுமூடிச் சீலைமண் ஏழுசெய்து முழப்புடத்தில் போட செந்தூரமாகும். இதனை எடுத்துக் கல்வத்திலிட்டு காந்த செந்தூரம், லோக செந்தூரம் காரீய, செந்தூரம் வெள்ளியச் செந்தூரம், தாம்பிரச் செந்தூரம், நாகச் செந்தூரம்,

செந்தூரம் வகைக்கிரண்டு கழஞ்சிடைதானையா
சிறப்பான கஸ்தூரி கழஞ்சிரெண்டு
சுந்தரமாஞ் சுத்தித்த வாளம்ரெண்டு
சுத்திசெய்த கருநாவி கழஞ்சிரெண்டு
சந்திரமா மியானைத்திப் பிலியின்மூலங்
கருஞ்சீரஞ் சதகுப்பை சித்ரமூலம்
மந்திரமாந் திரிகடுகு கிராம்புகோஷ்டம்
மாவிலிங்கு முருங்கைவேர் எருக்கம்வேரே. *(270)*

ஆகியவற்றில் வகைக்கு இரண்டு கழஞ்சு எடுத்து கஸ்தூரி இரண்டு கழஞ்சு, சுத்தி செய்த வாளம் இரண்டு கழஞ்சு, சுத்தி செய்த கருநாவி இரண்டு கழஞ்சு, யானைத்திப்பிலியின்வேர், கருஞ்சீரகம், சதகுப்பை, சித்திரமூலம், திரிகடுகம், கிராம்பு, கோஷ்டம், மாவிலிங்கு, முருங்கைவேர், எருக்கம்வேர்,

எருக்கோடு விலாமிச்சங் கோரைக்கிழங்கு
மிவையெல்லாம் வகைவகைக்குக் கழஞ்சிகூட்டி
அருக்கோடு சேரவே கல்வத்திட்டு
அரைக்கவே சாறுவகைக் கியாழங்கேளு
சுருக்கோடு தூதுவளை கண்டங்காலி
தும்பைபேய்த் தும்பையொடு துளசிகாந்தி
பெருக்கான சித்தமல்லி பேராமல்லி
பெருகுமிழுஞ் சிறுகுமிழும்புனல்முருங்கைவெண்ணொச்சி. *(271)*

விலாமிச்சம், கோரைக்கிழங்கு இவையெல்லாம் வகைக்கு ஒரு கழஞ்சு கூட்டி கல்வத்திலிட்டு அரைக்க வேண்டும். அரைக்கும்போது அதில் சேர்க்கும் சாறு வகைக் கியாழம் கேளு, தூதுவளை, கண்டங்காலி தும்பை, பேய்த்தும்பை, துளசி, காந்தி, சித்தாமல்லி, பேராமல்லி, பெருங்குமிழ், சிறுகுமிழ், புனல் முருங்கை, வெண்நொச்சி,

நொச்சியொடு சிற்றாமுட்டி பேராமுட்டி
நோக்கரிய குருந்தொட்டி முக்காவேளை
கச்சியே யிவையெல்லாம் இடித்துக்கொள்ளு
கியாழந்தா னெட்டொன்றாய்க் காய்ச்சிவாங்கி
அச்சியே கியாழத்தால் நாலுசாமம்
அவுரிச்சாறு கரிசாலை குமரிச்சாறும்
திச்சியே மேனிச்சாறு பிரமிச்சாறும்
செப்புவே னிவையெல்லாஞ் சேர்த்துக்கொண்டு

அச்சியே சாறுவகை சாமமெட்டு
அரைத்திடவே பன்னிரண்டு சாமமாகும்
உச்சிதமாங் கணபதியைப் பூசைபண்ணு
உழுந்தளவு உண்டைசெய்து நிழலுலர்த்தே. (272)

சிற்றாமுட்டி, பேராமுட்டி, குருந்தொட்டி, முக்காவேளை இவையெல்லா வற்றையும் இடித்துக் கியாழம் செய்து எட்டுக்கு ஒன்றாகக் காய்ச்சி அக்கியாழத்தால் நான்கு சாமம் அரைத்துக் கொள்பின் அவுரிச்சாறு, கரிசாலைச்சாறு, குமரிச்சாறு, மேனிச்சாறு, பிரமிச்சாறும் இவையெல்லாவற்றையும் சேர்த்துக் கொண்டு இதனால் எட்டு சாமங்கள் அரைத்திடவே பன்னிரண்டு ஜாமமாகும். பின்னர் உச்சிஷ்ட கணபதியைப் பூசை செய்து உழுந்தளவு உருண்டை செய்து நிழலில் உலர்த்திக் கொள்.

உலர்த்தியே நோயறிந்து அனுபானஞ்செய்து
உத்தமனே ஒருஉண்டை அனுபானத்தில்
தளர்த்தியே ஒருஉண்டை கொள்ளும்போது
சன்னிவகை தொண்ணூற்று ஆறுமெங்கே
அலர்த்தியே பதினெட்டுச் சுரதோசமெங்கே
அசையாத வாதபித்த சிலேற்பனந்தானெங்கே
துலர்த்தியே யெட்டுவகைக் குன்மமெங்கே
தொலையாத வாயுவெங்கே வாதமெங்கே. (273)

உலர்த்தியபிறகு, நோயறிந்து அனுபானம் நிச்சயித்து ஒரு உருண்டை அனுபானத்துடன் உட்கொள்ளும் போது ஜன்னிவகைகள் தொண்ணூற்றாறும் எங்கே? பதினெட்டு வகை ஜுரதோஷங்களும் எங்கே? வாத, பித்த, சிலேத்தும நோய்கள் எங்கே? எட்டுவகை குன்மங்கள் எங்கே? தொலையாதிருந்த வாய்வு எங்கே? வாதம் எங்கே எங்கே என்று கேட்கும்படி நோய்கள் ஒடிப்போய்விடும்.

எங்கேபோம் சயமீளை மந்தாரகாசம்
ஏத்தரிய வுட்குத்துப் புறவீச்செங்கே
தங்காது முயல்கண்டன் குமரகண்டன்
தனுர்வாதம் காக்கைவலி குதிரைவலிமாந்தம்
மாங்காத பதினெட்டுக் குஷ்டம்சூலை
வாயுவொடு கிரந்தியரை யாப்புக்காசம்
தங்காது கெற்பநோய் சூதகவாய்வு
தரியாது பெருவயிறு பீலியுளமாந்தை. (274)

சயம், ஈளை, மந்தாரகாசம், உட்குத்து, புறவீச்சு எங்கே? முயல்கண், தனுர்வாதம், காக்கைவலி, குதிரைவலி, மாந்தம், பதினெட்டு வகைக் குஷ்ட ரோகங்கள், சூலை வாயு, கிரந்தி, அரையாப்பு, காசம், கர்ப்ப நோய், சூதகவாய்வு, பெருவயிறு, பீலி உள்மாந்தம்.

மாந்தையாம் விரைவாதம் அண்டவாதம்
மாரடைப்பு வரள்வாய்வு அந்தரவாய்வு
மாந்தையாம் ருத்திரவாய்வு மூலவாய்வு
மந்தார நிலகாசம் ருத்ரகாசம்
தாந்திரிகச் சன்னியொடு கெம்பீரச்சன்னி
சத்தபித்தங் காமாலை பாண்டுசுகசன்னி
மாந்தையே நோயெல்லாம் வாராதோடும்
மகாவேம சண்டமா ருதக்குளிகையென்னே. (275)

விரைவாதம், அண்டவாதம், மாரடைப்பு, வரள்வாய்வு, அந்தரவாய்வு, ருத்திர வாய்வு, மூலவாய்வு, மந்தார காசம், ருத்ரகாசம், தாந்திரிக ஜன்னி, கெம்பீரசன்னி, சப்தபித்தம், காமாலை, பாண்டு, சுகசன்னி, போன்ற நோய்கள் எல்லாம் திரும்பிப்பாராமல் ஓடி விடும்.

அப்ரக செந்தூரம்

என்னவே அப்ரேகச் செந்தூரங்கேளு
இதமான கிருஷ்ண அப்பி ரேகம்நன்று
நன்னயமாய் வாங்கியதைக் காய்ச்சிக்காய்த்துச்
நலமான ஆவின்பால் தன்னில்தோய்த்துச்
சன்னவே கரிசாலை பொற்றலையின்மேனிச்
சாறதனில் காய்ச்சியே தோய்த்துநன்றாய்
வென்னவே சுத்திசெய்து நவநீதம்பண்ணி
மேனியிட சாறுவிட்டு ஒருசாமமாட்டி
உன்னியே வில்லைதட்டி உலரவிட்டு
ஓட்டிலிட்டு மேலோடு கொண்டுமூடே. (276)

கிருஷ்ண அப்பிரகம் என வழங்கும் கறுப்பு அப்பிரேகம்தான் மிகச் சிறந்தது ஆகும். இந்தக் கிருஷ்ண அப்பிரகத்தை வாங்கி நன்றாகக் காய்ச்சிக் காய்ச்சி பசுவின் பாலில் தோய்த்துத் தோய்த்து எடுத்துக் கொண்டு, பிறகு மறுபடியும் காயவைத்து கரிசாலைச்சாறு, பொற்றலைகையான் சாறு, முதலியவற்றில் தோய்த்து நன்றாக சுத்தி செய்து கொண்டு வெண்ணைய் போல் செய்து குப்பைமேனிச் சாறுவிட்டு ஒரு ஜாமம் ஆட்டி வில்லைதட்டி, உலரச்செய்து ஓட்டிலிட்டு மேல் ஓடு கொண்டு மூடிச்சீலைமண் செய்து,

மூடியே முழப்புடத்தி விட்டுவாங்கு
முசியாதே ஆட்டிமுன்போல் புடத்தைப்போடு
மூடியே மேனியிலே புடந்தான்பத்து
முள்ளங்கிச் சாற்றிலே புடந்தான்பத்துப்
போடவே பொற்றலையின் சாற்றிற்பத்துப்
பொன்காணிச் சாறுபத்துக் கதலிச்சாறுபத்து

நீடவே மல்லிகைச்சாறு மணத்தக்காளி
நீரமுள்ளி முருக்கிலைச்சாறு கற்றாழைச்சாறு
ஆடலே அவுரிச்சாறு முசுமுசுக்கைச்சாறு
அப்பனே ஒவ்வொன்றிற் புடந்தான்பத்தே. (277)

முழப்புடத்திலிட்டு எடுத்து ஆட்டி முன்போலவே. மறுபடியும் சாற்றில் ஆட்டிப்புடத்தை போடு. இப்படியே குப்பை மேனிச்சாற்றில் அரைத்து பத்துப்புடம் முள்ளங்கிச் சாற்றிலே பத்துப் புடங்கள் பொற்றலைகையான் சாற்றிலே பத்துப்புடங்கள், பொன்னாங்காணிச் சாற்றில் பத்துப்புடங்கள், கதலிச் சாற்றிலே பத்துப்புடம், மல்லிகைப்பூச் சாற்றில் பத்துப்புடம், மணத்தக்காளிச்சாற்றில் பத்துப்புடம், நீர்முள்ளிச் சாற்றில் பத்துப்புடம், முருங்கையிலைச் சாற்றில் பத்துப்புடம், கற்றாழை சாற்றில் பத்துப்புடம், அவுரிச்சாற்றில் பத்துப்புடம், முசுமுசுக்கைச் சாற்றில் பத்துப்புடம் இவ்வாறு ஒவ்வொரு சாற்றிலும் அரைத்து ஒவ்வொன்றுக்கும் பத்துப் புடம்போட வேண்டும்.

பத்தென்ன முன்போலே அரைத்துப்போடு
பதறாதே யழுக்கறா தின்னங்கேளு
வித்தென்ன குருவதிலே கேளுகேளு
வெடியுப்பு நீராலே சாமமாட்டி
நைத்துமே வில்லைதட்டிக் காயவைத்து
நலமாக முன்போலே புடத்தைப்போடு
ஐத்துமே யெடுத்துப்பின் செயநீராறே
ஆட்டியே முன்போலே புடத்தைப்போடு
ஐத்துமே இப்படியே பத்துமுறைபோடு
அம்மம்மா வெடியுப்புச் செயநீர்வேகம்
ங்கைத்துமே போகாது அழுக்கிராது
கசடில்லா தப்ரேகம் செந்தூரமாமே. (278)

இவ்வாறு புடம் போட்டாலும் அழுக்கு நீங்காது. அதனால் வெடியுப்புச் செயநீரால் ஒருசாமம் ஆட்டி வில்லை தட்டி காயவைத்து முன்போலவே புடம்போட வேண்டும். பிறகு ஆறுவகை செயநீரால் ஆட்டி முன்போலவே புடம் போட வேண்டும். இப்படியாக பத்து முறை புடம் போடும்போது வெடியுப்பு செயநீரின் வேகத்தால் அழுக்கெல்லாம் போய்விடும். அப்பிரகம் கசடில்லாமல் செந்தூரமாகும்.

செந்தூரஞ் சோதனைதா னறியவேண்டிற்
செலத்தையொரு சட்டியிலே யிட்டுமேலே
செந்தூரம் பணவிடைதான் சலத்திற்போட்டுச்
சிறக்கவதின் மேலேயோ ருளுந்தைப்போடச்
செந்தூரம் உளுந்ததனை தாங்கிற்றானால்
செயமாகு மில்லாவிட் டாற்பின்புகேளு
செந்தூரந் தனையெடுத்துக் கல்வத்திட்டுச்
சிறப்பாக ஆட்டிமுன்போல் புடத்தைப்போடே. (279)

செந்தூரம் நன்றாக முடிந்திருக்கிறதா என்பதை பரிசோதனை செய்து அறிய வேண்டின், ஒரு சட்டியிலே தண்ணீர் வார்த்து, அதன்மீது ஒரு பணஎடை செந்தூரத்தைப் போட்டு அதன் மீது ஓர் முழுஉளுந்தை போடச் செந்தூரம் உளுந்து தன்னைத் தாங்கிக் கொண்டே மிதக்குமானால் ஜெயம் பெற்ற செந்தூரமாக கருதலாம். இல்லாவிட்டால் செந்தூரத்தை எடுத்துக் கல்வத்திலிட்டு மீண்டும் நன்றாக அரைத்து முன்புபோல் புடம் போட்டு எடுக்கவும்.

போடவே அப்ரேகச் செந்தூரமகிமை
புகலுதற்கு நாவுண்டோ பாவுண்டோசொல்
வாடவே வெடியுப்புச் செயநீர்விட்டால்
மற்றொன்றி லப்ரேக மழுக்கறாது
கூடியே யழுக்கிருந்தா லுடலில்தங்கும்
குடிகெடுக்கும் அரோசிகம்நோய் குணமாகாது
தேடியே செந்தூரம் திறமாய்ச்செய்து
தின்றிடிலோ நோயேது செப்பக்கேளே. *(280)*

இப்படி புடம் போட்டு எடுத்த அப்பிரேக செந்தூரத்தின் மகிமையை புகழ்வதற்குத்தான் நாவுண்டோ? பாடுவதற்குத்தான் பாடலுண்டோ? வெடியுப்பு செயநீரை விட்டுவிட்டால், வேறு எதிலுமே அப்பிரேகத்தின் அழுக்கு நீங்காது.. அப்பிரகத்தில் அழுக்கிருந்தால் அது உடலில் தங்கிக் குடியை கெடுத்துவிடும். அரோசிகம் ஏற்படும். நோயும் குணமாகாது. எனவே செய்முறைகளில் சிறந்த முறையை தேடி தேர்ந்து எடுத்துத்தான் செந்தூரத்தைச் செய்து சிறப்பாக முடிக்க வேண்டும். அவ்வாறு திறமையாகச் செய்த செந்தூரத்தைத் தின்றிட்டால் நோய்தான் ஏது?

சூத செந்தூரம்

செப்பரிய சூதசெந் தூரங்கேளு
திறமான சூதமது பலந்தான்பத்து
ஒப்பரிய கெந்தியது ரெண்டரையேபலந்தான்
ஒட்டிவிட்டுக் கெந்தகந்தா னுருகும்போது
மப்பெரிய சூதத்தைக் கொட்டிக்கிண்டி
மணல்போலே ஆகுமதைக் கல்வத்திட்டு
அப்பெரிய விட்டுசெம்பைச் சாற்றால்சாமம்நா
லரைத்துமே பொடியாக்கிக் குப்பிக்கேற்றே. *(281)*

சொல்வதற்கரிய சூத செந்தூரத்தின் செய்முறையைக் கூறுகிறேன். கேட்பாயாக. தரமான பாதரசம் பத்துப்பலம், எடைபோட்டு எடுத்துக்கொண்டு, கந்தகம் இரண்டரை பலம், ஓட்டிலிட்டு கந்தகம் உருகும்போது சூதத்தைக் கொட்டி கிண்டிக் கொண்டிருந்தால் அது மணல் போலாகும். அதனைக் கல்வத்திலிட்டு, செம்பைச் சாற்றால் நாலு சாமம் வரை அரைத்துப் பொடியாக்கிக் குப்பிக்குள் அடைத் தேற்றுவாயாக.

ஏற்றியே வாலுகையின் மேலேவைத்து
எரித்திடுநீ தீபம்போல் மூன்றுசாமம்
ஆற்றியே மறுபடியு மரைத்துமுன்போல்
அப்பனே வாலுகையி லெரித்துவாங்கு
போற்றியே மறுபடியுங் கல்வத்திட்டுப்
புகழான முன்சாற்றா லாட்டித்தூளாய்
ஆற்றியே குப்பிக்கு அரைவாசியிட்டு
அப்பனே வாலுகையில் தீயைமூட்டே. (282)

குப்பிக்கு ஏற்றிய பிறகு வாலுகையில் மேலே வைத்து எரித்திடு, தீயானது தீபம் போல மூன்று ஜாமங்கள் எரித்திட வேண்டும். அதன்பிறகு அதையெடுத்து ஆறவிட்டு, மீண்டும் அரைத்து முன்புபோலவே வாலுகையில் எரித்து, மீண்டும் கல்வத்திலிட்டு முன்பு கூறிய சாற்றினால் அரைத்து ஆட்டித்தூளாகிய செந்தூரத்தை ஆறவைத்து குப்பிக்கு அரைவாசியிட்டு வாலுகையின் தீயை மூட்டுவாயாக.

மூட்டியே தீபம்போல் மூன்றுசாமம்
முறையாக வெரித்திடவே கருவைக்கேளு
போட்டியே தாளகந்தான் பலமும்ரெண்டு
பொடிசெய்து வைத்துநீ கொஞ்சங்கொஞ்சம்
ஆட்டியே குப்பியிலே போட்டுப்போட்டு
அப்பனே கிண்டிவா சலாகையாலே
தீட்டியே அடியிலே மருந்தில்லாட்டால்
சீரான பதமென்று அடுப்பைஆற்றே. (283)

தீமூட்டி தீபம்போல மூன்று ஜாமங்கள் முறையாக எரித்துப்பின், தாளகம் இரண்டுபலம், எடுத்துபொடி செய்து வைத்துக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகக் குப்பியிலே போட்டுப் போட்டு சலாகையினால் அடியிற் கிண்டிவர. குப்பியின் அடியிலிருந்த மருந்து தீர்ந்துவிட்டால் அடுப்பை ஆற்றிவிடு.

ஆற்றவே செந்தூரம் அருணன்போலா
மப்பனே தேங்காய்போ லிருக்கும்பாரு
தேற்றியே தாளகந்தான் போடாவிட்டால்
சிவ்க்காது மயில்கழுத்து வர்ணம்போலாம்
பார்த்துமே ஆத்தாளைப் பூசைபண்ணிப்
பணவிடைதான் செந்தூரம் பனைவெல்லத்தில்
ஆத்துமே வுள்ளுக்குக் கொண்டாயானால்
அரையாப்புக் கிரந்திகுஷ்ட ரோகம்போமே. (284)

அடுப்பை ஆறவிட்டு குப்பியிலே செந்தூரம் அருணன்போலவும் தேங்காய்ப் போலவும் இருக்கும். தாளகத்தைப் போடா விட்டால் செந்தூரம் சிவக்காமல் மயில் கழுத்து வர்ணத்தில் இருக்கும். செந்தூரம் சிவந்திருப்பதைப் பார்த்து ஆத்தாளைப்

பூசை பண்ணி பண எடைதான் செந்தூரத்தைப் பனைவெல்லத்தில் கலந்து உட்கொண்டால், அரையாப்பு, கிரந்தி, குஷ்டரோகம் போகும்.

போமென்ற பத்தியமா யுண்டுதேறு
பொல்லாத குன்மமொடு வாயுசூலை
தானென்ற மேகவடி தமுதணையும்சூலை
தவளைசொரி வெண்குஷ்டம் அழுகண்ணிகரப்பான்
நாமென்ற நோயெல்லாம் நாடாதோடும்
நல்லதொரு செந்தூரம் தனைமடக்கி
ஆமென்று அரைத்துமுன்போல் தங்கஞ்சேர்த்து
ஐந்துதரம் வைத்தெடுக்க அருணனாமே. (285)

செந்தூரம் உண்ணும்போது பத்தியமாக இருப்பது அவசியமாகும். பத்தியமாக இருந்தால்தான் உடம்பு தேறும். பொல்லாத குன்ம நோய்கள், வாயுசூலை, மேகவடி, சூலை தவளைச் சொறி, வெண்குஷ்டம், அழுகண்ணி, கரப்பான் போன்ற நோய்கள் எல்லாம் நாடாது ஓடும். நல்லதான இந்த செந்தூரத்தை மீண்டும் மடக்கி அரைத்து தங்கம் சேர்த்து ஐந்துதரம் வைத்து எடுக்க சூரியன்போல் தகதகக்கும்.

அருணனாஞ் செந்தூரம் வேதையிட்டால்
அழகான நவலோகம் பத்துமாற்று
மருணனாம் வாதத்தில் சித்தரெல்லாம்
வைத்துவை[illegible] கருவையெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
கருணமாங் குரு[illegible]க்க வகையுஞ்சொன்னேன்
கருவாளி யா[illegible]க்கால் கண்டுபாரு
தருணமாம் வைத்[illegible]த்தில் முறைதப்பாமல்
சாற்றினேன் நிசமாகும் சார்ந்துபாரே. (286)

அதனுடன் நவலோகம் சேர்த்து வேதையிட்டால் பத்து மாற்றாகும். இந்த ரசவாதவித்தைதனை சித்தர்கள் மறைத்து வைத்தார்கள். அதன் கருவையெல்லாம் வெளிப்படையாக நான் சொல்லி விட்டேன்.

மகா திராவகம்

பாரப்பா மகத்தான திராவகத்தைப்
பாடுகிறேன் மாணாக்கா பரிந்துகேளு
மாரணமாம் நோயெல்லாம் மாண்டுபோக
மகத்தான சரக்கெல்லாம் கட்டிப்போகக்
காரணமாம் சித்தரெல்லாம் மெச்சிக்கொள்ளக்
கைமுறையாய் ரசவாதங் கைக்குள்ளாக
நாரணமாம் நாயுருவி குப்பைமேனி
நலத்தானை நாணல்தென்னல் கதலியென்னே. (287)

மகத்தான திராவகத்தைப் பற்றிப் பாடுகிறேன். நோய்களுக்கெல்லாம் மாரணமாம். மகத்தான சரக்குகளையெல்லாம் கட்டிப்போடும், இவற்றுக்கெல்லாம் காரணமாம் சித்தர்கள் எல்லாம் மெச்சிக் கொள்வதற்காக கைமுறையாக ரசவாதம் கைக்குள் ஆவதற்காக நாயுருவி, குப்பைமேனி, நலத்தானை, நாணல், தென்னல், வாழை.

கதலியா முருங்கைகொடு வேலிதுத்தி
கருமத்தை கொடிக்க்ள்ளி திருகுகள்ளியெருக்கு
வதலியே வெவ்வேறே சுட்டுச்சாம்பல்
வகைக்குநால் படியளந்து பாண்டத்திட்டுக்
கதலியே யானைநீர் குதிரைநீரும்
கழுதைநீர் ஒட்டகைநீர் மனுஷனீராம்
முதலியநீர் தன்னோடு இன்னஞ்சொல்வேன்
முற்றுமதைத் தெரிந்துணர்ந்து செய்நீராமே. (288)

முருங்கை, கொடுவேலி, துத்தி, கருவூமத்தை, கொடிக்கள்ளி, திருகுகள்ளி, எருக்கு, வெவ்வேறாய்ச் சுட்டுச் சாம்பல் வகைக்கு நாலு படியளந்து பாண்டத்தில் இட்டு யானைநீர், குதிரைநீர், ஒட்டகை நீர், மனிதநீர் முதலிய நீர்களோடு, (இங்கு நீர் என்பது மூத்திரத்தைக் குறிக்கிறது)

நீரான ஆவினீர் வெள்ளாட்டுநீரும்
நிலையாகக் கலந்தொன்றாய்ச் சொல்லக்கேளு
சாரான சாம்பலுக்கு ரெட்டிவாரு
சாதகமாய்க் கலக்கியந்தத் தெளிவைவாங்கி
ஆறாக அடுப்பேற்றி யெரித்துக்காய்ச்சி
அப்பனே ரவியிலுப்பாம் வகைவகைக்குப்
பூராக வகைக்குரெண்டு பலந்தான்சொன்னோம்
பூநீறு காய்ச்சியுப்பு ரெண்டுபலம்போடே. (289)

பசுவின்நீர், வெள்ளாட்டுநீர், ஒன்றாகக் கலந்து, சாம்பலுக்கு இருபங்கு வார்த்து சாம்பலைநீரில் கலக்கி அதன் தெளிவை வாங்கி அடுப்பில் ஏற்றி எரித்துக் காய்ச்சி சூரிய வெப்பத்தில் உலர்த்த உப்பாகும். வகை வகைக்கு இரண்டு பலந்தான் சொன்னோம். பூநீறு காய்ச்சி உப்பு, இரண்டு பலம் போடவும்.

பலமான கல்லுப்பு வளையலுப்பு
பாறையுப்பு வெடியுப்பு சவுட்டுப்போடு
கலமான விந்துப்பு அட்டுப்போடு
கறியுப்பு வகைவகைக்குப் பலந்தான்ரெண்டு
கலமான நவச்சாரம் சூடசீனம்
காட்டுநவ சாரமுடன் அன்னபேதி
குலமான விவையெல்லாம் வகைக்கிரண்டுபலமாம்
கூறிய வெடியுப்பு இருபத்தஞ்சே. (290)

அதனுடன் கல்லுப்பு., வளையலுப்பு, பாறையுப்பு, வெடியுப்பு, சவுட்டு உப்பு, இந்துப்பு, அட்டு உப்பு, கறியுப்பு இப்படி வகைவகைக்கு இரண்டுபலம், நவாச்சாரம், சூடன், சீனம், காட்டு நவாச்சாரம், அன்ன பேதி இவையெல்லாம் வகைக்கு இரண்டுபலம், வெடியுப்பு இருபத்தைந்து பலம்.

அஞ்சோடு சீனமது இருபத்தஞ்சு
ஆகவே வகையெல்லாம் பலம்நூறாச்சு
தன்சாறா மேனிச்சாறு நாயுருவிச்சாறு
தனிலரைத்துச் சணல்விரைபோல வில்லைசெய்து
அஞ்சாதே ரவிதனிலே உலரச்செய்து
அஞ்சுபங் கிட்டதனைப் பாண்டந்தன்னில்
அஞ்சாதே ஒருபங்கு மருந்தெடுத்து
அரைவாசி யிட்டுமே அறையக்கேளே. (291)

சீனாக்காரம் இருபத்தைந்து பலம் ஆகவே உப்பு வகை எல்லாம் சேர்ந்து நூறுபலமாகும். மேனிச்சாறு நாயுருவிச் சாறுதனில் அரைத்து சணல் விதைகளைப் போல வில்லைத்தட்டி வெயிலில் காய வைத்து மொத்தமாக எடுத்து ஐந்து பங்காகச் செய்து ஒருபங்கு மருந்தெடுத்து ஒருவாயகன்ற சட்டியில் அரைவாசியிட்டு.

அறைகிறேன் சக்கிரமாம் பாலைச்சட்டி
அதுமேலே சந்துவாய் பொருந்தமூடி
வறைகிறேன் சந்துவாய்ச் சீலைசெய்து
வாலுகையி னடுப்பேற்றி யெரியைமூட்டி
வறைகிறேன் தீராரோகம் வருகும்வாங்கும்
வகைகேளு அடுப்போரம் வளைந்துசாணி
பிறையான சாணியின்மேல் சலாகைவிட்டுப்
பீங்கானாங் கிண்ணியதின் மேலேவைத்து
முறையான சக்கிரமாம் பாலைச்சட்டி
முகந்தந்தப் பீங்காளில் முகம்நோக்கிவையே. (292)

அதன் மேலே பொருந்தும்படியாக இன்னொரு சட்டியால் மூடி இரண்டு சட்டிகளும் நன்கு பொருந்தும் படியாகச் செய்து சீலை மண் செய்து வாலுகையில் வைத்து அடுப்பிலேற்றி தீமூட்டுவாயாக? அடுப்போரம் சாணியை வளைத்து சலாகை வைத்து அதன்மேல் ஒரு பீங்கான் கிண்ணியை வைக்கவும். பீங்கான் வாலை சட்டியின் வாயை நோக்கி வைக்க வேண்டும்.

வைக்கவே முந்திமுந்தி வெள்ளைநீர்தான்
வருமப்பா வாங்கியதை வீசிப்போடு
நைக்கவே சிவந்தநீர் பின்வருகுமகனே
நலமான நீரதனை வாங்கிநீயும்
ஐக்கவே மறுபங்குச் சரக்கிலூட்டி
அரைத்துமே வில்லைதட்டிச் காயவைத்து
தைக்கவே முன்போல பாண்டத்திட்டுச்
சக்கரமாம் பாலைதனை மேலேமூடே. (293)

வாலை வழியாக முதலில் வெள்ளையான நீர்வரும். அதை வாங்கி வெளியே கொட்டிவிடு. பிறகு சிவப்பான நீர் வரும். அதை வாங்கி முன்பு எடுத்து வைத்திருக்கும் மறுசரக்கில் ஊற்றி அரைத்து வில்லை தட்டிக் காய வைத்து மறுபடியும் பாண்டத்திலிட்டு மேல் பானையினால் மூடுவாயாக.

மூடியே அடுப்பேற்றி எரித்துநன்றாய்
முன்போலே திராவகத்தை வாங்குவாங்கு
ஆடியே மறுபங்குச் சரக்கில்ஊட்டி
அப்பனே முன்போலே அரைத்துக்கட்டி
சாடியே முன்போலே பாண்டத்திட்டுச்
சக்கரமாம் பாலைகொண்டு மேலேமூடிப்
போடியே அடுப்பேற்றி எரியைமூட்டு
புகைபட்டால் கடம்விரியும் பின்பாய்நில்லு
நாடியே தூமமுகம் விளக்குநின்று
நலவான திராவகத்தை வாங்குவாங்கே. (294)

மூடிய பிறகு அடுப்பேற்றி எரித்து நன்றாகவும், பாங்காகவும் திராவகத்தை வாங்கு, வாங்கியபின் அதனைச் சரக்கில் ஊற்றி முன் போலவே அரைத்து பாண்டத்திலிட்டு, மேலே மூடி, அடுப்பேற்றி எரிமூட்டி விடுவாயாக. புகைபட்டால் கடம் விரிந்து போகும். ஆகவே பின்பாக வாலையின் மூக்கிலிருந்து வரும் திராவகத்தை வாங்கிக்கொள். புகை வரும் பக்கத்தை விலக்கி நின்று நலமாக திராவகத்தை வாங்க வேண்டும்.

வாங்கியே மறுபங்கி விப்படியேவாங்கு
வாகாக இப்படியே ஐந்துதரம்வாங்கு
தேங்காதே ஆத்தாட்கும் வடுகனுக்கும்பூசை
செய்துமே அரக்கென்ற குப்பியிலேஅடைப்பாய்
ஓங்கியே மற்றொன்றி லடைத்தாயானால்
உருகிப்போம் கல்லுமுதல் நவலோகமெல்லாம்
வாங்கியே நாதாக்கள் பாதம்போற்றி
வாதமொடு வயித்தியமுன் கைக்குள்ளாச்சே. (295)

இதுபோலவே மறுபங்கிலிருந்தும் இப்படியே வாங்கி இப்படியே ஐந்துதரம் திராவகத்தை வாங்குவாயாக. ஆத்தாளுக்கும் வடுகனுக்கும் பூசை செய்து அரக்குக் குப்பியிலே அடைப்பாயாக. வேறுகுப்பியில் அடைத்தாயானால் உருகிப்போய்விடும். கல் முதல் நவலோகங்கள் எதுவானாலும் உருகிப்போய்விடும். இந்த திராவத்தை வாங்கியதும் நாதாக்கள் பாதம் போற்றுவாயாக. இரசவாதமும் வைத்தியமும் உன்கைக்குள் ஆகிவிடும்.

ஆச்சென்ன விபரமென்ன வென்றுகேட்டால்
அப்பனே யெட்டுவகைச் சூலைகுன்மம்
ஆச்சென்ற வலிவாய்வு உதிரவாய்வு
அந்தரவாய்வு சூலைமுட்டி ருத்திரவாய்வு

நீச்சென்ற தமர்வாய்வு பித்தவாய்வு
நீராமை கவுசிகெண்டை மகோதரம்பேராமை
தோச்சென்ற பெருவயிறு காமாலைபாண்டு
சூசிகவாய் வொடுப்பசம் வாதந்தானே. (296)

எதற்கென்று யாரெனும் விவரம் கேட்டார்களாயின், அப்பனே எட்டுவகை சூலை, குன்மநோய்கள், வாத வாய்வு, உதிரவாய்வு, அந்தரவாய்வு, சூலைமூட்டி, குத்து வாய்வு, தமர்வாய்வு, பித்த வாய்வு, நீராமை, கௌசி, கெண்டை, மகோதரம், பேராமை, பெருவயிறு, காமாலை பாண்டு, சூசிகவாய்வு, வாய்வுகளும் பக்க வாதநோய்களும் போய்விடும்.

தானென்ற அந்தந்த வியாதிகட்குச்
சாற்றியதோர் அவிழ்தத்தில் திராவகங்கூட்டு
கூச்சென்றே யில்லாவிட்டால் அனுபானமறிந்து
கொண்டிடவே நோயெல்லாங் கும்பிட்டோடும்
வேச்சென்ற பாசாணம் அறுபத்தினாலும்
மெழுகாகும் உபரசங்க ளிய்யமாகும்
கோச்சென்ற நவலோக மெல்லா நீறும்
கொள்ளையோ கொள்ளையிதில் வாதந்தானே. (297)

அந்தந்த நோய்களுக்குத் தக்க அனுபான மறிந்து சேர்த்து மருந்து உட்கொள்ள வேண்டும். அப்படி உட்கொண்டால் நோய்கள் கும்பிடு போட்டுக் கொண்டு ஓடோடிப் போய்விடும். இதனால் பாஷாணங்கள் அறுபத்து நாளும் மெழுகாகும். உபரசங்கள் எல்லாம் நயமாகும். நவலோகங்கள் நீறும் சுன்னமாகும். இதைக் கொண்டு வாதம் செய்வதும் எளிதாகும்.

சாரக்கட்டு

வாதமாங் கல்வத்தில் சேரைசூதம்
வார்த்துமே திராவகத்தில் மஞ்சாடிகுற்ற
வேதமாஞ் சூதமது வெந்துநீறும்
வேதையிதில் வெகுதூர மெட்டியோடும்
சூதமாம் நவச்சாரக் கட்டிவாங்கித்
தோய்த்துமே திராவகத்தில் ரவியிற்போட
நாதமாம் சாரமது கட்டிப்போகும்
நாதாக்க ளாட்டெல்லாம் சாரத்தாலே
போதமாம் கட்டியதோர் நாகந்தன்னைப்
போட்டிடவே நாகமது கட்டிப்போமே. (298)

கல்வத்தில் சேரை அளவு பாதரசத்தை வார்த்து திராவகத்தில் மஞ்சாடியளவு சுத்த பாதரசமானது வெந்து பற்பமாகும். இதில் வேதை வெகுதூரம் எட்டி ஓடும். நவச்சாரக் கட்டி வாங்கித் திராவகத்தில் தோய்த்து, சூரிய ஒளியில் வைத்தால் நவச்சாரம்

கட்டிப்போகும். நாதாக்கள் ஆட்டம் எல்லாம் நவசாரத்திலே நாகந்தன்னை போட்டாலும் நாகமது கட்டியாகும் பார்ப்பாயாக.

கட்டியதோர் நாகத்தில் லோகஞ்சேரில்
கண்கொள்ளா வேதையிது கண்டுபாரு
திட்டமாய் நவலோக நவரத்னங்கள்
திராவகத்தில் தோய்த்துமே ரவியிலிட்டு
நாட்டியே புடம்போட நீறிப்போகும்
நலமான மால்தேவி சிலையும்லிங்கம்
திட்டமாய் வீரமொடு பூரஞ்சீனம்
சிறப்பான கெந்தியொடு கெவுரிசூடன்
தட்டியே பாசாணம் அறுபத்துநாலுந்
தனித்தனியே கட்டியது மெழுகுமாமே. *(299)*

இவ்வாறு கட்டிய நாகத்தில் உலோகம் சேர்ந்தால் நான் சொல்லாத வேதையினைக் காணலாகும். நவலோகங்கள், நவரத்தினங்களை திராவகத்தில் தோய்த்து, சூரிய வெப்பத்திலிட்டு, புடம் போட்டு எடுத்தால் பற்பமாகி விடும். அரிதாரம், மனோசிலை, லிங்கம், வீரம், பூரம், சீனம், கெந்தி, கௌரி, சூடன் பாஷாண வகை அறுபத்து நான்கும் தனித்தனியே கட்டி மெழுகுமாகும்.

மெழுகாகும் ஒவ்வொன்றில் வேதைகோடி
விரித்துநான் சொல்லவென்றால் பனையோலையில்லை
அழுகாதே புத்திமான் நீயேயானால்
அலையாதே பன்னூலும் பார்த்துப்பார்த்து
விழுகாதே கசந்தனிலே யீப்போல்மைந்தா
விருதான விந்நூலை விரைந்துபாரு
சுழுகாக வாதமுதல் வயித்யமும்தேறும்
சுணங்கலாய்த் திரிந்திட்டால் நான்செய்வதென்னே. *(300)*

மெழுகாகும் ஒவ்வொன்றைக் கொண்டு இரசவாத வேதைகள் கோடி வகை செய்யலாம். இதை விரித்து விபரமாக நான் சொல்லவும் எழுதவும் நினைத்தால் முடியாது நீ புத்திசாலியானால் பலநூல்களையும் இரசவாதத்திற்காகப் பார்த்துப்பார்த்து படுகுழியில் விழாதே? அருமையான இந்த நூலை விரைந்து பார்ப்பாயாக. சுலபமாக இரசவாதத்தையும் வைத்தியத்தையும் கற்றுக்தேறலாம். அதைவிட்டு நாயைப்போல திரிந்தாயானால் நான் உனக்குச் சொல்வதற்கு என்னதான் இருக்கிறது?

வாதக்குரு

செய்வதற்கு வாதத்தின் கருவைக்கேளு
செப்பாதே துரிசியதில் விந்துநாதம்
செய்வதென்ன பூமியுட நாதமொன்று
சிறப்பான பிர்மகற்பம் கல்லுச்சுன்னம்

பைவதென்ன பாறையாங் கல்லுப்பொன்று
    பாங்கான அண்டமொன்று பிண்டமொன்று
தைவதென்ன பஞ்சபூச மஞ்சுமாச்சு
    தன்னுக்குள் பயனறிந்தால் குருவுமாச்சு
உய்வதென்ன பயனென்ன சாரசாரம்
    உரையாமல் சித்தரெல்லாம் ஒளித்திட்டாரே. (301)

இரசவாதம் செய்வதற்கு அதனுடைய கருவைக் கேட்பாயாக. காரிசி என்ற விந்து நாதம், பூமியின் நாதமான பூநீறு, பிரமகற்பம் என்ற சொல்லப்படும் கல்லுச்சுன்னம். பாறையான கல்லுப்பு. இவையே அண்டபிண்டம் இவற்றால் பஞ்ச பூதங்களும் நிறைவு பெற்றன. இதன் பயன் குரு. அதாவது இதுவே குரு. சித்தர்கள் இதைச் சொல்லாமல் மறைத்துவிட்டார்கள்.

ஒழித்திட்டே பலபலவாய்ச் சொன்னாரையோ
    உட்பொருளை அறியாமல் அலைந்தார்வாதி
அருத்திட்டு அண்டபிண்டம் ஆதியந்தம்
    ஆகாசம் அடிமுடியும் துரியாதீதம்
அழித்திட்டுச் சாகாது வேகாதெல்லாம்
    அடங்கிநின்ற பொருளென்ன விந்துநாதம்
தெளித்திட்ட மனோன்மணித்தாய் பூரணமேயாகும்
    சிவசிவா துரியவெளி அட்சரமுமாமே. (302)

எல்லாவற்றையும் மறைத்து வைத்து பலபலவாய் சித்தர்கள் சொன்னார்கள். இதனால் இரசவாதி உட்பொருளை அறிந்திடாமல் அலைந்தான், அண்ட பிண்டம் ஆகியவையே ஆதியந்தம். ஆகாசமும் அடிமுடியும் துரியாதீத நிலையுமாகும். எதையும் அழித்திட்டுச்சாகாதது, வேகாதது எல்லாமே அடங்கி நின்ற பொருள் என்ன? என்ற சித்தர்களின் கேள்விக்கெல்லாம் பதில் விந்து நாதமே ஆகும். தெளிந்திட்ட மனோன்மணித்தாய் பூரணமேயாகும். அதுவே தான் துரியவொளி. அட்சரமும் அதுவேயாகும்.

அட்சரத்தை அறிந்தார்கள் சித்தரெல்லாம்
    அறியாமல் உலகத்தோர் அலைந்துகெட்டார்
நிட்சயமா யிந்நூலை நிலைக்கச்சொன்னேன்
    நிலைதருகும் பூரணத்தை நினைத்துப்பாரு
அட்சரமாம் நிலைதங்கி அறிவிற்கூடி
    அடங்கிநின்ற பொருளெல்லா மவுனமாச்சு
அட்சரமாம் சொல்வதற்கு ஆராலாகும்
    அறிவுகுரு வல்லாது ஆசானுண்டோ
நிட்சயமாய் வாசிதன்னை மூலத்தூணில்
    நிலைத்திட்டால் சுழிமுனைதான் நிசமாங்காணே. (303)

சித்தர்கள் அந்த அட்சரத்தை அறிந்திட்டார்கள் உலகத்தோர் அதை அறியாமல் அலைந்து கெட்டார்கள். இந்த நூல் நிலைப்பதற்காகவே நான் சொன்னேன். நிலை தருகின்ற பூரணத்தை நினைத்துப்பார்ப்பாயாக. அட்சரமாம் நிலையில் தங்கி அறிவிலே

கூடி அடங்கிநின்ற பொருள்கள் எல்லாம் மௌனமாச்சு, அந்த அட்சரத்தைச் சொல்வதற்குத்தான் யாரால் ஆகும். அறிவறிந்த குரு அல்லாமல் வேறு ஆசானும் உண்டோ, அதற்கு நிச்சயமாய் வாசியை மூலத்தில் ஊன்றி நிலைக்கச் செய்தால் சுழிமுனையைக் காணலாம்.

காணேநீ யிந்நூலை ஆர்க்குங்காட்டாய்
காட்டினால் ரவிகோடி நரகமேது
வீணேநீ வாசிதனை அங்கென்றூணி
வேதாந்த சற்குருவை நித்தம்பூசி
ஊணேநீ மூலத்தில் நந்திநந்தி
உள்ளிருந்து உன்றனக்கு உபதேசிப்பார்
ஆனென்ற ஆணவமும் மாயைநீக்கி
ஆங்கார சஞ்சிதத்தை அடித்துத்தள்ளி
காணவே கருவிகர ணாதிகளைப்போக்கிக்
கண்ணாடிச் சுழிமுனையைக் கருதிப்பாரே. *(304)*

இந்த நூலை யாருக்கும் காட்டாதே நீயே காண்பாய். இதைக் காட்டிய பேருக்கு நரகம் உண்டாகும். வாசிதன்னை அங்கென்று ஊணி வேதாந்த சற்குருவை தினமும் பூசிப்பாயாக மூலத்தில் உள்ள நந்தி தேவர் உனக்கு உள்ளிருந்து உபதேசிப்பார். யான் என்ற ஆணவமாம் மாயை நீக்கி ஆங்கார சஞ்சிதத்தை அடித்துத் தள்ளி கருவிகரணாதிகளை யெல்லாம் போக்கக் கண்ணாடிச் சுழிமுனையைக் கருதிப்பார்ப்பாயாக.

கருதியே துருசியுட கருவைக்கேளு
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் காட்டார்சித்தர்
கருதியே துருசியொரு பலந்தானப்பா
கட்டியாய் வாங்கிமேல் கசடுபோக்கத்
துரிசியாங் கட்டிமேல் சுண்ணாம்புச்சீலைச்
சுற்றியே கருவங்கக் குகையில்வைத்து
உருகையிலே நெய்க்குறட்டால் துரிசைவாங்கி
உறுதியாய் வங்கத்தி லமிழ்த்திவாங்கே. *(305)*

கருதித்தான் துருசினுடைய கருவைக் கேட்பாயாக. சித்தர்கள் காட்ட மாட்டார்கள். கைமுறையாக நான் சொல்லுகிறேன். ஒரு பலம் துரிசு கட்டியாக வாங்கி, அதன் மேலேயுள்ள கசடுகள் எல்லாம் போவதற்காக அதன்மேல் சுண்ணாம்புச்சீலை சுற்றி கருவங்கக்குகையில் வைத்து உருக்கு. உருகும்போது நெய்க்குறட்டினால் துரிசை வாங்கி, வங்கத்தில் அமிழ்த்தியெடு.

வாங்கவே இப்படித்தா னேழுதரம்தோய்த்து
வாங்கிடவே துரிசியது வெள்ளையாகும்
நான்காக வின்னுமதில் பாகங்கேளு
நாய்ப்பாகல் அயிவிரையின் தயிலம்வாங்கி

தூங்காமல் தூங்குவார் சொற்கேட்டுய்யும்
துரையேநீ தூங்காமல் சுகத்தைக்காண்பாய்
ஏங்கியே துரிசியைநீ தோய்த்துத்தோய்த்து
ஏழுநாள் ரவியிலிடத் தீரும்பாரே. (306)

இப்படியே ஏழுமுறைகள் தோய்த்துத் தோய்த்து வாங்கிடும் போது துரிசு வெள்ளையாகும். இன்னும் பாகமதைச் சொல்கிறேன் கேட்பாயாக. நாய்ப்பாகல் ஐவிரையின் தைலம் வாங்கி அதிலும் துரிசியை தோய்த்துத் தோய்த்து ஏழுநாட்கள் வெயிலில் போடு.

பாரேநீ முதற்றரந்தா நாதம்வாங்கிப்
பாங்கான விந்துவதில் சமனாய்வாரு
தேரேநீ சூடனொரு காசுபோடு
தெளிவாகும் வாங்கியதில் வீரம்பூரம்
ஆரேநீ கருநாவியுரமுஞ்சூதம்
அறுபுள்ளி வண்டுமுட்டை கழுதைவண்டு
சேரேநீ குருவண்டு புழுகோடெட்டும்
சிறப்பான வகைவகைக்குப் பணந்தான்தூக்கி
வாரேநீ பொடியாக்கி அதிலேபோடு
மத்திக்கக் கைவேகும் வகைதான்கேளு
வாரான ஐங்கோலால் அலரிக்கொம்பால்
மத்திக்கச் சலமாகித் தயிலமாமே. (307)

முதல்தரமான நாதம் வாங்கிப் பாங்கான விந்துவுடன் சமனாகச் சேர்ப்பாயாக. நேராக சூடன் ஒரு காசு எடை போடுவாயாக. தெளிவாகும். அதன்பின் வீரமும், பூரமும், கருநாவியின் உரமும், சூதம், அறுபுள்ளி வண்டு முட்டை, கழுதைவண்டு, குருவண்டு, புனுகுடன் எட்டையும் வகைவகைக்கு பணவெடைதான் தூக்கி, பொடியாக்கி அதிலே போட்டுக்கையால் மத்தித்தால் கைவெந்துபோகும். அதனால் ஐங்கோல் அல்லது அலரிக் கொம்பால் மத்தித்தால் நீராகிவிடும்.

செலத்திலே முன்சொன்ன துரிசிதன்னைத்
தீர்க்கமா யுண்ணவுண்ணப் பிட்டுப்போடு
மலத்தியே ரவிதனிலே எழுநாள்போட
மல்லிகைப்பூப் போல்மலர்ந்து சுன்னமாகும்
கலத்தியே கடுங்கார மெத்தக்கேளு
நவச்சாரம் விராகனொன் றிடையதாகு
முலத்தியே சவுக்காரச் சுன்னமொன்று
முந்நீரா லரைதுரிசின் மேல்கவசம்போடே. (308)

இந்த நீரில் முன்பு சொன்ன துரிசு தன்னை பிட்டுப்பிட்டுப் போடப்போட துரிசு அந்த நீரையெல்லாம் உறிஞ்சிக் கொள்ளும். பின்னர் துரிசு சூரிய வெப்பத்தில் ஏழுநாட்கள் காய வைத்துத்துண்டுகளை எடுக்க, துரிசு மல்லிகைப்பூப்போல மலர்ந்து சுன்னமாகிவிடும். இதனுடைய காரம் கடுங்காரமாக இருக்கும். நவாச்சாரம் வராகன் எடை, சவுக்கார சுன்னம், வராகன் எடை எடுத்து முன்னீரில் அரைத்து துரிசுக்குக் கவசம் செய்யவேண்டும்.

போட்டுமே அஞ்சுசுன்னக் குகையில்வைத்துமூடிப்
புகழ்குகைமேல் சுண்ணாம்புச் சீலைசெய்து
ஆட்டுமே பத்தெருவில் புடத்தைப்போட
அம்மம்மா என்னசொல்லேன் துரிசிச்சுன்னம்
காட்டவென்றா லாருந்தான் காட்டுவாரோ
கைமுறையாய்ச் சித்தர்கள்தான் சொல்லுவாரோ
நீட்டென்ன குருவறிட நிசமாய்ச்சொன்னேன்
நிலைத்ததொரு மனோன்மணியைப் பூசைபண்ணே. (309)

இவ்வாறு கவசம் செய்த துரிசை, அஞ்சு சுன்னக் குகையின் உள்ளே வைத்து மூடிக் குகையின் மேல் சுண்ணாம்புச்சீலை செய்து பத்து எருவில் புடம் போடுவாயாக. புடம் எரித்தபின், ஆறவிட்டு உடைத்துப்பார்த்தால் அம்மம்மா? என்னவென்று சொல்வேன். துரிசுச்சுன்னம் பளிச்சென்றிருக்கும். இத்தகைய சுன்னத்தைக் காட்டு என்று சொன்னால் யாராவது காட்டுவார்களா? சித்தர்களாக இருந்தாலும் இந்த செய்முறையைச் சொல்லமாட்டார்கள்.

துரிசிகுரு

பண்ணியே துருசியுட குருவைத்தொட்டுப்
பாங்காகக் கோடியுகம் வாதம்பார்த்தேன்
எண்ணியே பாத்திட்டுந் தொலையவில்லை
எடுத்ததொரு சரக்கெல்லாஞ் சுன்னமாகுந்
துன்னியே துரிசியுட சுன்னந்தன்னைத்
தொட்டிட்டால் சேரைரசம் வெண்ணெயாகும்
பண்ணியே நவலோக மெல்லாநீறும்
பாஷாண வர்க்கமெல்லா மெழுகாய்ப்போகுந்
தண்ணீராஞ் சார்வாராத் தழைகளெல்லாஞ்
சவலைபோ லுபரசங்க ளிய்யமாமே. (310)

இத்தகைய துரிசுகுருவைத் தொட்டு இரசவாதஞ் செய்து பார்த்தேன். எந்தெந்தச் சரக்கெல்லாம் சுன்னமாகும் என்று நான் எண்ணிப் பார்க்க எண்ணத்தொலையவில்லை. சரக்கெல்லாமே சுன்னமாகியது. துரிசுடைய சுன்னத்தைக் கொண்டு தொட்டுவிட்டால் பாதரசம் வெண்ணெயாகும். நவலோகம் எல்லாமே பற்பமாகும். பாஷாணவர்க்கம் எல்லாம் மெழுகாய்ப் போகும். தண்ணீர் வராத தழைகள் எல்லாம் தண்ணீராகும். உபரசங்கள் ஈயமாகும்.

இய்யமாஞ் சூதமெல்லா மணியுமாகும்
என்மக்காள் குளிகைகட்டிச் சாரணையேசெய்யில்
பொய்யல்ல சடத்தோடே உயரத்தூக்கும்
போக்கோடே அகண்டவெளி கடந்துபோகுங்
கைகண்ட நவலோக மெல்லாந்தங்கம்
கல்லோடு மண்முதலாய்த் தங்கமாமே. (311)

துரிசுச் சுன்னத்தால் ரசமணியைக் கட்டி சாரணை செய்வீர்களானால் இந்த உடலுடனேயே உயர எழும்பி ஆகாய வெளியில் செல்ல முடியும் நவலோகங்களும் தங்கமாகும். இது பொய் அல்ல. முற்றிலும் உண்மை.

திசைமுககுரு செந்தூரம்

தங்கமென்ற திசைமுகமாங் குருசெந்தூரஞ்
சாற்றுகிறேன் நோயெல்லாந் தவிடுபொடியாகப்
பொங்கமாய் நவலோகந் தங்கமாகப்
புகலுகிறேன் காரீயம் பலந்தானொன்று
கங்கமாய் நீரின்மேல் நெருப்பின்சாற்றில்
காரீயந் தனையுருக்கிச் சாய்க்கக்கட்டும்
உங்கவே காரீயங் குகையிலிட்டு
உருகுமப்போ கெவுரியொரு பலந்தான்போடு
கங்கமாஞ் செயநீரில் கட்டிப்போடு
கலந்துருக்கி ஒன்றாகக் கல்வத்தூட்டே. (312)

தங்கம் என்ற திசைமுகக்குரு செந்தூரம் செய்முறையையும் நான் கூறுகிறேன். நோய்கள் எல்லாம் இதனால் தவிடு பொடியாகிவிடும். நவலோகம் எல்லாம் தங்கமாகச் செய்யும், காரீயம் ஒருபலம் எடுத்து நீர் மேல் நெருப்பு என்ற மூலிகையின் சாற்றில் உருக்கிச் சாய்க்க காரீயம் கட்டி ஆகும். இந்தக் காரியத்தைக் குகையிலிட்டு உருக்கும்போது ஒரு பலம் கௌரி பாஷாணம்போடு. இரண்டையும் செயநீர் விட்டு உருக்கு.

ஊட்டியே தாம்பிரந்தான் பலந்தானொன்று
உயர்சுத்தி செய்துகட்டுங் கெந்தகந்தானொன்று
தாட்டியே குமரியுட சாற்றாலாட்டித்
தாமிரத்தின் மேல்பூசிப் புடத்தைப்போட்டு
ஊட்டியே புடமதனை யறிந்துபாரு
உற்பனமாய் நொறுக்கியது பற்பமாகுந்
தீட்டியே கல்வத்தி விட்டுக்கேளு
சிறுகண்ணாம் நாகமொரு பலந்தான்வாங்கு
மூட்டியே யிலுப்பைநெய்யில் சாரம்போடு
மூவாறு தரஞ்சாய்த்துக் கொண்டுநீயும்
ஆட்டியே செயநீரி லேழுதரஞ்சாய்க்க
அதிகமாம் நாகமது கட்டிப்போமே. (313)

பின்னர் தாமிரம் ஒருபலம், நன்கு சுத்தி செய்த கெந்தகம் ஒரு பலம் எடுத்துக்குமரிச் சாற்றால் அரைத்து தாமிரத்தின் மீது பூசிக் கவசம் செய்து புடம் போடுவாயாக. ஆறியபின் உடைத்துப்பார்க்க தாம்பரம் நொருங்கிப்பற்பமாகும். பின்னர் அதனைக் கல்வத்திலிட்டு சிறு கண் நாகம் ஒருபலம் வாங்கி, அதனைச் சுத்தி செய்வதற்காக இலுப்பை நெய்யைக்காய்ச்சி சாரம்போட்டு காயவைத்து அதை மூவாறு தரம் சாய்த்துக் கொண்ட பிறகு செயநீரில் சாய்க்க நாகம் கட்டிப்போகும்.

கட்டியே நாகநின்று உருகும்போது
கரக்காதே சூதமொரு பலத்தையூட்டித்
தெட்டியே சேர்ந்தொன்றா யுருகும்போது
செயமான மால்தேவி பலந்தான்போடு
வெட்டியே வுருக்கிஓன்றாய்க் கல்வத்திட்டு
வெள்வங்கம் பலமொன்று குகையிலிட்டுருக்கி
அட்டியே ஆடாவின தோடைச்சாற்றில்
அப்பனே யேழுதர முருக்கிச்சாயே. *(314)*

கட்டிய நாகம் நின்று உருகும்போது, ஒரு பலம் சூதத்தைக்கொட்டு. இரண்டும் கலந்து உருகும்போது ஒருபலம் அரிதாரம் போடு. எல்லாம் சேர்ந்து' உருகிய பின் கல்வத்தில் இட்டுக்கொள் பிறகு, வெள்ளீயம் ஒருபலம் எடுத்துக் குகையிலிட்டு, உருக்கி, ஆடாதோடைச் சாற்றில் ஏழுமுறை சாய்ப்பாயாக.

சாய்க்கவே வெள்வங்கம் நொறுங்கிப்போகும்
சார்வான குகையிலிட்டு உருகும்போது
வாய்க்கவே மனோசிலையும் பலந்தானொன்று
வளமான செயநீரால் கட்டிப்போடு
சாய்க்கவே யுருக்கியொன்றாய்க் கல்வத்திட்டுத்
தங்கமொரு பலம்நின்று உருகும்போது
ஆய்க்கவே சாதிலிங்கம் பலந்தானொன்று
அதிலிட்டு உருகுமப்போ துருகுந்தங்கம்
ஆக்கமா மிவையெல்லாங் கல்வத்திட்டு
அப்பனே நவநீதம் பலந்தானொன்றே. *(315)*

இது போல ஏழுமுறைகள் உருக்கிச் சாய்க்க வெள்வங்கம் நொறுங்கிப் போகும். அதனைக் குகையிலிட்டு உருகும்பொழுது மனோசீலை ஒருபலம் எடுத்து, செயநீரால் கட்டிப்போடுவாயாக, பின்னர் குகையில் உருகும் பொருள்களையெல்லாம் எடுத்து ஒன்றாகக் கல்வத்தில் இட்டு, தங்கம் ஒருபலம் நிறுத்து உருகும்போது, ஜாதிலிங்கம் ஒருபலம் எடுத்து அதிலிட்டு, உருகும்போது இவற்றையெல்லாம் ஒன்றாகக் கல்வத்திலிட்டு, நவநீதம் ஒருபலம்.

பலமான பஞ்சமுகச் சரக்குரெட்டி
பாங்கான திசைமுகமாங் குருவுமாச்சு
பிலமான குருவோடே பன்னிரண்டாச்சு
பேசாதே பன்னிரண்டாந் தீட்சையாச்சு
மூலமாங் குருவென்ன சொல்லக்கேளு
முப்பூவின் குருவதிலே கழஞ்சிபோடு
பலமாக விவையெல்லாஞ் சேர்த்துஒன்றாய்
பேரான வெடியுப்பு நீராலாட்டே. *(316)*

அதனை பஞ்சமுக சரக்கு இரட்டிப்பாகச் சேர்க்க திசைமுகமாம் குருவாகும். இந்தக் குருவுடனே பன்னிரண்டாகும் தீட்சையாகும் மூலமாக குருவென்ன வென்று

சொல்கிறேன் கேட்பாயாக. முப்பூவின் குரு அதிலே கழஞ்சு போடு, பலமாக இவற்றையெல்லாம் ஒன்றாய்ச் சேர்த்து வெடியுப்பு செயநீரில் ஆட்டுவாயாக.

ஆட்டியே நாற்சாமம் வில்லைதட்டி
அப்பனே காய்ந்தபின்பு அகலிலிட்டுத்
தீட்டியே சீலைமுடி வில்லைசெய்து
சிறுபுடமாய்ப் போட்டெடுத்துக் கல்வத்திட்டு
நாட்டியே பொற்றலையின் சாற்றினாலே
நாற்சாமம் ஆட்டிமுன்போல் புடத்தைப்போடு
காட்டியே புள்ள டிச்சாறு நூல்தாமரைச்சாறு
கலந்தொன்றாய் ஆட்டிமுன்போல் புடத்தைப்போடு
நாட்டியே சாற்றிலோர் நாளதாக
நலமாக ஆட்டிமுன்போல் புடத்தைப்போடே. (317)

வெடியுப்பு நீரிலறைத்த பிறகு, வில்லை தட்டி சூரிய வெப்பத்தில் காயவைத்து காய்ந்த பிறகு, அகலிட்டு பொற்றலைச் சாற்றினால் நான்கு ஜாமம் ஆட்டி புடம் போடவும். புள்ளடிச் சாறும் நூல் தாமரைச்சாறும் கலந்து ஒன்றாய் சேர்த்து மீண்டும் கல்வத்திலிட்டு ஒருநாள் முழுதும் அரைத்து புடத்தைப் போடவும்.

புடம்போட்டு எடுத்ததனைக் கல்வத்திட்டுப்
புகழ்முருக்கம் பூவோடு செம்பரத்தம்பூவும்
கடம்போடு மாதளம்பூ கற்றாழம்பூவும்
குலாமல்லிச் சாறோடு ஊசிமல்லிச்சாறும்
கடம்போடு பன்னிரண்டு சாமந்தானும்
கைமுறையா யரைத்துமே தூளாய்ப்பண்ணி
அடம்போடு காசியென்ற மேருக்கேற்றி
அழகான வாலுகையில் வைத்திடாயே. (318)

பின்னர் புடத்தைப் பிரித்து எடுத்து, கல்வத்திலிட்டு, முருக்கம்பூ, செம்பரத்தம்பூ, கடப்பம்பூ, மாதுளம்பூ, கற்றாழைப்பூ, குலாமல்லிச்சாறு, ஊசிமல்லிச்சாறு, இவைகளின் சாறெடுத்துச் சேர்த்து பன்னிரண்டு ஜாமங்கள் அரைத்து, தூளாகச் செய்து காசிக்குப்பியிலடைத்து வாலுகையந்திரத்தில் வைத்து அடுப்பேற்றுவாயாக.

வைத்துமே முத்தீயும் பன்னிரண்டுசாமம்
வளமாக வெரித்திட்டு ஆறிப்பின்பு
ஐத்துமே குப்பியைநீ யிப்பால்வாங்கு
ஆத்தாட்கும் வடுகனுக்கும் பூசைபண்ணு
உய்த்துமே கந்தனொடு கணபதிக்கும் பூசை
உறுதியாய்ச் செய்துகுப்பி உடைத்துப்பாரு
பத்துமே செந்தூர மென்னசொல்வேன்
பரிதியென்ன கண்கூசிப் பார்க்கப்போமே. (319)

வாலுகைக்கு முத்தியும், மூட்டிப் பன்னிரண்டு ஜாமம் நன்றாக எரித்திட்டு ஆறிய பிறகு குப்பியை எடுத்து, ஆத்தாளுக்கும் வடுகனுக்குப் பூசை செய்து கந்தனோடு கணபதிக்கும் உறுதியாக பூசை செய்து, குப்பியை உடைத்துப் பார்ப்பாயாக. அதனுள்ளே உதய சூரியனைப்போன்று செக்கச்சிவப்பான செந்தூரமானது கண்கள் கூசும் வண்ணம் அமைந்திருக்கும்.

போமென்ற செந்தூரம் நவலோகத்தில்
போட்டிடவே பத்தரையே மாற்றுக்காணும்
நாமென்ற செந்தூர மனுபானத்தில்
நாற்பதுநாள் மண்டலமே கொள்ளும்போது
போமென்ற நாலாயி ரத்துநானூற்றெட்டுப்
பொல்லாத நோயெல்லாம் பொடியாய்ப்போகும்
கோமென்ற பதினெட்டக் குஷ்டரோகம்
குன்மமொடு கிரந்தியரை யாப்பூச்சூலை
வாமென்ற பாண்டுகா மாலைசோகை
வலிகுன்மஞ் சத்திபித்த மாண்டுபோமே. (320)

இத்தகைய செந்தூரத்தை நவலோகத்தில் சேர்த்தால் பத்தரைமாற்றுத் தங்கமாகும். செந்தூரத்தை, அனுபானத்தில் நாற்பது நாள் ஒருமண்டலம் உட்கொள்ளும்போது நாலாயிரத்து நூனூற்று எட்டுப் பொல்லாத நோய்கள் அனைத்தும் பொடிப்பொடியாகப் போகும். குஷ்டரோகம் பதினெட்டும் நீங்கும். குன்மம், கிரந்தி, அரையாப்பு, சூலை, பாண்டு, காமாலை, சோகை, வலிகுன்மம், சத்திபித்தம் போன்றவையெல்லாம் போய்விடும்.

மாண்டுபோஞ் சன்னிசுரங் கோசகாசம்
வாதபித்த சிலேற்பனத்தில் வந்தநோயெல்லாம்
மாண்டிடுமே கண்காணா தோடிப்போகு
மண்டலத்தில் காயசித்தி சுறுக்கோமெத்த
காண்டுபோங் கற்பமின்னும் வேறேயுண்டோ
கைப்புடனே புளிப்பும்தள் பத்தியமாயுண்டு
ஆண்டுபார் செந்தூர வேகமெத்த
ஆருந்தான் சொல்லார்க ளறிந்துபாரே. (321)

ஜன்னி, சுரம், கோசகாசம், வாதபித்தம், சிலேத்துமத்தில் வந்த நோய்கள் எல்லாம் கண்காணாமல் ஓடிப்போய்விடும். ஒரு மண்டலத்தில் காயசித்தி தருகின்ற கற்பமென்னும் மருந்து வேறு கிடையாது. பத்தியமாக கசப்பும் புளிப்பும் தள்ளி உண் பாயாக. இந்தச் செந்தூரத்தை உண்டு பார்த்தவர்கள், யாருக்கும் அதனைப்பற்றி சொல்லமாட்டார்கள்.

தாமிர சுத்தி

அறிந்துமே தாமிரத்தின் சுத்திகேளு
அரிதப்பா சொல்லுகிறேன் தகடுவாங்கிப்
பறிந்துபார் பழச்சாறும் புளியின்சாறும்
பசுவினுட கோமயத்திற் பத்துநாளூறிப்

பொறித்துதா னெடுத்ததனைப் புளியிட்டுத்தேய்த்துப்
புளிநறளைக் கிழங்குநாய்க் கொட்டான்பட்டை
செறிந்துதா னிடித்ததனைப் பொதிந்துசெம்பிற்
திறமாகப் புடம்போட்டு எடுத்துக்கொள்ளே. (322)

தாம்பரத்தைச் சுத்தி செய்யும் செய்முறையினை கூறுகிறேன் கேட்பாயாக. இதைச் செய்வது அரிது. ஆயினும் சொல்லுகிறேன், தாமிரத்தகடு வாங்கி வந்து அதைக் காடியில் பத்து நாள், கரைத்த புளியில் பத்துநாள், பசுவின் கோமியத்தில் பத்துநாள்நன்றாக ஊறவைத்து எடுத்து, அதனைப் புளியிட்டுத்தேய்த்துப்பின் புளிநறளைக் கிழங்கும், நாய்க்கொட்டான்பட்டையும் சேர்த்து நன்றாக இடித்து அரைத்து. அதனுள்ளே தாம்பரத் தகட்டை பொதிய வைத்து புடம்போட்டு எடுத்துக் கொள்வாயாக.

எடுத்துமே அகத்தியிட பழுப்புச்சாறும்
இதமான முருக்கிலைச்சாறு நாய்ப்பாகற்சாறும்
கடுத்துமே கொள்ளிலைச்சாறு தேசிநீரும்
கலந்தொன்றாய் ஒருகலசந் தன்னில்வாரு
உடுத்துமே உவர்ப்பூவும் ஒருபலமேபோக்கு
உத்தகருங் குண்டுமணி அரைத்துநீயும்
கடுத்துமே தேசிக்கா யளவுபோடு
கலக்கியே தாமிரத்தை உருக்கிச்சாயே. (323)

அகத்தியிலைப் பழுப்புச் சாறும், முருங்கையிலைச்சாறு, நாய்ப்பாகல்சாறு, கொள்ளு இலைச்சாறு, கழுதை மூத்திரம் இவற்றை ஒன்றாகக் கலந்து ஒரு கலசத்தினுள் வார்த்துக்கொள். அவற்றுடன் உவர்மண்ணில் பூத்த கருங்குண்டுமணி அரைத்து அதில் பூநீறு ஒருபலம் சேர்த்துக் கொண்டு தேசிக்காய் அளவு போடுவாயாக. பிறகு கலக்கி தாமிரத்தை உருக்கி, அதனுள் சாய்ப்பாயாக.

சாய்க்கவே வெவ்வேறே பத்துமுறைசாய்ப் பால்
தாமிரந்தான் கடியசுத்தி தங்கம்போலாம்
ஆய்க்கவே வேதையிட்டா லூறல்கானா
அயச்செம்பு நாலில்வெள்ளி ஆறுசேர்க்க
மாய்க்கவே மாற்றென்ன ஆறுகாணும்
மயங்காது தாமிரத்திற் சுத்திநன்று
தோய்க்கவே தாமிரத்திற் செய்முறைகட்கெல்லாம்
சுத்திசெய்ய மெத்தநன்று சுறுக்கம்பாரே. (324)

இவ்வாறு பத்து முறை சாய்க்க, தாம்பரந்தான் கடுமையாக சுத்தம் செய்யப்பெற்றதால் தங்கம் போலாகும். அதனை வேதையிட்டால் களிம்பு ஏறாது. அயச்செம்பு நாலில் வெள்ளி ஆறு சேர்க்க மாற்று ஆறு காண்பாய். தாமிரத்தின் சுத்தி நன்றாக அமைந்திருப்பது நன்மையாகும்.

சூத பற்பம்

சுறுக்கான சூதபற்பஞ் சொல்லக்கேளு
சூதமது ஒருபலந்தான் கல்வத்திட்டு
வறுக்காக அண்டிமாங் கொட்டையுடதயிலம்
வாங்கியே சூதத்தில் விட்டுஆட்ட
இறுக்காகச் சூதமது தவளைபோலாம்
எடுத்துமே கல்வத்தி விட்டுக்கேளு
மறுக்காக விடத்தேறிச் சாறும் சாண்மூலிச்சாறு
மாதேவிக் கிழங்குச்சாறு வெள்ளெருக்கம்பாலே. (325)

சுறுக்கான சூதபற்பம் செய்முறையினைச் சொல்கிறேன். ஒரு பலம் பாதரசத்தைக் கல்வத்தில் இட்டு மாங்கொட்டைத் தைலம், வாங்கி, பாதரசத்தில் விட்டு ஆட்டி அரைக்க, சூதம் இறுகி தவளை போலாகும். அதை எடுத்துக் கல்வத்தில் போட்டு விடத் தேறிச் சாறு, சாண் மூலிச்சாறு, மாதேவிக் கிழங்குச்சாறு, வெள்ளெருக்கம்பால் ஆகியவைகளினால்,

பாலோடு வகைவகைக்குச் சாமமாட்டு
பாங்காக வில்லைதட்டிக் காயவைத்துக்
கோலியே யகலிலிட்டு மேலகிலுந்தான்மூடி
குக்குடமாய்ப் புடம்போடச் சூதம்நீறும்
ஆலவே தும்பைப்பூப் போலாம்பற்பம்
ஆத்தாளைப் பூசைபண்ணி எடுத்துக்கொண்டு
பாலென்ற பணவிடைதான் நாளொன்றுக்குப்
பனைவெல்லந் தன்னோடே பத்தியமாய்க்கொள்ளே. (326)

வகை வகைக்கு ஒரு ஜாமம் தனித்தனியாக ஆட்டி அரைத்துப், பாங்காக வில்லைதட்டிக் காயவைத்து அகலில் இட்டு, மேலே அகல் மூடிச் சீலைசெய்து கோழிப்புடம் போட சூதம் பற்பமாகும். இந்தப் பற்பம் தும்பைப்பூ போலத் தூய்மையான வெண்மையாக இருக்கும். ஆத்தாளை பூசை செய்து பற்பத்தை எடுத்துப் பதனம் செய்து நாள் ஒன்றுக்குப் பணவெடை அளவு, பனைவெல்லத்துடன் (பத்தியம் காத்து) உட்கொள்வாயாக.

கொள்ளவே ரசபற்பம் வாய்வேகாது
குணமாகு நோயெல்லாங் கூறக்கேளு
கொள்ளவே கிரந்திகுஷ்டம் வாய்வுசூலை
கூறரிய அரையாப்புக் குன்மமெட்டு
மெள்ளவே நோயெல்லா மோடிப்போகும்
விருதுசொல்லி வயித்தியத்தை விரைந்துபாரு

உள்ளபடி சூதபற்பஞ் சொல்லிப்போட்டேன்
உத்தமனே தங்கமென்ற தாயைச்சேர்த்துக்
கள்ளமில்லை நவலோகம் பத்துக்கொன்று
காட்டிடவே மாற்றாறு கனகமாமே. (327)

இந்த ரசபற்பத்தை உட்கொண்டால் வாய்வேகாது, நோய்களெல்லாம் பூரணமாகக் குணமாகும். கிரந்தி, குஷ்டம், வாய்வுசூலை, அரையாப்பு எட்டுவகைக் குன்மநோய்கள், போன்றவைகள் ஓடிப்போகும். உள்ளபடி உண்மையாக சூதபற்பத்தை செய்யும் முறையைச் சொல்லிவிட்டேன். இதனுடன் தங்கம் என்னும் தாயைச் சேர்த்து நவலோகங்களில் பத்துக்கு ஒன்று சேர்த்தால் ஆறுமாற்றுத் தங்கமாகும்.

பாஷாணக்கட்டு

கனகமாம் வெள்ளிக்கு வெள்ளைப்பாஷாண
கட்டுதற்குஞ் சூட்சமாங் கருதிக்கேளு
கனமாம் பாஷாணக் கட்டுவாங்கிக்
கருதியே வெள்ளாவி வேகும்போது
மனகமாம் வெள்ளாவிச் சீலைநடுவைத்து
வாங்கிடவே எண்ணெய்க்குச் சுத்தியாகுஞ்
சுணங்கவே பிராயம்பட்டைத் தயிலம்வாங்கிச்
சுறுக்கிடவே கட்டியது சுத்தியாமே. (328)

வெள்ளிக்கும் வெள்ளைப் பாஷாணத்துக்கும் கட்டுமுறை செய்து காட்டுவதற்குரிய நுட்பங்களைக் கூறுகிறேன். பாஷாணக்கட்டை வாங்கி வெள்ளாவியில் வேகும்போது, வெள்ளாவிச் சீலை நடுவே வைத்து வாங்கிடவே எண்ணெய்க்கிச் சுத்தியாகும், பிராயம்பட்டைத் தைலம் வாங்கி சுறுக்கிட்டால் கட்டி சுத்தியாகும்.

சுத்தியாம் வெள்ளறுகு சவுக்காரம்வெல்லஞ்
சுகமாக ரேசித்து அரைத்துக்கொண்டு
புத்தியாம் பாஷாணக் கட்டிமேலே
பொதிந்துநீ தாமிரத்தின் குகையில்வைத்துச்
சித்தியா மேலுமந்தச் சில்லால்மூடி
சீலைசெய்து குக்குடமாம் புடத்திற்போட்டு
புத்தியாய் தேவிபதம் பணிந்துபோற்று
புகையாது பாஷாணங் கட்டிப்போமே. (329)

வெள்ளறுகு, சவுக்காரம், வெல்லம் மூன்றையும் ரேசித்து அரைத்துக் கொண்டு, பாஷாணக் கட்டியின் மீது பொதிந்து மூடி தாமிரக்குகையில் வைத்து மேல்பக்கம் அதே சீலைமூடிச் சீலை செய்து, குக்குடப்புடத்தில் போடு. தேவிபாதம் பணிந்து போற்று. பாஷாணம் புகைந்து போகாமல் கட்டிப்போகும்.

கட்டியே உருக்கியிது மணிபோலாடுங்
கசடற்ற செம்பிலே பார்த்துக்கொண்டு
முட்டிடவே வெள்ளியா மெழுகுசெய்ய
முறைகேளு முழப்பன்றி நெய்யைவாங்கித்
தட்டியே வெண்கருவுஞ் சதுரக்கள்ளிப்பாலும்
சாரிக்கச் சலமாகுந் தன்னைவாங்கி
கட்டியே முழப்பன்றி நெய்யோடொக்கக்
கலந்துமே பாஷாணங் கரண்டியிலேவைத்து
முட்டியே ஒருசாமஞ் சுருக்குப்போடு
மெழுகாகும் பூசைபண்ணி எடுத்துக்கொள்ளே. *(330)*

இந்த கட்டியை உருக்கினால் அது மணிபோல ஆடும். கசடற்ற செம்பிலே சேர்த்திடவே வெள்ளியாம் மெழுகு செய்யும் முறையைக் கேள். முழுப்பன்றி நெய்யை வாங்கி முட்டையின் வெண்கருவும் சதுரக்கள்ளியின் பாலும் சாரிக்கச் நீராகும், அதனை வாங்கித் தட்டிலிட்டு முழுப்பன்றியின் நெய்யோடு ஒருங்கே சேரும் வகையில் கலந்து, பாஷாணத்தை கரண்டியிலே வைத்து ஒரு ஜாமம் அதற்கு சுருக்குக் கொடுக்க மெழுகாகும். பூசை செய்து அதனை எடுத்துக் கொள்வாயாக.

எடுத்துமே வேதையிட்டால் பன்னிரண்டுமாற்று
எட்டியே வெகுதூர மோடுமப்பா
எடுத்துமே வாதமென்ன வயித்தியத்தைப்பாரு
என்மகனே மோட்சமதிக் கிடமாம்பாரு
அடுக்குமே கட்டியதோர் பாஷாணந்தன்னை
அனுபானஞ் சுரங்களுக்குக் கியாழந்தன்னில்
கொடுத்திடவே சுரமென்ற தோஷமெட்டுங்
குடிபோகும் வாதசன்னி தொண்ணூற்றாறு
மடுத்துமே கிட்டாது ஓடிப்போகு
மறைகிறேன் பாஷாண மதிதங்காணே. *(331)*

அதனை வேதையிட்டால் பன்னிரண்டு மாற்று வேதையாகும். அதையெடுத்து இரசவாதஞ் செய்யப் போகாமல் வைத்தியத்தைச் செய்வதில் தன் கவனத்தைச் செலுத்தினால் அதுவே மோட்சத்திற்கு இடமாகும். கட்டிய பாஷாணத்தை அனுபானத்துடன் சுரங்களுக்கு கியாழந்தன்னில் கொடுத்திட்டால் ஓடிப்போகும். வாதசன்னி தொண்ணூற்றாறும் அடுத்து அருகிலேயே வராமல் ஓடிப்போகும்.

சாதிலிங்கக் கட்டு

கானென்ற சாதிலிங்கக் கட்டுக்கேளு
கருதியே நெடுங்கம்பி லிங்கம்வாங்கிப்
பானென்ற பலமொன்று அயக்கரண்டியிட்டுப்
பழச்சாறு முலைப்பாலுஞ் சுறுக்குத்தாக்கு

கோனென்ற ஒருசாமஞ் சுறுக்குத்தாக்கு
கொம்புத்தேன் ஒருசாமஞ் சுறுக்குத்தாக்கு
ஏனென்ற லிங்கமது சுத்தியாகு
மெடுத்துமறு அயக்காண்டி தன்னில்வையே. (332)

ஜாதிலிங்கக்கட்டு என்ற மருந்தின் செய்முறையைக் கூறுகிறேன் கேட்பாயாக. நெடுங்கம்பி லிங்கத்தை கரண்டியிலே போட்டு பழச்சாறும் முலைப்பாலும் கொண்டு சுறுக்கு கொடுக்க வேண்டும். ஒரு ஜாமம் இவ்வாறு சுறுக்குக் கொடுக்க வேண்டும். அப்போது லிங்கம் சுத்தியாகும். அதை எடுத்து மற்றொரு அயக்கரண்டி தன்னில் வைத்துக் கொள்வாயாக.

வைத்துமே ஐவிரலி பழுபாகற்சாறும்
வகைவகைக்கு ஒருசாமஞ் சுறுக்குப்போடு
ஐத்துமே அரப்பொடியைப் பழச்சாறுவிட்டு
அரைத்தந்த லிங்கத்தின் மேலேபூசி
உய்த்துமே பேய்க்குமட்டிக் காய்க்குள்வைத்து
ஒருபுடந்தான் போட்டெடுக்க முழுக்கட்டாச்சு
தைத்துமே சன்னிசுர தோஷமெல்லாம் நீங்கு
சண்ணுமே தொண்ணூற்றோ டாறுவாதஞ்
சித்துமே மெழுகுசெய்ய வேணுமென்றாற்
செவ்வகத்திப் பூப்பட்டை யிடித்துச்சாறு
பத்துமே பன்றியுட நெய்யுங்கூட்டிப்
பாங்காகச் சுருக்கிடவே மெழுகுமாமே. (333)

ஐவிரலிசாற்றில் ஒரு சாமம், பழுபாகற்சாற்றில் ஒரு சாமம் லிங்கத்துக்கு சுறுக்குக் கொடுக்க வேண்டும். அரப்பொடியைப் பழச்சாறு விட்டரைத்து அந்த லிங்கத்தின் மேலே பூசிக் கவசம் செய்து பேய்க்குமட்டிக் காய்க்குள்ளே வைத்து, ஒரு புடம்போட்டு எடுக்க, லிங்கம் முழுக்கட்டியாகி இருக்கும். இந்த லிங்கக்கட்டியை தேனில் உரைத்துக் கொடுக்க ஜன்னி தோஷம் எல்லாம் நீங்கும். தொண்ணூற்றாறு வாதநோய்களும் நீங்கும். இதனை மெழுகாகச் செய்ய வேண்டுமென்றால், செவ்வகத்திப் பூப்பட்டை இடித்த சாறுடன் பன்றியின் நெய்யையும் சேர்த்து, சுறுக்கிட்டால் மெழுகேயாகும். இதுவேதான் லிங்கமெழுகாகும்.

மெழுகெடுத்து நவலோகந் தன்னிலீய
மேதினியில் பத்தரையே மாற்றுக்காணுந்
தழுகெடுத்த மெழுகிலொரு பணந்தானுண்ணில்
சன்னிசுரந் தொண்ணூற்று ஆறும்போகுந்
தெளிவாகு மரிதாரந் தன்னைவாங்கித்
தேசிநீர் சுண்ணாம்பி லேழுசுத்திசெய்து
எளிதான வோட்டிலிட்டு அடுப்பிலேற்றி
யிருசாமங் கரத்தைச்சாறு சுறுக்குத்தாக்கே. (334)

இந்த லிங்க மெழுகை எடுத்து நவலோகங்களில் கொடுக்க பத்தரை மாற்றுத் தங்கம் காணலாம். இந்த மெழுகை ஒரு பணவெடை உட்கொண்டால் ஜன்னி சுரம் நானூற்றாறும் போகும், அரிதாரம் வாங்கிவந்து, கழுதை மூத்திரத்திலும் சுண்ணாம்பிலும் ஏழுமுறைகள் சுத்தி செய்து ஓட்டிலிட்டு அடுப்பில் ஏற்றி இரண்டு சாமம் கரத்தைச் சாற்றைக் கொண்டு சுறுக்குக் கொடுப்பாயாக.

தாக்கிடவே அரிதாரங் கட்டிப்போகுஞ்
சன்னிசுர தோஷமொடு சயமீளைகாசஞ்
சோக்கிடவே அரையாப்பு அழுகண்ணிகிரந்தி
சூலையொடு பதினெட்டுக் குஷ்டம்வாய்வுபோகுந்
தாக்கிடவே செந்தூரஞ் செய்யக்கேளு
சத்திநெடுஞ் சாரணைவேர் குக்குல்ரெண்டு
மாக்கிடவே முருக்கிலைச்சாறு வாய்நீராலு
மரைத்துமால் தேவிக்கு அங்கிபூட்டிப்
போக்கான காவிமண் சீலையேழு
பொதிந்துமே குக்குடத்திற் போட்டுவாங்கே. *(335)*

இவ்வாறு சுறுக்குக் கொடுப்பதால் அரிதாரம் கட்டாகும். ஜன்னி, ஜுரம், தோஷம், சயம், ஈளை, காசம், அரையாப்பு, அழுகண்ணிக் கிரந்தி சூலை, பதினெட்டு வகை குஷ்டரோகங்கள் வாய்வு முதலியவை போகும். இதனை செந்தூரமாகச் செய்வதற்கு குங்கிலியமும் நெடுஞ்சாரணை வேரும், முருங்கை இலைச்சாறும், வாய் நீரும்விட்டு அரைத்து அரிதாரத்தைக் கவசம் செய்து காவிமண் சீலை ஏழு செய்து குக்குடப் புடமிட வேண்டும். (வாய்நீர் = வெடியுப்பு திராவகம்)

போட்டுடெடுக்கச் செந்தூரம் அருணன்போலாம்
புகட்டிடவே நவலோகம் பத்துமாற்று
பாட்டெடுத்து நாளொன்றுக் கனுபானத்தில்
பணவிடைதான் மண்டலமே கொண்டாயானால்
காட்டெடுத்த நோயெல்லா மோடிப்போகுங்
காயசித்தாங் குருதொட்டுச் செய்துபாரு
ஆட்டெடுத்த காரீய பற்பங்கேளு
அறைகிறேன் காரீயந் தன்னைவாங்கே. *(336)*

புடம் போட்டு எடுக்கச் செந்தூரம் அருணன் போலச் சிவந்து காணப்படும். அதனை நவலோகத்துக்கும் புகட்டினால் பத்துமாற்றும் ஆகும். தினந்தோறும் பணவெடைதான் தக்க அனுபானத்தோடு உட்கொண்டுவந்தால், நோய்கள் எல்லாம் நீங்கும். காயசித்தியாகும், குரு தொட்டுச் செய்வாயாக, காரீய பற்பம் செய்வதையும் கூறுகிறேன்.

காரீய பற்பம்

வாங்கியே நல்லெண்ணெய் பலந்தானஞ்சில்
வகையாக மேழுதர முருக்கிச்சாய்க்கத்
தாங்கியே காரீயஞ் சுத்தியாகுந்
தகடாகக் கனதியிலே தட்டிக்கொண்டு

பாங்கியே பத்திராட்சி இலையரைத்துப்
பக்குவமாய்ப் பொதிந்துமேற் சீலைசெய்து
ஆங்கியே புடமிடவே வங்கம்நீறும்
அப்பனே மறுபடியும் எடுத்துக்கொண்டு
தாங்கியே சத்திச்சா ரணையரைத்துச்
சார்வாக முன்போல பொதிந்திடாயே. *(337)*

ஐந்து பலம் நல்லெண்ணெயில் உருக்கிச் சாய்க்க காரீயம் சுத்தியாகும். அதனைத் தகடாகத் தட்டிக் கொண்டு, பத்ராட்சி இலையை அரைத்து பக்குவமாய் அதனை பொதிந்து மேற்சீலை செய்து புடமிட்டு எடுக்க வங்கம் நீறும். அதை மறுபடியும் எடுத்துக் கொண்டு சத்திச்சாரணையிலையை அரைத்து முன்பு போலப் பொதிந்து,

பொதிந்துமே புடமூன்றிற் காரீயபற்பம்
புதுமையென்ன தும்பைப்பூ நீரொவ்வாது
அதிந்துமே பற்பத்தை அனுபானத்தில்
அறிந்துண்ண வாதசன்னி சயமீளைகாசங்
கதிந்ததொரு தேகத்திற் கடுப்புக்குத்தல்
கடிதான நோயெல்லாங் காணாதோடுஞ்
செதிந்தெழுந்த பற்பத்திற் பரிசூதஞ்சேர்த்து
செயநீரா லாட்டியே புடத்தைப்போடு
கதிந்தெழுந்த குருவாகும் வேதையாருங்
காயசித்தாங் காரீய பற்பந்தானே. *(338)*

மூன்று புடங்கள் போட்டு எடுக்கக் காரீயபற்பம், தும்பைபூ நிறத்தைவிட வெண்மையாக பற்பமாகியிருக்கும். இத்தகைய பற்பத்தை தக்க அனுபானம் அறிந்து உண்ண, வாதஜன்னி, சயம், ஈளை, காசம், தேகக்கடுப்பு, குத்தல் போன்ற கடுமையான நோய்கள் எல்லாம் காணாது ஓடும். இந்தப் பற்பத்துடன் சரியளவு சூதம் சேர்த்து செயநீரால் ஆட்டிப்புடம் போட அதுவே குருவாகும், வேதையாகும், காயவித்தாகும்.

பற்பத்தில் வெகுகடினந் தாமிரபற்பம்
பண்ணினால் சிவயோகஞ் சித்தியாகும்
அற்பமென்று எண்ணாதே தாமிரந்தன்னில்
அஞ்சுமுத்ரைத் தகடல்லால் சல்லிவாங்கிக்
கொற்பான கருங்குன்றி மணியரைத்துக்
கொள்ளிலையின் சாற்றிலே கலக்கிக்கொண்டு
கற்பமா மருள்சாறுந் தேசிநீருங்
கலந்ததிலே தாமிரத்தைக் காய்ச்சித்தோயே. *(339)*

பற்பத்திலேயே மிகவும் கடினமானது தாமிரபற்பம் செய்தலாகும். அதனைச் சிறப்பாகச் செய்துவிட்டால் சிவயோகமும் சித்தியாகும். இதனை அற்பம் என்று

எண்ணலாகாது. தாம்பரத்தில்- ஐந்து முத்திரைத் தகடாகப் பார்த்துவாங்கி, கருங்குன்றிமணி யரைத்து, கொள்ளு இலையின் சாற்றினிலே கலக்கிக் கொண்டு, மருள்சாறும் தேசிநீரும் கலந்து அதிலே தாம்பரத்தைக் காய்ச்சுத் தோய்த்து எடுப்பாயாக. (தேசிநீர் - கழுதை மூத்திரம்)

தோய்க்கவே ஏழுதரஞ் சுத்தியாகுஞ்
சொல்லரிய ஆதாளி கொண்டுவந்து
போற்றியே அரைத்ததனைத் தாமிரத்திற்பொதிந்து
புகழாக ரவியுலர்ந்து சுண்ணாம்புச்சீலை
தோற்றியே பெரியதொரு புடத்தைப்போடு
சொல்லரிய தாமிரந்தான் வெண்மைமெத்த
நாற்றியே வெள்ளைநீர் முள்ளிவாங்கி
நலமான வெள்ளெருக்கின் பாலாலாட்டே. *(340)*

அவ்வாறு ஏழுமுறை தோய்க்கத்தாமிரம் சுத்தி ஆகும். ஆதாளி இலை கொண்டு வந்து அதனை நன்றாக அரைத்து தாமிரத்தின்மேற் பொதிந்து, ரவியில் உலர்த்தி சுண்ணாம்புச் சீலை செய்து பெரியதொரு புடமிட்டு எடுத்தால் சொல்வதற்கரிய தாமிரம் வெண்மையாகும். மேலும் வெண்மையாக வெள்ளை நீர்முள்ளி வாங்கி வெள்ளெருக்கின் பாலால் ஆட்டி அரைக்க வேண்டும்.

ஆட்டியே தகட்டின்மே லரைத்துப்பூசி
அப்பனே உலர்ந்ததின்மேற் சுண்ணாம்புச்சீலை
ஆட்டியே செய்துமுன்போற் புடத்தைப்போடு
ஆத்தாட்கும் வடுகனுக்கும் பூசைபண்ணு
தாட்டிகந்தா மிரபற்ப மென்னசொல்வேன்
சங்குபோல் நீறியது தவளமாகுந்
தேட்டென்ன சித்தர்கள்தான் சொல்லுவாரோ
செகத்திலெந்தன் சீடருக்காய்ச் செப்பினேன்யான்
சாட்டாதே ஒருவருக்குங் கைமுறையீதப்பா
காட்டினால் கடைநரகில் மாளுவாமே. *(341)*

அவ்வாறு அரைத்ததனை தாமிரத் தகட்டின் மீது பூசி உலர்ந்த பிறகு அதன் மேல் சுண்ணாம்புச் சீலை செய்து புடம்போட்டு எடுத்து ஆத்தாளுக்கும் வடுகனுக்கும் பூசை செய். சங்குபோல நீறித் தூய வெண்மையாய் இருக்கும் இத்தாமிர பற்பத்தின் வேகம் மிக அதிகமாகும். இதன் செய்முறையை யாரும் சொல்லமாட்டார்கள். என் மாணவர்களுக்காக நான் சொன்னேன். ஒருவருக்கும் இந்தச் செய்முறையை சொல்லாதே. சொன்னால் நரகத்தில் மாள்வாய்.

மாளாதே யென்மகனே சொல்லக்கேளு
மகத்தான பற்பத்தைப் பதனம்பண்ணு
கோளான சூதமொரு கழஞ்சுக்கப்பா
குறிப்பான பற்பமொரு கழஞ்சுபோட்டு

தேளான வெண்கருவும் வர்க்கப்பாலுஞ்
சேர்த்தாட்டச் சூதமது விரைந்துபோகும்
வேளேநீ வில்லைதட்டி அகலிலிட்டு
மேல்மூடிச் சீலைசெய்து குக்குடத்திற்போடு
கேளான சூதமொடு தாமிரபற்பங்
கொடிதான சுன்னமாங் குருவுமாச்சே. (342)

இத்தகைய பற்பத்தைப் பத்திரமாகப் பதனம் செய்து கொள். இதனுடன் சூதம் ஒரு கழஞ்சுக்கு, பற்பம் ஏழுகழஞ்சு போட்டு வெண்கருவும் எருக்கம் பாலும் சேர்த்தாட்டச் சூதம் விரைத்துப்போகும், பிறகு இதனை வில்லைதட்டி அகலிலிட்டு மேல்மூடி சீலைமண்செய்து குக்குடப் புடத்திற் போட்டு எடுக்க, கடுமையான சுன்னமாம் குருவும் ஆகும்.

குருவெடுத்து நவலோகந் தன்னிலீயக்
குறையாது பத்தரையே மாற்றுக்காணும்
பருவான சரக்கெல்லாஞ் சுன்னமாமுன்
பற்பத்திற் பணவிடைதான் அனுபானத்தன்னில்
செரிவான மண்டலந்தான் கொண்டாயானால்
தீராத குன்மமொடு வாயுசூலை
அருவருந்த கிரந்தியரை யாப்புக்குஷ்டம்
ஆகாத கசரோகம் அந்திரவாய்வு
திருக்கெடுத்த பலபிணியுந் தீர்ந்துபோகுந்
தீர்க்கமாங் காயமது சித்தியாமே. (343)

குரு எடுத்து நவலோகந்தன்னில் ஈந்தால், பத்தரை மாற்றுக்குக் குறையாமல் காணும் இதனால் சரக்கெல்லாம் சுன்னம் ஆகும். முன்பு பற்பத்திற் பணவெடைதான், தக்க அனுபானம் தன்னில் ஒரு மண்டலம் உட்கொண்டால், தீராத குன்மங்கள், வாயுசூலை, கிரந்தி, அரையாப்பு, குஷ்டம், சயரோகம், கசரோகம், அந்திரவாய்வு இதுபோன்ற பலபிணிகளும் தீர்ந்து போவதுடன் காய சித்தியாகும்.

நாக செந்தூரம்

சித்தியாம் நாகத்திற் செந்தூரபற்பஞ்
செப்புகிறேன் மாணாக்கா தெளிந்துகேளு
பத்தியே சிறுகண்ணா கம்பலந்தான்பத்துப்
பாங்கான இலுப்பைநெய்யிற் சாரம்போட்டு
முத்தியாம் மூவாறு தரந்தான்சாய்க்க
முனையான நாகமது சுத்தியாகும்
சித்தியாம் ஆடாதோடை மூலிச்சாறுஞ்
செயநீருஞ் சேர்த்ததிலே யேழுதரம்சாயே. (344)

நாகபற்பம் செய்முறை கூறுகிறேன். பத்துப்பலம் சிறுகண் நாகம் எடுத்துக் கொண்டு இலுப்பை எண்ணெயில் சாரம் போட்டுக், காய்ச்சி பதினெட்டு முறை சாய்க்க

நாகம் சுத்தியாகும். மேலும் ஆடாதோடைச் சாற்றையும் செயநீரையும் சேர்த்து அதிலே ஏழுமுறைகள் சாய்ப்பாயாக.

சாய்க்கவே நாகமது கட்டிப்போகுங்
சீர்னான நாகவல்லி யிலையினோடு
ஆய்க்கவே நீருமேல் நெருப்புங்கூட்டி
அரைத்துமே கவசமாய்ச் செய்துலர்த்தி
ஆய்த்துமே பெரியதொரு புடத்திற்போட
அப்பனே நாகமது நீறிப்போகுங்
காய்க்கவே கரடுகட்டி நின்றதானால்
கர்ப்பூர வெற்றிலைச்சாறு விடத்தீஞ்சான்சாறும்
ஆய்க்கவே கல்வத்தி லரைத்துநன்றாய்
அப்பனே வில்லைதட்டிப் புடத்தைப்போடே. *(345)*

இவ்வாறு சாய்த்தால் நாகம் கட்டிப்போகும். நாகவல்லி இவையுடன் நீர்மேல் நெருப்பு என்னும் மூலிகையை ஒன்றாகச் சேர்த்து அரைத்து கவசம் செய்து உலர்த்திக் காயப்போட்டு, காய்ந்த பின் பெரியதொரு புடத்திற் போட்டெடுக்க நாகம் பற்பமாகிப் போகும். கட்டி நின்றதாகத் தெரிந்தால் கர்ப்பூரவள்ளியிலைச் சாறும் விடத்தீஞ்சான் சாறும் சேர்த்து கல்வத்திலிட்டு அரைத்து வில்லை தட்டிப் புடத்தைப் போடுவாயாக. புடம்போட்ட நாகம் துல்லியமான பற்பமாகி இருக்கும்.

புடம்போட நாகபற்பம் என்னசொல்வேன்
பொற்கொடியைப் பூசைபண்ணி எடுத்துக்கொண்டு
குடம்போடு அனுபான மறிந்துகொள்ளக்
குன்மமொடு கசரோகங் காசிசூலை
துடம்போடு பாண்டுகா மாலைசோகை
சொல்லரிய மேகமொடு சுவாசகாசம்
வடம்போடு சயமீளை மந்தாரகாசம்
வரட்சியொடு குத்திருமல் புகைச்சல்மேகந்
திடம்போடு உள்மூலம் புறமூலஞ்சூலை
தீராத கசரோகந் தீருமென்னே. *(346)*

இத்தகைய நாகபற்பத்தை என்னவென்று சொல்வேன். பொற்கொடியைப் பூசைசெய்து பற்பத்தை எடுத்துப்பதனம் செய்வாயாக. இந்த நாகபற்பத்தை தக்க அனுபானம் அறிந்து உட்கொள்வாயானால், குன்ம நோய்கள், கசரோகம், காசிசூலை, பாண்டு, காமாலை, சோகை, மேகம், சுவாச காசம், சயம், ஈளை, மந்தாரகாசம், வறட்சி, இருமல், குத்திருமல், புகைச்சல் மேகநோய்கள், உள்மூலம், புறமூலம், சூலை முதலிய நோய்களும்.

என்னவே குடல்வாதங் குடற்புரட்டு
ஈளைபித்தந் தாழாத இருமல்வாய்வு
நன்னயமாய்ச் சொன்னதொரு வியாதியெல்லாம்
நாடாது நாகபற்பங் கொண்டபோது

சொன்னதொரு கட்டியதோர் நாகந்தன்னிற்
சூதமிட்டுத் தங்கமிட்டுக் கெந்தியிட்டுக்
கண்ணான குலாமல்லிச் சாற்றாலாட்டிக்
காசியென்ற வாலுகையின் மேருக்கேற்றே. (347)

குடல்வாதம், குடற்புரட்டு, ஈளை, பித்தம், இருமல், வாய்வு இத்தகைய வியாதிகளெல்லாம் நாகபற்பம் உட்கொள்ளும்போது நாடாது. கட்டிய நாகந்தன்னில் சூதமிட்டு, தங்கமிட்டு, கெந்தியுமிட்டு குலாமல்லிச்சாற்றால் அரைத்து காணியென்ற வாலுகையின் மேல் ஏற்றுவாயாக.

ஏற்றியே பன்னிரண்டு சாமந்தீட்டி
எடுத்துமே ஆத்தாளைப் பூசைபண்ணப்
பார்த்துமே நவலோகம் பத்துக்கொன்று
பரிசிக்கப் பதினாறு மாற்றுக்காணும்
ஆத்துமே அனுபானத் தோடேகண்டால்
ஆகாத நோயெல்லா மகன்றுபோகுங்
காத்துமே மண்டலந்தான் கொண்டாயானால்
காயத்துக் கழிவேது கற்பாந்தரமாமே. (348)

ஏற்றிப்பன்னிரண்டு சாமங்கள்வரை தீயிட்டு எரித்து எடுத்து ஆத்தாளைப் பூசை பண்ணி, நவலோகம் பத்துக்கு ஒன்று ஸ்பரிசித்தால் பதினாறு மாற்றுக்காணும். இதனை அனுபானத்துடன் உட்கொண்டால் ஆகாத நோய்கள் எல்லாம் அகன்று போகும். இதனை பத்தியம் காத்து ஒரு மண்டலம் உண்டுவந்தால் இந்த உடம்புக்கு அழிவுதான் ஏது? கற்பாந்தரமாகும்.

கற்பமென்ன விதுவெல்லாம் கற்பமல்ல
காயசித்திக் கேற்றபற்பங் காட்டார்சித்தர்
சொற்பனமாய்ச் செய்யவென்று சொல்லொண்ணாது
சொன்னாலுங் கருமறைத்துச் சொல்லப்போகா
அற்பமென்று கைப்பொருளைச் செலவுசெய்து
அலைந்துகெட்டுப் போவார்க ளதினாலப்பா
தப்பில்லாச் சீடரென்ற பிள்ளைகளுக்காகச்
சாகாத கற்பத்தைச் சாற்றுவேனே. (349)

கற்பம் என்றால் இதுவெல்லாம் கற்பமாகிவிடாது. காயசித்திக்கு ஏற்ற பற்பத்தை சித்தர்கள் காட்டமாட்டார்கள். சொற்பனம் போலச் சொல்லென்றாலும் சொல்ல முடியாது. அப்படியே சொன்னாலும் கருவை மறைத்துச் சொல்லலாகாது. இப்படிச் செய்வதால் பொருள்களையெல்லாம் செலவு செய்து அலைந்து கெட்டுப் போவார்கள். தப்பே இல்லாத சீடனென்று எனது மாணவருக்குச் சாகாத கற்பத்தைச் சாற்றுகிறேன். கேளுங்கள்.

சாற்றரிய ஸ்திரீசாதி வர்க்கம்நாலு
தனையறிந்து முதற்றரமாம் நாதம்வாங்கிச்
சேத்துமே கற்பூரம் பொடித்துப்போட்டுச்
செலமாகுந் தெளிவதிலே சமனாய்விந்து
சேத்துமே நாளொன்று கழஞ்சுவீதஞ்
செய்பற்பங் குருபற்பஞ் சேர்த்துக்கொள்ளு
சாத்தரிய மண்டலத்தில் தேகம்பொன்னாஞ்
சத்தியமாய்ச் சொல்லிவிட்டேன் சாவில்லைதானே. *(350)*

மங்கையரின் பிறவி ஜாதிகளில் நான்கு ஜாதிகள் உண்டு, அவர்களில் முதல்தரமான மங்கையினுடைய நாதத்தை வாங்கி, அதனுடன் கற்பூரத்தைச் சேர்த்து பொடித்துப் போட்டுவிட்டால், அது நீராகிவிடும். அதன் தெளிவினிலே சமனளவு விந்து சேர்த்துமே நாள்தோறும் கழஞ்சு வீதம் முன் செய்த பற்பம், குருபற்பம் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதனை ஒருமண்டலம் அருந்தி வந்தால் தேகம் பொன்னாகும். இதனை நான் சத்தியமாகச் சொல்லிவிட்டேன். இதனை உட்கொண்டால் சாவே இல்லை.

இல்லையே ஏமனென்ற பேரும்போச்சு
இதற்குப்பேர் பரன்என்றும் வஸ்துவென்று
மல்லவே செயநீருஞ் சுரபானமென்று
மப்பனே மத்தியா பானமென்றுஞ்
சொல்லவே ஆயிரத்தெண் மலருக்குள்ளே
சிறந்திருந்த பூவென்று மதியமிர்தமென்றுஞ்
சொல்லாதே சாகாது வேகாதென்றுஞ்
சித்தர்கள்தான் பூசிக்கும் வாமமென்றும்
வல்லவே யிதைவிட்டு வெறியே கொண்டு
வகையறியா மண்டார்களநேகர்தானே. *(351)*

சாவே இல்லையென்பதால் எமன் என்ற: பெயரும் போச்சு, இதற்கு பரன் என்றும் வஸ்து என்றும் செயநீர் என்றும் சுரபானம் என்றும் மத்தியர் பாகம் என்றும், ஆயிரத்தெட்டு இதழ் தாமரை மலருக்கு உள்ளே திறந்திருக்கும் பூவே என்றும் மதியமிர்தமென்றும் இனிமேல் சொல்லலாகாது. சாகாது, வேகாது என்றும் வகையறியாமல் இதுவிட்டு வேறு பொருள்களைக் கொண்டு உலகத்திலே உயிர்துறந்து செத்தவர்கள் அநேகம் பேர்.

மாளாமற் சொன்னதொரு கற்பங்கேளு
மறைத்துவைத்த வழலையுட கருவைக்கேளு
மாளாத மதியமிர்தம் பூரணந்தானப்பா
மயங்காதே கண்டத்தில் வழலைதன்னை
மாளாதே பீங்கானில் வேறேவாங்கி
வளமான கற்பூரம் பொடித்துப்போட்டு

மாளாமல் பொருமியது வள்ளையுப்பாம்
மைந்தனே கல்வத்தி லிட்டுக்கேளு
மாளாதே கல்லுப்பு பருத்தியுப்பு
வகைசமனாய்க் கொண்டுசிப்பி நீராலாட்டி
மாளாதே வில்லைதட்டி ரவியிற்காய்ந்து
வளமான அஞ்சுசுன்னக் குகையிற்கேளே. *(352)*

எனவே சாகாமலிருப்பதற்கு ஓர் கற்பங் கேட்பாயாக. மறைத்துவைத்த வழலையுடைய கருவைக் கேட்பாயாக. மா்றாக, மதியமிர்தம் பூரணம்தானப்பா, மயங்கவேண்டாம், கண்டத்தில் வழலை தன்னை பீங்கானில் வேறேவாங்கி வளமான கற்பூரத்தைப் பொடித்துப் போட்டு விட்டால் அதுபொருமி வழலை உப்பாகும். அந்த உப்பை கல்வத்திலிட்டு, கல்லுப்பு, பருத்தியுப்பு வாகை சமனாகக் கொண்டு, சிப்பி நீரிலாட்டி அரைத்து வில்லைதட்டி சூரிய ஒளியிற் காயவைத்து அஞ்சு சுன்னக் குகையில் போட்டு.

குகைதனிலே வீரமொடு புழுகுபூரங்
குருவண்டு கருநாவி உரமுஞ்சூதம்
வகையாகச் சிப்பிநீர் தன்னாலாட்டி
வழலையென்ற வில்லையின்மே லங்கிபூட்டி
அகையாத அஞ்சுசுன்னங் குகைக்குட்பூசி
அதற்குள்ளே வள்ளையென்ற வில்லைவைத்துத்
தொகையாக மேற்சுன்ன மிட்டுமூடிச்
சுத்தியே காடையொரு புடத்தைப்போடு
முகையாக முப்பூவின் வள்ளையாச்சு
முறையோடே இப்படிநீ ஐந்துதரம்போடே. *(353)*

வீரம், பூரம், புனுகு, குருவண்டு, கருநாவி உரம், சூதம் இவற்றைச் சிப்பி நீரால் ஆட்டி முன்செய் வில்லைகளுக்கும் குகையின் உட்புறத்திலும் பூசி - குகைக்குள் வில்லைகளை வைத்து மேலே சுன்னமிட்டு மூடிக் காடைப் புடம்போடு. இவ்வாறு ஐந்து புடம் போட வேண்டும்.

போடவே வழலையென்ற சுன்னமாச்சு
புத்திகெட்ட வாதிகளே சித்தர்சொல்லார்
ஆடவே நாதாக்கள் ஆட்டெல்லாந்தான்
அம்மம்மா வழலைவிட்டால் வேறேயுண்டோ
போடென்ற அடிமுடியுங் காரசாரம்
போரான அண்டபிண்டம் பிரமகற்பம்
வாடென்ற எரியென்றும் பாறையென்று
மதயானைக் கல்லென்றும் வீரமென்றும்
ஆடவே சொன்னதெல்லாம் விந்துநாத
மதையல்லால் வேறொன்று மறியென்பாரே. *(354)*

இவ்வாறு புடம்போட்டு எடுத்த பொருள்தான் வழலைச்சுன்னம் இதைக் கொண்டு நாதாக்கள் ஆடிய ஆட்டம் எல்லாம் சொல்ல முடியாது. இந்த வழலைவிட்டால் வேறு உண்டோ? அடி முடியான காரசாரம், அண்டபிண்டம் பிரமகற்பம், எரியென்றும் பாறை என்றும் மதயானைக்கல் என்றும் வீரம் என்றும் சொன்னதெல்லாம் விந்து நாதம் அல்லாமல் வேறொன்றுமில்லை. அறிவாயாக.

பாரென்ற நாதத்தில் விந்துபுக்கிப்
பாங்கான பிருதிவியு மப்பும்வாய்வும்
ஆரென்ற ஐவருந்தான் சேர்ந்ததாலே
அருவுருவாய் ஐங்கோலப் பிண்டமாச்ச
சாரென்ற வழலையென்று முப்பூவென்றுஞ்
சவுக்கார குருவென்று மிதற்கேபேராம்
பாரென்ற கோசபீச மிதற்கேபேராம்
பஞ்சபூதச் சரக்கென்று மிதற்கேபேராம்
பாரென்று இதைமறைத்துச் சித்தரெல்லாம்
பலபலவாய் நூல்தோறும் பாடினாரே. (355)

பார் என்ற பூமியினுடைய நாதத்தில் விந்து புகுந்து பாங்கான பிருதிவியும் அப்பும் வாய்வும் ஆகவே ஐவருமே சேர்ந்த நூல்தான், அருஉருவமாகவும் ஐங்கோலப் பிண்டங்கள் எல்லாம் உருவாயிற்று. வழலை என்றும் முப்பு என்றும் சவுக்கார குருவென்றும் இதற்கே பெயராகும். கோசபீசம் என்ற பெயரும் இதற்கேயாகும். பஞ்சபூதச்சரக்கென்ற பெயரும் இதற்கேயாகும். மறைத்துத்தான் சித்தர்கள் எல்லாம் பலபலவாய் நூல்தோறும் பாடினரர்கள்.

பாடினா ரென்நூலில் வெளியாய்ச்சொன்னேன்
பதினெட்டுப் பேருமென்னைப் பகைத்திட்டார்கள்
வீடியே சொன்னதொரு வழலைப்போக்கு
வெவ்வேறே யென்றுசொல்லி மலைக்கவேண்டாம்
பாடியதோர் நாதவிந்தில் வழலையாகும்
பரிவான பிண்டத்தால் வழலையாகு
ஆடியதோ ரடிமுடியும் வழலையாகும்
மத்தியொடு மாமிசமும் வழலையாகும்
ஆடியே வழலைதொட்டு வாதம்பாரு
அலையாதே கற்பத்தை உண்டுதேறே. (356)

அவர்கள் மறைத்துப் பாடியதையெல்லாம் நான் எனது நூலில் வெளியாய்ச் சொன்னேன். இதனால் பதினெட்டு சித்தர்களும் என்னைப் பகைத்திட்டார்கள். ஏற்கெனவே சொன்ன ஒரு வழலையின் போக்கு வெவ்வேறாக இருக்கிறதே என்று மலைக்கவேண்டாம். நாதவிந்தில் வழலையாகும். பரிவான பிண்டத்தில் வழலையாகும். ஆடியதோர் அடியும், முடியுமான ஆகாயமும் பூமியும் வழலையாகும். மத்தியோடு மாமிசமும் வழலையாகும். இவ்வாறு ஆடியே வழலையில் ஆரம்பித்து இரசவாதம் பார்க்க வேண்டும் இதற்காக அலையாமல் கற்பத்தை உண்டு தேற வேண்டும்.

தேறவே ரசவாதஞ் சிவசொத்தப்பா
செப்பாதே பொருள்தனையே இச்சிக்காதே
ஆறவே செய்தாலும் பரத்துக்கீந்து
அறிவுகுரு போதத்தி லடங்கிநில்லு
பாருநீ பரபரப்பாய்த் திரிந்தாயானால்
பலியாது அவன்தனக்கு வாதமேது
கூறார்கள் வாதமொடு ஞானம்ரெண்டுங்
குருபதத்தைப் போற்றிசெய்யி லறிவிற்கூடும்
வீறாக என்னூலில் வெளியாய்ச்சொன்னேன்
விண்டிட்டால் விண்ணிலிடி விளங்கும்பாரே. *(357)*

இரசவாதம் என்பது எப்பொழுதுமே சிவன் சொத்து ஆகும். அதன் பொருளைச் சொல்லாதே, பொருளைதான் நீ இச்சிக்காதே. யாவற்றையுமே பரத்துக்கு வழங்கி அறிவு குரு போதத்தில் அடங்கி நிற்பாயாக. எதற்குமே படபடப்பாய் திரிந்தாயானால் பலியாது வாதத்தையும் ஞானத்தையும் பற்றி அதிகமாக கூற மாட்டார்கள். குருவின் திருவடியைப் போற்றி வாழ்ந்தால் எல்லாமே உன் அறிவில் வந்து சேரும். இதனை நான் என்நூலில் வெளிப்படையாக சொன்னேன். நீ இதைச் சொல்லாதே. சொன்னால் இடிவிழும்.

வெள்ளெருக்குமூலி

வீழாம லறிவுக்கு ளறிவையுன்னி
வேதாந்த வாலையைத்தா ளித்தம்பூசி
மாளாதே யோகசித்தி அஷ்டமாசித்தி
வசமாக வெள்ளெருக்கு தன்னைப்பார்த்து
மாளாதே அதனுடைய மூலிவாங்கி
மயங்காதே வகையென்ன கதிர்நாள்பூசம்
ஆளாதே மூலியென்ற வேரறாமல்
அடிமூலங் கண்டளவு வெட்டிச்சோதி
கேளேநீ யாணிவேர் நுனியிலப்பா
கிழங்கதுவும் லிங்கம்போ லிருக்கும்பாரே. *(358)*

அப்படி விழாமல் இருப்பதற்காக அறிவை எண்ணி வாலைத்தாயை பூசிப்பாயாக, அதனால் யோகசித்தி அஷ்டமாசித்தி, வசமாக ஞாயிற்றுக்கிழமை பூச நட்சத்திரம் கூடியநாளில் வெள்ளெருக்கு மூலிகையின் வேர் அறுந்து விடாமல் அடிமூலம் காணும் அளவு குழி தோண்டிப் பார்த்தால் ஆணிவேர் நுனியில் லிங்கம் போல் கிழங்கு இருக்கும்.

இருக்குமதை வெண்சாவல் பொலியும்பொங்க
லிட்டுமே தூபதீப நெய்வேத்தியத்தோடு
கருக்குமே கன்னிநூல் காப்புக்கட்டிக்
கருதியே கிழங்குதனை வேரேவாங்கி

விருக்குமே விநாயகன்போல் பண்ணிக்கொண்டு
மீதுள்ள வேரையெல்லாம் வெவ்வேறேகுளிசம்
முருக்கவே செய்துநீ தம்பனமும்வசிய
மோகனவுச் சாடனமு முறையாய்ச்செய்யே. (359)

இதற்கு பொங்கலிட்டு வெண்சாவல் பலி கொடுத்து தூபதீப நெய் வேத்தியோடு கன்னி நூல் காப்புக்கட்டி அந்தக் கிழங்கை தனியாக எடுத்து அதனால் விநாயகன் உரு செய்து கொண்டு மீதம் உள்ள வேரை எல்லாம் வெவ்வேறாக குளிசம் செய்து தம்பனம், வசியம், மோகனம், உச்சாடனம், போன்ற அஷ்ட கர்மங்களை முறையாக செய்வாயாக.

செய்துமே வெவ்வேறே வைத்துக்கொண்டால்
செகமோகத் தம்பனமும் வசியஞ்சித்தி
செய்துமே எட்டெட்டுஞ் சித்தியாகும்
திறமான அடிமூல விநாயகனைக்கேளு
கொய்துமே குறைபடாத் தலைமண்டைஓடு
கொண்டுவந்து குழிவெட்டித் தாபித்துக்கொண்டு
உய்துமே அதின்மேலே மண்திண்ணைபோட்டு
ஓங்கார மிட்டதின்மே லிருந்துகொண்டு
அய்துமே மாசான மாகாளிகோஷ்டம்
அல்லாட்டா வில்லமே மயானமென்று
மெய்துமே பரித்தகட்டில் நவகோணமிட்டு
விநாயகனை வைத்ததன்மேல் ஸ்ரீங்கென்றோதே. (360)

இதையெல்லாம் செய்து வெவ்வேறாக எடுத்துக்கொண்டால் ஜெகன் மோகனமும் ஸ்தம்பனமும் சித்தியாகும். அட்ட கருமங்களும் சித்தியாகும். பிறகு குறைபடாத, வெட்டப்படாத, தானாக இறந்து போனவனுடைய தலை மண்டை ஓட்டைக் கொண்டு வந்து குழி வெட்டி ஸ்தாபித்துக் கொண்டு, அதன்மீது மண்திண்ணை அமைத்து ஓம்காரம் எழுதி, அதன்மீது இருந்து கொண்டு, அதனையே மஸான மாகாளி கோட்டமாக அல்லது மயானம் என்று சிந்தித்து தங்கத் தகட்டில் நவகோணமிட்டு அதன்மேல் எருக்கம் கிழங்கு விநாயகனை வைத்து, அதன்மீது ஸ்ரீ, ரீம், என்று ஓதுவாயே.

ஓதவே ஓங்றீங் அங்உங்மங் ஓம்சிவகண தேவாய நமாவென்று
ஓதிடவே லெட்சமுரு மண்டலந்தானப்பா
ஓதுவது மவுனத்துள் ளெழுத்தைப்பற்றி
உத்தமனே வாசிதனை அடக்கியுள்ளே
ஓதவே சரியையொடு கிரியைமார்க்கம்
உத்தமனே யோகசித்தி ஞானசித்தி
தீதறவே யெட்டெட்டுஞ் சித்தியாகுஞ்
சிவயோகங் கைக்குள்ளே சிக்கிப்போச்சே. (361)

ஓம், ரீங், அங், உங், மங், ஓம் சிவ கண தேவாய நம, என்று ஒரு இலட்சம் உரு ஓதிடவேண்டும். இவ்வாறு ஒருமண்டலம் ஓதும் போது மௌனத்தின் உள்ளெழுத்தைப்

பற்றிக் கொண்டே ஓத வேண்டும். அப்பொழுது வாசியை உள்ளே அடக்கிக் கொள்ளவும் வேண்டும். இவ்வாறு ஓதினால் தான் சரியை, கிரியை மார்க்கம் புலனாகும். இப்படிச் செய்தாலே யோகசித்தி, ஞானசித்தி முதலிய சித்திகள் யாவும் கைகூடும். சிவயோகம் கைக்குள்ளே அகப்படும்.

போச்சென்ற சித்தரெல்லாம் மெச்சிக்கொண்டு
புகழ்ந்துனக்குச் சகலசித்துங் கையிலீவார்
ஆச்சென்ற சித்துக்குச் சித்தனாவாய்
அரிதான வெள்ளெருக்குச் சிவமூலியப்பா
தேச்சென்ற திம்முறைதா னாருஞ்சொல்லார்
சித்தர்கள் தான் செய்கிற முறையீதப்பா
நாச்சென்ற வெள்ளெருக்கின் தயிலந்தன்னில்
ரசம்நீறும் நவச்சாரங் கட்டிப்போமே. *(362)*

சித்தர்கள் எல்லாம் உன்னை மெச்சிப் புகழ்ந்து, உனக்குச்சகல சித்துகளையும் வழங்குவார்கள். சித்துகளைச் செய்யும் சித்தனாகிய பிறகு உன்னை சித்தனாக்கிய சிவமூலிகைதான் அரிதான வெள்ளெருக்கு என்பதை அறிவாயப்பா, இந்த முறையை வேறு எவருமே உனக்குச் சொல்லமாட்டார்கள். சித்தர்கள் செய்முறை இதுதானப்பா, வெள்ளை எருக்கன் தைலம் தன்னால் இரசமும் நீறும் சாரமும் சுட்டிப்போகும்.

போமென்ற நவச்சாரந் தன்னைலாங்கிப்
புகழான தயிலத்தில் பூசிப்பூசி
தேமென்ற ஏழுநாள் ரவியிலிட்டுச்
சிறுபுடமாய்ப் போட்டெடுக்கச் சாரங்கட்டும்
ஆடுமென்ற சாரத்தால் செயநீராகும்
அறுபத்தி னால்சரக்குங் கட்டலாகும்
ஆமென்ற சூதத்தைக் கல்வத்திட்டு
அரைத்திந்தத் தயிலத்தால் வில்லைதட்டிப்
போமென்ற ஓட்டிலிட்டு மேலோடுமூடிப்
புடம்போடச் சூதமது நீறிப்போமே. *(363)*

நவச்சாரத்தை வாங்கி வந்து வெள்ளெருக்கந் தைலத்தில் பூசிப்பூசி ஏழுநாட்கள் வரை தினந்தோறும் சூரிய ஒளியில் வைத்து, சிறுபுடமாய்ப் போட்டு எடுக்க சாரங்கட்டும். சாரத்தினால் இது செயநீராகும். அறுபத்துநான்கு சரக்குகளையும், இதனுள் கொண்டு கட்டலாகும். சூதத்தைக் கல்வத்திலிட்டு இந்தக் தைலத்தை விட்டு அரைத்து வில்லைதட்டி ஓட்டிலிட்டு மேல் ஓடு மூடிப்புடம் போடப் பாதரசமானது பற்பமாகியிருக்கும்.

நீறிய்தோர் தயிலத்தில் சொல்லக்கேளு
நிசமான புழுகுகோ ரோசனையுங்கூட்டிக்
காருநீ காராவின் பாலாலாட்டிக்
கருவென்ற சுக்கிலமுங் கருதிக்கொஞ்சம்

சேரேநீ தயிலத்தி லொக்கச்சேர்த்துத்
திலதமிடச் செகமெங்கும் வசியமாகும்
பாரேநீ யென்னூலை மனதில்வைத்தால்
பாரெல்லா முன்வார்த்தை பலிதமாமே. (364)

இந்த தைலத்தில் புழுகு, கோரோசனையும் சேர்த்து காராம் பசும்பாலைக் கொண்டு, கல்வத்திலிட்டு ஆட்டி, கருவாகிய சுக்கிலத்தையும் கொஞ்சம் தைலத்தில் சேர்க்கவேண்டும். இவ்வாறு சேர்த்துக் திலகமிட ஜெகம் எல்லாம் வசியமாகும், எனது இந்த நூலின் கருத்தை மனத்தில் வைத்தால் பார் எல்லாம் உன்வார்த்தை பலிதமாகும்.

தேசி வித்தை

ஆமென்ற தேசியிலே அநேகவித்தை
ஆருந்தான் சொல்லார்கள் அப்பாகேளு
காமென்ற தேசியென்ன கடைப்பிறப்புக்
கருவறியா மாண்பரென்ன கழுதையென்பார்
காமென்ற வெழுபிறப்புங் கடந்துபோச்சு
காசினியில் மறுபிறவி யில்லையில்லை
தேமென்ற தேசியென்றால் சிவத்துக்கொக்குந்
தேசிகனாம் என்றுசித்தர் செப்பினாரே. (365)

கழுதையைக் கொண்டு அநேக வித்தை செய்யமுடியும். ஆனால் அவற்றைப் பற்றி யாருமே எதுவும் சொல்லமாட்டார்கள். தேசி என்றால் கடைப்பிறப்பு. கருவறியாத மனிதர்கள் எல்லாம் : கழுதை : என்பார்கள். இப்பிராணி ஏழுபிறப்பையும் கடந்து போனதால் மறுபிறப்பு ஒருபோதும் இல்லை. தேசி என்றால் சிவத்துக்கொப்பாகும் தேசிகனாம் என்று சித்தர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

செப்பினார் தேசியுட வித்தைகேளு
திறமான பாஷாண மறுபத்தினாலுஞ்
செப்பினார் சுத்திசெய்யத் தேசிநீராம்
சிறப்பான அந்நீரில் பூநீரிட்டு
நப்பியே கலக்கியந்தத் தெளிவைவாங்கி
நலமாகச் சொல்லியதோர் சரக்கெல்லாந்தான்
செப்பியே கடுஞ்சுத்தி யாகும்பாரு
செப்பரிய இதைவிட்டால் செயமாகாதே. (366)

அத்தகைய தேசியினுடைய வித்தையைக் கேட்பாயாக. திறமான பாஷாணங்கள் அறுபத்து நான்கே ஆயினும் அவற்றையெல்லாம் சித்தி செய்வதற்கு தேசிநீரே சிறப்பான பொருளாகும் சிறப்பான இந்த நீரில் பூநீரிட்டு நன்றாக கலக்கியதைத் தெளிவிறுத்து வாங்கிக் கொள்வாயாக. இதனால் சரக்குகள் எல்லாவற்றையும் மிக நன்றாகக் கடுஞ்சுத்தி செய்ய முடியும். ஆகையால்,

செயமாகத் தேசியுட குழம்புதன்னைச்
சிறப்பான பூப்புடத்தில் தயிலம்வாங்கிக்
கயமாகுங் காரீய முருக்கிச்சாய்க்கக்
கட்டியது குருவாகும் வேதைகோடி
தயதான தேசியுட மண்டைதன்னைத்
தயிலமா யிறக்கியதில் சாரம்போட்டுக்
கயமான நாகத்தை உருக்கிச்சாய்க்கக்
கட்டிப்போந் தயிலத்தில் லிங்கமெழுகாமே. (367)

வெற்றியடைவதற்கு தேசியினுடைய குழம்புதனை சிறப்பான பூப்புடத்தில் தைலம் வாங்கி, அதனுள்ளே காரீயத்தை நன்றாக உருக்கிச் சாய்த்து விட்டால் அது கட்டி குருவாகும். அதனால் உண்டாகும் வேதை செய்வதற்கு தேசியுடைய மண்டை ஓட்டைத் தைலமாக இறக்கி, அதில் சாரம் போட்டு நாகத்தை உருக்கிக்க சாய்க்க நாகம் கட்டிப்போகும். தைலத்தில் லிங்கமும் மெழுகாகும்.

மெழுகாகும் அதின்பித்து ஆருங்காணார்
மெய்கட்டா வித்துவே ஷணத்தைஓதில்
தெளிவாகுங் கருங்கழுதைப் பித்துவாங்கிச்
சிறந்தபுல்லா மணக்கும்பேய்ப் பீர்க்கம்வித்துங்
குழிவான கருவேம்புத் தயிலம்வாங்கிக்
குளியானை யோடுந்தன் சுக்கிலமுங்கூட்டித்
தெளிவான பித்துடனே சேர்த்துமத்தி
திலகமிடச் சிவனாலுங் காணார்கேளே. (368)

மெழுகாகும் ஆனபின்பு அதில் பித்தை யாராலும் காண முடியாது, மெய்யாகக் கட்டுவதற்கு வித்வேஷண மந்திரத்தை ஓதினால் தெளிவாகும். கருங்கழுதைப் பித்து வாங்கி புல்லாமணக்கும் பேய்ப்பீர்க்குவிதையையும் கருவேம்புத் தைலம் குழியானையுடன் தனது சுக்கிலத்தையும் கூட்டி கழுதை பித்துடனே சேர்த்து மத்தித்துத் நெற்றியில் பொட்டிட்டுக் கொண்டால் சிவனாலும் காண முடியாது.

கேளப்பா அதினுடைய கண்ணைவாங்கிக்
கெடியாக உலர்த்தியே பொடியாய்ச்செய்து
வாளப்பா பெண்ணுடைய விலக்கச்சீலை
வாங்கியந்தப் பொடியூட்டித் திரியாப்பண்ணி
ஆளாமே காரெள்ளுத் தயிலந்தன்னில்
ஆனைக்கண் சட்டியிலே மையெரித்துவாங்கிக்
காளுமே குறைபடா பூனைக்கண்ணன்
கையிலிடப் பாதாள முருகியோடும். (369)

தேசியினுடைய கண்ணை வாங்கி, உலர்த்தியே பொடியாகச் செய்து, மாதவிலக்காகிய மங்கையின் தீட்டுச்சேலையில் ஊட்டித் திரியாகச் செய்து காரெள்ளுத்

தைலந்தன்னில் எரித்து, யானைக்கண் சட்டியிலே மையை வாங்கி குறைப்படாத பூனைக்கண்ணன் கையிலிட பாதாளமும் உருகி ஓடும்.

ஓடுமே கவலையெல்லா முரைக்கக்கேளு
உன்னைப்போ லதிர்ஷ்டவா னுலகிலுண்டோ
காடுமே டலையாம லென்நூல்தன்னைக்
கருத்திலே நீயிருத்தி யோகியாவாய்
ஓடுமே காசிமுதல் கன்னியா வரையப்பா
உத்தமனே புதையலெய்தத் தயிலம்வாங்கி
ஒடேநீ நிவந்தகருஞ் சீலையிலேஊட்டி
உலர்த்தியே திரியாகத் திரித்துக்கொள்ளே. (370)

உன்னுடைய கவலையெல்லாம் ஓடிப்போய்விடும். உன்னைப்போல அதிர்ஷ்டசாலி எவருமில்லை. காடுமேடு அலையாமல் என்னுடைய நூலை கருத்தில் கொண்டால் யோகியாவாய். காசி முதல் கன்னியாகுமரி வரை புதையல் எங்கிருந்தாலும் அதை அடைய மேற்படி தைலம் வாங்கி, நீ சிவந்த கருஞ்சீலையிலே ஊட்டி, உலர்த்தி திரியாக திரித்துக் கொள்வாயாக.

திரித்துமே தேசியுட கொழுப்பைவாங்கித்
திறமாக நெய்யுருக்கித் தீபமேற்ற
மரித்துமே அய்யனொடு பிடாரிதுர்க்கை
மகாபூத வேதாள மருண்டேயோடு
மிருந்துமே பிரமரா ட்சதைபூதம்பில்லி
வெம்பிசாசு தொட்டுமா னிடரைக்கொண்டால்
நெரித்துமே தீபமுகம் பார்க்கச்சொல்லி
நெற்றிதனில் சிங்கென்ற அட்சரத்தைஒட்டே. (371)

தேசியினுடைய கொழுப்பைவாங்கி நெய் உருக்கி தீபமேற்ற அய்யனோடு பிடாரிதுர்க்கை, மகாபூத வேதாளங்கள் மருண்டே ஓடும், பிரம்மராட்சதை, பூதம், பில்லி, பேய் போன்றவை மானிடரைத் தொடர்ந்து கொண்டால் அந்த தீபத்தைப் பார்க்கச் சொல்லி நெற்றியிலே 'சிங்' என்ற அட்சரத்தை ஓதி ஒட்டுவாயாக.

ஒட்டவே பூதப்பி ரேதவேதாளம்
ஓடுமே நவக்கிரக தோஷமெல்லாம்
மாட்டில்லா நோயோடு பேய்பிசாசு
மாரணமே செய்யவென்றால் அயத்தகட்டில்
தேட்டியே தேசியுட ரத்தம்வாங்கித்
திரண்டிருக்கும் பிற்காலின் சப்பையுங்கூட்டி
ஆட்டியே ஐங்காயந் தன்னைத்தொட்டு
அரைத்துமே பூசஉச்சா டனமுமாமே. (372)

ஒட்டும்போது பூதப் பிரேதப் பிசாசுகள் எல்லாம் ஓடிவிடும், நவக்கிரக தோஷங்கள் எல்லாம் நீங்கிவிடும். மருந்தில்லாத நோயோடு பேய்பிசாசுகளை மாரணம்

செய்ய வேண்டும், என்றால் இரும்புத்தகட்டில் தேசியினுடைய இரத்தத்தை வாங்கி, திரண்டிருக்கும் அதனுடைய பின்னங்காலில் இருக்கும் சப்பையும் கூட்டி ஐங்காயம் தன்னைத் தொட்டு அரைத்துப் பூச உச்சாடனமும் ஆகும்.

ஆமென்ற ஐங்காயக் கருவைக்காணார்
அறியார்கள் கடைதனிலே ஐங்காயமென்பார்
தாமென்ற ஐங்காயப் பேருகேளு
தலைப்பிள்ளை நஞ்சோடு சமூலம்வாங்கி
ஆமென்ற வசம்புள்ளி கடுகுகாயம்
அப்பனே அரைத்ததின் மேலேபூசிப்
போமென்ற மேல்பூச்சு உலரச்செய்து
பொடியாக்கிப் பேய்க்கரையின் குடுக்கைதனிலடையே. (373)

ஐங்காயக் கருவைக் காணாதவர்கள் எதையும் அறிய மாட்டார்கள். கடைதனிலே ஐங்காயம் என்று கேட்பார்கள். ஐங்காயப்பேரு கேட்பாயாக. தலைப்பிள்ளை நஞ்சுக்கொடி சமூலம் வாங்கி வசம்பு, உள்ளிப்பூண்டு, கடுகு, பெருங்காயம் ஆகியவற்றை அரைத்து அதற்கு மேலே பூசி, மேற்பூச்சு உலரச் செய்து, உலர்ந்த பிறகு பொடியாக்கி பேய்ச்சுரைக் குடுக்கை தன்னில் அடைப்பாயாக.

அடைத்திட்ட மில்லாட்டால் தயிலம்வாங்கு
அதுக்கிதுதான் நேர்த்திமெத்த அப்பாகேளு
அடைத்திட்ட முற்கருவும் பிற்கருவும்பாரு
ஆகாச வெளிக்குள்ளே அமர்ந்ததப்பா
கடைத்திட்ட ரெண்டுமொன்றாய் ரேசித்தேதான்
கருவாகி உருவாகிக் கடுஞ்சூலாகிப்
படைத்திட்ட பிண்டமப்பா ஐங்காயந்தான்
பேசாதே வெளிதிறந்து சொல்லார்சித்தர்
நடத்திட்ட கருவாலே வாதமாச்சு
நவகோடி சித்துமிதி லாடலாச்சே. (374)

அவ்வாறு அடைக்க இஷ்டமில்லாவிட்டால் தைலம் வாங்கு அதுக்கு இதுதான் நேர்த்தியாகும். அடைத்திட்ட முதற்கருவும் அதற்கு பிற்பட்ட பின்கருவும் ஆகாச வெளிக்குள்ளே அமர்ந்ததப்பா. இரண்டையும் ஒன்றாகச் செய்து ரேசித்தால், கருவாகி, உருவாகி, கடுஞ்சூலாகிபடைத்திட்ட பண்டமப்பா இந்த ஐங்காயம். பேசாதே, சித்தர்கள் இதையெல்லாம் வெளிப்படையாக சொல்லமாட்டார்கள். அக்கருவாலே தான் வாதமாச்சு, அதனால் நவகோடி சித்துகளும் ஆடலாம்.

ஆச்சென்று வாய்ப்பேச்சுச் சொன்னதினாலென்ன
ஆராய்ந்து ஒவ்வொன்றா யறியவேணும்
நீச்சென்ற நீச்சறிந்து நிலைக்கவேணும்
நிலையாட்டால் வெறும்பேச்சு நிலையாகாது
தாச்சென்ற சரக்குவகை இனமறியவேணும்
சத்துருவு மித்துருவு மறியவேணுங்

கூச்சென்ற வாதத்தில் கோசபீசங்
குறிப்பறியா மட்டைகள்தான் குருடரப்பா
கூச்சென்ற குருமுறையுஞ் செந்தூரத்திறமும்
குப்பிமுறை புடத்திட்டம் எரிப்புத்திட்டங்
காச்சென்ற குகைத்திட்டம் ஊத்துமுறைவரிசை
கைமுறையாய் அஞ்சுநீர்க் கருவுங்கேளே. *(375)*

வாய்ப்பேச்சாக இதனைச் சொன்னதினாலானதென்ன ஆராய்ந்து ஆய்ந்தறிந்தே ஒவ்வொன்றாய் அறிய வேண்டும். நீச்சென்ற நீச்சறிந்து நிலைக்க வேண்டும். நிலையாவிட்டால் வெறும் பேச்சு நிலையாகாது. நிரந்தரமாகாது. சரக்கு வகை சத்துருவும் மித்துருவும் அறிய வேண்டும். கோசம் பீசம் அறிய வேண்டும். அறியாத மட்டைகள் குருடர்கள், குருமுறையும் செந்தூரத்தின் திறமும், குப்பிமுறை, புடத்திட்டம், எரிப்புத் திட்டம் ஊத்து முறை வரிசை, அஞ்சுநீர்க் கருவுங் கேட்பாயாக.

கருவென்ன கட்டுமித்திரம் உருக்கினத்துக்கெல்லாம்
கருதியே பழச்சாறு முலைப்பால்வாங்கி
குருவான சுன்னமொடு நீற்றினத்துக்காதி
கொடுஞ்சுறுக்கு வெண்கருவுஞ் சுண்ணாம்புநீரும்
திருவென்ன விட்டரைக்கிற் செயமாமெத்தச்
செந்தூரத் திறங்கேளு சூதங்கெந்தி
அருவென்ன மால்தேவி அப்பிரகந்துத்தம்
அழகான சிலையோடு வெடியுப்பேழும்
அருவென்ன விவையெழுஞ் செந்தூரத்தாதி
அல்லாட்டால் செந்தூர மாகாதென்னே. *(376)*

கருவு என்ன? கட்டு மித்திரம், உருக்கினத்துக்கு எல்லாம் பழச்சாறு, முலைப்பால், வாய்நீர், குருவான சுன்னம் நீற்றினத்துக்கு ஆதி. கொடுஞ்சுறுக்கு, வெண்கருவும், சுண்ணாம்பு நீரும் விட்டு அரைக்கும்போது ஜெயமாகும் செந்தூரத்திறம் கேட்பாயாக. சூதம், கெந்தி, அரிதாரம், அப்பிரகம், துத்தம், மனோசிலை, வெடியுப்பு ஆகிய ஏழும். இவை ஏழும் செந்தூரத்துக்கு முதல் பொருளாகும் இல்லா விட்டால் செந்தூரம் ஆகாது.

ஆகவே செந்தூரம் வைப்புக்கெல்லாம்
அப்பனே குப்பியுட முறையைக்கேளு
போகவே பூநீறு குப்பிவாங்கிப்
புகழான கழுத்துவரை சீலைசெய்து
ஈகவே குடத்துக்கு மேல்கழுத்தி
விருவிரற் கடையளவு செய்துநீயும்
நேகவே சீலைசெய்த மட்டும்போது
நீண்டிருக்கும் குப்பிவா யடையக்கேளு
தோகையே தீபநுனி சுற்றிக்கட்டிச்
சுண்டிடவே கத்திரிப்பாய்த் துண்டித்துப்போமே. *(377)*

ஆகவே செந்தூர வைப்புக்கெல்லாம், குப்பி வைக்கும் முறையினை நீ கேட்டுத் தெரிந்துக் கொள்ள வேண்டும். இப்படிக் கேட்டறிந்தால் பூநீறு குப்பி வாங்கி கழுத்து வரை சீலை செய்து குடத்துக்கு மேல் கழுத்தில் இரு விரற்கடையளவு வரை சீலை செய்த மட்டும் போதும் நீண்டிருக்கும் குப்பி வாயுடையக் கேளு, தீபநுனி சுற்றிக்கட்டி கத்தரியால் துண்டித்துப் போடு.

போமென்ற குப்பிக்கு அரைவாசிமருந்து
போட்டுநீ புதுச்சட்டி தன்னிற்கேளு
தாமென்ற மணல்நோம்பி அடிநுனியும்தள்ளிச்
சட்டியில்நால் விரற்கடைதான் மணலையிட்டு
ஆமென்ற குப்பியதின் மேலேவைத்து
அதின்மேலே மணல்கொட்டி அமிழ்த்திநன்றாய்
ஏமென்ற குப்பியுட கழுத்துமேலே
யிருவிரற் கடைதெரிய விட்டுமூடிக்
கோமென்ற தளச்செந்தூர ந்தானானால்
குப்பிவாய் மூடாதே சிலாகையிட்டுப்பாரு
வாமென்ற ஏறுசெந் தூரமானால்
வளப்பக்கல் கொண்டுகுப்பி வாயைமூடே. *(378)*

குப்பிக்கு அரைவாசி மருந்து போட்டு நீ புதுச்சட்டி தன்னில் மணல் நேம்பி அடியும் நுனியும் தள்ளி சட்டியில் 4 விரற் கடை அளவு மணலையிட்டு அதன்மேல் குப்பியை வைத்து குப்பியின் கழுத்து வரை இரண்டு விரற்கடையளவு தெரியும்படி வைத்து மற்ற பாகம் முழுவதும் நன்றாக மூடும் படியாக நெருப்பைக் கொட்டுவாயாக. குப்பியின் வாயை மூடாதே. குப்பியில் உள்ள மருந்து செந்தூரமாகி விட்டதா என்பதை சிலாகை இட்டுப் பார்த்துக் கொள். செந்தூரமான உடன் குப்பியின் வாயை கல்மூடி கொண்டு மூடிவிடு.

மூடியே வாலுகையின் மேலேயேற்றி
முசியாதே ஒருவிறகுத் தீபமாகும்
நாடியே யிருவிறகுக் கமலமாகும்
நால்விரற்குச் சடாக்கினி யாகும்பாரு
சரியே விறகினுட திட்டங்கேளு
சாணீளம் ரெண்டுவிரற் கனதியாகும
காடியே புடத்திட்ட மென்னகேளு
காட்டெருவாய் புடமொன்று காடையாகும்.
பாடியே மூன்றெருத்தான் கவுதாரிப்புடமாம்
பத்தெருத்தான் குக்குடமாம் பரிந்துகேளு
நாடியே ஐம்பதெரு ஏனமாகும்
நலமான நூறெருத்தான் கெசப்புடமூமாமே. *(379)*

மூடிவிட்டு, வாலுகையில் மேலே ஏற்றி எரிமூட்ட ஒரு விறகுத் தீபமாகும். இருவிறகுக் கமலமாகும். நால்விறகு சடாக்கினியாகும் சரியே. இனி விறகினுடைய

திட்டம் கேட்பாயாக. நீளம் சாண் இரண்டு விரற்கடையளவேயாகும். இனி புடத்திட்டம் என்னவென்று கேட்பாயாக. காட்டெருவாம் புடம் ஒன்று காடையாகும். மூன்றெருத்தான்கவுதாரிப்புடமாம். பத்தெருவால் புடம் இட்டால் குக்கிடம் என்னும் கோழிப்புடமாகும். ஐம்பது எருவில் புடமிட்டால் பன்றிப் புடமாகும். நூறு எருவில் புடமிட்டால் யானைப் புடமாகும்.

புடமான குகைத்திட்டஞ் சொல்லக்கேளு
புகழான கழுதைலத்தி மலமும்ரெண்டு
வடமான உமிக்கருதல் சீலைசுட்டசாம்பல்
வகைக்கிரண்டு பலமாகுங் களிமண்ணீராறு
குடமான கடுக்காயின் கியாழம்விட்டுக்
குமறவே ஆட்டிமைபோற் குகைதான்பண்ணு
படவான மேற்சில்லு மதிலேபண்ணு
மற்றகுகை உருக்கினத்தில் பிலமாகாதே. (380)

புடத்திற்குரிய குகைத் திட்டம் சொல்லக் கேட்பாயாக. கழுதைலத்தி உமிக்கருதல், சீலை சுட்ட சாம்பல், வகைக்கு இரண்டுபலம், களிமண் பன்னிரண்டு பலம், கடுக்காயின் கியாழமிட்டு நன்றாக மை போல் ஆட்டிக் குகை செய்து கொள். அதனாலேயே மூடுவதற்கான சில்லும் செய்து கொள். மற்றவகை குகைகள் உருக்குவதற்கு உதவாது.

பிலமாகுஞ் சுன்னமென்ற துறைகட்கெல்லாம்
பேசுகிறேன் அஞ்சுசுன்னக் குகையைக்கேளு
அலமான நண்டுநத்தை சங்குசிப்பி
அண்டோடு மிவைஐந்துங் கல்வத்திட்டு
விலமான வர்க்கம்பால் தன்னாலாட்டி
வில்லைதட்டிக் காயவைத்துப் புடத்தைப்போடு
நலமான சுண்ணாம்பாங் கல்வத்திட்டு
நாடியரை வெண்கருவும் வர்க்கம்பாலும்
நலமான கல்சுன்ன நீரும்விட்டு
நலக்கரைத்துக் குகையின்மேல் சில்லுச்செய்து
பிலமான இதில்வைத்துப் புடத்தைப்போடப்
பிலத்துமே கடுஞ்சுன்ன மாகும்பாரே. (381)

சுன்னம் என்ற குகைகளுக்கெல்லாம் அஞ்சு சுன்னக் குகையேயாகும். கேட்பாயாக. நண்டு, நத்தை, சங்கு, சிப்பி, அண்டஓடு, இவை ஐந்தும் கூட்டிக் கல்வத்திட்டு எருக்கம்பால் விட்டு ஆட்டி அரைத்து வில்லை தட்டிக் காயவைத்துப் புடத்தைப் போடுவாயாக. அது சுன்னமாகும். அதைக் கல்வத்திலிட்டு வெள்ளைக் கருவும் எருக்கம்பாலும். கற்சுன்ன நீரும்விட்டு நன்றாகக் கரைத்து குகையின் மேல் சில்லு செய்து இதில் வைத்துப் புடத்தைப் போட எரிந்தாறிய பின் கடுஞ்சுன்னமாகும்.

பாருநீ ஊத்துமுறை சொல்லக்கேளு
பாங்கான சரக்குவகைக் கோர்துருத்தி
ஊருமே யுருக்கினந்தான் துருத்திரெண்டு
உத்தமனே சத்துவகை துருத்திநாலு
சாருநீ ஐப்பசியுங் கார்த்திகைமார்கழியுந்
தையோடு உருக்கினத்தில் சத்திறங்குங்காலம்
பாருநீ மாசியொடு பங்குனிசித்திரையும்
பாங்கான வைகாசி குருமுடிக்குங்காலம்
சேருநீ ஆனியொடு ஆடிஆவணியும்
சிறப்பான புரட்டாசி செந்தூரமாமே. (382)

இனி ஊற்றுமுறையினை நான் சொல்லக் கேட்பாயாக. சரக்கு வகைக்கு ஓர் துருத்தி, உருக்கினத்திற்கு துருத்தி இரண்டு, சத்துவகைக்கு நாலு துருத்தி, ஐப்பசியும் கார்த்திகை, மார்கழியும் தையோடு உருக்கினத்தில் சத்து இறங்கும் காலமாகும். மாசியோடு பங்குனி, சித்திரையும், வைகாசியும் குருமுடிக்கும் காலம், ஆனியோடு ஆடி, ஆவணி, புரட்டாசி ஆகியவை செந்தூரம் செய்யும் காலமாகும்.

மாமென்ற மார்கழிதை யோடுமாசி
மருவற்ற செயநீரா மகிழ்ந்துபாரு
போமென்ற உருக்கினத்தின் குடாரிகேளு
புகழான மால்தேவி சவுக்காரங்குக்கில்
வேமென்ற அண்டோடு வெண்காரங்கூட்டி
வெடியுப்பு செயநீரா லாட்டிவில்லை
காமென்று புடம்போட்டு எடுத்துக்கொண்டு
கல்வத்தி விட்டுப்பின் வர்க்கம்பாலும்
ஆமென்ற எலிஆலம் பாலுங்கூட்டி
அரைத்துமுன்போல் புடம்போட்டு எடுத்துக்கொண்டு
வேமென்ற ஏரண்டெண்ணெய் வரத்தவளைநெய்யும்
விட்டரைத்துக் கெட்டியாய் வைத்துக்கொள்ளே. (383)

மார்கழி, தை, மாசி, மருவற்ற செயநீர் செய்யும் காலம், உருக்கினத்துக்கு குடாரி கேட்பாயாக. அரிதாரம் சவுக்காரம் குங்கிலியம், முட்டை ஓடு, வெண்காரமுங்கூட்டி, வெடியுப்புச் செயநீரால் ஆட்டி வில்லைதட்டி புடம்போட்டு எடுத்துக்கொண்டு கல்வத்திலிட்டுப் பின்னர் எருக்கம் பாலும் ஆமணக்குப் பாலும் கூட்டி அரைத்து முன்பு போல் புடம் போட்டு எடுத்துக் கொண்டு விளக்கெண்ணையும் வரத்தவளை யெண்ணையும் விட்டரைத்து கெட்டியாக எடுத்து வைத்துக் கொள்வாயாக.

வைத்துமே சத்துவகை கரடுதட்டி
மைந்தனே குடோரியிட்டு எருமைக்கொழ்பால்
உய்த்துமே கிண்டுநீ கல்மசங்களற்று
உருகியே வெள்ளிபொன்போல் கண்விட்டாடும்

கைத்துமே கருவெல்லாம் வெளியாய்ச்சொன்னேன்
கருவாளி யானாக்கால் கண்டுபாரு
செய்த்துமே சித்தருட நூலையெல்லாம்
திரட்டியே ஆயிரத்தில் தெளிவாய்ச்சொன்னேன்
பற்றுமே ஆயிரத்தைக் குறுக்கிநன்றாய்
பாடினேன் முந்நூற்றுச் சில்லரைதானப்பா
உத்துமே கருவெல்லாம் வெட்டவெளியாக
ஒளியாமல் சத்தியமாய்ச் சொல்லிப்போட்டேன்
கைத்துமே சிறுபிள்ளை முதலாயுள்ள
கருவறியா மூடர்களுங் காணுவாரே. (384)

சத்து வகையினை கரடுதட்டி, குடோரியிட்டு எருமைக் கொம்பால் கிண்டி, கல்மசங்களற்ற உருகிய வெள்ளி, பொன் போல கண்விட்டாடும் கருவையெல்லாம் வெளிப்படையாகச் சொல்லி விட்டேன். கருவாளியானால் கண்டு கொள்வாய், சித்தருடைய நூல்கள் எல்லாம் திரட்டியே ஆயிரத்தில் தெளிவாய்ச் சொன்னேன். பின்னர் அவ்வாயிரத்தையும் குறுக்கிச் சுருக்கிப் பாடினேன் முன்னூற்று சில்லரைதானே, இந்த நூலில் கருவெல்லாம் வெட்ட வெளிச்சமாக ஒளிக்காமல் மறைக்காமல் சத்தியமாகச் சொல்லி விட்டேன். சிறுபிள்ளை முதலாயுள்ள கருவறியா மூடர்களானாலும் கூட அறிந்து கொள்வார்கள்.

வாரான கருவையெல்லாம் வெளியாய்ச் சொன்னேன்
வாதமொடு வயித்தியமும் வகையாய்ச்சொன்னேன்
கூரான செந்தூரங் கழங்குசெயநீருங்
குருமுடிக்கும் வகையெல்லாங் குறிப்பாய்ச்சொன்னேன்
வாரான அஞ்சனமும் திலதஞ்சொன்னேன்
வசியமொடு அப்புவித்தை மாரணமுஞ்சொன்னேன்
ஆறான ஞானமொடு வாசியோகம்
அடங்கின்ற பூரணமும் அறியச்சொன்னேன்
தேறவே வழலையுட கருவுஞ்சொன்னேன்
செப்பினேன் கருக்கடைக்சூத் திரந்தான்முற்றே. (385)

இந்த நூலில் மறைவான கருவையெல்லாம் வெட்ட வெளியாகவும் சொல்லிவிட்டேன். இரசவாதத்தோடு வைத்தியத்தையும் வகையாகச் சொல்லிவிட்டேன். செந்தூரம் களங்கு செயநீரும், குரு முடிக்கும் வகைகளையெல்லாம் குறிப்பாகவே நான் சொல்லிவிட்டேன். அஞ்சனமும் திலதமும் சொல்லிவிட்டேன். வசியத்துடன் மறைப்பு வித்தை அத்தனையும் சொல்லிவிட்டேன். மாரணமும் சொன்னேன். சூரணம், வாசியோகம் அடங்கிநின்ற பூரணமும் அறியச் சொன்னேன். தேர்ச்சிபெற வழலையுடைய கருவுஞ் சொன்னேன். சொல்லிவிட்டேன் கருக்கடைச் சூத்திரம் தான் முற்றிற்று.

முற்றிற்று.

தாமரை
நூலகம்